# என்னையே நானறியேன்



திருமதி. சந்திரகௌரி சிவபாலன் (கௌசி)
ஜேர்மனி

# என்னையே நானறியேன்

**திருமதி. சந்திரகௌரி சிவபாலன் (கௌசி)**
**ஜேர்மனி**

# நுழைவாயிலில் சில நிமிடங்கள்.

எழுத்துக்களை மனதில் சிறைப்பிடிப்போரே!

இந்நூலின் பக்கங்கள் உங்கள் கைகளில் சிறகடிக்கும் முன் சில நிமிடங்கள் உங்களுடன் கௌசி நான் கலந்து கொள்கிறேன்.

வரிகளால் பாலம் போட்டு நான், உங்கள் நெஞ்சங்களை இந்நூலின் மூலம் வந்தடைகின்றேன். மூளைவீங்கி வெளியான என் எண்ணங்கள் கோர்க்கப்பட்ட முதல் நூல் என்னையே நானறியேன். இப்புதிய அகம் என்னை யார் என்று உலகுக்கு உணர்த்தும் என்று நம்புகின்றேன். இதனுள் புகுந்து வரும் வாசகர்கள் பெற்று வரும் அநுபவங்கள் அவர்களுக்குப் பாடமாக அமையும் என்றும் கருதுகின்றேன். என் அநுபவங்கள் சொல் ஆடை கட்டிச் சுதந்திரமாய் இந்நூலில் நடை பயின்றிருக்கின்றன.

தட்டச்சுப்பொறியில் விரல்கள் தடவக் கணனித் திரையில் எழுத்துக்கள் காட்சிப்படுத்தப்பட கற்பனை கலந்து காலத்தைப் படம் பிடித்து புலம்பெயர்

# என்னையே நானறியேன்

வாழ்வின் ஒரு விம்பம் கதையாக இங்கு விரிந்திருக்கின்றது. முதன்முதலாக ஒரு உண்மையை உலகுக் காதுகளுக்கு 2008 ஆம் ஆண்டு இலண்டன் தமிழ் வானொலியில் உரக்கச் சொல்லிய போது அது இன்று ஒரு நூலாகிக் கதை சொல்லும் என்று நான் நினைத்துப் பார்க்கவில்லை. உலகமெங்கும் மனிதர்கள் அவர்கள் வாழ்க்கை ஒவ்வொன்றும் கதை சொல்லும். ஆயிரக் கணக்கான சம்பவங்கள் பாடுபொருள்களாக அமையும். அக்கதை எழுத்தாளர் கைகளில் பாவனையாகும் போது சிறந்த வாழ்வியல் இலக்கியமாகத் திகழும்.

பாட்டுடைத் தலைவனையுடைத்தாய் பாடுபொருள் கொண்டு ஏட்டிலே வடிப்பது இலக்கியமானால், பாட்டுடைத் தலைவன் தெய்வீகத் திருமகனாய் திகழ்வது மட்டுமே திறமன்று. நம்மோடு வாழ்ந்து நாமறியாச் செய்தி பல தந்து, ஊரோடு நாம் வாழ உன்னத அறிவுரைகள் காட்டி நிற்கும் குடிமகளின் வாழ்வும் ஒரு இலக்கியமாய் இடம்பிடிப்பது திறம் அல்லவா?

அதனால், உண்மைச் சம்பவங்கள் பல கோர்க்கப்பட ,என்னோடு அடங்கியிருந்த அநுபவப் புதையல்கள்

**கலந்து கொள்ள, வாழும் நாடும்காலமும் பிரதிபலித்துக் காட்டப்பட, கதையின் கதாநாயாகி கண்ணீர் வரிகளுடன் இணைந்து வானொலியில் இலக்கிய நேரத்தில் என்னையே நானறியேன் இலக்கிய வரிகளாயின. தமது வாழ்க்கையில் நடக்கின்ற விடயங்களை மறைத்து, சிக்கல்கள் போர்த்தியஉடலாக வாழ்வோர் மத்தியில், தன் வாழ்க்கையைப் பலருக்கும் முன்னிறுத்திய கதையின் நாயகியின் துணிச்சலைப் பாராட்டியே தீரவேண்டும்.**

**கேள்வி ஞானத்தை மீட்டிப்பார்க்க வானொலி இடம் தராது. வரிகள் கோர்க்கப்பட்ட நூலே வசதிக்கேற்ப நினைத்த மாத்திரத்தில் அறிவு ஞானத்தைக் கொடுக்கும். அதனால், இந்தக் கதையின் சம்பவங்களைச் சரித்திரமாக்க விரும்பிய தவமலர் அவர்கள் நூலாக்க முன்வந்தார். அகமிக மகிழ்ந்தேன். அவர் விருப்பிற்கேற்ப முதற் பதிப்புரிமையை மாத்திரமே அவருக்கு வழங்கினேன். அவர் எண்ணத்தெளிவிற்கு மனதார நன்றியைத் தெரிவிக்கின்றேன்.**

**முகவுரை, அணிந்துரை, சிறப்புரை, பதிப்புரை, நூலாசிரியர் பற்றிய உரை போன்றவற்றை**

## என்னையே நானறியேன்

**இந்நூலுக்குத் தந்து அழகு சேர்த்தவர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அத்துடன் இந்நூல் அழகாக கோர்க்கப்பட்டு கைகளில் தவழ தாயகத்தில் இருந்து அனைத்து உதவிகளையும் செய்த திருமதி. பரமேஸ்வரி இளங்கோ அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.**

**எனக்கு உடலும் உயிரும் தந்த பெற்றோர் நினைவுகளோடு நிஜங்கள் என்றும் என் எழுத்துக்களில் வாழும், உலகின் ஊமைவடிவங்கள் என் எழுத்துக்களில் பேசும், காலக்கண்ணாடி என் எழுத்துக்களில் விம்பம் காட்டும் அறியாத வாழ்வின் சிக்கல்கள் என் எழுத்துக்களில் அலசப்படும் என்னும் நம்பிக்கையோடு இன்று நான்......**

**தேடித்தேடிச்சலிக்காத மனத்தோடு**
**தேடிக் கொண்டே இருக்கும்**

**கௌசி**
20.07.2013

Chandragowry.sivapalan
FelderStr-56
42651Solingen
Germany.
E.mail:c.gowry@yahoo.de
T.P:0212/22605546
Web:www.gowsy.com
www.vanappu.gowsy.com

# அணிந்துரை

தம்மிலும் தம் அறிவால் வளர்வார், சிறப்புடையவராயின். உள்ளம் குதூகலிப்பார் உண்மை ஆசிரியர். ஒருவர் கற்ற இன்பத்திலும் மேலாமே தான் கற்ற கல்வி பிறர் அறியச் சொலல். ஆசிரியப்பணி ஒரு ஆனந்தப்பணி. கல்வி நாடிவரும் செல்வங்களுக்குள்ளே புகுந்துவிட்டால், கவலைகள் விடைபெறும். உள்ளம் துள்ளல் இசைபாடும். அதட்டவும் அணைக்கவும் ஆசானுக்குள்ளஉரிமை பெற்றோருக்குள்ள உரிமை போலானது. இந்த வரிகள் என்னுடைய வரிகள் அல்ல. இக்கதையின் ஆசிரியை அவர்கள் ஆசிரியத் தொழில் பற்றி வர்ணிக்கும் ஒரு சில வரிகள் இவை.

இவர் தாயகத்தில் பல வருடங்களாக ஆசிரியையாகவும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியையாகவும் தொழில் புரிந்தவர். மேலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்துறையில் விசேட பட்டம் பெற்றவர். அத்தோடு இக்கதையின் நாயகி கூட ஒரு ஆசிரியையாகக் காணப்படுகின்றார். ஆகையினாலேயே தாம் கற்றவற்றை

அறிந்தவற்றைப் புலம்பெயர் வாழ்வில் பெற்ற அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்னும் நற்சிந்தனை அவருக்கு உருவாகியிருக்க வேண்டும்.

தரமான இலக்கியங்கள் ஒரு இனத்தில் உருவாக வேண்டுமென்றால், அவ்வினம் செல்வச் செழிப்பின் உச்சத்தில் இருக்க வேண்டும், அல்லது சோகத்தின் பள்ளத்தில் இருக்க வேண்டும். என்பது ஆன்றோர் வாக்கு. இன்று ஈழத் தமிழினம் பல்வேறு நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்வது நம் இனத்திற்கேற்பட்ட பெரும் சோக நிகழ்வல்லவா? அப்படி நாம் புலம் பெயர்ந்தாலும் நம்மவர் புலம்பெயர் படைப்புக்கள் தாயகத்திலும் ஏன் தமிழகத்திலும் கூட பெரும் வரவேற்புப் பெற்று வருகின்றன. அதனால், இன்று புலம்பெயர் நாடுகளில் வாழும் எழுத்தாற்றல் கொண்ட பலரும் தமது புலம்பெயர் அனுபவங்களை பல்வேறு வடிவங்களிலும் பதிவு செய்து கொண்டிருப்பது வரவேற்கப்பட வேண்டிய தொன்றாகும்.

அந்த வகையில் ஜேர்மனி நாட்டிலே புலம் பெயந்த ஒரு மத்திய தரக் குடும்பத்தில் நடைபெற்ற

ஒரு உண்மைச் சம்பவத்தைத் தனது கற்பனைத் திறனைக் கையாண்டு கதைக்குச் சுவையூட்டி வாசகர்களுக்குப் படைத்திருக்கும் கதாசிரியை கௌசி அவர்களையும் அக்கதையை உலகுக்கு அறிமுகப்படுத்த முன்வந்த தவமலர் அவர்களையும் பாராட்டியே தீரவேண்டும்.

இந்தக் கதைக்குள்ளே கவிதையுண்டு, கதாபாத்திரங்களின் முரண்பட்ட உரையாடல்கள் உண்டு, அழகான வர்ணனைகள் உண்டு, அற்புதமான பொன்மொழிகள் உண்டு. கதையின் நாயகி முதன் முதலாக ஜேர்மனி நோக்கிப் பயணமாகும் போது அவள் பயணித்த விமானத்தில் எழுதியதாக கதாசிரியர் தந்திருக்கும் கவிதையிலே

"விமானியோ தொட்டிலொன்று ஆட்டுகிறான்
விண்வெளியோ சொர்க்கம் ஒன்று காட்டுகிறதே!
சொற்களால் வடிக்கவொண்ணா அழகுணர்ச்சி
சொர்க்கமென்ற ஒரு சொல்லில் அடங்கிற்றோ
வர்க்கபேதம் அங்கில்லை, வழிப்பறித் தொல்லையில்லை
வாகனத்தடையில்லை, வழியேதும் புரிவதில்லை

கண்ணைக் கட்டிவிட்டதுபோல் கடக்கின்றோம் நாட்டைவிட்டு
கண் கண்ட தெய்வமாய் கரைசேர்க்கின்றான் விமானியும் தான்“

இந்த வரிகளில் விமானப் பயணத்தின் அநுபவ வரிகள் அழகாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. 1920 ஆண்டுகளில் முதன் முதலாக கல்கத்தாவில் விமானம் அறிமுகப்படுத்தப்பட்ட போது எழுத்தாளர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதில் பயணம் செய்த அநுபவத்தை அழகான கவிதையில் வடித்திருந்தார். அதனை இக்கவிதையைப் படிக்கும் போது நினைத்துப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இன்னும் ஓரிடத்தில் தன்னருகே வரத்தயங்கும் மகனை நினைத்துக் கலங்கும் தாயின் ஏக்கத்தை கவிதையாய் வடித்திருப்பதை வாசிக்கும் போது வாசகர் மனமும் தான் கலங்கும்;. இது போன்ற சந்தர்ப்பங்களில் கதாசிரியர் கவியாற்றல் புலப்படுகின்றது.

இயற்கையை இரசித்து இன்புறும் கதாசிரியர் வரிகள் சில இடங்களில் இவர் மொழிநடையை மேம்படுத்திக் காட்டுகின்றது. இயற்கையாகவே

நடைபெறும் சம்பவத்தை ஆராய்வுக் கண்கொண்டு நோக்கி அதற்கான காரணத்தையும் அழகாக விளக்கியுள்ளார். “சூரியனின் கதிர்கள் கண்ணைக் கூசச் செய்தன. என்றுமில்லா வண்ணம் சூரியக் கதிர்கள் வர தேவி வசிக்கும் நகரத்தில் வாசம் செய்தன. நகரம் பளிச்சென்று அழகாகக் காட்சியளித்தது. வானிருந்து உலகில் வாசம் செய்ய வந்த பனிக்கூட்டம் நிலமெங்கும் நிறைந்திருக்க, சூரியக் கதிர்கள் அதன் மேல் பட்டதனால் சிறிதளவில் உருகின. இவ்வுருகும் பனிக் கூட்டங்களில் சுற்றாடலிலுள்ள குளிர்காற்று சூழுகின்ற போது உருகிய பனிகள் நிலமெங்கும் உறைகின்றன. இதனால், பளிங்குக் கண்ணாடிகளாய் பனித்துகள்கள் உருமாறின. இப்பளிங்குக் கண்ணாடிகளாய் காட்சியளித்த உறைபனிகளிலே சூரியக்கதிர்கள் பட்டுத் தெறிக்கின்ற போது கண்ணைக் கூசச் செய்யும் ஒளித் தெறிப்புக்கள் தோன்றுகின்றன. இயற்கை எது செய்தாலும் அழகே“ ஆசிரியர் எது எழுதினாலும் அழகாகவே இருக்கும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

தாயகம் செல்ல விரும்பும் தந்தைமகனிடம் அதற்கான காரணத்தை விபரிக்கும் போது ஆசிரியர்

அழகுநடை தெளிவாகின்றது. "அந்தக் காற்றைச் சுவாசிப்பேன் அந்த மணலில் புரண்டு எழுவேன், அந்தச் சூரியனின் கதிர்களை என் வெற்று உடம்பினால் உடைப்பேன். ஒருகாலால் இலங்கை மண்ணைத் தட்டித்தட்டி ஒத்தடம் கொடுப்பேன், உறவினர்மனதுக்குள் நுழைந்து திரும்புவேன், தியேட்டருக்குள் சென்று படம் பார்த்து மூட்டைப்பூச்சிகளுக்கு இரத்ததானம் வழங்குவேன்" இவ்வாறு தொடர்கின்றது கற்பனை வரிகள். இவ்வாறான உணர்வுகள் ஆரம்பகாலங்களிலே அந்நிய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து இப்போது முதுமையை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் சாதாரண மனிதர்கள் எவருக்கும் ஏற்படக்கூடியதே. தாயகத்தில் வாழ்ந்த பழைய நினைவுகளை மறக்க முடியாமலும் புலம்பெயர்ந்த நாட்டு மக்களின் கலாச்சாரத்துடன் ஒன்றிவிட முடியாமலும் தவிக்கும் கதையின் நாயகன் உளரீதியான தாக்கம் இவ்வாறான சந்தர்ப்பங்களில் வெளிச்சமிட்டுக் காட்டப் பட்டிருக்கின்றன.

கதையை அழகுபடுத்தக் கதாசிரியர் கையாண்ட வார்த்தைகளைப் படிக்கும் போது இயல்பாகவே பொன்மொழிகளில் ஆர்வமுள்ள எனக்கு,

இவ்வார்த்தைகள் சிறந்த பொன்மொழிகளாய் தென்படுவதால், அவற்றைத் தனியாகத் தொகுத்துள்ளேன். எதனையும் ஆழ்ந்து நோக்கி தேடலறிவை அதனுடன் புகுத்தும் தலைசிறந்த எழுத்தாளர்களால் மட்டுமே இவ்வாறான பொன்மொழிகளைப் புகுத்த முடியும். பக்கத்திலே பொன்மொழிகளின் புத்தகத்தை வைத்துக் கொண்டுயாராலும் கதை எழுத முடியாது. கதைக்குத் தகுந்தாற்போல் வார்த்தைப் பிரயோகங்களை வழங்குகின்ற பக்குவம் பக்குவப்பட்ட எழுத்தாளர்களல் மட்டுமேமுடியும். இந்த வகையிலே கௌசி அவர்கள் உயர்ந்து நிற்கின்றார்.

கதையினுள்ளே புகுந்து ஒவ்வொருமனிதர்கள் வாழ்விலும் அழியாத கோலங்களாக மறைந்திருக்கும் சம்பவங்கள் பற்றிப்புரிந்து கொள்ளவும், உவமை உருவகங்கள் உள்வாங்கவும், ஜேர்மனிய நடைமுறைகள் அறிந்து கொள்ளவும், அழகுநடை அநுபவிக்கவும் வாசகர்கள் அனைவரும் என்னுடன் இணைந்தே இன்புறுங்கள்.

இன்று ஊடகத்துறையானது பல்வேறுபரிமாண வளச்சி அடைந்திருந்த போதிலும் அச்சுருப்பெறும்

## என்னையே நானறியேன்

**நூல்களின் பதிப்பும் மாண்பும் என்றும் குறைந்துவிடாது. ஆனால், அது தரமானதாகவும் நல்ல செய்திகளை மக்களுக்குக் கூறுபவையாகவும் இருக்க வேண்டும். அப்படி இருந்தாலேயே மக்களிடையே நீண்டகாலம் நிலைத்திருக்க முடியும். இந்நூலாசிரியை வானொலி, கணனி, பத்திரிகை போன்ற ஊடகங்களில் ஏற்கனவே அறிமுகமானவர். ஆனால், நூலுருப்பெறும் அவரது முதலாவது ஆக்கம் இதுவேயாகும். இது முதல் நூலானாலும் முத்திரை பதித்துள்ளது. இத்துடன் நிறுத்திவிடாது இவர் இதுபோல் மேலும் பல நூல்களை வாசிப்புப் பிரியர்களுக்குத் தந்துதவ வேண்டும் என்று எதிர்பார்ப்பதோடு அவரது அனைத்து முயற்சிகளும் வெற்றிபெற வேண்டுமென வாழ்த்துகிறேன்.**

**அன்புடன்**

**தம்பிராஜா பவானந்தராஜா**
Hunsrück Str – 17
52477 Alsdorf

# கதைக்குள்ளே கௌசியவர்களின் பொன்மொழிகள்

1. இன்பமோ துன்பமோ உள்ளத்தின் வெளிப்பாட்டை உணர்த்தும் பாங்கு கண்ணீருக்குத்தான் உண்டு
2. எல்லோரையும் திருப்திப்படுத்தி எல்லோருக்கும் நல்லவராய் வாழ்வது என்பது முடியாத காரியம்.
3. எல்லோரும் மகாத்மாக்களும் இல்லை. எல்லோரும் கொடியவர்களும் இல்லை.
4. ஒரு பெண்ணின் தேவைகளை நிறைவேற்றமுடியாத ஒரு ஆண்மகன். அவளை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்வதில் அர்த்தமே இல்லை.
5. ஆசிய நாட்டிலிருப்பவர்கள் இங்கு பணம் உழைப்பது ஓடுகின்ற தண்ணீரில் அள்ளி எடுப்பது என்று நினைப்பார்கள்.
6. அறிவுடையார் தம் அறிவை மேம்படுத்தி உறவுகளை வலுப்படுத்தி ஆதாயம் பண்ணப் பார்த்தல் இயல்பே.
7. பணம் ஒரு கேடுகெட்ட ஒரு நோய்ககிருமி. தம்மில் அளவுக்கு மீறி ஆசைகொள்பவர்களை

ஆட்டிப்படைக்கும். அதைத் தேடிச் செல்லும் மனிதனைபைத்தியமாக்கும்.

8. எந்தத் தொழில் நுட்பசாதனங்களையும் அவதானமாகக் கையாளும் போதே அதன் பயன்பாட்டைப் பெறமுடியும்.

9. வாழ்க்கையை பொறுப்புணர்ச்சியுடனும் பொறுமையுடனும் வாழவேண்டும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

1. பயிற்சி மூலமே ஒவ்வொருவரும் தமது திறமயைக் கொண்டுவர முடியும். எமக்குக்கிடைக்காது என்று மனதில் நினைத்துவிட்டால். நிச்சயம் கிடைக்காது.கிடைக்கும் என்று முயற்சி செய்தால், இதைவிடச் சிறப்பாக கிடைக்கும்.

1. குழந்தை என்பது ஒரு பெண் என்ற உறவை தாய் என்ற அந்தஸ்துக்குஉயர்த்துகின்ற உறவு. எப்படி என்ற எடுத்துரைக்க முடியாத தாய்ப்பாசம் என்றஉணர்வைத் தாய்க்கு ஊட்டும் உறவு.

2. ஒவருக்கு நல்லவராக்த் தெரிபவர் வேறு ஒருவருக்குப் பொல்லாதவராக் தெரிவது இயற்கை.

3. **தாமரைப்பூ எந்தளவு நீரில் நின்றாலும் அந்தளவு நீர்மட்டத்திற்கு மேலேயேநிற்கும். கல்வி அறிவு பெற்றவர்கள் தாழ்ந்து போவதில்லை. அதனாலேயே சரஸ்வதிதாமரைப்பூவில் அமர்ந்திருக்கின்றாள்.**

4. **தன்னம்பிக்கையும் ஆசையும் சரியான முறையில் கையாளப்பட்டால், தீயவழிக்கே ஒரு மனிதனைக் கொண்ட செல்லும்.**

5. **நிலைகெட்ட மனிதர் வாழ்ந்தால், அதற்கு எதிராக உதவிடும் மாமனிதர்களும் வாழ்வார்கள்.**

6. **பாடசாலை முதல்நாள் என்பது ஒவ்வொரு மனிதனும் அரிச்சுவடு தொடங்கும் ஒருகோயில். கல்வி என்னும் கடவுள் அருள்தரும் ஆலயம். வாழ்வின் வெளிச்சத்திற்குஅடிகோலும் வசந்தவாசல்.**

7. **ஐரோப்பியநாடு சுகமானது அதுவே துணையின்றி வாழ்வார்க்குப் பயமானது.**

8. **ஆடம்பரடான வாழ்வு வரும் போகும். ஆதரவான உள்ளம் கிடைப்பதும் அரிது தொடர்வதும் அரிது.**

9. **எது எப்படி எங்கே வாழவேண்டுமோ. அது அங்கே அப்படியே வாழவேண்டும்.**

1. **கலைகள் மனிதனுக்குக் கிடைப்பது கடவுள் கொடுக்கும் வரம்.**

## என்னையே நானறியேன்

1. ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் ஒரு மனிதன் ஒளிந்து கொண்டிருப்பான்.உறங்கிக் கொண்டிருக்கும் அவனைத் தட்டி எழுப்பினால். தனது வேலையைத்தாராளமாகக் காட்டத் தொடங்குவான்.
2. உலகில் எது நடந்தாலும் ஏதோ ஒரு காரணத்தாலேயே நடைபெறுகிறது.
3. விதையில் இருந்து செடி பிறத்தல் போல எண்ணத்திலிருந்து செயல் பிறக்கிறது.
4. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் பலர் குணத்தையும் மாற்றிவிடும் என்பது உண்மை.
5. என்னதான் மாற்றான் தாயிடம் பாசம் வைத்தாலும் பெற்றோரிடம் பெறும் பாசத்திற்கு ஈடாகுமா.
6. பூமி சுழலும் திசைக்கு சுழலவேண்டியதுதான் ஒருநாள் காணாமல் போய்விடுவோம் இதுதான் உண்மை.
7. என்னைப் போல் மற்றவனும் வாழவேண்டும் என்று நினைப்பதுவே தான் மனிதநேயம்.
8. குடும்ப வாழ்க்கை என்பது கண்ணாடிப் பாத்திரம்போல் பேணிப் பாதுகாக்கவேண்டியது. அத்தனை உறுப்பினரும் அதனை அவதானமாகப் பயன்படுத்தாது விட்டால்உடைந்து சுக்குநூறாகிவிடும்.

9. **சோகங்கள் என்றும் தொடர்வதில்லை. அடிக்கடி இன்பங்களும் வந்துபோகும். இது இயற்கை கற்பிக்கும் பாடம்**

10. **வாழ்வின் அர்த்தமும் மகிழ்ச்சியும் ஆழமான அன்பிலேயே வரும்.**

11. **சுகமான நட்பு சுகந்தங்களை வாழ்வுக்குக் காட்டிவிடும். தீயநட்புப் படுகுழியில் வீழ்த்திவிடும். இதை அறிந்தும் சில மனிதர்கள்மாண்டுவிடுகின்றார்கள்.**

12. **சிரித்தாலும் அழுதாலும் உடலானது கண்ணீர்தானமே செய்கின்றது.**

13. **பிரயாணம் செய்யும் வாகனத்தில் சாரதியை மீறி பயணம் செய்ய முடியுமா. பலரை ஏமாற்றலாம். ஆண்டவன் கண்களைக் கட்டமுடியுமா.**

14. **கொழுத்த பிள்ளை அழகு என்பதற்காக கொழுப்பைப் பிள்ளைக்கு உண்ணக் கொடுக்க முடியமா.**

15. **ஒரு மனிதன் செய்யும் தவறுகள் தண்டிக்கப்படும் வேளையில், அவன் ஆற்றியபுண்ணியங்கள் புதுப்பொலிவு பெற்றுத் துணை தரத் துடித்துக் கொண்டு ஓடிவரும்.**

16. முடியாது என்று வாழ்வில் எதுவும் இல்லை. முடித்துக்காட்ட முனையும் போதுமூளையும் எம்முடன் இணைந்து வேகத்தைக் கூட்டும். வேதனை நோய் என்றுவிழுந்துவிட்டால் எழுந்து நிற்கவே மனம் துணையாகாது.

17. காலத்தை வென்று வாழ மனிதன் முயற்சிப்பதே இவ்வுலகத்தின் வளர்ச்சி.

18. இல்லை என்று உலகில் எதுவும் இல்லை. உள்ளதனைத்தும் கொண்டே வளர்வது மனிதன் கொள்கை.

19. மனதுக்குள் ஏற்படும் தவிப்புக்கள் விபரிக்கவும் முடியாது. விளங்கப்படுத்தினால் பிறரால் விளங்கவுமுடியாது.

20. என்னதான் ஞானியானாலும் உயிருக்கு ஆபத்து என்று வரும்போது அதைக் காப்பாற்றவே முனைந்து நிற்பார்கள்.

21. வாழும்வரை உலகவாழ்க்கையை எதிர்த்துப் போராடத்தான் வேண்டும்.வானத்துக்குக் கீழே வீடு கட்டிவிட்டு வானம் விழுந்துவிடும் என்றுபயப்படத்தான் முடியுமா.

22. நினைவுகள் அப்படியே இருந்துவிடுவதில்லை. அது அழிக்கப்படும்அறிவுப்பலகையாகவும் இருக்கும். அதை

**அறிவுப்பலகையாக்குவதும் அழியாதகல்வெட்டுக்கள் ஆக்குவதும் அவரவர் மனதைப் பொறுத்தது.**

23. **எதுவுமே எமக்குச் சொந்தமாவதில்லை. நாம் உயிரோடு இருக்கும் வரை அநுபவிப்போம். இல்லாது போனால் சொந்தமில்லை என்று நினைத்திருப்போம்.**

24. **மற்றவர்களுக்காக நீதியற்ற எந்தக் காரியத்தையும் செய்து விடாதே.**

25. **இன்பமும் துன்பமும் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப அமைகின்றது.சந்தர்ப்பம் வந்து அமைவதும் அவர்கள் சந்திக்கும் மனிதர்களையும்சம்பவங்களையும் பொறுத்தது.**

26. **சாதித்தவர் வாழ்வை தன் முயற்சியில் சாதித்து விட்டேன் என்பார். முயன்று முயன்று தோன்றவர் முடிவு என் கையில் இல்லை என்று நினைப்பார்.**

# சிறப்புரை

இயந்திரமயமான இக்கட்டான கால கட்டத்தில் கட்புலனும், செவிப்புலனும் இணைந்த வெகுசனத் தொடர்பு சாதனங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தின் விளைவாக இளையவர் முதல் பெரியவர் வரை எழுத்துப் பழக்கமும், வாசிப்புப் பழக்கமும் குறைவடைந்து காணப்படுகிறது. கீழைத்தேய நாடுகளில் மட்டுமல்ல அனைத்துலக நாடுகளிலும் இதுவே நிலைமையாக உள்ளது. எனினும் காலத்திற் கேற்றாற்போல் மொழிசார்ந்த செயற்பாடுகள் மக்களைச் சென்றடைய வேண்டியதேவை ஏற்பட்டுள்ளது. அதில் தமிழ் மொழி சார்ந்த இலக்கியங்களும் விதிவிலக்கல்ல. இலக்கணத்தால் தலை நிமிரும் மொழிகளெல்லாம் என்றைக்கும் அழிவதில்லை. இதை அறியாதார் அறியார். அறிந்தவரே அறிவர்.

இலக்கியம் என்பதுஒரு கலைவடிவம். இது இந்நூலாசிரியரான கௌசி அவர்களுக்குக் கைவந்தகலை. இந்நூலைப் பற்றிய சிறப்புக்களைக் கூறுவதற்கு முன், கௌசி என்பவர் உயர்கல்வி படித்த

காலத்திலிருந்து இன்று வரை உறவு ரீதியாகவும், நட்புரீதியாகவும் பழகுகின்றவர் என்ற முறையில் அவரைப்பற்றிச் சிலவற்றைக் கூறவேண்டி உள்ளது. பள்ளிப் பருவத்தில் இவர் சுறுசுறுப்புடனும் புன்சிரிப்புடனும் நகைச்சுவையாகப் பேசி மற்றவர்களைச் சந்தோசப்படுத்தித் தானும் மகிழ்ச்சியாக இருக்கும் குணமும், ஆற்றலும், அறிவும் நிறைந்த சிறந்த மாணவியாக இருந்து, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தன் கலைத்துறைப் பட்டப்படிப்பை முடித்து, பட்டதாரி ஆசிரியையாகவும், பின்னர் ஆசிரியர் பயிற்றுவிப்பாளராகவும் கடமையாற்றி, பல சிறந்த மாணவர்களை உருவாக்கியுள்ளார். இவர் மறந்தாலும் தன்மாணவர்களால் நல்லாசிரியை என்று அடையாளம் காட்டும் வகையில் அவரது கற்பித்தல்முறை அவர்களைக் கவர்ந்துள்ளது. சந்தேகங்களைத் தேக்கி வைக்காது எதையும்தெரிந்துகொள்ள வேண்டும் என்ற தேடல் தன்மை கொண்டவர்.

புலம்பெயர்ந்து வந்தும் அவரது கலைப்பயணம் தொடர்ந்தது. இலண்டன் தமிழ் வானொலியில் இணைந்து கொண்டு கவிதைகள், இலக்கியங்கள்,

வானொலிவாக்கு எனப் பலதுறைகளில் இவரது சேவை தொடர்ந்தது. பின்னர் அவ்வானொலியில் சிறுவர் நிகழ்ச்சித் தொகுப்பாளராகக் கடமையாற்றி, தற்காலத்துத் தகவல் தொடர்பு யுகத்திற்கேற்றாப்போல் சில முக்கியமானதும், தேவையானதும், சில மறக்கப்பட்டதுமான தகவல்கள் மக்கள் மத்தியில் சென்றடையவேண்டுமென்று தனக்கென ஓரிடத்தை இணையத்தளத்தில் ஏற்படுத்தி அதனூடாக தனதுஉயிர்த் துடிப்புள்ள உணர்ச்சியின் வெளிப்பாடுகளை வெளியிட்டுக் கொண்டுவருகின்றார்.

எழுத்தையும், வாசிப்பையும் வழமையான தொழிலாகக் கொண்டவர். பழைமையின் தோள்களில் ஏறிநின்றுபுதுமையை வரவேற்கும் சிந்தனைப் போக்குடையவர். சிந்திக்கும் சிறப்பான பண்பை மனிதருக்குக் கொடுத்திருந்தும் சிந்திக்க மறுக்கும் சிலரைச் சிந்திக்கவைப்பவராகவும், மறுத்தவரை வாதாடி உண்மையை வலியுறுத்துவதில் இவருக்கு நிகர்இவரே. இலக்கணத்தில் சொல்வதானால் பகுதி விகுதிக்கு இடந்தந்து நிற்கும்இடைநிலைபோல இளந்தலை முறையினருக்கு முன்னுரிமைகொடுத்து

முதன்மைப்படுத்துபவர். கட்டுரைகள், கதைகள் எல்லாம் இலக்கியமாவது கண்டு, அடிக்காமல் அடிக்கின்ற அடிகள் மூலம் அருந்தமிழை எதிர்த்தவரை அடக்கிவைப்பார். காணும் பொருட்களையும், காட்சிகளையும் கவிதையாகவும், இலக்கியமாகவும் காண்பவர். அந்தவகையில் உண்மைக்கதையொன்று என்னையே நானறியேன் இலக்கியமாகிறது. ஒரு உண்மைச் சம்பவத்தின் கருவை கதையாய் உருவாக்கி அதை இலக்கியமாய் தவழவிட்டுள்ளார்.

கருவைக் கொடுத்த கன்னியை விட, உருவைக் கொடுத்த தாய்மை பெருமைக்குரியதல்லவா? அந்தவகையில் கௌசி பாராட்டப்பட வேண்டியவர்தான்.என்னையே நானறியேன் என்னும் இலக்கியத்தில் அவர் பல உவமைகளையும், பொன்மொழிகளையும், சில ஆராட்சிக் கருத்துக்களையும் ஆதாரமாகக் கொண்டு கதையை நகர்த்தும் விதம் சிறப்பாக உள்ளது. திருமணத்தின் சின்னமாக விளங்கும்தாலியின் பிறப்புப் பற்றிய தகவல் சிலருக்குத் தெரியாமலும் இருக்கலாம். அதை வெளிப்படுத்திக் காட்டியுள்ளமையும், சில சொற்கள் இலக்கணச் சொற்களாகப் பிரித்தறியத்

தக்கவையாகவும் உள்ளன. எடுத்துக்காட்டுக்காக ஒன்றைக்குறிப்பிடில் பெற்றோர் என்னும் சொல் காரணத்தின் அடிப்படையில் அமைந்த ஒருகாரணப்பெயர் என்பதை விளக்கும் வகையில் அமைந்த விதம். அதாவது பிள்ளைப்பேற்றை இறைவனிடமிருந்து பெற்றுக்கொள்கின்ற காரணத்தால் தான் பெற்றவர்கள்என்பது பெற்றோராகின்றனர்.

அடுத்ததாக, தான் வாழும் நாட்டின் நாகரீகப் பண்புகளில் ஒன்றான விருந்தினரின் வருகையை முன்கூட்டியே அறிவித்து அவர்களின் அனுமதியைப்பெற்றுக் கொள்வது, வாழ்விடத்தின் சட்டதிட்டங்களை மதித்தல், அதற்குக்கட்டுப்படுதல் போன்ற பல கோணங்களில் தனது எண்ணங்களை சுழல விட்டுள்ளார்.எந்தப் பார்வையில் நின்று நோக்கினாலும்.அவரது இலக்கியத்தில் அதன் எல்லையைக்கண்டுவிடலாம். அனைத்தையுமே ஒரு கதைக்குள் அடக்கிய கவித்துவமும், புலமைத்துவமும் கொண்டு, நேரசையில் துள்ளுகின்ற தேமாபோல நினைவலையில்பின்னுகின்றது, அவரது இலக்கியம்.

## என்னையே நானறியேன்

காலமறிந்து கூவிடும் சேவல் போல காலத்தின் தேவைக்கேற்ற நல்ல இலக்கியங்களை மேலும் மேலும் உருவாக்கி ஊனமுறாவகையில் எம்தாய்மொழியினைக் காக்கும் கண்ணியமான பொறுப்பு ஒவ்வொரு கலைஞனுக்கும், இலக்கியவாதிக்கும் உண்டு என்பதை உறுதி கொண்டு, செயற்படுவதுடன், கௌசியையும்வாழ்த்தி அவரது படைப்புக்களுக்கு நல்லாசிகளும் ஆதரவும் கொடுத்துஊக்குவிக்கும் முகமாக இந்நூல் அனைவரது கைகளிலும் தவழட்டும். தமிழ் கூறும்நல்லுலகம் வாழ்த்துவதோடு, உருவகத்தில் உவமையதன் ஆட்சிபோல் உயர் தமிழால் ஒளிபெற்று உயர்ந்தே வாழ்க! என மனமார வாழ்த்துகின்றேன்.

தமிழ்மணி. திருமதி. ஜெகதீஸ்வரி மகேந்திரன்
(காமன், ஜேர்மனி)

# பதிப்புரை

**திரு. லோ. கல்விராஜன் அவர்களுக்கு**
**சமர்ப்பணம்**



**எழுத்துக்கள் சக்தி வாய்ந்தவை. அதன் மூலம்உலகத்தையே திருப்பிப் போடலாம். கௌசி அவர்கள் எழுத்தை ஆயுதமாகக் கொண்டு தான்வாழும் மண்ணில் நடந்த ஒரு உண்மை வாழ்க்கைச் சரித்திரத்தை பலருக்கும்பாடமாக அமையட்டும் என்று இலண்டன் தமிழ் வானொலியில் 4 வாரங்கள் தொடராகத் தன்குரலில் இலக்கியநேரம் என்னும் நிகழ்ச்சியில் வெளிப்படுத்தியிருந்தார். அதுவே இன்று இந்நூல் வடிவாக உருமாறியிருக்கின்றது.**

இவர் தம் படைப்புக்களை இலண்டன் தமிழ் வானொலி மூலம்உச்சரிக்கும்போது அதன் கம்பீரத்தையும் சொல் அழுத்தத்தையும் கேட்டு உயிர்ஒன்றி உணர்ச்சி கலந்து என்னை மறந்திருப்பேன். உலகத்தின் ஊமை வடிவங்கள் இவர்படைப்புக்களின் மூலம் வாய்திறக்கும். மறைந்து கிடக்கும் மங்கிக் கிடக்கும்சில உண்மைகள் இவர் படைப்புக்களின் மூலம் வெளிச்சமிட்டுக் காட்டப்படும்.இவர் எழுத்து நடையிலே காணப்படும் நயம் என்னைத் திகைக்க வைக்கும்.வாழ்விலும் சரி எழுத்திலும் சரி உள்ளொன்று வைத்துப் புறமொன்றைக்கூறுவதில்லை என்பதைத் தனது “சொல்லும் செயலும் ஒன்றானால். உலகம் சொல்லும்உன் பெயர்” என்னும் சொந்த வாசகத்தின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.அதுபோலவே நான் இவர் எழுத்துக்களில் உண்மைத் தன்மையைக் காண்கின்றேன்.

இவர் படைப்புக்கள் சமுதாய நோய்க்கு மருந்துக்கலவை தந்திருக்கிறது. எழுத்துக்கள் சேர்ந்து வெறும் சொற்கள் என்பதை மீறி காலக்கண்ணாடி என்பதைஉணர்த்தி நிற்கின்றன. இவரின் கற்ற அநுபவமும் கற்பித்த அநுபவமும்

**வாழ்ந்தசூழல் அநுபவமும் இணைந்தே படைப்புக்களுக்கு மகுடம் சூட்டுகின்றன. நேரம் இடம்கொடுக்கும் போதெல்லாம் தனது சொந்த இணையத்தளங்களில் (**www.gowsy.com) (www.vanappu.gowsy.com) **தனது படைப்புக்களை வெளியிடுகின்றார். உலகத்துவாசகர்கள் இவர் படைப்புக்களுக்குத் தரும் ஆதரவே இவர் எழுத்துக்களின்அழகுக்கும் உள்ளடக்கத்திற்கும் அத்தாட்சியாகும்.**

**இவர் இலண்டன் தமிழ் வானொலியில் ஓடிவிளையாடுபாப்பாஎன்னும் நிகழ்ச்சித் தொகுப்பாளராக பணியாற்றியிருந்தார். அந்நிகழ்ச்சி மூலம்பல அரிய செய்திகளை உலகத்திற்கு சொல்லியிருக்கின்றார். அத்துடன் அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் சிறுவர்கள் இளையோருக்கு தன் சிறப்பான எண்ணத் தூண்டல்களை வழங்கியிருக்கின்றார். அச்சமயமே இவர் வாழ்வியல் இலக்கியம்கூறும் இலக்கிய நேரத்தில் எழுதி ஒலிவடிவில் வழங்கிய என்னையே நானறியேன் என்னும் இவ்விலக்கியம் ஒலிபரப்பானது.**

**எனவே ஒரு பெண்ணின் வாழ்வில் நடந்த கசப்பான உண்மைகள்உலகுக் கண்ணுக்குப்**

புலப்படுத்தப்பட வேண்டும். வெளிநாட்டுச் சுகம் நாடி தாயகத்தை விட்டு வரும் பெண்கள் எவற்றையெல்லாம் எதிர்கொள்ள வேண்டும் போன்றவிடயங்கள் உலக மனங்களிலே படரவிடப்பட வேண்டும் என்று விரும்பினேன். அதற்கமைய எனது கணவன் ஒரு புத்தகப்பிரியர். தானாகவே ஒரு சஞ்சிகையை வழிநடத்திக் கொண்டிருந்தவர். அதனால், அவர் நினைவு தினத்தில் இந்நூலை அவருக்குச் சமர்ப்பணமாக வெளியிட விரும்பினேன். கௌசி அவர்களிடம் இந்நூலுக்கான முதல்பதிப்புரிமையைப் பெற்று இந்நூலை எனது கணவனுக்குச் சமர்ப்பணமாக வெளியிடுவதில் அகம்மிக மகிழ்கிறேன். நான் கேட்டவுடன் எந்த மறுப்பும்தெரிவிக்காது இந்நூலை வெளியிடுவதற்கு அநுமதி வழங்கிய கௌசி அவர்களுக்கு எனதுமனமுவர்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அன்புடன் மனைவி
தவமலர் கல்விராஜன்

# வாழ்த்துரை

வலுவூட்டுவோம்… வாழ்த்துவோம்….!
மனம் கொண்டதே வாழ்க்கை. தனி மனிதராக பிறப்பிலும் இறப்பிலும் நினைத்ததை அடைந்து வாழ பிரயத்தனப்படும் நம்மில்பலர், சேர்ந்து வாழும் போது, அதனின்று வழுவி வாழ்வதும் நிதர்சனம். மாறாக அமைந்து விடுவதும் உண்டு. அதற்கு தனி மனிதன் பொறுப்பல்ல. இதில் கணவன் மனைவிஉறவு முறையும் உள்ளடங்கும்.

சேர்ந்து வாழும் கூட்டு வாழ்வில்விரும்பிய வாழ்வு இசைந்திடா விடில், மாற்றி வாழ ஏது வழி? இதுவே நம்மில்பலரிற்கு சவாலாகவும் அமைந்து விடுகிறது. இதற்கென தீர்வு காணும்தனிவாய்ப்பாடு உலகில் எவரிடமும் இல்லையென்பதும் புரிகிறது. எனவே, அவரவர்மனம் கொண்ட வாழ்வை வாழ்காலம் முழுவதும் இணைத்து வாழ, ஆசைகளை, ஆற்றல்களால் நிரவ வேண்டியது அவசியமாகிறது. இங்கே, எண்ணிய வாழ்வு கடந்த காலங்களில் கனிந்தது எனினும், அதற்கு தடையூறுகள் வரும்போது தடுமாறி, மீண்டும் மீளஎழும் வாழ்வில் இசைந்திட

எத்தனிக்கும் கதாபாத்திரம், இந்நூலில் நகர்ந்துபோவதை வாசகர்களும் அவதானிக்க முடியும்..

வாருங்கள்இக் கதாபாத்திரத்தை அதன் வலிகளில், தழும்புகளில் இருந்து இனம் காண முயல்வோம். மனம் கொண்டபடி மீள எழ முற்படும் எத்தனத்தை புரிந்து கொள்வோம். இயன்றவரை, இக்கதாபாத்திரத்தை உயிர்ப்புக் கொள்ள உரம் கொடுப்போம். வலுவூட்டுவோம்.

நிஜக் கதாபாத்திரத்தை கருவாக்கி, அழகிய சொல்லூட்டங்களுடன் உயிரூட்டி, நம்மோடு இழையோட விட்டு, நேரில் இனம் காணவைத்த கதாசிரியர் மிகப் பாராட்டுதற்குரியவர். அவர் எழுத்தாற்றல் மட்டுமன்றி, அவர் எடுத்திருக்கும் சமூகப் பொறுப்பும் அவரை நிமிர்ந்துபார்க்க வைக்கின்றது. பாராட்டுக்கள்.

இவ்வகைக் கருவூட்டங்கள் வெறும் ஆர்வத்தோடு பேசிவிட்டு, லண்டன் தமிழ் வானொலி காற்றலையில், இலக்கிய நேரத்தில்ஒலிபரப்பாகி கரைந்ததோடு மட்டும் ஆகிவிடாமல், அதனை பதிப்பாக்கி

**வெளியாக்கமனம் பதித்து, கரம் இணைத்து இன்று வெளியாக்கம் பெற வைத்தபதிப்பாசிரியரிற்கும் பெரு நன்றியுடன், மனம் கனிந்த வாழ்த்துக்களும் உரித்தாகட்டும். தொடர்க இவ்வகைப் பணிகள் என்றும் வேண்டுகின்றோம்.**

**வலுவூட்டுவோம்**… **வாழ்த்துவோம்**….!

**அன்புடன்**
**நடா மோகன்**
First Audio
**லண்டன் தமிழ் வானொலி**
**பா முகம் -** FA TV Tamil
www.firstaudio.net – +44 (0) 7956 256636

# Part 1

இது பூமிப்பந்திலே இரும்பைக் கொண்டு உலகைத் திரும்பிப் பார்க்க வைக்கும் பகுதி, இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு விதைபோட்ட பூமி, ஒரு மனிதனின் பேச்சால் மாண்டு மீண்டும் உயிர்த்தெழுந்து தலைநிமிர்ந்து நிற்கும் நாடு. இன்று மனிதநேயம் மேம்பட்டு பல்லின மக்களுக்குப் புகலிடம் தந்து மாண்புடன் திகழும் ஜேர்மனி என்று அழைக்கப்படும் நாடு.

இந்த ஜேர்மனி என்னும் நாட்டிலே தன் தாலி என்ற பந்தம் வந்து சேர்ந்ததால், அத்தாலிப்பந்தம் வாழும் நாடு தேடி வந்தாள் வரதேவி. தாலி ஒரு பெண்ணுக்கு வேலி என்பது ஒருபழமொழி. தாலி தாங்கும் பெண் தன் கணவனை என்றும் தன் மார்பில் தாங்குவாள். தாலம்பனை என்னும் பனையோலையினால், செய்யப்பட்ட மாலையையே ஆதி காலத்தில் மணமகன் பெண்ணுக்கு அணிவிக்கின்றான். அதனால், தாலம் தாலியானது. பனையோலை பழுதுபடும் என்ற காரணத்தினால், பின் மஞ்சள் கயிற்றில் அணிந்து பின்னர் உலோகத்தால் உருமாறி, இன்று பெண்ணின் எடைக்கு ஏற்ப

## என்னையே நானறியேன்

தங்கத்தால் அணியப்படும் அந்தஸ்துத் தாலியாக தரம் உயர்ந்திருக்கின்றது. எப்படியாயினும் இவனுக்கு இவள் என்ற அந்தஸ்தைப் பெண்ணுக்குக் கொடுப்பதும் இந்தத் தாலியே. அத்தாலியே வரதேவியை ஜேர்மனிக்குத் தளம் இறக்கியது.

பெற்றோர் பெருந்தவமிருந்து பெற்ற மகள் என்ற காரணத்தால், வரம் பெற்று வந்தமகளை வரதேவி என்று வாயார அழைத்து அப்பெயரிட்டனர் பெற்றோர். இளமைக் கனவுகளின் இதயத் துடிப்போடு இரு பாதங்களையும் ஜேர்மனி மண்ணில் பதித்தாள். பாதணி அணிந்த பாதமென்றாலும், உடல் சில்லிட்டது. காலநிலை மாற்றத்தில் புது உணர்வொன்று ஏற்பட்டது. யாழ்ப்பாணம் இப்படி உடலை விறைக்கச் செய்த அநுபவத்தை அவள் எங்கே பெற்றிருக்கின்றாள். வெள்ளைத் தோல்களுக்கு நடுவே இலங்கைப் பெண்ணாள், நம்பிக்கை என்னும் ஆயுதத்தின் வலு தாங்கியவளாக நடந்தாள். நாடோ நாட்டுமக்களோ அவளைப் பயமுறுத்தவில்லை. சஞ்சிகையிலும் திரைப்படங்களிலும் மாத்திரமே கண்ட அந்த வெளிநாட்டு இன்பம், இன்று அவளை ஒட்டி வந்து பற்றிக்கொண்டது. மனமெங்கும் மகிழ்ச்சி பிரவாகித்திருந்தது. என்னைப் போல் அதிர்ஷ்டசாலி

## என்னையே நானறியேன்

யாருமில்லை என்று தன்னைத்தான் அறிந்து கொண்ட களிப்பில் பெருமிதம் கொண்டாள்.

விமானத்தளத்தினுள் நுழைந்தவள் கண்கள் பக்கம் பக்கமாய் நோக்கித் தன் குங்குமத்திற்குச் சொந்தக்காரனை ஆவலுடன் நோட்டமிட்டது.

"அந்நியர்கள் நிறைந்த இந்தக் கூட்டத்தினுள் இவர் எங்கே நிற்கின்றார். எப்படி வந்திருப்பார். வெளியிலே குளிர் எங்கிறார்களே. எப்படி இந்த உடுப்போடு போவது. ஒரு வார்த்தை முதலிலேயே சொல்லியிருந்தால் அதற்குரிய உடுப்பைப்போட்டு வந்திருப்பேன்" என்று மனம் பலவாறாக அங்கலாய்த்தது.

பாதங்களோ பயணித்தது. மனமோ அலை பாய்ந்தது. வெளியேறினாள். பயணிகளை எதிர்கொள்ளும் உறவினர் பிரிவுக்குள் வந்தவள் எதிர் நின்ற தன் கணவனைக் கண்டாள். கையிலே மலர்ச்செண்டு, கண்ணிலே அளவுகடந்த ஆவல், மனமெங்கும் மலர்ந்து நின்ற காதல். கால்களுக்கு முன் மனம் அவனை வந்தடைந்தது. தாகம் தீரத் தழுவிக்கொண்டது. மெல்ல அருகே வந்தாள். கையிலே மலர்ச்செண்டைக் கொடுத்தகரன். அவளை ஆரத்தழுவிக் கொண்டான். இரண்டு உள்ளங்களும்

## என்னையே நானறியேன்

ஒன்று கலந்தன. நிம்மதிமூச்சு இருவருக்கும் வெளிப்பட்டது. பேச்சு விடைபெற்றது.

உணர்வுகள் மட்டும் உறவாடின. வெட்கித்துப் போனாள் வரதேவி. தான் கொண்டுவந்திருந்து குளிர் அங்கியை (Jacket) அவளிடம் நீட்டினான் கரன். புன்முறுவலுடன்
"என்னப்பா.....என்ன… புது இடம். பயமா இருக்கா. பயப்பிட வேணாம். நான் தான் இருக்கிறேனே. குளிருதா?..... அதெல்லாம் போகப்போகப் பழகிடும்" என்றபடி வரதேவியைத் தாம் ஒன்றாய் வாழப் போகும் மனைநோக்கிச் செல்ல வாகனத்திற்கு அழைத்து வந்தான்.

வருகின்ற வழியிலே விறைக்கின்ற பற்களுக்கிடையே வார்த்தைகள் ஒழிந்து கொண்டன. ஆனால், அங்கு பாதையெங்கும் கொட்டிக்கிடந்த பனிநுரைகளை வரதேவி அள்ளிக்கொள்ளக் கொள்ளை ஆசை கொண்டாள்.

பனிமலர்கள் மேலிருந்து பவனி வர
நனியாவல் கொண்டதனைக் கன்னம் வைக்க
கனியாய்த் தன்கன்னம் சிவந்து வர
கழிபேருவ கையுடன் கணவன் கைகோர்த்தாள்.

## என்னையே நானறியேன்

புதிய இடமும், புதியசூழலும் பார்த்தவுடன் இன்பத்தை அள்ளித் தரும். அடியிலிருந்து கரும்பை உண்ணுமாப் போல் இன்பம் தோன்றும். நாளாக நாளாக இன்பத்தின் வேகம் குறைந்து செல்லத் துன்பத்தின் பலம் சோபையுறும். முதல் நாள் கண்ட அநுபவம் 20 வருடங்கள் கடந்தும் அனைவருக்கும் இனிப்பாய் இருக்கும். களவாய்ப் பொதி அடக்கிகளில் கொண்டு வந்து, நாடுகள் பல கடந்து, கால் நடையாய் வந்து, உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி, குளிரிலே வாடி, மழையிலே நனைந்து, குற்றுயிராய்க் குறித்த நாட்டிற்குள் கால் வைக்கும் போது ஏற்படும் அந்தத் தரிசன இன்பம் இருக்கின்றதே, காலங் கடந்தாலும் நெஞ்சில் பசுமையாய்ப் புலப்படும். இன்பமும் துன்பமும் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்பவே அமைகிறது. சந்தர்ப்பம் வந்தமைவதும் அவர்கள் சந்திக்கும் மனிதர்களையும் சம்பவங்களையும் பொறுத்தது. நாம் கேட்டுக்கொண்டு இப்பூமியில் வந்து பிறப்பதில்லை. ஏற்றபடி வாழ்வு அமைவதும் இல்லை. சாதித்தவர், வாழ்வைத் தன் முயற்சியில் சாதித்துவிட்டேன் என்பார். முயன்று முயன்று தோற்றவர், முடிவு என் கையில்இல்லை என்பார். இந்த வரதேவி என்ன வரம் பெற்று ஜேர்மனிக்

## என்னையே நானறியேன்

**காற்றைச் சுவாசிக்கவந்தாளோ?..... எந்தவித கடினமும் இன்றி நேரடியாக இலங்கையில் விமானம் ஏறி ஜேர்மனியில் இறங்கினாள்.**

# Part 2

வரதேவி வாகனத்தினுள் நுழைந்தவள். இருக்கையில் அமர்ந்தாhள். கைவிரல்கள் அதற்குள் விறைத்து விட்டன. மூக்கின் நுனி ஊசியால் குத்துவது போன்ற வேதனையைத் தந்தது. பல் கெட்டியது. ஆனாலும் கரன் அணைப்பின் கதகதப்பில் சிறிது ஆறுதலடைந்தாள். மௌனமாக வந்தவள் மெதுவாக வாய் திறந்தாள்.

"இதென்ன இப்படிக் குளிர்கிறதே! இந்தக் குளிருக்குள் எப்படி உங்களால் வேலை செய்யமுடியும்? எப்படி நீங்கள் இவ்வளவு காலமும் இங்கு வாழ்ந்தீர்கள். இது என்ன வாழ்க்கை. மனுசன் வெளியிலே போகத்தான் முடியுமா? கேள்விக் கணைகளைத் தொடுத்தாள்.

சிரித்தவண்ணம் கரனும்

"வரா! இது தான் நானே மனதுக்குள் நினைத்துக் கொள்வேன். இந்த மாரிகாலம் இருக்கிறதே… இது வெள்ளையருக்குக் கடவுள் கொடுத்த தண்டனை என்று. கோடையில் அரைகுறை ஆடையில் அலைவார்கள். மாரியில் உடலே தெரியாது உடை அணிவார்கள். ஆனாலும், குளிர் காலம் என்று

அஞ்சியிருந்தால், ஐரோப்பியர்கள் இந்தளவிற்கு முன்னேறியிருப்பார்களா? அவர்கள் நாடுகள் வளர்ச்சி கண்டிருக்குமா? ஆரம்பத்தில எனக்கும் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால், அதுவே போகப் போகப் பழக்கமாகப் போய்விட்டது. என்னைப் பற்றி மட்டும் நான் நினைத்திருந்தால் போர்த்திக் கொண்டு படுத்திருந்து விட்டு அரசாங்கப் பணத்தில் வாழ்ந்திருப்பேன். ஆனால், அரசாங்கப் பணத்தில் வாழ்பவர்கள் மனைவியை சட்டபூர்வமாக அழைக்க முடியாது. நீயும் கள்ளத்தனமாக வந்து ஊர் ஊராகக் கஷ்டப்பட்டிருக்க வேண்டும். அதை நினைக்க உனக்கு முன் இந்தக் கஷ்டங்கள் எல்லாம் இந்தப் பனியாய் உருகிப் போய்விடும்" என்று அன்பொழுகக் கூறினான்.

இத்தனையும் கேட்டுக் கொண்டிருந்தவரதேவி தன் உள்ளத்தைத் தன் கைகளில் ஏற்றித் தன் கைகளால் கரனுடைய மடியிலேவைத்து மெல்லத் தடவினாள். அநுதாபம் அவளை ஆட்படுத்தியிருந்தது. வழி வழியாய் பனிப் பூக்கள் போர்த்திய மரங்களையும் வித்தியாசமான கட்டிடக் கலைவண்ணங்களையும் பார்த்துக் கொண்டே பயணம் தொடர்ந்தாள். வழி முழுவதும் விமானத்தினுள் இருந்து வான்வெளியில்

தான் கண்டுகளித்த காட்சிகளைக் கவிதையாய் படம் பிடித்த விதத்தை விளக்கினாள்.

"இன்னும் கொஞ்ச நேரத்தில் வீடு வந்துவிடும் நீ விமானத்தினுள் இருந்து எழுதிய கவிதையை ஒரு தரம் வாசித்துக் காட்டேன்" என்றான் கரன்.

இயல்பாகவே கவிதையில் நாட்டம் கொண்டவனல்லவா கரன்.

"ஐயய்யோ …… இதெல்லாம் ஒரு கவிதையா? என்னால் முடியாது"

என்று வரதேவி மறுப்புத் தெரிவித்தாள்.

"Please…… Please …." என்று கரன் கெஞ்சியபின் வரதேவி தன் கவிதையை வாசித்தாள்.

வான்வெளியில் சிறகு விரித்ததோர் விமானம்
வானழகு வடிவு கண்டதோர் உள்ளம்
வஞ்சியவள் நெஞ்சினிலே வந்ததோர் கானம்
வரிகள் கொண்டு வடிவமைந்து வந்ததிங்கு கவியும்
வானுலகு வடிவமைத்த வானவனோ பேரறிஞன்
வானமதில் வழிசமைத்த பார்மகனோ பேரறிஞன்
கோலமது காட்டுகின்ற மேகங்களோ கதை கூறும்

## என்னையே நானறியேன்

கோடி இன்பம் காணுகின்ற எண்ணங்களோ
கவிபாடும்
பஞ்சுப் பொதிகள் விஞ்சியிருந்ததாலே
பஞ்சணையால் அமைந்ததோர் உலகம்
மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையிலோர்
மேக ஊர்வலக் காட்சியோ!
படையெடுத்துப் பவனிவரும் மேகக் கூட்டங்கள்
படைக்கவிருக்கும் மகஞர்தான் பரமனுக்கோ!
மண்ணிலே காணுகின்ற கோலங்களின்
பாடுதான்
விண்ணிலே படுத்துகின்ற தென்னவோ!
விமானியோ தொட்டிலொன்று ஆட்டுகிறான்
விண்வெளியோ சொர்க்கம் ஒன்று காட்டுகிறதே!
சொற்களால் வடிக்கவொண்ணா அழகுணர்ச்சி
சொர்க்கமென்ற ஒரு சொல்லில் அடங்கிற்றோ
வர்க்கபேதம் அங்கில்லை, வழிப்பறித்
தொல்லையில்லை
வாகனத்தடையில்லை, வழியேதும் புரிவதில்லை
கண்ணைக் கட்டிவிட்டதுபோல் கடக்கின்றோம்
நாட்டைவிட்டு
கண் கண்ட தெய்வமாய் கரை சேர்க்கின்றான்
விமானியும் தான்

வரதேவி வாசித்து முடித்தாள். கரன்மெய்மறந்து போனான். வரதேவி நீ மனைவியாகக் கிடைப்பதற்கு நான் கொடுத்துவைத்திருக்க வேண்டும். உன் கவிநயம் என் மனதைக் கொள்ளை கொள்ளச் செய்கிறது.

"இந்த சந்தோசம் நீங்கள் தந்தது தானே. நீங்கள் இல்லாவிட்டால் இப்படி சுகம் எனக்குக் கிடைக்குமா. விமானப் பயணம் எனக்குக் கிடைத்திருக்குமா? இந்தக் கவிதையும் வடித்திருக்க முடியுமா?

என்றாள் வாஞ்சையுடன். பேசிக் கொண்டிருக்க வீடும் வந்தடைந்தது.

அவள் வாழத் தன்னால் அழகுபடுத்திய அந்த அற்புத அரண்மனையாம் வீட்டிற்குள் வரதேவியைக் கரன் அழைத்து வந்தான்.

'எப்படி, வரா! இந்தவீடு உனக்குப் பிடிச்சிரிக்கே?"

அன்பொழுகக் கேட்டான் அவள் கணவன் கரன். ஆனால், வரதேவியோவீட்டை நோக்கினாள். நெஞ்சிற்குள் ஏதோ ஊசிபோல் குத்தியெடுத்தது போன்ற உணர்வு ..........

# Part 3

கணவனின் உழைப்பும் தன்மேல் அவன் கொண்டகாதலின் பிரதிபலிப்பும் ஒன்றாய் அவள் கண்களுக்குத் தெரிந்தது. அழகானசோபாவில் காய்த்துப் போன அவன் கரங்களின் அடையாளங்கள் தென்பட்டன. சமையலறை அடுப்பிலே நித்திரையின்றிச் சிவந்திருந்த அவன் கண்கள் தோன்றின. ரம்மியமானதளபாட அழகிலும் உழைத்து உழைத்துத் தேய்ந்து போன அவன் உடற்பொலிவு தென்பட்டது. மனம் இளகிப் போனாள். அவன் இரு கரங்களையும் இணைத்தெடுத்தாள்.தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

“இஞ்சபாருங்கோ! உங்களின்ர இந்த சின்ன இதயத்துக்குள்ள ஒதுங்க ஒரு இடம் தந்தாலேஎனக்குப் போதும் பாருங்க. ஆபத்துக்கு உதவாத பிள்ளை. அரும்பசிக்கு உதவாதஅன்னம், தாபத்தைத் தீராத தண்ணீர், தரித்திரம் அறியாத பெண்கள், கோபத்தைஅடக்காத வேந்தன், குறுமொழி கொள்ளாச் சீடன், பாபத்தைத் தீராத் தீர்த்தம், ஆகிய ஏழும் பயனில்லையாம். எனவே தரித்திரம் அறியாத பெண்ணல்ல நான். இரத்தம் சிந்தி, நீங்க என்னை ராணி போல் வைத்திருக்க வேண்டும் என்றெல்லாம்

## என்னையே நானறியேன்

பெரிசாநான் கனவொன்றும் காணவில்லை. எப்படி நீங்கள் வாழுகின்றீர்கள் என்றெல்லாம்கேட்டு என் கழுத்தை நான் உங்களிடம் நீட்டவில்லை. எப்படி நீங்கள் வாழ்ந்தாலும் உங்களோடு சேர்ந்து வாழவேண்டும். அதுதான் எனக்குச் சந்தோஷம்.நான் சொல்லும் ஒரு விசயத்தை நீங்கள் கேட்டே ஆகவேண்டும். உங்கள் உழைப்புக்குநானும் கைகொடுப்பேன். இருவரும் சேர்ந்து உழைப்போம். உங்களைத் தனியாக கஷ்டப்பட வைக்க நான் விரும்பவில்லை" என்று வரதேவி வினயமுடன் கேட்டாள். அவள்மனமும் உதடும் உதிர்த்த வார்த்தைகளில் உள்ளம் நெகிழ்ந்தான் கரன்.

"ஆடம்பரமான வாழ்வு வரும் போகும். ஆனால் ஆதரவான உள்ளம் கிடைப்பதும் அரிது, தொடர்வதும் அரிது. நீ எனக்குக் கிடைத்ததே நான் செய்த புண்ணியம். இதைவிட வேறு எதுவும் தேவையில்லை. நீ சம்பாதித்துத் தான் நாம் வாழவேண்டும் என்ற நிலை எமக்குஇல்லை. முதலில் இந்த நாடு பற்றிப் பழகவேண்டும். மொழி தெரியவேண்டும். அவற்றுக்கு முதலில் வழி செய்கிறேன். பிறகு பொழுதுபோக்கிற்கு தமிழ்தொலைக்காட்சி இருக்கின்றது. அதைவிட

உனக்குப் பிடித்த இன்னும் ஒரு விடயமும்இருக்கிறது. அவை பற்றிப் பின் பேசுவோம். இப்போது உடை மாற்றிக் கிளம்புஇன்று எமக்கு விருந்தளிக்க என் நண்பர் காத்துக் கொண்டிருப்பார்” என்றான்கரன்.

தியாகி என்பவன்கரனுக்கு பல வருடங்களாக நண்பனாக இருந்தவன். தன் குடும்பத்தினருடன்ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். மனைவி கீதாவும் பிள்ளைகள்ரெபெக்கா, மெலினா இருவரும் கரனில் மிக்க பாசம் வைத்திருப்பவர்கள். தனியனாய்நண்பன் குடும்பத்தினருடன் பழகிய கரன் தன் மனைவியையும் அவர்களுடன் இணைத்துவைக்க அவர்கள் வீட்டிற்கு வரதேவியை அழைத்துச் சென்றான். அழைப்பு மணிஅழுத்தியவுடன் ஓடிவந்து குழந்தைகள் கதவைத் திறந்தனர். எந்த வீட்டிலும்விருந்தினர்கள் வருவதாக இருந்தால் முதலில் சந்தோசப்படுவது குழந்தைகள்தான்.எந்தப் பெரியவர்களாக இருந்தாலும் தங்களைத்தான் பார்க்க வருவதாக நினைத்துக்கொள்வார்கள். அதுவும் ஐரோப்பியநாடுகளில் வளருகின்ற பிள்ளைகள் என்றால், கேட்கத் தேவையில்லை. இங்கு எல்லோரும் busy ஆக இருப்பதனால்,

வீடுகளுக்குச்செல்வது அருமை. செல்வதாக இருந்தாலும் அறிவித்துவிட்டே செல்வார்கள். அதனால், அப்பா அம்மா முகங்களையே பார்த்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு விருந்தினர்கள் வருவதென்றால் படுகுசிதான். அதனாலேயே பிள்ளைகள் இருக்கின்றவீட்டிற்குச் செல்பவர்கள் அவர்களுக்கு ஏதாவது பரிசுப் பொருள்கள் கொண்டு செல்வது வழக்கமாக இருக்கின்றது. இதனையே நோயாளிகள் குழந்தைகளைப் பார்க்கச்செல்பவர்கள் கையுறை கொண்டு செல்ல வேண்டும் என்று பழங்காலத்திலிருந்தேசொல்லப்படுகின்றது.

கதவைத் திறந்துவிட்டு “அம்மா! கரன் மாமா..........” என்று கத்திக் கொண்டே வெட்கத்துடன் வீட்டிற்குள் ஓடிப் பட்டாம் பூச்சிகளாய்ப் பறந்து மறைந்து விட்டார்கள். கரன் மாமா பழக்கப்பட்டவர் என்றாலும் சேர்ந்தே வந்திருப்பவர் புதுமுகம் அல்லவா! வழமையாக சுட்டிகளின் சுட்டித்தனத்தில் இதுவும் ஒரு முக்கிய நிகழ்வுதானே.

இருவரும் உள்நுழைய சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கீதா கைகளைத் துடைத்த வண்ணம்

“வாங்கள்அண்ணன் வாங்க“ என்றபடி அழைக்க தியாகியும் முகமலர இருவரையும்

அழைத்தார்.முதற்சந்திப்பு, முதல் நட்பு, வரதேவி ஜேர்மனி வாழ்வின் முத்தான சந்திப்பு. முதற் பார்வையிலே அனைவரையும் பிடித்துக் கொண்டது. “அகத்தின் அழகு முகத்தில்தெரியும்” என்பார்கள். அது சிலருக்கு ஒத்துப் போவதில்லை. ஆனால், தியாகி குடும்பத்திற்கு நன்றாகவே ஒத்துப் போனது. பிள்ளைகளை அழைத்துக் கரன் கொண்டுவந்திருந்த இனிப்புப் பண்டங்களை அவர்களிடம் நீட்டினான். வாங்கிவிட்டு ஓடநினைத்தவர்களை எட்டிப்பிடித்தாள் வரதேவி. இயல்பாகவே பிள்ளைகள் என்றால்அவளுக்குக் கொள்ளை இன்பம். ஆசையாக அவர்களுடன் அளவளாவிக் கொண்டாள்.

“களைப்பாய் இருப்பீர்கள் அக்கா! சாப்பிட்டுவிட்டு கதைத்துக் கொண்டிருப்போம்“ என்றாள் கீதா.

“பொறு பொறு சந்திரனும் வரட்டும்” என்றான் தியாகி.

சொல்லிக் கொண்டிருக்கும் போதே சந்திரனும்சங்கற்பமாகினான். சந்திரன் கரனுடைய உடன் பிறந்த சகோதரன். சகோதரர் இருவரும்ஒன்றாகவே வாழ்ந்திருந்து பின் வேலை நிமிர்த்தம் வேறு நகரத்தில் வாழ்கின்றார். அனைவரும் இணைந்து உணவுண்டு மகிழ்ந்திருந்தனர். சேட்டையும் கும்மாளமுமாக சிரிப்பும் சத்தமுமாக

## என்னையே நானறியேன்

**இருந்த அந்தப் பொழுதை நினைத்து நினைத்து வரதேவி மகிழ்ந்து போனாள். எப்படி குதூகலமாக இருக்கின்றார்கள் என்றுமனதுக்குள் நினைத்தவளாய் இந்த வாழ்வும் அவளுக்குப் பிடித்துப் போனது. ஒன்றாக கதைத்துக் கொண்டிருந்த போது தியாகிஉள்ளே சென்று கிற்றாரை எடுத்து வந்தான். இது கரனுடையதே ஆனாலும், மிகுதியான பொழுதுகள் நண்பனுடன் இணைந்தே இன்பம் காண்பதனால், இந்த வீட்டிலேயே கிற்றார்அடைக்கலமாய் இருந்தது.**

**“அக்கா கரன் எப்படி கிற்றார் வாசிப்பார் என்று உங்களுக்குத் தெரியுமா? மகா கெட்டிக்காரன்”**

**“இவர் எனக்குச் சொல்லவே இல்லையே” என்று கரன் முகத்தைப் பார்த்தாள் வரதேவி.**

**“தியாகி இன்னும் ஒரு விசயம். வரதேவி பாடுவதில் வரம் பெற்றவள். அவளுடைய பாட்டை நீங்கள் கேட்க வேண்டும்” என்றான் கரன்.**

**“சும்மா இருங்கள். இவர் நன்றாகவே புழுகிறார். எனக்குப் பாட வராது…” என்றபடி கரனை முறைத்துப் பார்த்தாள்.**

## என்னையே நானறியேன்

இதைக் கேட்டுக் கொண்டிருந்த பிள்ளைகள் ஒன்றாக இணைந்து “பாடுங்கள், பாடுங்கள் அன்ரி“ என்று வறுத்தெடுத்து விட்டனர். கீதா கூட “பாடுங்கள் அக்கா. நாங்கள் தானே இருக்கின்றோம்” என்று தெண்டித்தாள்.

“சந்திரனும் அண்ணி please என்று கெஞ்சினான்”

கரன் “வரா எல்லோரும் கேட்கின்றார்கள் ஒரு பாட்டுப் பாடேன். நான் கிற்றார் வாசிக்கின்றேன். ஒரே ஒரு பாட்டுப்பாடினால் போதும்” என்று வேண்டிக் கேட்டான்.

முடிவில் இணைந்தவளாய் வரதேவி “வாவெண்ணிலா உன்னைத்தானே வானம் தேடுதே” என்னும் பாடலைப் பாட கரன் கிற்றார் இசைத்தான். அனைவரும் பாராட்ட இன்பமாக ஜேர்மனியில் முதல்நாள் பொழுது மறக்க முடியாத பொழுதாக வரதேவிக்கு அமைந்தது.

வழமைபோல் கதிரவன் வரவு கண்ட ஜேர்மனி கண்விழித்துக் கொண்டது. தம் கடமைகளைக் கடுதியாய்ச் செய்ய மக்கள் துரிதமானார்கள். வரதேவி படுக்கைவிட்டு எழுந்தாள். ஒவ்வொரு வேலைகளையும் கரனிடம் கேட்டபடி தொடர்ந்தாள். குளிப்பதற்காக நீர் சாதாரணமாகத் திறந்தாள்.

## என்னையே நானறியேன்

பனிக்கட்டிக்குள் விரல்கள் புதைத்தது போன்ற உணர்வைக் குழாய்நீர் தந்தது. பின் சூடான நீரைத் திறப்பதற்குரிய முறையில் திறந்து உடல் நனைத்தாள். கிணற்றிலே நீர் மொண்டு சாரைசாரையாக உடலிலே வார்த்த இன்பம் இங்கு சவர் தெளிக்கும் நீரிலே அவளுக்குக் கிடைக்கவில்லை. கதிரவன் வரவு கண்டு பாடும்குயிலின் பாடலும் கொக்கரிக்கும் கோழியின் சத்தமும் ம்மே…. என்று கத்தும் ஆடுகளின் சத்தமும் கா….க்கா என்று கத்திக் கொண்டே பறக்கும் காகங்களின் இரைச்சலும் அவளை நாடவில்லை. அமைதி… அமைதி… எங்குமே அமைதி நிலவியது. ஆசைக்கு சாளரம் திறக்க அவளால் முடியவில்லை. முண்டியடித்துக் கொண்டே குளிர்காற்று வீட்டினுள் நுழைய எத்தனித்தது. வெப்பமான ஆடைகளைப் போட்டபின் 10 நிமிடங்கள் சாளரங்களைத் திறந்துவிட்டு காற்றை ஆசுவாசமாக வீடெங்கும் பவனிவரச் செய்து பின் சாளரங்களை இறுக்கமாகப் பூட்டி வெப்ப மூட்டியை இயங்க விடும்படி கரன் வரதேவியைப் பணித்திருந்தான். அதன்படியே வரதேவியும் செயல்பட்டதனால் எந்தவித வெளியுலக இரைச்சலையும் அவள் காது உள்வாங்கவில்லை.

## என்னையே நானறியேன்

ஒருநாட்டினுள் புகுந்துவிட்டால், அந்த நாடு வந்தோம் இருந்தோம் என்றுஇருக்க அனுமதி தந்துவிடுமா? அந்த நாட்டிற்குள் புகுந்துவிட்டோம். இங்குதான்வாழப் போகின்றோம் என்னும் விபரங்களை நாம் அந்நாட்டிற்குத் தெரிவித்துஅனுமதி பெற்றாக வேண்டும். இல்லையென்றால், தேடிப் பிடித்து சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்பப்பட வேண்டிய குற்றவாளிகளாகி விடுவோம். எமது பல்கணியில் கூடுகட்டும் குருவிகளைக்கூட நாம் விட்டுவைப்பதில்லை. பத்திரமாய்க் கொண்டுசென்று மரத்திலேயும் மரநிழலிலேயும் விட்டுவிடுகின்றோம். எது எங்கே எப்படி வாழவேண்டுமோ அது அங்கே அப்படியே வாழவேண்டும். இவ்வாறேவாழவந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்கமைய நாம் வாழவேண்டியது அவசியமாகின்றது.

வரதேவி கரனுடன் தான் வாழ்வதற்கான அனுமதியைப் பெறுவதற்காய் வெளிநாட்டுத் தூதரகம் நோக்கிப் பயணமானாள். பார்க்கும் மனிதர்கள் எல்லாம் வெள்ளைத் தோல்களுடன் பளிச்சென்று இருந்தனர். படித்தவர் படிக்காதவர், ஏழை பணக்காரன், பேதம் இலகுவாய்க் கண்டுபிடிக்க முடியாதபடி அவர்கள் தோற்றம் அவள்

பார்வைக்குப் பட்டது. அவள் முன்னே வந்துநின்ற பஸ் வண்டி கதவைத் திறந்து அவளை அழைத்தது. படிக்கட்டுகளில் பாதம் படிய வேண்டிய அவசியமின்றி எடுத்துவைக்கும் காலடி உடனே உள்நுழையும் படியாக இலகுவாய் இருந்தமை அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. விமான ஓட்டுநர் போன்று பல அழுத்திகளுக்கு முன் அமர்ந்திருந்த சாரதியைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது. இதமான வெப்பத்துடன் ஆளையாள் முட்டி மோதாமல் இருந்த இருக்கைகளின் இருப்பிடம் இரசிக்கும் படியாக இருந்தது.

தரிப்பிடம் வந்த வரதேவி விரல் பிடித்து நடக்கும் சிறு குழந்தையாய் கரண் கரம்பிடித்து வெளிநாட்டுத் தூதரகம் நோக்கி நடந்தாள். போகும் வழியெங்கும் இடங்களைப் பார்த்தபடி நகர்ந்தவள் உரிய இடம் சென்றாள். அங்கு ஒரு இயந்திரத்தின் அழுத்தியை அழுத்திய போது ஒரு நம்பர் கிடைத்தது. அதை எடுத்துக் கொண்டு ஒரு ஆசனத்தில் அமர்ந்தாள். எதிரே தொங்கிக் கொண்டிருந்த அடையாளப் பலகையில் அறை நம்பரும் அழைக்கும் நம்பரும் கண்சிமிட்டிக் கொண்டிருந்தன. தனது அழைப்புக்காய் காத்துக் கொண்டிருந்தவள் எவ்வித ஆரவாரமுமின்றி

அமைதியாய் தமது அழைப்புக்காகக் காத்திருந்த மக்களைப் பார்க்கும் போது இலங்கையிலே ஒரு அலுவலகம் சென்றால், அங்கு மக்கள் முட்டிமோதி முன்னேறுவதையும் காது அடைக்கப் பேசுவதையும் ஒழுங்கின்றி மக்கள் அழைக்கப்படுவதையும் நினைத்துப் பார்த்தாள். தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள். கண்சுருக்கிய கரனிடம்,

மெதுவாக “இலங்கை முன்னேற ஆயிரக்கணக்கான வருஷங்கள் இருக்குதுப்பா” என்று சொல்லிச் சிரித்துக் கொண்டாள்.

ஏன் என்று கேட்ட கரனிடம்

“யாழ்ப்பாணத்தில் அம்மாவைக் கூட்டிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தேன். நீண்ட வரிசையில் காத்துக்கொண்டுநின்றோம். எங்கள் பின்னே அதுவும் நன்றாக பின்னே நின்ற ஒருவரை முதலில் அழைத்தார்கள். ஏனென்று நான் போய்க் கேட்டபோது அது அப்படித்தான் என்று டொக்டர் சொன்னார். எப்படி? என்று நான் மீண்டும் கேட்ட போது நான் டொக்டர் எனக்கு வேண்டியவர்களை முதலில் அழைப்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது என்றார். தாறுமாறாக முடியுமான வரை திட்டிவிட்டு அம்மாவைக் கூட்டிக் கொண்டுவேற டாக்டரிடம் சென்று காட்டினேன்”

என்று மெதுவாக தனது அநுபவத்தை இச்சூழ்நிலையில் ஒப்பிட்டு எடுத்துரைத்தாள். அன்றைய தினம் அவளுக்கு ஜேர்மனியில் வாழ்வதற்கான அநுமதி வழங்கப்பட்டது (*aufenthal erlaubnis*) .

முறையாக சட்டரீதியாக அரசாங்க அநுமதி பெற்று வேலை செய்து நல்ல விசா வைத்திருக்கின்ற ஒருவர் தன்னுடையமனைவியை வேறுநாட்டிலிருந்து ஜேர்மனியில் வாழ்வதற்கு அழைக்கும் போது அந்நாட்டில் இருவரும் வாழக் கூடிய வருமானத்தை கணவன் கொண்டிருப்பாரேயானால், அவர் மனைவி இவ் அநுமதியைப் பெற்றுக் கொள்வாள். இவர்கள் சமூகநல சேவைத்திணைக்களத்தில் (Job center ) இருந்து எவ்வித உதவியும் பெற்றுக்கொள்பவர்களாக இருத்தல் கூடாது.

ஆனால், கணவன் வேலை எதுவுமே செய்யாது அரசாங்கப்பணத்தில் அதாவது சமூகசேவை திணைக்களத்திலிருந்து (Job center ) பெறும் பணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பட்சத்தில் கணவனுக்கோ மனைவிக்கோ வரையறுக்கப்பட்ட அநுமதியே வழங்கும். அதாவது 6 மாதங்களுக்கு ஒரு தடவை என்ற வீதத்தில் வாழ்வதற்கான அநுமதியை ஜேர்மனிய அரசாங்கம் வழங்கிக்கொண்டிருக்கும்.

## என்னையே நானறியேன்

**இவர்களை இவர்கள் நாட்டுக்கு விரும்பிய நேரத்தில் திருப்பிஅனுப்பும் சட்டத்தை இந்நாடு கொண்டிருக்கின்றது.**

**வரதேவி வரம் பெற்று வந்த காரணத்தால் கரனிடமிருந்து நல் வரங்களையே பெற்றாள். அதன்படி நல்வதிவுரிமையும் பெற்றாள். காரியம் முடிந்தவுடன் அடுத்து மருத்துவக்காப்புறுதி பெறுவதற்காகச் செல்ல வேண்டி இருந்தது. இடையில் களைப்புத்தீர்க்கக் கோப்பிக் கடையினுள் நுழைந்தனர். சுவையான கப்புச்சினோ (*Cappuccino)*காப்பியை அருந்திய போது புதியதோர் சுவையை புரிந்து கொண்ட வரதேவி நாகொத்தமல்லியும் சீரகமும் வேர்க்கொம்பும் போட்டு அரைத்துக் குடித்த கோப்பியின் சுவையை நினைத்துப் பார்த்தது. கோப்பியுடன் ஸ்ரோபரி பழம் வைத்துச் செய்த கேக்கையும் சுவை பார்த்தாள். வேறு சுவை பெற்ற நாதித்திப்பதை அவள் மனம் உணர்ந்தது.**

**இச்சமயம் மகளுடன் உள்நுழைந்த சாம் “கரன் எப்படி சுகம்? என்றான். அருகே வந்த மகளும் “மாமா எங்கே எனக்குப் படம் கீறித் தருவேனென்று சொன்னீங்கள். தாங்கோ படம் கீறித்தாங்கோ” என்று அடம்பிடித்தாள்.**

கரனும் “இங்க பாருங்க சாரு! இந்த அன்ரியப் பாருங்க. இவ நேற்றுத்தான் இலங்கையில் இருந்து வந்தவ. *hallo* சொல்லுங்க. இவவுடைய வேலைகள் எல்லாம் முடித்தவுடன் உங்கள் படத்தைக் கீறித் தருகிறேன். சரியா“ என்றான்.

வரதேவியைப் பார்த்த சாருவும் “ஓகே.....” என்றாள். அருகே இருந்த சாம்.

“அது பாருங்க சாருவைப் பார்த்துப் படம் வரைவதாக கரன் சொல்லியிருந்தான். அதுதூன் கரனைக் கண்டவுடன் சாருவும்அடம்பிடிக்கின்றாள். எப்படிப் பிரயாணம் எல்லாம்....”என்று கேட்டான்.

“பிரச்சினையில்லை.... இடம்தான் புதிது. இனித்தான் பழக வேண்டும் ....”என்றாள்.

“நேரம் கிடைக்கும் போது எங்கள்வீட்டிற்கும் வாருங்கள். நான் சாருவை மக்டோனால்ஸ்க்குக் கூட்டிப் போகவேண்டும்” என்று கூறியபடி விடைபெற்றார்கள் இருவரும்.

கரனுடைய மற்றைய நட்பையும் இன்றுசந்தித்தாள். மற்றைய திறமையையும் அன்று கேட்டாள். இவருக்குள்ளே இத்தனை திறமைகளா என்று மனதுக்குள் பெருமைப்பட்டாள். ஒருவரைப் பார்த்து வரையக் கூடிய அபாரதிறமை இவருக்குள் இருப்பதை

**நினைக்க நினைக்க மகிழ்ச்சியும் கரன் மேல் இருக்கும் மரியாதையும் பல மடங்கு அதிகரித்தது. கலைகள் மனிதனுக்குக் கிடைப்பது கடவுள் கொடுக்கும் வரமல்லவா!**
**வருகின்ற காலங்களில் எவையெல்லாம் வரா கரனிடமிருந்து அறிந்து கொள்ளப் போகின்றாளோ அடுத்து மருத்துவக் காப்புறுதி பெறுவதற்காக கரன் பதிவு செய்திருக்கும்** A.O.K **என்று அழைக்கப்படும்** (*Abkürzung für Allgemeine Orts-Krankenkasse)* **மருத்துவக் காப்புறுதி நிறுவனத்திற்கு அழைத்துச் சென்றான். இக் காப்புறுதி நிறுவனம்** 1894 **ஆம் ஆண்டு முதன் முதலாக நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் மாதந்தோறும் தமது பங்குப் பணத்தைக் கட்டிக்கொண்டிருப்பார்கள். மருத்துவரிடம் செல்லும் போதோ மருந்துகள் கொள்வனவுசெய்யும் போதோ மருத்துவசாலையில் அநுமதிக்கப்பட்டுள்ள போதோ ஏற்படுகின்ற அனைத்துச் செலவுகளையும் இந்நிறுவனம் பொறுப்பேற்றுக் கொள்ளும். நோய்காணும்போது நாம் இக்காப்புறுதி நிறுவனத்திற்கு செலுத்துகின்ற பணத்தை விடமேலதிக செலவுகளை பெற்றுக் கொள்ளலாம் இல்லையேல் நாம் குறைவான நோய்களைக்**

கொண்டிருக்கும் பட்சத்தில் நாம் செலுத்துகின்ற பணத்தைவிட குறைந்த செலவுகளைப் பெறலாம். நாம் செலுத்துகின்ற பணம் எமக்கோ அல்லது வேறு ஒருவருக்கோ பயன்படுத்தப்படும். எல்லைமீறிய தாங்கவொண்ணாச் செலவுகளைச் சிலநோய் தந்துவிடும் அப்போது இக்காப்புறுதிப் பணம் எமக்கு மிக உதவியாக இருக்கும். இதை ஜேர்மனிய அரசாங்கம் மனித உரிமை மேம்பாட்டுக் கொள்கையின் அடிப்படையில் அறிமுகப்படுத்தி மிகப் பிரபல்யம் அடைந்துள்ளது. இதனால், வறியமக்கள் மிக இலாபம் அடைகின்றார்கள். இவர்களால் இக்காப்புறுதிப் பணம் செலுத்தமுடியாத நிலைமையில் இவர்களைப் பராமரிக்கின்ற சோசல் நிறுவனம் இவர்களுக்கான பணத்தைச் செலுத்தும். வரதேவியும் இக்காப்புறுதி நிறுவனத்தில்தன்னைப் பதிவு செய்து அதற்கான அட்டையைப் பெறுவதற்கான அநுமதியைப் பெற்றாள்.முக்கிய கடமைகள் இரண்டும் முடிந்த இரண்டாம் நாள்ப் பொழுது வீடு வந்ததும் வராததுமாக உருபார்த்து உரு வரையும் உன்னதக் கலை தேர்ந்த தன் கணவன் வண்ணம்காணத் தவித்தாள்.

## என்னையே நானறியேன்

**மெல்லத் தன் கைவிரல்களால் கரன் சட்டைப் பொத்தானைத் திருகியபடி**
**“நான் ஒன்று கேட்பேன் செய்வீங்களே” என்றாள்**
**“என்ன இந்த மகாராணிக்கு வேண்டும். இனி நீதானே எனக்கெல்லாம். நீ கேட்டு நான் ஏதாவது செய்யாமல் விடப் போகிறேனா? வருகின்ற காலங்கள் வசந்தமே நீ வாழப் போகும் வாழ்க்கையும் வசந்தமே. கேள் முடியுமோ முடியாதோ முயற்சிக்கிறேன்”**
**“இல்லை……”தயங்கினாள். பின் ஒருவாறாக**
**“நீங்கள் ஒருவரைப் பார்த்து அப்படியே வரைவீர்களாமே. என்னைப் பார்த்து வரைய முடியுமா? என்று கண்சிமிட்டியபடி தன் ஆசையை வெளியிட்டாள்.**
**“இதில் என்ன சந்தேகம் வரைந்தால் போயிற்று. நிச்சயமாக. ஆனால், உன் கண்ணைப் பார்த்தால் அவை பேசும் கதைகளும் அல்லவா என்னைத் தொல்லை செய்யும். பறவாயில்லை. கலைஞன் கட்டுப்பாடு என்றுமே கலையக்கூடாது வரா. உன் படம் எங்கள் வீட்டுச் சுவரில் விரைவில் தொங்கும்.சரிதானே“**
**“ம்….” என்றபடி வரதேவி மகிழ்ச்சி கரன் கன்னத்தில் தடம்பதித்தது.**

# Part 4



வரதேவி வாழ்க்கைத் துணைவன் ஆதரவான ஆண்மகன் மட்டுமல்ல, நாடுவிட்டு வேறுநாடு வந்தாலும், தாய் பாலோடு சேர்த்துப்பருகத் தந்த தாய்நாட்டுத் தமிழ் அறிவுடன், நூற்றாண்டு கடந்தும் அந்நிய மண்ணில் தமிழ் ஆட்சிபுரிய வேண்டி ஹரிதாஸ் நிறுவன ஆதரவுடன் தமிழ்க் கல்விச்சாலை அமைத்துத் தனியனாய்த் தமிழ் கற்பித்த வந்த தமிழ்மகன். ஹரிதாஸ் என்னும் நிறுவனம் வெளிநாட்டவர்கள் மொழி, கலை, கலாச்சார பாரம்பரியத்தைக் கட்டிக்காப்பதற்கு முழு ஆதரவையும் கொடுக்கும் ஒருநிறுவனம்.

அவன் போட்டுவிட்டபாதை மேல் போகத்துணிந்தாள் வரதேவி. அவள் ஆசிரியையாய்ப்

பணியாற்றிய அறிவுமட்டும் கொண்டவளல்ல. குழந்தைகள் மனங்கோணாக் குணவதியும் கூட. தம்மிலும் தம் அறிவால் வளர்வார், சிறப்புடையவராயின். உள்ளம் குதூகலிப்பார் உண்மை ஆசிரியர். ஒருவர் கற்ற இன்பத்திலும் மேலாமே தான் கற்ற கல்வி பிறர் அறியச்சொலல். இத்தன்மை அனைத்தும் பெற்ற வரதேவி, புகலிடம் தேடிவந்த இடத்திலேயேவந்து மூன்றாம் நாள் புகழிடம் பெறும் மாணவப் பூங்காவுக்குள் நுழைந்தாள்.பூத்தும் பூக்காதிருந்த பூந்தளிர்கள் கண்டு அவள் மூளைக்குள் இலட்சியவிருட்சம் வளரத் தொடங்கியது. தான் கற்றவை தான் கற்பித்தல் மூலம் பெற்றஅநுபவச் சொத்து அத்தனையையும் இந்தத் தளிர்களுக்கு நீராய் வார்க்கத்தொடங்கினாள். தவிர்க்க முடியாதது பசியும், தாகமும். அடக்கமுடியாததுஆசையும், துக்கமும். வரதேவி கொண்டது கல்வித் தாகம். அவளால் அடக்கமுடியாத ஆசை எதிர்கால சிற்பிகள். ஆசையையும் தாகத்தையும் உரம் போட்டு வளர்க்கநினைத்தாள்.

ஆசிரியப்பணி ஒருஆனந்தப்பணி. கல்விநாடிவரும் செல்வங்களுக்குள்ளே புகுந்துவிட்டால், கவலைகள் விடைபெறும். உள்ளம்

துள்ளல் இசைபாடும். அதட்டவும் அணைக்கவும் ஆசானுக்குள்ள உரிமை பெற்றோருக்குள்ள உரிமை போலானது. அதைச் சேவையாய் உணர்வோர் உடல்வலி உளவலி நோக்கார். ஆசிரியரை ஒட்டிக் கொண்ட மாணவர் எத்தனை ஆண்டுகள் கடந்தும் அவரை மறவார். எதிர்கால உலகச் சிற்பிகள் சரியான முறையில் வடிக்கப்படாவிட்டால், உலகம் அவர்கள் கைகளால் உருமாறிச் சீரழியும். விஷக்கிருமிகள் போல் உலகுநோய் பெற்று சிறிது சிறிதாய் உலகத்தையே அழித்துவிடும். எனவே ஆசிரியர் என்பான் ஆசு இரியர். குற்றங்களை விட்டோடச் செய்வார். இவர்கள் மாணவர்களுக்கு உலகத்தையும் பாடத்தையும் கற்றுத் தரல்வேண்டும். மூலபாடங்களை விதி மறவாமல் பாதுகாக்கக் கற்பித்தல் வேண்டும். கேட்டதைப் பலமுறை சிந்திக்க வைத்தல் வேண்டும். மனதில் பதியக் கேட்ட கருத்துக்களை அவர் மனதில் மீண்டும் கேட்டுப் பதிய வைத்தல் வேண்டும்.கற்கும் மாணவர்களோடு பழகத் தூண்டுதல் செய்தல் வேண்டும். எனவே இப்பணியூடு வாழும் நாட்டில் தமிழ் மணம் வீச வேண்டும் என்றெண்ணிப் பணி தொடர்ந்தாள் வரதேவி. இப்படி இந்நாட்டில் எத்தனை திக்குகளில் இத்தகு நோக்குடன்

## என்னையே நானறியேன்

**பற்பலர் வாழ்ந்தார்களோ! இப்போது சாம்பல் மூடிய நெருப்பாய் மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களோ!**

# Part 5

அன்று பனி மூடிய நகரிலே பகலவன் தன் கரங்களைபரவவிட்டிருந்தான். காலநிலை -5 காட்டியது. வீதிக்கு நுழைய உடல் விறைக்கா வண்ணம் பாதுகாப்புக் கவசங்கள் அணிய வேண்டியது அவசியமானது. காற்சட்டைக்குள் வரதேவி கால்கள் அடங்கின. குளிர்தாங்கும் உடைகளை உடல் தாங்கின. ஜக்கட்டை (குளிர்தாங்கும் ஆடை) அணிந்தாள். காதினுள் பனிக் காற்றுவிரவா வண்ணம் காது மறைத்து தொப்பியை அணிந்து கொண்டாள். கழுத்தை ஸோலால் (*mafflar*) சுற்றிக் கொண்டாள். கைவிரல்கள் விறைக்கா வண்ணம் கையுறை அணிந்தாள். பாதங்கள் முழுவதுமாக மறைத்துப் பாதணிகளைப் பாதுகாத்தாள். கதவைத் தாளிட்டு வீதிக்குள் நுழைந்தாள். சூரியனின் கதிர்கள் கண்ணைக் கூசச் செய்தன. என்றுமில்லா வண்ணம் சூரியக்கதிர்கள் வரதேவி வசிக்கும் நகரத்தில் வாசம்செய்தன. நகரம் பளிச்சென்று அழகாகக் காட்சியளித்தது. வானிருந்து உலகில்வாசம் செய்ய வந்த பனிக்கூட்டம் நிலமெங்கும் நிறைந்திருக்க, சூரியக்கதிர்கள் அதன் மேல் பட்டதனால் சிறிதளவில் உருகின. இவ்வுருகும் பனிக்கூட்டங்களில்

## என்னையே நானறியேன்

சுற்றாடலிலுள்ள குளிர்காற்று சூழுகின்ற போது உருகிய பனிகள் நிலமெங்கும் உறைகின்றன. இதனால், பளிங்குக் கண்ணாடிகளாய் பனித்துகள்கள் உருமாறின. இப்பளிங்குக் கண்ணாடிகளாய் காட்சியளித்த உறைபனிகளிலே சூரியக் கதிர்கள்பட்டுத் தெறிக்கின்றபோது கண்ணைக்கூசச் செய்யும் ஒளித்தெறிப்புக்கள் தோன்றுகின்றன. இயற்கை எது செய்தாலும் அழகே, ஆனால், அது ஆபத்தும் தரக்கூடியது. வீதியெங்கும் நடமாடும் மக்கள் வழுக்கி வழுக்கி மெல்ல மெல்ல தாண்டித் தாண்டி நடக்க வேண்டியது அவசியமாகிறது.

வரதேவியும் தன் கவனம் முழுவதையும் தன் பாதங்களிலும் நடையிலும் செலுத்தினாள். சில வாகனங்கள் அசைய முடியாது தரித்து நின்றன. சிலர் தமதுவாகனங்களில் கொட்டி மூடிக்கிடக்கும் பனிக்கூட்டங்களை அகற்றும் பணியில்அகப்பட்டிருந்தனர். சிலர் நெருப்பில்லாமலே புகை விட்டபடி சென்றனர். தமது அகச்சூடு வெளியே நிலவும் புறக்குளிருக்கு ஆவியாகிப் புகைக்கின்ற காட்சிஅழகாக இருந்தது. வரதேவியும் மூச்சுக் காற்றாலும் பேச்சுக் காற்றாலும் சிகரெட் இல்லாமலே புகைத்தாள். சிலர் தத்தம் வீட்டின் முன் வீதியிலே

## என்னையே நானறியேன்

**உறைந்திருக்கும் பனிக் கூட்டங்களை அகற்றும் பணியிலே ஆழ்ந்து உப்பு மழை தூவினர். வாகனங்கள் வழுக்கி விபத்துக்கள் ஏற்படா வண்ணம் பாதுகாப்பு வாகனங்கள் வழியெங்கும் பரவி இருக்கும் பனிப்பூக்களை வீதி ஓரங்களில் தள்ளி விட்டபடி சென்று கொண்டிருந்தன. மனிதர்கள் ஆபத்தின்றி நலமே வாழ அவர்கள் தொடர்பற்ற எத்தனையோ உதவிகள் எட்டநின்று உதவி புரிகின்றன. இவர்களுக்கு மனதார நன்றி தெரிவித்தபடி வீதியோரம் வரதேவி மெல்லமெல்ல நடந்தாள்.**

**இவ்வேளை வரதேவியின் கைத்தொலைபேசி அவளை அழைத்துத் தொணதொணத்தது. கையில்எடுப்பதற்குள் அழைப்புமணி நின்றுவிட்டது. கைப்பையினுள் இருக்கும் தொலைபேசியை எடுப்பதற்கு மாரிகாலத்தில் நிச்சயம் கால தாமதமாகும். கையுறை கழட்டி வெளியே எடுக்கும் விரல்கள் குளிர் பட்டவுடன் விறைக்கத் தொடங்கும். படபடப்புடன் தேடுகின்ற போது தொலைபேசி அழைப்பு நின்றுவிடும். இப்போது வரதேவி தொலைபேசி அழைப்பு இலக்கத்தைத் தேடத் தொடங்கினாள்.**

நண்பி கீதாவே அழைத்திருந்தாள். கீதாவிற்கு அழைப்பை மீட்டினாள்.
“இதோ வந்திட்டன் கீதா. நீங்கள் சொன்னது போல் c&a கடைக்குள் நில்லுங்கள். 5 நிமிடத்தில் வந்துவிடுவேன்” என்று கூறி விரைந்தாள்.
பனி பரவிய வீதிகளில் வழமைக்கு மாறாக குறித்த இடம் செல்ல தாமதமாவது ஒன்றும் புதிதல்ல. அவ்வாறே கீதா அழைப்பின் பேரிலே வரதேவி ஆடைகள் விற்கும் கடைக்குச் சென்றாள்.

கடைக்குள்ளே மக்கள் அதிகமாகத் திரண்டிருந்தனர். கதகதப்பான வெப்பத்துடன் கடைகள் திறந்திருந்தததனால், தமது உடல் வெப்பத்தைச் சிறிது உயர்த்துவதற்காகவும், ஆசைப்பட்ட ஆடைகளை ஆசைதீர உடுத்துப் பார்த்து கழட்டிப் போடவும், சகல உரிமைகளயும் கடைகள் வழங்கியிருக்கின்றன. வரதேவியும் கடைக்குள் சென்றாள்.அங்கே அவளுக்காய் காத்துக் கொண்டிருந்த கீதாவுடன் இணைந்து கொண்டு உடுப்புக்களைப் பார்த்துத் தெரிவு செய்துகொண்டிருந்தாள். அழகழகான ஆடைகள் அத்தனையும் வாங்கிக் கொள்ள ஆசைதான். ஆனால், அது என்ன முடியும் காரியமா? வரதேவி கரனுக்கு ஒரு சேட் கொள்வனவு செய்தபின் கீதாவினுடைய

மகளுக்கும் ஒருஉடுப்பு எடுத்துக் கொண்டு போவதற்கு ஆயத்தமானாள். அப்போது அங்கே வந்த ஒரு தமிழ்ப் பெண் கீதாவுடன் அளவளாவிக் கொண்டிருந்தாள். கீதா, வரதேவியை
"இவதான் கரனுடைய மனைவி. ஜேர்மனிக்கு வந்து இரண்டு வாரங்களே ஆகின்றன" என்று அப்பெண்ணிடம் அறிமுகப்படுத்தினாள்.
அவரும் "அப்படியா! என்னுடைய மகள் தமிழ்ப் பாடசாலையில் கண்டதாகச் சொன்னாள். நல்ல அன்பாகப் படிப்பிக்கின்றா என்றும் சொன்னாள். நானும் பார்க்க வேண்டும் என்றிருந்தேன். நல்லதாகப் போயிற்று எப்படி ஜேர்மனி பிடிச்சிருக்கா? என்று அன்பொழுகக் கேட்டாள்.
வரதேவியும் "இப்போது தானே வந்திருக்கின்றேன். இந்தக் குளிர்தான் தாங்க முடியவில்லை. ஊருக்குப் போக வேண்டும் போல் இருக்கின்றது. போகப் போகப் பழகிப் போய்விடும் என்று நினைக்கின்றேன்" என்றாள்.
அப்போது அருகே "வணக்கம்......" என்று சொன்னபடி அருகே வேறு ஒரு பெண் வந்தாள். கீதாவும் வணக்கம் சொன்னபடி அவளிடமும் வரதேவியை அறிமுகப்படுத்தினாள். அவளும். "ஓஹோ........."

என்றபடி வரதேவியினுடைய முகத்தைக் கூடப் பார்க்காமல் உடனே போய்விட்டாள். ஏனென்று புரியாத வரதேவியும் இப்படியும் சிலர் என்று நினைத்த போது

"இவர்களுடைய குடும்பம் கரனுடன்கதைப்பதில்லை. அதுதான் இப்படி வெட்டிக் கொண்டு போகுது. இவ இப்படிப் போனால், நாங்கள் என்ன குறைந்தா போய்விடுவம். எல்லோரையும் திருப்திப்படுத்தி எல்லோருக்கும் நல்லவராய் வாழ்வதென்பது முடியாத காரியம். எல்லோரும் மகாத்மாக்களும் இல்லை. எல்லோரும் கெட்டவர்களும் இல்லை. சந்தர்ப்பம்சூழ்நிலை சிலரைச் சில சந்தர்ப்பங்களில் பிறர் பார்வைக்குக் கெட்டவர்களாய்க்காட்டி விடுகிறது. சிலரைச் சிலவேளை தவிர்த்துத்தான் ஆகவேண்டும். இன்று இப்படி இருப்பவர்கள் நாளை நிலைமை மாறி நாம்தான் தெய்வம் என்று வருவார்கள். இதுதான் மனிதப்பண்பு. விடக்கா இதுபற்றியெல்லாம் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. நாங்கள் போவோம்"

என்றபடி கீதா அடுத்த கடைக்கு வரதேவியுடன் மாறினாள். வரதேவியும்

## என்னையே நானறியேன்

“என்ன கீதா வீட்டிற்குப் போகும் நோக்கமேயில்லையா? ...”என்று கேட்டாள். கீதாவும் “இன்னும் இரண்டு கடைகளுக்குப் போய்விட்டு வீட்டிற்குப் போவோம்” என்று கூறி இருவரும் இரண்டு கடைகள் ஏறிஇறங்கினர். வீட்டிற்கு வர இருட்டிவிட்டது. மாரிகாலமென்றால், பிற்பகல்நான்கு மணிக்கே வானம் இருண்டுவிடுமல்லவா! கீதா வரதேவியை வீட்டில் கொண்டுவிட்டு வருதாகக் கூறி வரதேவியுடனேயே வரதேவி வீட்டிற்கு வந்தாள். இருவரும் வீட்டுவாசலுக்கு வர கரன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். வீடெங்கும்இருளாகக் காணப்பட்டது. வாசலுக்கு வந்த கரன் இருவரையும் அழைத்துக் கொண்டுஉள்ளே வந்தான். வரதேவியும் “வீடு முழுவதும் இருட்டாக இருக்கின்றது. லைட்டைப் போடுங்களேன்”என்றபடி வாசல் மின்விளக்கைப் போடுவதற்காகச் சென்றாள்.

“ம்....ம்....”என்றபடி அவளைத் தடுத்த கரன் அப்படியே அவளை அணைத்தபடி வரதேவி கண்கள் இரண்டையும் கைகளால் மறைத்துக் கொண்டு உள்ளே கூட்டிச் சென்று உள்லைட்டைப் போட்டான். ஆச்சரியம் அங்கே வீடு முழுவதும் விருந்தினர்கள்

நிறைந்திருந்தனர். சுவரிலே அழகாக கரனால் வரையப்பட்டவரதேவியின் பெரிய படம் காட்சியளித்தது. வீடு முழுவதும் வரதேவியின் பிறந்த நாளுக்காய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பிறந்த நாள் வாழ்த்துப் பாடல் பாடியபடி விருந்தினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர். கரனும் ஹீபோர்ட்டை எடுத்து வந்து பிறந்தநாள் பாடலைப் பாடினான். வரதேவிக்கு என்ன செய்வதென்று புரியாத ஆனந்தம் அளவுகடந்து கண்ணீராய் கன்னங்களைக் கழுவியது. தானறியாது தன் பிறந்த நாளுக்காய் கரன் செய்திருந்த ஆயத்தங்கள் அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. எதுவுமே தெரியாத வரதேவி வந்திருப்பவர்களுக்கு உணவு எப்படித் தயாரிப்பதென கலங்கிப் போனாள். இது பற்றி விசாரிப்பதற்கு கரனை அறையினுள் வரும்படி சைகை காட்டிவிட்டு அறையினுள் சென்றாள். பின் தொடர்ந்து அறையினுள் நுழைந்த கரனைக் கட்டி அணைத்து அவன் மார்பில் முகம் புதைத்து அழத்தொடங்கினாள். வார்த்தைகளற்ற கண்ணீர் மடை திறந்தது. இன்பமோ துன்பமோ உள்ளத்தின் வெளிப்பாட்டை உணர்த்தும் பங்கு கண்ணீருக்குத் தானே உண்டு.

## என்னையே நானறியேன்

**கரன் தன் விரல்களால் வரதேவி தலைமயிர் கோதினான். கண்ணீரைத் துடைத்தெறிந்தான். நாடியில் கைவைத்து முகத்தைத் தனக்கு நேரே நிமிர்த்தினான். சிரித்தபடி "இஞ்சபார் வரா! இது என்ன நான் பெரிதாகச் செய்துவிட்டேன். என் ராசாத்திக்கு எவ்வளவோ செய்ய வேண்டும் என்னும் எண்ணம் எனக்கிருக்கின்றது. சந்தர்ப்பம் வரும் போது பார்த்துக் கொள்வோம். சரிசரி எல்லோரும் காத்துக் கொண்டு இருக்கின்றார்கள். கண்ணைத் துடைத்துக் கொண்டு வா. கேக் வெட்டியபின் கதைத்துக் கொண்டிரு. நான் சாப்பாட்டை எடுத்துக் கொண்டுவருகின்றேன்" என்று கூறினான் கரன்.**

**"சாப்பாடா? இது பற்றிக் கேட்பதற்குத்தானே உங்களைக் கூப்பிட்டேன்" என்ற வரதேவியிடம் "சீன ரெஸ்டோரன்ரில் சாப்பாட்டிற்கு ஓடர்கொடுத்தாச்சு. அதுவும் போய் எடுக்க வேண்டும். இந்த சாரியைக் கட்டிக்கொண்டு வா" என்று கூறிய கரன் தான் முன்னமே வாங்கி வைத்திருந்த புடைவையை வரதேவியிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறினான். அதிர்ச்சியாயும் ஆனந்தமாயும் ஆச்சரியமாயும் அமைந்த இன்றைய நிகழ்வுகளை மனதினுள் இரைமீட்டிய வண்ணம் பொருத்தமான ஒரு**

ரவிக்கைக்குள் நுழைந்து புடைவையை பவித்திரமாய் அணிந்துவந்திருப்பவர்கள் முன் வந்தாள் வரதேவி.

ஐரோப்பியர் கலாச்சாரம்ஒன்று தமிழர் வீட்டில் கேக் வெட்டும் நிகழ்வுடன் நடந்தேறுவதற்கான ஆயத்தங்களை கீதா செய்துவிட்டுக் காத்துக் கொண்டிருந்தாள். கீதா கூட எல்லாம்அறிந்தும் எதுவும் கூறாது ரகசியமாய் ஒளித்து வைத்திருந்தாள் என்பதை இப்போதுதான் புரிந்து கொண்டாள் வரதேவி. மேசை மேல் அடுக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகளைக் கண்டு வரதேவி திகைத்துவிட்டாள். இத்தனை சிற்றுண்டிகளும் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு சிற்றுண்டியாகச் செய்து மேசையை நிரப்பியிருந்தார்கள். ரோல்ஸ் இல்லாத விழாக்களை ஜேர்மனியில் காண்பது அரிது.ஜேர்மனி வாழ் தமிழ் சிறுவர்களும் இளசுகளும் கேக் சாப்பிடுகிறார்களோ இல்லையோ ரோல்ஸ் சாப்பிடத் தவறமாடடார்கள். நீட்டுகின்ற தட்டிலே முதலில் கைவைப்பது ரோல்ஸ் என்னும் தின்பண்டத்திலேயே. அதனால் விழாக்களின் ராஜா ரோல்ஸ் என்றால் அது மிகையில்லையே.

கேக் வெட்டப்பட்டது. தம்பதிகள் தத்தமக்குக் கேக் ஊட்டும் சம்பவம் தொடர பரிசில்கள் வழங்கப்பட்டன. சீன உணவு பரிமாறப்பட்டது. கரன்,

## என்னையே நானறியேன்

மனமகிழ்ச்சி அத்தனையும் கொட்டி நண்பர்கள் சகிதம் மனதுக்கும் உடலுக்கும் போதை ஊட்டினான். போத்தல்கள் மேசை மேல் அடுக்கப்பட உள்ளிருந்த பதார்த்தங்கள், கரன் உட்பட நண்பர்கள்அனைவரது உடலினுள்ளும் பிரயாணம் மேற்கொண்டன. விரல்களிடையே இடுக்கிக் கொண்ட சிகரெட்டுக்கள் விடை பெற முடியாது எரிந்து விடைபெறத் தவித்தன. எரிகின்ற புகையை வெளியே அனுப்ப விரும்பாத சிகரெட் விரும்பிகள் அப்புகையை உள்வாங்கி இன்பம் கண்டனர். உதடுகள் தொட்டுத் தொட்டு நடம்புரிந்த வெள்ளை அங்கி நாயகிகள் வாழ்வின் இறுதி நேரத்தில் ஆசைநாயகர்களுக்கு இன்பம் கொடுத்து மெல்ல மெல்லச் சாம்பலானார்கள். இச்சுகங்கள் ஒவ்வொன்றாய்த் தீரக் கரன் நண்பர்களின் மனைவிமார்கள் தத்தமது கணவன்மார்களை அழைத்துக் கொண்டுவிடைபெற்றார்கள். கரன் குடிப்பழக்கம் கொண்டவன் என்பதை அன்றே வரதேவி அறிந்து கொண்டாள். அமைதி கண்ட வீட்டை கரனும் வரதேவியும் இணைந்தே ஒழுங்குபடுத்தினர்.

அன்று எதுவுமே கேட்டறியாத வரதேவி அடுத்தநாள் இப்பழக்கத்திற்கு அடிமையான கரனிடம்

இதிலிருந்து வெளியேறும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டாள்.

"எப்போதும் இப்படியில்லை. ஏதாவது பார்ட்டி என்றாலேயே சந்தோசத்திற்காக எல்லோரும் பாவிப்போம். மற்றப்படி இதுதான் வேலை என்றில்லை" என்று சமாளித்துவிட்டான். அவன் பேச்சிலே நம்பிக்கை ஏற்பட வரதேவி அன்று அமைதியானாள்.

---

மீதமிருந்த வேலைகளை வரதேவி பொறுப்பெடுக்க வேலைக்குப் புறப்பட்டுவிட்டான் கரன். முதலில் கரன் வரைந்த தன்னுடைய படத்தைத் தனியளாய் நின்று இரசித்தாள், இன்புற்றாள், தனக்குள்ளே மகிழ்ந்தாள். வரம் பெற்ற தன் வாழ்க்கையின் வசந்தத்தை எண்ணினாள். உள்ளம்நிறை மகிழ்வுடன் அறையினுள் சென்று மேசைமேல் இருந்த பத்திரங்களை ஒழுங்குபடுத்தினாள். அப்போது புரியாத மொழியில் எண்களை மாத்திரம் புரியவைத்த கடிதங்களைக் கண்டாள். என்ன இது 1000 ஒயிரோ 800 ஒயிரோ 450 ஒயிரோ போன்ற கணக்குகளுடன் கடிதங்கள் கிடக்கின்றனவே. என்ன இவை? எதுவுமே புரியாதவளாய் அவற்றை ஒழுங்காக அடுக்கி

வைத்துவிட்டு கரன் வரவுக்காய்க் காத்திருந்தாள். ஐரோப்பியநாட்டில் உழைப்பை நாடிச் செல்லாத பெண்கள் நாள் ஒன்றைக்கடப்பதென்றால், மாட்டுவண்டிப் பிரயாணமே. சிலர் தமது பொழுதுகளைக் கேட்டல் புலனுக்கு இனிமை கிடைக்க, இவர்களுக்காகவே தொழிற்படும் தமிழ் வானொலிகளில் செலவு செய்வார்கள். சிலர் கேட்டல், பார்த்தல், உணர்தல், புலன்களுக்கு உதவும் தொலைக்காட்சிகளில் செலவுசெய்வார்கள். இரண்டும் அற்றவர்கள் தொலைபேசியில் காதை ஒட்டிக் கொண்டு ஊர் வம்பில் உலகத்தையே அளப்பார்கள். வரதேவிக்கு ஊர்புதிது. நண்பர்கள் அரிது. உதவிக்குத் தமிழ் தொலைக்காட்சி ஒன்று கரனால்ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் எவ்வளவு நேரம்தான் அதில் செலவுசெய்வது தனக்குப் பிடித்த ஆசிரியத் தொழிலை மேம்படுத்துவதற்கான யோசனையில் தனது பொழுதுகளை அர்ப்பணிப்பது வரதேவி தொழிலானது. நேரம் கரைய கரனும் வீடுநோக்கி வந்தடைந்தான். உணவுப் பரிமாற்றம் முடியக் கடிதங்களைக் காட்சிப்படுத்தினாள்.

“இது எல்லாம் உனக்குஎதற்கு? ஐரோப்பிய நாட்டில் வாழ்வது என்றால், இலகுவான காரியமா?

எங்களுடைய நாட்டில் இருப்பவர்கள் இங்கு பணம் உழைப்பது ஓடுகின்ற தண்ணீரில் அள்ளிஎடுப்பது என்று நினைப்பார்கள். இங்கு குடிக்கும் தண்ணீர் கடையில்வாங்குகிறோம். கழுவி ஊற்றும் தண்ணீருக்குக் காசு கட்டுகின்றோம். தண்ணீரைக் கூட பார்த்துப் பார்த்துச் செலவு செய்ய வேண்டும். கரண்ட் இல்லாமல் இங்கு வாழத்தான் முடியுமா? அதன் விலைகூட கட்டுக்கடங்காது கூடிக்கொண்டே போகிறது. ஹீற்றர் இல்லாமல் விட்டால் குளிரில் விறைத்துப் பிணமாகத்தான் போக வேண்டும். சேர்ந்த குப்பையைக் கொட்டுவதற்குப் பணம், வாகனத்தை வீதியில் செலுத்துவதற்குப் பணம், தொலைக்காட்சி பார்ப்பதற்குப் பணம், வானொலி கேட்பதற்குப் பணம். பணம், பணம், பணம், இப்படி எத்தனையோ. அத்தனையும் சமாளிக்க வேண்டுமென்றால், கைநிறையப் பணம் வேண்டும். ஓயாது உழைக்க வேண்டும். உழைக்கின்ற பணத்தில் அரைப்பகுதியை அரசாங்கம் இப்படியான காரியங்களுக்குப் பிடிங்கிக் கொள்ளும். இது ஒவ்வொரு மாதமும் ஆரம்பப் பகுதியில் நடப்பதுதான். இதையொன்றும் பெரிதாக நினைத்து நீ கவலைப்பட வேண்டாம். எல்லாம்

சமாளிக்கலாம்….“ என்ற நீண்ட விளக்கம் கரனால் வழங்கப்பட்டது.

“அப்படியென்றால்….., இந்தத் தேவையில்லாத செலவெல்லாம் எதற்குச் செய்கின்றீர்கள்? நேற்றைய நாள் இப்படி செலவு செய்து என்னுடைய பேர்த்டேயைக் கொண்டாட வேண்டுமா?“ என்றாள் வரதேவி.

“என்ன கதைக்கிறாய்… இது வேறு. அது வேறு. இந்தச் செலவுகள் எல்லாம் இருக்கின்றன என்பதற்காக செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் இருக்க முடியுமா? என்ன கஷ்டமோ நஷ்டமோ உனக்கு ஒரு குறையும் வராமல் நான் பார்த்துக் கொள்வேன். வாழ்க்கை என்பது இதுவே. வாழ்ந்து தான் பார்க்கணும்“ என்பவனை இடைமறித்தாள் வரதேவி.

“இல்லையப்பா. நானும் ஒத்தாசையாக…..” என்றிழுத்தவளை. இடைமறித்தான் கரன்

“வருவது வரட்டும் உன்னைக் கஷ்டப்படுத்தி வேலைக்கு அனுப்பி நாம் வாழ வேண்டும் என்பதெல்லாம் எனக்கில்லை. வருவாய்க்குத் தக்கபடி வாழ்வோம். மற்றவை கர்த்தர் கையில்” என்றபடி கடிதங்களை எடுத்துப் பக்கெட்டில் திணித்து உடை மாற்றிப் படுக்கைக்குச் சென்றான்.

## என்னையே நானறியேன்

ஒரு கணவன் என்பவன் தன் மனைவிமகிழ்ச்சியைத் தன் மகிழ்ச்சியாய்க் கொள்வான். தாலியை அவள் கழுத்து ஏற்க அவள் வாழ்வு அத்தனையையும் அவன் ஏற்பான். தன்னால் ஒரு பெண்ணின் தேவைகளை நிறைவேற்ற முடியாத ஒரு ஆண்மகன் அவளை வாழ்க்கைத் துணைவியாய் ஏற்றுக் கொள்வதில் அர்த்தமே இல்லை. முடியும் என்னும் போதே அவளைத் திருமதியாய் மாற்றும் தகுதியைப் பெறுகின்றான். பிரச்சினை பிரச்சினை என்று கூறித் தானும் வாழாது தன்னை நம்பி வந்தவளையும் வாழவிடாது. காலம் முழுவதும் கஷ்டத்தைச் சொல்லி வாழும் எத்தனையோ ஆண்கள் மத்தியில் கரன் ஒரு தனிமகனாய் வரதேவி கண்டாள். ஆனாலும், உள்ளமெங்கும் இருவர் குடும்ப வாழ்க்கைக்கும் தன் பங்களிப்பு அவசியம் தேவை என்று வரதேவி மனதில் உறுதி கொண்டாள். தனியனாய்த்தன் கணவன் மாத்திரம் வீட்டிற்கும் தன் பாடசாலை சேவைக்கும் பணம் பெருக்குவதைப் பார்த்துக் கொண்டிருக்க வரதேவி மனம் இஷ்டப்படவில்லை.

---

நாளும் வரதேவி போட்டதூபம் பற்றிக் கொண்டதனால், வரதேவி சில மாதங்களின் பின்

வேலைக்குப் போக ஆயத்தமானாள். மொழிப் பயிற்சி இல்லாத காரணத்தால், ஒரு பெரிய விற்பனை நிலையத்தில் துப்பரவு செய்யும் தொழில் வரதேவிக்கு வாய்த்தது. ஒரு குடும்பத்தில் மனைவியானவள் வீட்டு வரவு செலவில் பங்கேற்றல் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும் என்பதை அநுபவம் மூலம் அறிந்து கொண்டாள் வரதேவி. உடலும் உள்ளமும் ஒத்துக்கொண்டதால், துப்பரவுத் தொழில் ஒரு ஆத்மதிருப்தியைஅவளுக்குக் கொடுத்தது. காலை வேளை சூரியனுக்கு முன் விழித்துக்கொள்ள வேண்டும். கடை திறப்பதற்கு முன் தரையெல்லாம் பளிச்சிடவேண்டும். வீதிவெளிச்சம் மறைவதற்குமுன் வேலை முடிக்க வேண்டும். விறுவிறென்று செய்யும்வேலையில் அசுத்தம் இருந்த இடம் தெரியாது மறைந்து ஓடவேண்டும். தொட்டவேலை முடிந்தபின் மறவாது கடையை முறையாகப் பூட்டி கடமையை முடிக்கவேண்டும். குறிப்பிட்டநேரம் தொடங்கி குறிப்பிட்ட நேரம் முடித்து குறிப்பிட்ட தொகையை மாதம் மாதம் பெற்றுக் கொள்ளும் போது கிடைக்கும் சந்தோசத்தின் உணர்வு எப்படியிருக்கும்? என்பதை அவள் வார்த்தையால் வர்ணிக்கமுடியாத ஆனந்தத்தைப்பெறுவாள். வரதேவிக்கு மெல்லமெல்ல ஜேர்மனி நாடு

தன்நாடாகிப் போனது. இந்நாடு விட்டு எந்நாடு போனாலும் இந்தத் திருப்தியை வரதேவி பெற்றுக் கொள்ளமுடியாது என்ற நிலை அவளுக்கு ஏற்பட்டது.

# Part 6

தொழில் ஒருபுறமும் தன் சேவை மறுபுறமுமென வரதேவி வாழ்வு வசந்தமானது. சனிக்கிழமைகளில் தமிழ் பாடசாலை வளர்ச்சியில் முழுப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டாள். எதிர்கால வாரிசுகளின் தமிழ் அறிவுப் பெருக்கம் அவள் உள்மூச்சாய் சுவாசமானது. பெண்ணை மனைவியாய்ப் பார்க்கும் பண்பினின்று சற்று விலகி அவளை அறிவுடையாள் என்னும்பண்பில் நோக்கும் பாங்கிலே கரன் தமிழ்பாடசாலையை வரதேவி பொறுப்பிலேயே விட்டுவிட்டான். தன் வேலை நேரம் போக மீதமுள்ள நேரத்தில் தமிழ் பிள்ளைகளின் பெற்றோர் விருப்பப்படி அப்பிள்ளைகளுக்கு வீடு வீடாகச் சென்று ஆங்கில வகுப்புக்கள் எடுத்தான். இதனால் இருவருக்கும் தமிழர் உறவு வலுத்தது. அறிவுடையார் தம் அறிவை மேம்படுத்தி உறவுகளை வலுப்படுத்தி ஆதாயம் பண்ணப்பார்த்தல் இயல்பே. இதன்படி ஆதரவாய் பலருக்கு உதவிகளைச் செய்வதற்கு கரன் தயங்கியதில்லை. அதன் மூலம் தனக்கும் வருவாய் குறையாத வாழ்வை தேடிக்கொண்டது அவர் புத்திசாலித்தனமாய்ப் பட்டது. எதிர்கால வாழ்வை நலமாக வாழ

சாஸ்திரம்பார்த்தல் எம்மவர் நம்பிக்கை. இக்கலை கற்ற கரன் இதன் மூலம் வருவாய் பெற்றுக்கொள்ள அவர்கள் அழைப்பின் பெயரில் தெரிந்தவர் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்கு சாஸ்திரம் பார்த்துச் சொல்லி பணம் சேர்த்தான். பணம் ஒரு கேடு கெட்ட நோய்க் கிருமி. தன்னில் அளவுக்கு மீறி ஆசை கொள்பவர்களை ஆட்டிப்படைக்கும்ளூ அதைத் தேடிச்செல்லும் மனிதனைப் பைத்தியமாக்கும், சூழலையும் சுற்றத்தாரையும் நோகடிக்கும், படுகுழியில் விழுத்தி விட்டுப் பார்த்து ரசிக்கும்ளூ பை நிறைய காட்சியளிக்கும் பகட்டாகத் திட்டம்போட்டுவெளி அகற்றும் போது முழுவதுமாகக் கழன்று கொண்டு இன்னும் வேண்டும் என்றுஎட்ட நின்று கைகாட்டி அழைக்கும்ளூ தேடிப்போக கூடவந்து போகப்போறேன் என்றுஅடம்பிடிக்கும். அது போகப்போக அதனைத் தேடத்தேட மனிதன் பாடு நோயாளியை விடக் கேவலமாய் இருக்கும். பணம் இருக்கிறதே.... அதனுடன் சரியான முறையில் பழகி அவதானமாகத் தொட்டுக் கொண்டால் மட்டுமே கூடவிருந்து வாழவைக்கும்.

கரன் பணம் தேட வழிவகைகள் பல அறிந்திருந்தான். தமிழர்கள் தம்மை

வெளிப்படுத்துவதில் போதை மிக்கவர்கள். கல்வியால் உயர வேண்டும் என்பதில் ஆசை மிக்கவர்கள். கலைகளால் பிரகாசிக்க வேண்டும். பலருக்கும் தம் பிள்ளைகள் கற்ற கலைகளைக் காட்டி அவர்களுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்பதில் அலாதிப் பிரியமுள்ளவர்கள். இது கரன் வாழ்வுக்கு வசந்தமானது. வழி காட்டியது.

"அண்ண! கொஞ்சம் வீட்டிற்கு வாறீங்களே.... என்ர மோன் ஹீபோர்ட் பழக ஆசைப்படுறான். வந்து சொல்லிக் கொடுப்பீங்களே.....? என்று அழைப்பு வரும். அதற்கேற்ப கரனும் அவரவர் வீடுகளுக்குப் போய் மாதம் மாதம் பணம் பெற்று தன் வசதியைப் பெருக்கிக்கொண்டான்.

"மன்மதராசா...மன்மதராசா..... கன்னிமனசக் கொல்லாதே......" இது கரண் தொலைபேசி அழைப்பு. முற்காலத்தில் வீட்டில் மட்டும் தொணதொணக்கும் தொலைபேசி இப்போது சட்டைப்பைக்குள் இருந்து கூவிக்கூவி அழைக்கும். அது வில்லங்கத்தையும் இழுத்துக்கொண்டு வந்துவிடும். விபரீதத்தையும் காட்டும். சிக்கலிலும் முடியும். சிறப்பாய்ப் பல நன்மைகளும்தரும். அது தேவை. ஆனால், தேவையும் இல்லை. எந்த தொழில்நுட்ப சாதனங்களையும்

அவதானமாகக் கையாளும்போதே அதன் பயன்பாட்டைப் பெறமுடியும்.

"கரன்… என்ர மனிசியும் பிள்ளைகளும் ஸ்ரீலங்காக்கு இந்த வருச சம்மர் ஹொலிடேக்கு போகப் போகிறார்களாம். நீங்கள் மலிவாக ரிக்கட் செய்து கொடுக்கிறீர்களாமே….. ரவி சொல்லிச்சு. எங்களுக்கும் செய்ய வேண்டும்….. எப்பிடி நீங்கள் வர்றீங்களே… இல்லாட்டி நான்வரட்டே….."என்று சதீஸ் தொலைபேசி மூலம் கரனுக்கு அழைப்புவிடுத்தார்.

"பிரச்சினையில்லை. நான் வீட்டிற்குவர்றேன்… " என்று கூறி அவர் அழைப்பின் பெயரில் சதீஸ் வீட்டிற்குக் கரன்சென்றான். அவர்கள் ஆசையுடன் பரிமாறிய உணவுகளை ருசி பார்த்தான். பேசிக்கொண்டிருக்கும் போதே சதீஸூடைய மகன் வீட்டிற்குள் நுழைந்தான்.

"சதீஸ் இது உங்கள் மகனா?

"ஓம் அபிருவர்(Abitur) 13 ம் வகுப்பு படிக்கிறான்"

"பாருங்கள் சதீஸ் இவன் ஒரு காலத்திலபிரபல்யமா வருவான். குறிச்சு வச்சுக் கொள்ளுங்கள். ஆனால், தான் விரும்பியவளைத்தான் கல்யாணம் செய்வான்" அளந்த பார்வையில் எதிர்காலத்தை அளவிட்டுக் கரன் கூறியபோது ஆர்வமடைந்த சதீஸ் மனைவி சாரதாவும் "சாத்திரம் சொல்லுவீங்களே அண்ண….

என்ர மகளின்ர குறிப்பையும் ஒருக்காப் பார்த்துச் சொல்றீங்களே..... அவக்கு ஒரு வரனும் சரியாக அமையுதில்லை...” என்று கேட்டுக்கொண்டாள்.
கரனும் “குறிப்பைத் தா! தங்கச்சி பார்த்து விடுவம்” என்று கேட்டான். சாரதா கொடுத்த குறிப்பைச் சில மணிநேரம்கணக்கிட்டுப் பார்த்த கரன்
“என்ன கதைக்கிறாய் பிள்ள. இப்போ ஒரு சம்பந்தம் வந்திருக்க வேண்டுமே... இந்தக் கல்யாணம் பிள்ளைக்குச் சரிவரும் என்கிற பலன் தான் ஓடிக் கொண்டிருக்கிறது” என்று கரன் சொன்னபோது சதீஸ் சாரதா தம்பதியினர் அதிர்ந்து விட்டனர்.
“இதெல்லாம் சாத்திரத்தில் தெரியுமா? மனிதன் வாழ்க்கை சந்தர்ப்பம் சூழ்நிலைக் கேற்ப நடந்து கொண்டிருக்கின்றது. அது முன்னமே முடிவு செய்யப்பட்டது போலல்லவா இருக்கிறது” என்று சாத்திர சம்பிரதாயத்தில் எள்ளளவும் நம்பிக்கையில்லாத சதீஸ் தனக்குள்ளே கேட்டுக் கொண்டான்.

“ஓமண்ண.... ஒரு சம்மந்தம் வந்திருக்கிறது தான். ஆனால்...... இது சரிவருமோ என்று யோசிச்சுக் கொண்டிருந்தனாங்கள்.... அந்தப் பெடியன்ர குறிப்பும் இருக்கு அதையும் தாறன் ஒருக்காப் பார்த்துச்

சொல்லுங்க… நீங்க கேட்கிற காசைத் தாறம்” என்று சொன்ன சாரதா மகளுக்குப் பார்த்த வரனுடைய சாதகத்தைக் கரனிடம் நீட்டினாள்.

சதீஸூம் “இந்த ஜேர்மன்காரர் எல்லாம்சாத்திரம் பார்த்துத்தானே கல்யாணம் செய்றார்கள். [10] பொருத்தம் பார்த்துச் செய்து வைத்த எங்கடையளெல்லாம் நல்லா சேர்ந்து தானே வாழுதுகள்… வாழ்க்கையை எப்பிடிப் பொறுப்புணர்ச்சியுடனும் பொறுமையுடனும் வாழ வேண்டும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்… என்று உன்ர மகளுக்குச் சொல்லிக்கொடு…… பெடியன் எப்படிப் பழக்கவழக்கம் உள்ளவன் என்று கொஞ்ச நாளைக்கு பிள்ளையிட அம்மாவா நோட்டமிடு… நடக்கிற வேலையைப் பார்….. அதவிட்டுப் போட்டு சும்மா இந்த தேவையில்லாத நம்பிக்கையெல்லாம்……” என்று தன்பக்க நம்பிக்கையைச் சதீஸ் சொன்னான்.

“இவர்ர கதையை விடுங்கண்ண… எதுக்கும் ஏடாகூடமாத்தான் கதைப்பார்… கல்யாணம் என்டா நாளும் பார்க்கத்தான் வேண்டும். அதுக்கு எங்கட சம்பிரதாயங்களை விடுறதே… நாளைக்கு ஒன்று

நடந்திட்டா நினைச்சு நினைச்சுக் கவலைப்படுறதே…” என்றாள் சாரதாவும்.

“என்னவாவது பண்ணித் தொலை…” என்றபடி சதீஸ் ஒதுங்கிக்கொள்ள குறிப்புப் பார்த்த கரனும் இருவருக்கும் நன்றாகப் பொருந்துகிறது என்பதற்கான காரணங்களை விளக்கிச் சொன்னான்.

சதீஸூம் மற்றப் பக்கம் இருந்தவாறு “சந்திரன் பகைக்கிறார். கேது ஒத்துப் போறார். இதெல்லாம் என்ன? இதெல்லாம் பூமியைப் போல கல்லாலும் மண்ணாலுமான கிரகங்கள். அதுக்கும் இங்கேயிருப்பவர்களுக்கும் என்ன சம்பந்தம்? என்று நோண்டிக் கொண்டேயிருந்தான்.

கரனும் “சரிதான் சதீஸ். ஆனாலும் கிரகங்களுக்கு சில சில குணாம்சங்கள் இருக்குத்தானே. இவற்றை மனிதர்கள் போல் பாவனை பண்ணிப் பேசுகிறோம். சந்திரன் இழுத்தெடுக்கும் சக்தியைக் கொண்டிருக்கிறது தானே. பூரணை காலத்தில் கடலலைகளை எப்படி மேலெழும்ப வைக்கிறது பார்த்தீர்களா? பூரணை காலத்தில் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் நடவடிக்கைகள் பாரதூரமாக இருப்பது அறிந்திருக்கிறீர்கள் தானே……. இதேபோல் ஒவ்வொரு

கிரகத்திற்கும் ஒவ்வொரு பலன் இருக்கிறது. சும்மாவா எமது முன்னையோர் இதையெல்லாம் கணித்து வைத்திருக்கிறார்கள். இப்போது விஞ்ஞானிகள் சற்றலைட் அனுப்பி அறிந்த விடயங்களை எங்கள் முன்னையோர் நிலத்தில் இருந்தபடி கணித்திருக்கின்றார்கள். இப்படி எத்தனையோ இருக்கின்றன. எனக்குப் பிரச்சினையில்லை. தங்கச்சி கேட்டதற்கு பார்த்துச் சொன்னேன்" என்றார்.

சதீஸூம் "இல்ல… கரன் எனக்கு இதில் ஒன்றும் நம்பிக்கையில்ல.. இதொன்றும் பார்க்காத சனங்களும் நிம்மதியாவாழுதுகள்…. நாம இதுகலப் பார்த்து நிம்மதி கெட்டுப் போய் இருக்க வேண்டும். நடக்கிறது நடக்கும் தானே என்று இருப்பதுதான் என்ர பொலிசி…. இவக்கு இதுகல்லநல்ல நம்பிக்க… நான் அதில ஒன்டும் தலையிடுறதில்ல. பிறகு என்னக் கரிஞ்சி கொட்டிக் கொண்டே இருப்பா…." என்றான்.

சாஸ்திரம் பார்த்த பணத்துடன் விபரங்களைச் சேகரித்து விமான ரிக்கட்டுக்கான முற்பணத்தையும் பெற்றுக் கொண்டு விடைபெற்றான் கரன். இவ்வாறு ஒவ்வொரு வீடுகளிலும் ஒவ்வொரு அநுபவங்கள். அவற்றின் மூலம் நற்பெயரையும் கெட்ட பெயரையும்

## என்னையே நானறியேன்

**சிற்சில சமயங்களில் பெறவேண்டிய சூழ்நிலை கரனுக்கு ஏற்படுவது நிஜமாகிறது.**

# Part 7

வரதேவி உள்ளம் கொண்ட தீவிரம் நாளும் நாளும் தொடர்ந்தது. தொடர்ந்த ஒரு குறிக்கோளுடன் தொடர்வார் அக்குறிக்கோள் நிறைவேறப் பலவித முயற்சிகளில் ஈடுபடல் புதிதன்று.

"இஞ்சபாருங்கோ! படிப்பிப்பது மட்டும் பிள்ளைகளுக்குப் போதாது. ஒரு பிள்ளை கேட்கிறதை மறந்து போகும். பார்க்கிறதை நினைவில் வைக்கும். செய்வதைத்தான் கற்றுக் கொள்ளும். அதனால், பரீட்சை வைப்போம், கலைகள் விளையாட்டுக்களில் பயிற்சி கொடுப்போம். போட்டிகள் மூலம் திறமைகளைக் கொண்டு வருவோம்" என்று கணவனுக்கு உந்துதலைக் கொடுத்தாள். ஆனால், இந்த சமுதாயம் இருக்கிறதே, இனிப்பாய் இருந்தால், விழுங்கிவிடும். கசப்பாய் இருந்தால், துப்பிவிடும். இவள் முயற்சிகளின் முடிவுதான் என்ன.........

உள்ளூரமொடு உற்றறிவது பெருத்தது
கண்ணுறக்கமும் உடலயர்ச்சியும் வெறுத்தது
பல்கலைகளும் பயில்பயிற்சியும் வளர்ந்தது
நல்மதியுடன் மாணவர்களும் மகிழ்ந்தனர்
நல்லறிஞர்கள் நாட்டுயர்வினர் நாடவே

## என்னையே நானறியேன்

பற்கலையுடன் விழாவொன்று நடந்தது விளையாட்டுடன் விருதுகளும் கிடைத்தன. அன்று ஆடுகளம் அலங்கரிக்கப்பட்டது. 6 வயதிலிருந்து 18 வயதுவரை மாணவர்கள் தத்தமது திறமைகளை வெளிக்காட்ட ஒரேவிதமான சீருடையுடன் காட்சியளித்தனர். மாணவர்களுடன் அவரவர் பெற்றோரும் ஆளுக்கொரு உதவிகளை வரதேவி பிரித்துக் கொடுத்ததற்கு அமைய சுறுசுறுப்பாகச் செய்து கொண்டிருந்தனர். வரதேவியும் சீடி(CD)யாய் சுழன்றாள். அவள் சுழற்சியில் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் ஆரவாரமானது. பரிசில்களை வழங்க டுசல்டோப் நகரத்தின் நகர மேயர் அழைக்கப்பட்டிருந்தார். அவர் பேச்சை மொழிபெயர்க்க சுமனா தயாராகியிருந்தாள். கிழமையில் ஒருநாள் அதுவும் பாடம்சொல்லிக் கொடுக்கப்படும் அந்த நாளே விளையாட்டுப் பயிற்சிகளும் பெற்றோர்களுடன் மேற்கொள்ளப்பட்டது. அந்தப் போதாத காலத்திலும் போதுமான பயிற்சி பெற்ற மாணவர்கள் தமது அபார திறமையை விளையாட்டுக்களில் காட்டியிருந்தார்கள். இலங்கைவிட்டு இடம்பெயர்ந்த பெற்றோர்கள் தமக்குக் கிடைக்காத வசதியும் வாய்ப்புக்களும் கலை,

## என்னையே நானறியேன்

கல்விப் பேறுகளும் தமது பிள்ளைகளுக்குக் கிடைக்கவேண்டும் என்பதில் கூடிய கவனம் கொண்டுள்ளார்கள். தம் நேரங்களையும் பொழுதுகளையும் அவர்களுக்காகவே அர்ப்பணிக்கின்றார்கள்.

தடை தாண்டல் ஓட்டத்தில் முதல் பரிசைப் பெற்ற அனுவின் தாயார் ரதி ஓடிவந்தாள்.

"ரீச்சர்….. மிக்க தேங்ஸ் ரீச்சர்….அடுத்தமுறை இதைவிட பெரிதாக விளையாட்டுப் போட்டி வைக்க வேண்டும். என்னமாதிரிஅனு ஓடினாள். நான் நினைத்துப் பார்க்கவே இல்லை"

அடுத்த பக்கம் பரிசுக்கோப்பையை கையில் உயர்த்தியபடி ஓடிவந்த மதுராங்கன், "ரீச்சர்……இஞ்சபாருங்கள்….." என்றுகாட்டிக் குதியாய்க் குதித்தான்.

வரதேவியும் "கெட்டிக்காரன்… எனக்குத் தெரியும் தானே. நீதான் இந்த கப் எடுப்பாய் என்று. அடுத்தகிழமை ஸ்கூலுக்குக் கொண்டுவா! என்று கூறினாள்.

திரும்பும் முன் பிள்ளைகள் எல்லோரும்தமக்குக் கிடைத்த பரிசுப் பொருள்களுடன் ஐஸ்கடைக்குள் நுழைந்த பிள்ளைகள் போல் ரீச்சர்… ரீச்சர்… ரீச்சர்…

என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கத்தைப் பகிர்ந்தபடி இருந்தார்கள். வரதேவியும் அவர்களை அவர்கள் மனம் மகிழும்படிவாழ்த்தினாள். அவ்வேளை அவள் கண்கள் பரிசுகள் இன்றி ஒதுங்கிய பிள்ளைகளை நாடியது. அவர்கள் அருகே சென்று அவர்களைச் சாந்திப்படுத்துவதில் இறங்கினாள்.

“இஞ்ச பாருங்கள்… ஏன் இப்படி சத்தமில்லாமல் ஒதுங்கி நிற்கிறீங்கள். இன்றைக்கு அவர்களுக்குக் கிடைத்த பரிசுகள், அடுத்த வருசம் உங்களுக்குக் கிடைக்கும். திறமை என்பது சிலருக்கு மட்டும் சொந்தமானது இல்லை. அது எல்லோருக்கும் இருக்கிறது. பயிற்சி மூலமே ஒவ்வொருவரும் தமது திறமையை வெளிக் கொண்டுவர முடியும்….. எமக்குக் கிடைக்காது என்று மனதினுள் நினைத்து விட்டீர்கள் என்றால், நிச்சயம் அது கிடைக்காது…… கிடைக்கும் என்று நீங்களும் முயற்சி செய்தால், இதைவிடச் சிறப்பாக விளையாடுவீர்கள். பாருங்கள்…. அடுத்த வருசம். இன்னும் சில விளையாட்டுகள் நடத்துவோம். பயிற்சிகள் செய்வோம். உங்களுக்குப் பிடித்த விளையாட்டுகளைப் பழகி நீங்களும் பரிசுகள் எடுக்க வேண்டும். இப்படிம்….என்று இருந்தால், ரீச்சருக்குக் கவலையாக இருக்கும். சரியா?… இப்போது

சிரியுங்கள்… எங்கே சிரியுங்கள் பார்ப்போம்…” என்று கூறி ஒவ்வொருவருக்கும் கைகளில் இனிப்புகள் வழங்கினாள். விளையாட்டுப் போட்டி நினைத்ததைவிட சிறப்பாகவே நடந்தேறியது.

எல்லோரும் விடைபெற வீட்டிற்குச் சென்ற கரனும் வரதேவியும் களைப்பாறினார்கள்.

விளையாட்டுப் போட்டி நிறைவேறும் காலங்களில் வரதேவி கரன் இரத்த பந்தமொன்று, இரு உயிர்களின் சங்கமத்தால் உருவாகிய உயிரொன்று, தம் அன்பான திருமண பந்தத்தின் அத்தாட்சிக் கருவொன்று, வரதேவி கருவறையில் சுருண்டு மிதந்து வளர்ந்து வந்தது. வரதேவி முத்தொன்றை தாங்கிய சிப்பியாய் கருப்பையினுள் வளரும் தன் வாரிசைச் சுமந்தாள். தாயின் கருப்பை நோக்கி நீந்திச் செல்லும் விந்தணுக்களில் ஒரேயொரு விந்தணு மட்டும் பெண்ணின் முட்டைக்கருவுடன் இணையும் போது ஆண் விந்துக்கலங்களின் தலைப்பகுதி சினைமுட்டையின் சவ்வுப்பகுதியை உடைத்துக் கொண்டு உட்செல்கிறது. விந்தின் வாற்பகுதி வெளியே துண்டிக்கப்பட தலைப் பகுதி உட்செல்ல முட்டையின் சவ்வு இறுக்கமடைந்து மூடிக்கொள்ளும். வேறு எவ்வித விந்தணுவும் உட்செல்லாதவகையில்

சவ்வு இறுக்கமடைந்து கருவைப் பாதுகாக்கும். விந்தணுவும் முட்டைக்கருவும் இணைந்து ஒரு கலமாகிப் பின் 12 மணித்தியாலங்களில் இரண்டாகப் பிரிந்து பின் 12 மணித்தியாலங்களில் நான்காகப்பிரிந்து 6 நாள்களின் பின் சிறு உருண்டையாக உருமாறும். இப்போது பலோப்பியன் குழாயிலிருந்து கருப்பை நோக்கிக் கரு நகர்ந்து செல்கின்றது. 7 நாள்களில் தன்னை நோக்கி வந்த கருவைக் கருப்பையானது ஓரிடத்தில் தங்கவைக்கின்றது. அங்கிருந்து அழகான குழந்தையாய் வளர்த்தெடுக்கிறது. இயற்கையின் அற்புத நிகழ்வை எண்ணும் போது ஆச்சரியமாகவும் ஆனந்தமாகவும் இருக்கிறது. அங்கிருந்து கரு உருவாகி வெளியுலகு காண வெளியேறும் வரை தாய் படும்வேதனையைத் தாயே அறிவாள்.

குழந்தை என்பது ஒரு பெண் என்ற உறவைத் தாய் என்ற அந்தஸ்துக்கு உயர்த்துகின்ற உறவு, எப்படியென்று எடுத்துரைக்க முடியாத தாய்ப் பாசமென்ற உணர்வைத் தாய்க்கு ஊட்டும் உறவு, குடும்பத்தைக் குதூகலமாக்கும் உறவுள, தந்தையின் பெயரைத் தாங்கி அவர் காலங்கடந்தும் அவர் பெயரை நிலைநிறுத்தும் உறவு. இவ்வுறவு ஒரு

## என்னையே நானறியேன்

**ஆண்குழந்தையாய் கருவறையுள் வளர்வதை வரதேவி ஸ்கேன் கருவி மூலம் கண்டறிந்தாள். தன் மகன் ஆரோக்கிமாய் வளரத் தேடித்தேடி ஆகாரங்களை வரதேவிக்குக் கரன் ஊட்டினான். வரதேவி விரும்பிய உணவுகளை அவள் நண்பர்கள் தயாரித்துக் கொடுத்தனர். குழந்தை பிறக்கும் வரை தாய் அநுபவிக்கும் வலி என்பது வார்த்தைகளால் வடிக்க முடியாத வலி. இவ்வுருவை உடல் ஏற்கும் வரைவயிற்றைக் குமட்டி ஒவ்வாமையை உணர்த்தி வாந்தி வடிவமாய் உணவுகளை வெளியேற்றும். வயிற்றினுள் தன் கூடப்பிறக்காத வேறு ஒரு இரத்தபிண்டம் உறுப்புகள் தாங்கி வளர்ந்து வருகின்ற போது, அத்தாயின் உடல் அவ்வுருவை ஏற்றுக் கொள்ளும் வரை அந்நியமாய்க் கருதும், 10 மாதங்களும் அவ்வுடலினுள்ளே இருந்து தாயுடனே வளர்ந்து உடலாலும் உணர்வாலும் இணைந்து பிணைந்து வளரும் போது ஏற்படும் இரத்த பாசம் தாய்ப் பாசமாயும் பிள்ளைப் பாசமாயும் பிரதிபலிக்கும். இத்தாயுணர்வு பெற்ற வரதேவி குழந்தைவளர வளரத் தன் கடமைகளிலும் கண்ணானாள். வலி ஒருபுறமானாலும் குழந்தையின் எதிர்பார்ப்பு வலியை**

இதமாக்கியது. அவள்வாழ்வுக்கு பிடிப்பை ஏற்படுத்தியது.

"இஞ்ச பாருங்கப்பா....என்னால் முடியாது என்று யார் சொன்னார்கள்? பிள்ளை பிறந்தால் கொஞ்சக் காலம் தமிழ் பாடசாலைக்குப் போகமுடியாது. இப்படியே தள்ளிக் கொண்டு போயிடும். பிள்ளைகளுக்கும் ஆசை காட்டிவிட்டோம். அவர்களும் நல்லாப் பழகிட்டார்கள். காலங் கடத்தாது கலைவிழாவைச் செய்வோம். நமக்குத்தான் பெற்றோர்கள் உதவி இருக்குத்தானேப்பா..... துணிந்து செய்வோம். எல்லாம் நல்லா நடக்கும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது" என்று வரதேவி கரனை வற்புறுத்தினாள்.

அவள் முயற்சியின் பயனாய் கலை விழாவிற்கான ஆயத்தங்களை கல்வி பயிலும் பெற்றோர்கள் சகிதம் இருவரும் மேற்கொண்டார்கள். கலை விழாவிற்கான கூட்டம் கூட்டப்பட்டது. வரதேவி எழுந்தாள்

"இங்கே நாங்களெல்லாம் கூடியிருப்பது. எங்கள் பிள்ளைகளுடைய கலைத்திறனை வெளிப்படுத்துவதற்காகவே... இங்கே பல நிகழ்ச்சிகளைப் பார்த்தபோது இவ்வாறான தவறுகள்

எங்கள் நிகழ்ச்சிகளில் நடக்கக் கூடாது என்று ஒவ்வொரு முறையும் நினைப்பேன். அதனாலேயே இந்தக் கூட்டத்தைக் கூட்டினேன். பிள்ளைகள் அனைவரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே சேர்த்தோ தனித்தோ நிகழ்ச்சிகளை எடுத்தேன். 3 மணித்தியாலத்தில் எங்களுடைய கலைவிழா நடந்தேற வேண்டும். இடையில் ஒரு இடைவேளை விடவேண்டும். இந்த இடைவேளையில் மட்டுமே உணவுப் பொருள்கள் விற்பதற்கான நேரத்தை ஒதுக்குவோம். எந்த நேரமும் விற்பனை நடந்தால், எல்லோரும் நடந்துகொண்டே திரிவார்கள். கேவலமாக இருக்கும். பிள்ளைகள் கஷ்டப்பட்டு பழகியதை எல்லோரும் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். உணவுப் பொருள்கள் சம்பந்தமான வேலைகளுக்கு ஒரு குழு அமைத்துக் கொள்வோம். குறிப்பிட்ட நேரத்திற்கு விழா ஆரம்பிக்க வேண்டும். முதல் நிகழ்ச்சிக்குரிய பிள்ளைகள் வரவில்லையானால், அடுத்த நிகழ்ச்சிக்குரிய பிள்ளைகளை விடுவோம். எல்லோரும் நேரத்திற்கே தயாராகிவிட வேண்டும். அடுத்தடுத்து நிகழ்ச்சிகள் இடைவேளை இன்றிவரல் வேண்டும். உடைமாற்ற

வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அந்த நேரத்தில் நமது சிரிப்பு மன்னன் ரவி நகைச்சுவை செய்வதற்கு ஆயத்தமாக வரவேண்டும். ஏற்றுக்கொள்ளுகின்றீர்கள் தானே ரவி! உங்களுக்குத் துணையாக வேறு ஒருவரை சேர்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் வருவதற்கு இடையூறு ஏதாவது ஏற்பட்டால், அவர் தனியாக நிகழ்ச்சி நடத்தக் கூடியதாக இருக்க வேண்டும். வருகின்ற போது பார்வையாளர்கள் எப்படி வந்தார்களோ, அதேபோலே போகும் போதும் சளிப்பில்லாமல் முழுத் திருப்தியுடன் வீடு திரும்பக் கூடியதாக நிகழ்ச்சிகள் அமைய வேண்டும். 3 மணித்தியாலத்திற்கு மேல் நிகழ்ச்சிகள் நடைபெறுவதைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகளின் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது கைதட்டி ஆரவாரமாய் முழு மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தி அவர்களை உற்சாகப்படுத்துவோம். சோம்பி இராது. தேவைப்படும் போது எழுந்து நின்று கைதட்டி முழுஆர்வத்துடன் பிள்ளைகளை ஆர்வப்படுத்துவோம். எங்கள் பாராட்டே அவர்கள் எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாகும். இவற்றில் கவனம் எடுத்து எங்கள் கலைவிழா நடைபெற வேண்டும் என்பதே எனது விருப்பம். இப்போது இவ்வாறு செய்வதிலுள்ள

இடையூறுகள் பற்றிநீங்கள் தெரிவிக்கலாம்...."என்று நீண்ட விளக்கத்தைத் தந்த வரதேவி அமர்ந்தாள்.

தொடர்ந்து எழுந்த பிரதீபன் "ரீச்சர் இப்படித்தான் எல்லோரும் செய்ய வேண்டும் என்று ஆரம்பத்தில் ஒழுங்கு செய்கின்றார்கள். ஆனால், நிகழ்ச்சிகள் நடைபெறும் போது எல்லாம் மாறிவிடும்" என்றான்

தொடர்ந்த கீதன் "அதற்குக் காரணம் சாப்பாட்டுச் சாமான் விற்பனை. அடுத்தது மண்டபம் நிறையட்டும் என்று காத்திருப்பது. நிகழ்ச்சியை சரியான நேரத்திற்குத் தொடங்குவதற்கு பார்வையாளர்கள் காலதாதமாக வருவதே காரணமாக இருக்கின்றது" என்றான்.

தொடர்ந்த கீதா "பார்வையாளர்கள் வரும் நேரத்தை எதிர்பார்த்து ஒவ்வொருவரும் நிகழ்ச்சி செய்தால், இப்படித்தான் காலம் முழுவதும் எங்கள் நிகழ்ச்சிகள் நடக்கும். ஒரு நிகழ்ச்சி சொன்ன நேரத்திற்கு ஆரம்பித்தால் இனிமேலாவது நேரத்திற்கு வருவதற்கு ஆரம்பிப்பார்கள். என்னுடைய சந்தேகம் இடைவேளையின் போது உணவுப்பொருள்கள் அனைத்தும் விற்பனை செய்வது எப்படிச்

சாத்தியமாகும் என்பதே.....”என்று கூறி கீதா அமர வரதேவி எழுந்தாள்.

“நமது நோக்கம் உணவு விற்பனை அல்ல. நிகழ்ச்சி மட்டுமே. 3 மணிநேரம் பொறுத்துக் கொள்ள வேண்டியது அவசியமே. செவிக்கு உணவில்லாத போது சிறிதளவு வயிற்றுக்கும் தரப்படும் என்று நினைத்துக் கொள்வோம். நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன் சிலவற்றைக் கொள்வனவு செய்து கொண்டு வந்தால், பிள்ளைகளுக்குப் பசி எடுக்கும் போது அவற்றைக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்......” என்றாள்.

வரதேவி ஆலோசனைகளின் படி கலை விழா களைகட்டட்டும் என அனைவரும் சம்மதிக்க நிகழ்ச்சிக்குரிய நாள் குறிக்கப்பட்டது. மற்றைய நடைமுறைகளையும் பேசி அனைவரின் தீர்மானங்களுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

பின் பலருக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன. குறிப்பிட்ட நாளும் நெருங்கியது. கரிதாஸ் நிறுவன மண்டபத்தில் அலங்காரங்கள் மேற்கொள்ளப்பட்டன. முற்றுமுழுதான ஒத்துழைப்பை பெற்றோர்கள் வரதேவிக்கு வாரிவழங்கினார்கள். ஒவ்வொருவரும் செய்து வந்த தின்பண்டங்கள் விற்பனைக்காக

வைக்கப்பட்டன. கவிதை சொல்வதும், நாடகம் நடிப்பதும், பாடல்கள் பாடுவதும், நடனம் ஆடுவதும் என நிகழ்ச்சிகள் விரிந்து கிடந்தன. சிறகு விரித்த சின்னஞ் சிறுசுகளின் கல கலப்பான சத்தத்துடனும் ஆட்ட ஓட்டத்துடனும் அலங்கார அறை நிறைந்திருந்தது.

வரதேவியும் அடிக்கடி வயிற்றினுள் உதைக்கும் மகனை கண்களை மூடிக்கொண்டு தன் கைகளால் தடவிக் கொள்வாள். மீண்டும் துடிப்புடன் கலைவிழா வேலைகளில் ஈடுபடுவாள். வரதேவியினுடைய வயிறும் அளவுக்கு அதிகமாகவே பெருத்திருந்தது. உயரம் குறைந்தவர்களுக்கு வயிறு இப்படியே காட்சியளிக்கும் என்று வைத்தியர் அறிவுறுத்தினார். பெருத்த வயிறு ஓடியாடி வேலைகள் செய்யும் போது இடுப்பிலே வலியைத் தந்தது. கழிவறையினுள் சென்று “அம்மா.....“ என்று சத்தமில்லாது உச்சரித்துச் சில நிமிடங்கள் இருந்து கண்கள் இரண்டையும் இரு கைகளால் இறுக்க மூடி நோவைத் தாங்கிப் பின்வெளியே வந்து பெற்றோர்கள் கேள்விகளுக்கு நிதானமாய்ப் பதிலளிப்பாள். இடையிடையே வருகின்ற வயிற்றுக் குமட்டலைப் பொறுத்துக் கொள்வாள். தன் வேதனை பெரிதென்று போற்றாது.

மாணவர்கள் பெருமை காணத் தன்னை அர்ப்பணித்தாள்.

அம்மாக்களின் “தலையை ஆட்டாத...., திரும்பு..... என்ற செல்லமெல்லே... கொஞ்சம் பொறுமகள்..... அதுக்குள்ள எங்கே ஓடிட்டாய்.... நில்லு நில்லு... அந்தா அந்தா உன்னைத் தான் கூப்பிடுறாங்கள்... ஓடு ஓடு...“ இவ்வாறு சத்தங்களுடன் சந்தைக் கடையான அறையினுள் இருந்து, தம்முடைய பிள்ளைகளை ஆயத்தமாக்கிய பின் ஓடிப் போய் முன்னே இருந்து, அவர்கள் செய்கின்ற நிகழ்ச்சியைப் பார்த்த பின் திரும்பவும் ஓடிவந்து அவர்களுடையஆடைகளை மாற்றி, அலங்காரங்களை மாற்றி, அவர்களை ஆயத்தப்படுத்தி மீண்டும் ஓடிவந்து முன்னே அமர்ந்து ஆரவாரமாகத் தொழிற்படும் தாய்மாரைக் காண “வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த விந்தை மனிதன் மாண்டுவிட்டான்....” என்னும் பாரதி வரிகள் கண்முன்னே விரிந்து கிடந்தன. பெற்றோர் வேவ்வேறு தோற்றங்களுடனும் விதவிதமான ஆடை அலங்காரங்களுடனும் தமது பிள்ளைகளை அலங்கரித்திருந்தனர். தமது ஆசைக்குத் தம்முடைய நேரத்தை அர்ப்பணித்து, கலைவிழா நாளை கண்கவர் நாளாய் கண்டுகழித்தனர். மாணவர்களுக்குப்

பரிசில்கள் வழங்கப்பட்டன. போற்றுவார் போற்ற வரதேவி மாணவச் செல்வங்களின் பெற்றோர்கள் மனதில் அரியாசனம் போட்டு அமர்ந்து கொண்டாள்.

---

பிரமாண்டமான இவ்விழாக்களும் விளையாட்டுப் போட்டிகளும் நடந்தேறி சூழல் சுற்றங்களின் கண்களும் இக்கல்விச்சாலையிலே மொய்த்தன. அக்கல்விச் சாலையைத் தம்பக்கம் அபகரிக்கத் தமிழ்க் கல்வி நிறுவனம் போட்டா போட்டி போட்டது. மாணவர்களைத் தம்; பக்கம் இழுக்கவும், அவர் மனதை மாற்றவும், தம் கல்விச்சாலையுடன் வரதேவி வளர்த்தெடுத்த கல்விக்கோயிலை வலுக்கட்டாயமாக இணைக்கவும் பல கஷ்டங்களைக் கொடுத்தது.

ஒருநாள்

"இங்கே பாருங்கள் நீங்களும் நன்றாகப் படிப்பிக்கிறீங்கள். தனியாக ஏன் நீங்கள் கஷ்டப்பட வேண்டும்? உங்கள் மாணவர்களையும் சேர்த்துக் கொண்டு எங்கள் பாடசாலையுடன் இணைந்து தொழிற்படலாமே?

என்று மற்றைய தமிழ்ப்பாடசாலைஅதிகாரி வரதேவி வார்த்தெடுத்த பிள்ளைச் செல்வங்களையும் பாடசாலையையும் தம்முடன் இணைத்துத் தமக்குப்

பெருமை சேர்க்க மயக்க வார்த்தைகளால் தூபம்போட்டார். வரதேவியோ அன்பென்றால் அடங்கிப் போவாள். சூழ்ச்சியின் சூத்திரதாரிகளை ஏறெடுத்தும் பாராள். நேர்மைக்கு எதிரானவர்களிடம் பொல்லாதவள் என்னும் பட்டம் சுமந்தவள். ஒருவருக்கு நல்லவராகத் தெரிபவர் வேறு ஒருவருக்கு பொல்லாதவராய்த் தெரிவது இயற்கையே. மனிதன் மாறுபட்ட குணங்கள் அவரவர் குணங்களுடன் ஒத்தவர்களை நாடி உறவு கொள்ளும். மறுப்புக்களை ஏற்றுக்கொள்ளாத தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களும் ஆதரவாளர்களும் வரதேவி ஆத்ம தொழிலுக்கு அடிக்கடி இடையூறுகள் கொடுக்கத் தொடங்கினார்கள். பிரச்சினைகள் தலையெடுக்கத் தொடங்க, வரதேவியும் ஆண்மகவொன்றைப் பெற்றெடுத்தாள்.

மருத்துவமனையிலே குழந்தை பிறந்த போது வரதேவி அருகிலேயே நின்று கொண்டிருந்தான் கரன். அவள் படும் வேதனைகண்டு இனி ஒரு பிள்ளை வேண்டாம் என்று முடிவெடுத்தான். பிறந்த குழந்தையைக் கரன் கைளில் தூக்கிக் கொடுத்தாள் தாதி. குழந்தையைத் தன் கரம் தாங்கிய கரன் “தாயும் தந்தையும் வாழ்வில் வளர்த்தெடுக்கும்

முயற்சிகளுக்கு முழுத்துணையாக பிறந்து வலம்வரக் காத்திருக்கும் கண்மணியே!

என விளித்துக் குழந்தையை உச்சி மோந்தான். தந்தையைப் பார்த்துச் சிரித்த பிள்ளையை "என் வரன்! என்வரன்! என்று வாயார அழைத்தான். தாய்க்கும் பிள்ளைக்கும் எந்தவித இடையூறுகளும் தோன்றவில்லையானால், சுகப்பிரசவமாய்ப் பிறந்த குழந்தையையும் தாயையும் இரண்டாவது நாளே தமது இருப்பிடம் அனுப்புவது மருத்துவசாலை வழக்கம். அதுவரை குழந்தையைத் தமது குழந்தையாக ஏற்றுக்கொண்டு பெற்றதாயை விட பாசமாய்த் தாதியர் பராமரிக்கும் பாங்கை வரதேவி பார்த்து வியந்து போவாள். பிரசவவலி வந்து துடிக்கும் போது அவள் தலைதடவி அன்பாய் நோவைத் தாங்குவதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொள்ளும் பாங்கை நினைக்கும் போது தாயகத்தில் பிரசவ அறையினுள் தன் சகோதரி பிரசவத்தின் போது அழுது புலம்பியபோது ஏறெடுத்தும் பார்க்காத மருத்துவத் தாதியரை நினைத்துப் பார்த்தாள். தன் அருகே நிற்கும் தாதியரின் காலில் விழுந்து வணங்க வேண்டும் என்று உள்ளம் துடித்தது. அவர்கள்கைகள் இரண்டையும் பிடித்துக்

**கண்ணில் ஒற்றி நன்றிப் பெருக்கை தன் நயனங்களால் உணர்த்தினாள்.**

**குழந்தையோ**

**பஞ்சுடலெடுத்து பார்த்துச் சிரிக்கும் பாலகனாய்**
**அஞ்சன நிறத்தானாய் அழகனாய் - அன்னை**
**விஞ்சிக் கிடக்கும் மணம் நுகர்ந்து**
**நெஞ்சிலே முகம் புதைத்தான்.**

**கைகளில் குழந்தை தவழும்போது** 10 **மாதங்களும் பட்ட துன்பங்கள் எல்லாம் பறந்து போம். மறந்துபோம். இதுவே சொல்லவொண்ணா இயற்கை இயல்பு. அதனாலேயே ஒரு குழந்தையைப் பெற்ற அடுத்த வருடமே அடுத்த குழந்தையைச் சுமப்பதற்குத் தாய் தயாராகிவிடுகின்றாள்.**

**அன்றைய நாள் கரன் மகன்வரன், தன் வீடு நோக்கிச் செல்லும் நாள். கரன் மருத்துவமனைத் தாதியர் அனைவருக்கும் இனிப்புகள் பகிர்ந்தளிப்பதன் மூலம் தன் நன்றியைத் தெரிவித்தான். அவர்களும் வரன் பிறந்தவுடன் எடுத்த புகைப்படத்தை அட்டைப்பிறேமில் போட்டுப் பிறக்கும் போது இருந்த வரனுடைய நிறை, உயரம், தலைச்சுற்றளவு போன்றவற்றை குறிப்பிட்டு கரன் கையில் கொடுத்தார்கள். ஒரு ஹொட்டலில் இருந்து திரும்பும்**

மனநிலையுடன் மருத்துவமனை விட்டு விடைபெற்றாள் வரதேவி.

குழந்தைக்கும் தனக்கும் சேர்த்தே உணவருந்தினாள். வீட்டிற்கு வந்த அடுத்தநாளே குழந்தை மருத்துவரிடம் குழந்தையைக் கொண்டுசெல்ல வேண்டியது ஜேர்மனிய நடைமுறை. அன்றிலிருந்து அக்குழந்தையின் அனைத்து ஆரோக்கிய நடைமுறைகளையும் அந்தக் குழந்தை மருத்துவரே பொறுப்பேற்பார். அவரிடம் முதல்நாள் இருந்து குழந்தையின் சுகநல பிரச்சினைகள் அத்தனையும் பதிவில் இருக்கும். மருத்துவருக்குப் பணம் கட்டவேண்டிய அவசியம் இல்லை. தந்தை உழைப்பில்லாது அரசாங்கப் பணத்தில் வாழ்ந்தால் கூட அரசாங்கம் மருத்துவப் பணத்தைப் பொறுப்பேற்கும். இத்தனை வசதிகள் இங்கிருக்க சொந்த நாடு தேடி யாராவது போகச் சிந்திப்பார்களா.... குழந்தை பிறந்து இரண்டு வருடங்கள் சகல போசாக்குடனும் வளர குழந்தை பராமரிப்புப் பணமாக ஜேர்மனிய அரசாங்கம் ஒவ்வொரு மாதமும் 600 ஒயிரோக்களை வரதேவிக்கு வழங்கும். இது தவிர பிள்ளை 18 வயதுவரை மாதம் மாதம் குழந்தைக்கு 184 ஒயிரோக்களை நன்கொடையாக வழங்கும்.ஜேர்மனி

## என்னையே நானறியேன்

நாட்டில் வளரும் பிள்ளை 25 வயதுவரை கல்வியை மேற்கொண்டால், இப்பணத்தை 25 வயதுவரை கொடுப்பதில் இந்நாடு தயங்காது. அப்பிள்ளை சுயமாகப்பணம் சம்பாதிக்கத் தொடங்கும்வரை இப்பணத்தை வழங்கிக் கொண்டே இருக்கும். இந்நாட்டில் எந்தத் தந்தையும் "கஷ்டப்பட்டு உழைத்து உன்னை வளர்த்தேனே......"என்று பிள்ளையை எதிர்காலத்தில் கேட்க முடியாது. பிள்ளை தந்தையைத் திரும்பக் கேட்கும் "ஓரளவாவது சொந்தம் பந்தமில்லாத இந்த நாடே நான் வாழ பணவசதி செய்தபோது உங்கள் பெயர் சொல்லப் பிறந்த என்னை வளர்க்க எனதுபணத்தையும் சேர்த்துத் தானே எடுத்திருக்கின்றீர்கள்" என்று.

"நாடென்ன செய்தது நமக்கு என்று கேள்விகள் கேட்பது இங்கு தவறு"

ஆண்டுகள் கடந்தன. அன்புமகன் அடியெடுத்தான், எழுதுகோல் பிடித்தான், வரி தொடுத்தான். பாலர் பாடசாலைநோக்கி அவனது தினசரி வாழ்வு திருப்பம் கண்டது. ஒருபுறம் பாடசாலை, மறுபுறம்தொழில், அடுத்து தாய்ப்பாசத்தின் ஆதாரம், இவ்வாறான வாழ்வின் சுமையில் வாழ்வாதார தொழிலை தன் வசதிக்கேற்பக்

கொண்டுசெல்ல நேரமும் பொழுதுகளும் இடமளிக்கவில்லை. பாடசாலை செல்லும் பாலகனை பாடசாலை கொண்டு செல்லவும் வீட்டிற்கு அழைத்து வரவும் வீட்டு வேலைகளை செய்யவும் எனப் பொழுதுகள் கழிந்தன. சுத்தம் செய்யும் மாதாந்திரத் தொழில் நின்றது. மீண்டும் கரன் உழைப்பே தொடர்ந்தது.

# Part 8

திடீரென தாயகம் நோக்கிக் கரன் செல்வதற்கு ஆயத்தமானான். அகதி முகாம்களில் இருக்கும் பிள்ளைகளைப் பார்த்துவரச் செல்வதாக வரதேவியிடம் கூறிச் சென்றான். தனியளாய்த் தன் மகன் வேலைகள்அனைத்தும் பொறுப்பேற்றாள். கின்டர் கார்டின் ஆசிரியை டெய்சி வரனில் அன்பும் பாசமும் மிக்கவள். இங்கு வீட்டிற்குச் செல்லப் பிள்ளை தயங்குமேயொழிய கின்டர் கார்டின் செல்லத் தயங்காது. ஆசிரியர்களின் அடக்குமுறை இல்லை. அதட்டல் பேச்சில்லை. அதிகார ஆட்டம் இல்லை. கற்பித்தல் கட்டுப்பாடில்லை. பரீட்சை தொல்லை இல்லை. சுதந்திரமான தொழிற்பாடு. விளையாட்டுடன் விளக்கங்கள். ஆசிரியர்கள் சிறந்த ஆயாக்களாய் பழகுவர். இங்கு பெற்றோர் பிள்ளைகளை பாடசாலைக்குப் போ என்று தொல்லை கொடுக்கும் சம்பிரதாயமே இல்லை. வீட்டிற்கு வந்தால், அடுத்தநாள் எப்போது வரும் என காத்துக் கொண்டிருப்பார்கள். அவ்வாறே வரன் கின்டர் கார்டின் வாழ்வும் அமைந்தது. வாசல் வந்தால் தாயின் கைகளை உதறிவிட்டு ஓடிவிடும் தன் மகனைப் பார்த்து வரதேவியும் எதிர்காலத்தில் இவன் நல்ல

நிலையை எட்டிப்பிடிப்பான். பிடிக்கவேண்டும் என்று அவள் நினைத்தாள். இதுதானே பிள்ளையைப் பெற்றவுடன் பெற்றோர் சிந்தையில் போட்டு வைத்திருக்கும் நம்பிக்கை வித்து. இதுவே வரதேவியிடமும் இருந்தது. எத்தனையோ பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்கின்றாள். அதன் புண்ணியம் மகனில் தொடராமலா இருக்கப் போகின்றது.

வீடு வந்தால் மகன் திரும்பும் போது உணவு தயாராக இருக்க வேண்டும் என்பதற்காக சமயலறை வந்து விடுவாள். என்ன தான் அமிர்தம் ஆக்கிப் போட்டாலும் இங்குள்ள பிள்ளைகளுக்கு பொம்மஸூம் சிக்கின் நக்கட்சும் (உருளைக்கிழங்கு மெலிதாக வெட்டிய பொரியலும் கோழியின் நெஞ்சுப் பகுதியைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிரஸ்க் துள் பிரட்டி பொரித்தெடுத்தல்) தரும் சுவையை எந்தச் சுவையும் மிஞ்சாது. வரதேவிக்குக் கூட சமையல் என்றால், இரண்டாம் படிதான். மின் அடுப்பில் தாய்ச்சியைத் தூக்கி வைத்து சமைக்கும் போது சிறிது நேரம்அதிகமாகிவிட்டால்,

"இலண்டனில் என்றால், கேஸ் அடுப்புகெதியாகச் சூடுபிடித்து கெதியாக உணவு தயாராகிவிடும். இது

எவ்வளவு நேரமாகின்றது. பெண்ணாய்ப் பிறந்தால், ஆக்கிப் போடுவதே பிழைப்பாய்ப் போய்விட்டது. என்னதான் அயல்நாடு என்றாலும் எங்கள் சோறும் கறியும் சாப்பிட்டால் தானே சாப்பிட்ட மாதிரி இருக்கிறது" என்று அலுத்தபடி சமையலில் ஈடுபடுவாள்.

சில சமயங்களில் ஜேர்மனிய வாழ்வில் சலிப்பும் ஏற்படும். வரதேவியைச் சிலசமயங்களில் நண்பர்களின் சுவாரஷ்யமான தொலைபேசிப் பேச்சு மெய்மறக்க வைக்கும். இது உணவையும் சில சமயங்களில் எரிய வைக்கும். அதுபோல் சுவாரஷ்யமான பேச்சொன்று அழைக்கிறது என ரெலிபோன் ரிங் கேட்டு ஓடிச் சென்று ரிசீவரைக் கையிலெடுத்தாள்.

"ஹலோ...."

"நான் சாரதா கதைக்கிறேன். கரன் அண்ணா இருக்கிறாரா? அவரிட்ட ஒருக்காக் கொடுங்களேன்..."

"இல்ல அவர் சிறிலங்கா போயிட்டார்...."இது வரதேவி பக்கப் பதில்.

"என்ன.....சிறிலங்கா போயிட்டாரா?..... நாங்கள் ரிக்கற் போடச் சொன்னமே.... உங்களிட்ட ஒன்றும் சொல்லவில்லையா?

"இல்லையே...."என்றாள் வரதேவி.
"எப்போ வருவார் அக்கா?
"தெரியாது பாருங்க...."
"எப்போக்கா போனவர்?
" 2 மாதமாகிறது. என்னிடம் இது பற்றி எதுவுமே சொல்லவில்லை..... எப்போது வருவார் என்றும் சொல்லவில்லை... நானும் அவர் ரெலிபோன் எடுப்பார் என்று காத்துக் கொண்டு தான் இருக்கிறேன். எந்தத் தகவலும் கிடைக்கவில்லை..."
"சரியக்கா... எந்தத் தகவலாவது கிடைத்தால் சொல்லுங்கள்....." என்று கூறித் தன் தொலைபேசி இலக்கத்தையும் வரதேவியிடம் கொடுத்து விடைபெற்றாள் சாரதா.
"என்ன மனிசன் இவர். போனவர் ஒரு தொலைபேசியாவது எடுக்கவில்லையே. இது என்ன புதுப் பிரச்சினை. எல்லாவற்றிலும் தலையைப் போட்டு பிரச்சினைகளை விலைக்கல்லவா வாங்கப் போகிறார்"
என நினைத்தவண்ணம் மீண்டும் சமையலில் கவனம் செலுத்தினாள்.
சமையலறை வேலை முடிந்து தனது தாயாரை தொலைபேசியில் அழைத்தாள்.

## என்னையே நானறியேன்

“யாரு….வராவா….. எப்பிடியிருக்கிறாய் அம்மா? வரன் செல்லம் எங்கே மகள்? என்ர பேரப்பிள்ளை என்ன சொல்லுது? எப்போ அவனை எனக்குக் கொண்டு வந்து காட்டப் போகிறாயோ தெரியாது? கேள்விகளைத் தாய் வழக்கமான பாணியில் அடுக்கினாள்.

தாயின் பாசமிக்க வார்த்தைகள் அவள் மனதை இதப்படுத்தியன.

“நல்லா இருக்கிறேன் அம்மா… வரன் கின்டர்காடின் போயிட்டான். இவர் வீட்ட வரல்லையா அம்மா?

“யாரு கரனா? இங்கே வந்தார்……1 மாதத்திற்கு முதலே அங்கு வரப்போவதாகச் சொன்னாரே! இன்னும் அங்க வரல்லையா? மகள். நீ அன்றைக்கு எனக்கு ரெலிபோன் எடுத்த போது இதுபற்றிக் கேட்கவில்லையே!

“உங்களை ஏன் குழப்பவேண்டும் என்று நினைச்சேன் அம்மா….”

“ஏன்? ஏதாவது பிரச்சினையா?

தன்னுடைய பிரச்சினை விமானம் ஏறாது தொலைபேசி துணையுடன் இலங்கை செல்வதைச் சற்றும் விரும்பாத வரதேவி

## என்னையே நானறியேன்

"இல்ல இல்ல அப்பிடி ஒன்றும் இல்ல... அம்மா" என்று கூறி உறவினர்களின் சுகம் விசாரித்த படி தொலைபேசியை வைத்தாள்.

"என்ன நடந்திருக்கும்........? அவள் மனக் கேள்வியெல்லாம் இதுவே

---

கோடை விடுமுறைக்கு தாயகம் செல்லும் நாளும் நெருங்குகிறது. இந்த நேரத்தில் தம்மை ஏமாற்றிச் சென்ற கரணை நினைக்க நினைக்க சாரதாவிற்கு உடலெல்லாம் எரிந்தது.

"என்ன பேச்செல்லாம் பேசினார் மனிசன். இப்படி ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் சிறிலங்காக்குப் போயிருக்கிறரே... "என்று நினைத்த வண்ணம்

"போனது போனதுதான் திரும்ப வராமலா விடப்போறார். வரட்டும்....."என்று முணுகியபடி அமர்ந்திருந்த சாரரதாவிடம்

"என்ன சாரதா! முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது? என்று அப்போதுதான் வேலைவிட்டு வந்த கணவன் சதீஸ் வினாவினான்.

"வெடிக்காமல் என்ன செய்யும். ரிக்கட் போடுறன் என்று காசு வாங்கிக் கொண்டு போனவர் ஒரேயடியாப் போயிற்றார். அங்கேயும் இந்த சம்மர் ஹொலிடேக்கு ஊருக்கு வருவோம் என்று சொல்லி

அவர்களுக்கும் ஆசையைக் காட்டிவிட்டன். அதுகளும் எங்களை எதிர்பார்த்துக் கொண்டு நிற்குதுகள். என்ன செய்றதென்றே தெரியல்ல…” என்று சளித்துக் கொண்டாள் சாரதா.

“கரனுக்கு ரெலிபோன் அடிச்சனீயே?

“ஓ….ஓ… அந்த ஆத்திரத்தில்த் தான் இருக்கிறேன். அவர் சிறிலங்காக்குப் போயிட்டாராம். அவரிட மனிசியுடனும் தொடர்பில்லையாம்”

“நான் இப்போதுதான் கேள்விப்பட்டன் சாரதா! நம்மட சனங்களும் கரனை நல்லா ஏமாத்தியிருக்குதுகள். இலங்கைக்குப் போயிட்டுவந்து காசுதாறம் என்று சொல்லி ரிக்கட்டை வாங்கிக் கொண்டுபோனவர்கள் திரும்ப வந்து காசைத் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றியிருக்கிறார்களாம்”

“அதுக்கு….. நாங்கள் பழியா? அவர் ஏமாளியென்றால், எங்களையும் ஏமாற்ற வேண்டுமா? நல்ல மனிசன் என்று நம்பித்தானே காசைத் தூக்கிக் கொடுத்தம். வரட்டும் வரட்டும். என்ர குணத்தை இனித்தான் அறியப் போறார்” என்று மனம் வருந்தி வார்த்தைகளை விட்டாள் சாரதா.

“சரி சாரதா வரட்டும்…. கேட்பம். இப்போ வேற ஒரு இடத்தில சொல்லி ரிக்கட் போடுறன்“ என்றான் சதீஸ்.

---

நாள்கள் நகர்ந்தன. கரனிடமிருந்து எந்தவித தொடர்பும் கிடைக்கவில்லை. செலவுக்கு கையில் எதுவுமே இல்லை. இடையிடையே தோன்றும் ஆஸ்துமாவினால் வரதேவி வருந்துவாள். அவளுக்காய் அளிக்கப்பட்ட கொட்டிசோன் ஸ்பிறே அடிக்கடி அவள் தொண்டையினுள் தெளிக்கப்பட மீண்டும் தெளிவாவாள். இலங்கையிலிருந்து அவளைவிட்டு அகலாமல் தொடர்ந்து வந்த சொந்தம் இந்த ஆஸ்துமா. அந்த வெப்ப நாட்டிலேயே இவளைப் படாதபாடு படுத்திய நோய் இந்தக் குளிர்நாட்டில் எப்படிச் சொந்தம் கொண்டாடும் என்று சொல்லித் தெரியவேண்டியதில்லை.

அத்துடன்கையில் பணம் இல்லாது காலம் கழிப்பது தான் எப்படி? உண்ண வேண்டாமா? உடுக்கவேண்டாமா? வீட்டிற்கு வாடகை கட்ட வேண்டாமா? எந்தவித தகவலும் தராது மாயமாய் மௌனமான தன் கணவன் நிலை அவள் மனதுக்குள் வேதனையைத் தந்தது. வேறு வழியின்றி அரசாங்கப் பணத்தை நாட வேண்டியிருந்தது. தனக்கும் தன் மகனுக்கும் வாழ்வாதாரம் தாருங்கள். என் கணவன் என்னை விட்டுப் போய் நீண்ட நாள்களாகி விட்டன என்று சமூகப் பாதுகாப்பு அலுவலகத்திடம் கையேந்தி

**நின்றாள். அவர்கள் ஆதரவுடன்அங்கு கிடைக்கும் பொதுநல உதவியுடன் தன் வாழ்வைச் செலுத்தத் துணிந்தாள்.**

**ஜேர்மனியிலே உள்ள சராசரிசனத் தொகை** 81.8 **மில்லியனாகக் காணப்படுகின்றது. இதில் சமூகப் பாதுகாப்பு அலுவலகத்திடமிருந்து பொதுநல உதவித் தொகை பெறுவதில் முதலிடம் பெறுபவர்கள் துருக்கி இனத்தவர்கள். இரண்டாவது இடத்தைப் பெற்று வாழ்பவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள். ஜேர்மனியில் வாழும் இலங்கையைச் சேர்ந்தோரின் சனத்தொகையில்** 40 **வீதத்தினர் இவ்வுதவி பெற்று வாழ்கின்றனர். வேறுவழியில்லாது இவ் உதவி பெறுபவர்களும் உண்டு. வேலை செய்ய விரும்பாது இவ்வுதவி பெறுபவர்களும் உண்டு.**
**ஒவ்வொருவருக்கும் மாதச் செலவுக்குப் பணமும், வீட்டு வாடகையும், மின்சாரக் கட்டணமும், தண்ணீர், வெப்ப மூட்டிக்கான கட்டணமும், தொலைபேசிக் கட்டணமும், மருத்துவக் காப்புறுதிப் பணமும், தொலைக்காட்சி பார்ப்பதற்கான வானொலி கேட்பதற்கான கட்டணமும், பிள்ளைகள் பாடசாலையில் படிக்கும் போது அவர்கள் புத்தகச் செலவுக்கான பணமும், அவர்கள் பாடசாலையால்**

சுற்றுலா செல்லும் போது அதற்கான பணமும், அவர்கள் கலைகள் பயின்றால் இசைப் பாடசாலைக்குச் சிறு தொகைப் பணமும் என அனைத்து உதவிகளையும் வழங்கி மாதாந்திரத் தொழில் செய்து ஒருவர் பெறும் சம்பளத்திற்கு ஈடான உதவிகளை ஒவ்வொரு நகரமும் அவரவர் பகுதிகளில் வாழும் உதவிப்பணம் பெறும் மக்களுக்கு வழங்கி சந்தோசமாக வாழ வழிவகை செய்யும்.

வேலையற்று வளமான வாழ்வு வாழும் இந்நாடு விட்டு தாய்நாடு நாட எந்த மனிதன் தயாராக இருப்பான். தாய்நாட்டில் நாம் வாழ வேண்டுமானால், சுயமாகத் தொழில் செய்ய வேண்டும்.அல்லது அரசாங்கத் தொழில் செய்யவேண்டும். அல்லது கூலித் தொழில் செய்யவேண்டும். எந்தவிதத் தொழிலும் செய்யாது எந்த மனிதனாலும் சகல வசதிகளும் பெற்று வாழ முடியுமா? கணவனைப் பிரிந்து வாழும் நிலை ஆசிய நாடுகளில் சிரமமே. இங்கு கணவன் இல்லாவிட்டாலும் பெண்கள் வறுமையின்றி தமது வாழ்க்கையைச் செலுத்தமுடியும். அதனால்த் தான் என்னவோ இங்கு பெண்கள் ஆதிக்கம் அதிகரித்து விவாகரத்து மலிந்து விட்டது. கணவன் என்னை அடித்துத்

துன்புறுத்துகின்றான் என்று எந்தப் பெண்ணாவது ஆலோசனை நிறுவனங்களுக்குச் சென்று அறிவித்தால் போதும் கணவன் சிறைச்சாலை அறையினுள் கம்பிகளினூடாகவே வெளி உலகம் நோக்கவேண்டும். பெண்களோ அரசாங்கப் பணத்தில் ஆனந்தமாய் வாழமுடியும்.

ஐரோப்பியநாட்டில் ஆரோக்கியம் குறைந்து பிள்ளையை வளர்த்தெடுப்பது என்பது இல்லவே இல்லை. ஆனால், தனிப்பிள்ளையாய் வளர்ப்பதென்பது கடினமான காரியம். சேர்ந்து விளையாட யாருமின்றி பிள்ளை வீட்டினுள் இருந்த வண்ணம் ஜன்னலினூடாக வெளியே பார்த்த படி இருக்கும். இல்லையென்றால், விளையாட வா அம்மா! என்று அடம்பிடிக்கும். இதற்கு வரன் ஒன்றும் விதிவிலக்கல்ல. மாரி காலம் முழுவதும் வீட்டினுள் அடைந்து கிடக்கும் வரன் கோடை காலம் வந்து விட்டால்,

“வெளியே வா அம்மா! ஸ்பீல் பிளட்ஸ்க்குப் (விளையாட்டு மைதானம்) போவோம்........” என்று அடம்பிடிப்பான்.

கோடை காலம் என்பது ஐரோப்பியநாடுகளில் விசேடமான காலமே. இருள்காண இரவு 10

மணியாகும். பகல் 5 மணிக்கே சூரியன் சிரித்துக் கொண்டு வந்துவிடுவார். பகல் நேரம் அதிகரித்து இருண்டபொழுது குறைவாகவும் காணப்படும். உடைகழட்டிய மரங்கள் மீண்டும் பச்சைஆடையில் பசுமையாய்க் காணப்பட வீட்டுமுற்றங்களில் மலர்வனங்கள் மலிந்து கிடக்கும். மீண்டும் மாரிக்கு மரங்கள் உறைந்து விடுமே...... மலர்களை இழந்துவிடுமே..... கிட்டத்தட்ட 6 மாதங்களே அழகுறும் இவ்வாறான இம்மலர்வனம் அவசியம் தானா? என எள்ளளவும் சோம்பியிராது. குறுகிய மாதங்களே கண்ணைக் குளிர்ச்சிப்படுத்தும் பூந்தோட்டங்களையும் பலகணிகளையும் அழகுபடுத்துவதில் ஜேர்மனியர் இறங்கிவிடுவர். சிறுவர்கள் கைப்பந்து, கால்பந்து, ஸ்கேட்போர்ட், ரோல்சூ (Roll Schuh ) என வீட்டிற்கு வெளியே பொழுதுகளை கழிப்பர். இதில்வரன் மட்டும் விதிவிலக்கா.... அடம்பிடிக்கும் மகனை அழைத்துக் கொண்டு விளையாட்டு மைதானம் போவாள். அவன் கேட்கும் பக்கமெல்லாம் இழுபடுவாள்.

அன்று வரன் கின்டர்கார்டின் விட்டு வீட்டிற்கு வந்தவுடன் பந்தைத் தூக்கிக் கொண்டு கிளம்பிவிட்டான்.

## என்னையே நானறியேன்

“அம்மா! நான் ரெடி. நீங்கள் ரெடியா? தன் வாழ்வின் சோகம் வாட்ட. வந்த சுகம் தொலைதூரம் தெரிய “அம்மாக்கு இன்றைக்கு உடம்பு சரியில்லை மகன். நாளைக்கு போவமே? என்றாள்.

“நைன்(இல்லை) .... இன்டைக்குப் போகவேணும்.... வாங்கள் அம்மா....” என்று கால்கள் இரண்டும் தாம்தோம் போட வாசல்படியில் நின்று தொண்டை திறந்து கத்தினான். முடியாத போதும் போக முடிவெடுத்து வெளியே வந்தாள். மூளையெங்கும் கரன் நினைவு. வழமையாகச் செல்லும் இடமானதால் வழிபார்க்காமலே மூளை அவ்விடம் அழைத்துச் சென்றது. மகனை விளையாடவிட்டு மரநிழலில் மெல்ல அமர்ந்தாள். உடலிங்கே மனமெங்கோ. முழுவதுமாக எந்தவிதத் தொடர்புமின்றி இலங்கை சென்ற கரனைப் பற்றியே சிந்தனை சுழன்றது. இலங்கையிலிருந்து தொலைபேசி மூலம் வந்த செய்தி அவளை மிகவும் குழப்பியது.

இலங்கையிலிருந்து 2 வாரத்திலேயே கரன் திரும்பி விட்டதாக வரதேவி தாயார் அச்சமயம் அவளருகே அமுதா வந்து அமர்ந்தாள்.

“எப்படி இருக்கின்றீர்கள்?

“பறவாயில்லை இருக்கிறேன்”

**"வீட்டிற்கு வரவேண்டுமென்றுதான் இருந்தேன்"**
**"அப்படியா! வாருங்கள். கொஞ்ச நேரத்தில் போய் விடுவோம்"**
**"இல்லை... இப்போது கண்டுவிட்டோம் தானே... எப்படிப் பொழுது போகிறது"**
**"போகிறது. தமிழ் பள்ளிக்கூடமும், வீடும் மாறி மாறிப் போகிறது"**
**"என்ன பள்ளிக்கூடத்தை வேறு ஆட்கள் நடத்தப் போகின்றார்கள் என்று கதை அடிபடுதே. உண்மையா ரீச்சர்?**
**"சீச்சீ அதெல்லாம் பொய்க் கதை. கேட்டவர்கள் தான். நான் விரும்பல்ல. கஷ்டப்பட்டு உருவாக்கிய பள்ளிக்கூடத்தை வேறு யாருக்கும் விட்டுக் கொடுப்பதா"**
**"மாஸ்டர் வந்திட்டாரா ரீச்சர்? சிறிலங்காக்குக் கொடுப்பதற்குப் பணம் கொடுத்தேன்.... அங்கு கொண்டுபோய்க் கொடுக்கவில்லையாமென்று தங்கச்சி சொன்னார்..... வரட்டும், கேட்பமென்று இருந்தன். என்ரையவர் கேட்கல்லையா கேட்கல்லையா என்று கரைச்சல் கொடுத்ததாலே தான் உங்களிட்டக் கேட்கிறேன்" என்று அமுதா மெல்ல**

மெல்ல கரன் விடயம் பற்றி வரதேவியிடம் போட்டு வைத்தாள்.
“அப்படியா! எனக்கு எதுவுமே தெரியாது அமலா. எனக்கு அவர் ஒன்றுமே சொல்வதில்ல. நானும் எல்லாம் நடக்கும் போது அவர் முன்னே கண்மூடி இருந்திருக்கிறேன். கொஞ்சம் பொறுக்கும் படி உங்கள் ஹஸ்பன்டிடம் சொல்லுங்கள். அவர் வந்ததும் பேசுவோம். மன்னித்துக் கொள்ளுங்கள் அமலா” என்று மனம் வெந்து வார்த்தைகளை வெளியிட்டாள்.
“பறவாயில்லை ரீச்சர். நான் சொல்லிக்கொள்றன். நீங்கள் இதுபற்றி ஒன்றும் யோசிக்காதீங்கோ....நான் போயிட்டு வர்றன்” என்று சொல்லி விடைபெற்றாள் அமலா.
ஏதேதோ நடக்கிறது. எது வென்று புரியவில்லை. கண்ணாய்; நினைத்த கணவன் மண்ணாய்ப் போன மாயம் புரியாது வாழ்வின் திருப்பத்தைவரதேவி உணர்ந்தாள். கரன் நல்லவனா? கெட்டவனா? தனக்குள்ளே கேள்வி கேட்டாள். துணைக்குப் பேசத் துணையாய் இருக்கும் மகனோ கள்ளங்கபடமில்லாச் சிறுவன். ஆறுதலுக்கு யாரிடம் பேசுவாள். அவமானத்தை யாருக்கு உரைப்பாள். விளையாடிக் களைத்த வரன் தாயருகில் வந்தமர்ந்தான்.

**வரதேவியும் அவன் களைப்பையுணர்ந்து வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.**

# Part 9

அடுத்த சனிக்கிழமை வழமைபோல் பாடசாலையைத் திறப்பதற்காக வரதேவி பாடசாலை வாசலருகே வந்தாள். வழமைபோல் கதவு திறப்பதற்கு முன்னமே வந்து நிற்கும் யதுஷா அங்கில்லாதது வரதேவிக்கு யோசனையாக இருந்தது. கதவு திறப்பதிலிருந்து பாடம் ஆரம்பிக்கும் வரை வாய் ஓயாது கேள்வி மேல்கேட்டுத் துளைக்கும் அவள் வரவின்மை வரதேவிக்குக் கவலையைக் கொடுத்தது.

"தமிழில்தான் 247 எழுத்துக்கள் இருக்கிறதே ரீச்சர். ஏன் அம்மாவின் தம்பியையும் மாமா என்று சொல்லுகின்றோம். தெரியாத ஆண் பிள்ளைகளையும் மாமா என்கின்றோம். வேறு ஒரு சொல் வைக்கலாம் தானே? தமிழ் எழுத்துக்கள் இப்படி வளைத்து நெளித்தெல்லாம் எழுதுகின்றார்களே. எப்படி ரீச்சர் கல்லில் எல்லாம் எழுதியிருப்பார்கள்? இந்த "ஃ" என்ற எழுத்துத் தான் எழுதுவதில்லையே அதை ஏன் படிப்பிக்கின்றீர்கள்? சித்திரை வருடம் தான் புதுவருடம் என்கின்றார்கள். ஏன் தைப்பொங்கலில் முதலாம் திகதி வரும் என்கின்றார்கள். நாம் ஏன் தை முதலாம் திகதியை முதல் திகதியாக எடுக்கின்றோம்? தாமரைப்

பூவில் எப்படி சரஸ்வதி இருக்க முடியும். பூ நசிந்து விடுமே! இவ்வாறாகப் பல கேள்விகளைக் கேட்டுத் துளைத்தெடுப்பாள். அத்தனை கேள்விகளுக்கும் அமைதியாக வரதேவியும் விளக்கம் கொடுப்பாள்.

"தமிழ் பெண்கள் தமது கணவனைத் தவிர மற்றைய ஆண்களைத் தம்முடைய சகோதரர்களாகவே கருதுவதால், அவர்கள் எல்லாம் தமது குழந்தைகளுக்கு மாமா முறை கூறியே அழைக்கப் பணிக்கப்படுகின்றார்கள். கல்லில் எழுத்துக்கள் வடித்த காலப்பகுதியில் எம்முடைய எழுத்து வடிவங்கள் இப்போது இருப்பது போல் இருந்ததில்லை. தாமரைப் பூ எந்தளவு நீரில் நின்றாலும் அந்த நீர்மட்டத்திற்கு மேலேயே நிற்கும். கல்வி அறிவு பெற்றவர்கள் தாழ்ந்து போவதில்லை. அதனாலேயே சரஸ்வதி தாமரைப்பூவின் மேல் இருப்பதாக படம் வரைந்திருக்கின்றார்கள். ஆங்கில நாள்காட்டிப் படி தைமாத 14ம் திகதியாக இருந்தாலும், தமிழுக்கு அது முதற் திகதியே. ஆனால், புதுவருடம் என்பது சித்திரைமாத 14ம் திகதியே. அவ்வாறு தான் எமது பஞ்சாங்கங்கள் கணிப்பிட்டிருக்கின்றன. அத்திகதியிலேயே எங்களுடைய புதிய வருடம் ஆரம்பிக்கின்றது. எங்களுக்கு வருடத்தில் முதல்

மாதம் சித்திரையே. தை மாதம் வருடத்தின் 10 ஆம் மாதம்”

இவ்வாறாக யாதுஷாவிற்குப் புரியும் படியாக அனைத்துக் கேள்விகளுக்கும் விளக்கத்தை அளிப்பாள். புரியாத கேள்விகளாய் இருந்தால், “யதுஷா! பொறுத்துக் கொள். இந்தக் கேள்விகளுக்கு விடையை முதலில் நான் அறிந்து பிறகு உனக்குச் சொல்லித் தருகின்றேன்” என்று ஆறுதலாக விளக்கம் அளிப்பாள். ஆசிரியர் என்பவர்கள் உண்மையில் என்றும் மாணவர்களே. கற்றலும் கற்பித்தலுமே அவர்கள் தொழில். நாளும் கற்ற ஆசிரியரே நன்மாணாக்கனை உருவாக்க முயும். தெரியாது என்று உண்மை சொல்லத் தெரியாத ஆசிரியர்கள் தம் குறை மறைப்பதனால், அறிவு குறைந்த, எதற்கும் ஆமாப் போடும் மாணவர்களையே உருவாக்க முடியும். அவர்களால் எதிர்த்துக் கேள்விகள் கேட்பதற்கு முடியாது. யதுஷா எதற்கும் சலிக்காது கேள்விகள் கேட்டு வரதேவியுடன் வாதம் செய்கின்ற ஒரு மாணவி. அவள் வரவின்மை கண்டு வரதேவி மனம் தத்தளித்தது. கதவைத் திறந்து உள்ளே சென்றாள். நேரம் தாமதமாகியது. ஆனால், வரவேண்டிய மாணவர்களோ வரவில்லை. காத்திருந்து காத்திருந்து

காலங்கடந்தது. எந்த மாணவர்களும் சமூகமளிக்கவில்லை. புரிந்துகொண்டாள்.

காத்திருந்து கண்கள் குளமாகிய நிலையில் வீட்டிற்குச் சென்றாள். முதலில் யதுஷா வீட்டிற்கு தொலைபேசியில் அழைப்பு விட்டாள். யதுஷாவே தொலைபேசியை எடுத்தாள்

“யதுஷா! ஏன் ஸ்கூலுக்கு வரல்ல?

“அது ரீச்சர்… அம்மாதான் சொன்னா… இனி வீட்டில இருந்து படிப்போம் என்று“

“ஏன்…..ஏன்…..”

“தெரியாது ரீச்சர்…..”

“ஓகே… அம்மாட்ட ஒருக்கா ரெலிபோனைக் கொடுக்கிறாயா ….?

“சரி ரீச்சர்…”

மீண்டும் தொலைபேசி துண்டிக்கப்பட்டது. மீண்டும் தொலைபேசி இலக்கங்களை வரதேவி அழுத்தினாள். ரிங் போனது. ஆனால், யாருமே தொலைபேசியை எடுக்கவில்லை. தன்னுடன் பேச யதுஷாவின் தாய் தவிர்ப்பதை வரதேவி புரிந்து கொண்டாள். மனம் கனத்தது. என்ன நடந்திருக்கும் ஆயிரம் கேள்விகள் மனதிற்குள் சங்கிலியாய்த் தொடர்ந்தன. நீரூற்றி

வளர்த்த தளிர்கள் எங்கோ தூரம் சென்றது போன்ற வேதனை.

நண்பி கீதாவின் இலக்கங்கள் மூளைக்குள் பதிந்திருக்கின்றதால், பட்பட்டென்று இலக்கங்களை விரல்கள் தடவின. காதினுள் தொலைபேசி அழைப்பு மணி கேட்டது.

“ஹலோ.....” கீதா. கீதாவேதான். குமுறி வந்த அழுகை அவள் அழைப்பினால் மேம்பட்டது. விக்கி நின்ற அவளை,

“என்ன வராக்கா என்ன நடந்தது....” கீதா பேசினாள்.

“ஏன் பிள்ளைகளை நீங்கள் ஸ்கூலுக்கு அனுப்பல்ல....” வரதேவி கேள்விக்கு

“அது...அது... பிறகு கதைப்பமே. இப்போ... ஆறுதலா இருங்க வீட்ட வாறன்” கீதா மழுப்பினாள்.

“இல்ல...இல்ல...இப்ப சொல்லுங்கள்... என்னால அது வரைக்கும் காத்திட்டு இருக்க முடியாது. எல்லோரும் சேர்ந்து முடிவெடுத்துவிட்டீர்கள் தானே... என்னை எல்லோரும் முட்டாளாக்கி விட்டீர்கள் தானே. எத்தனை மணித்தியாலங்கள் ஸ்கூலில காத்திட்டிருந்தேன். ஒரு வார்த்தை உங்களுக்குச் சொல்ல முடியாது போய் விட்டது அல்லவா.... என்னோட உழைப்பெல்லாம் வீணாப் போயிற்று.

எல்லாமே பொய்யா? சொல்லுங்க கீதா… எல்லாமே…. பொய்யா? பொதுத் தொண்டு என்று பணம் வாங்கித் தமது வங்கிகளையும் நிரப்பித் தாமும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமுதாயத்தின் மத்தியில் எதையுமே எதிர்பார்க்காமல் உங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தை மட்டும் நினைத்து உங்களிடமிருந்தெல்லாம் எதையுமே எதிர்பார்க்காமல் செயல்பட்ட எனக்கு எல்லோருமாகச் சேர்ந்து நல்ல பாடம் படிப்பித்து இருக்கின்றீர்கள்"

"இல்லக்கா…. வந்து உங்களோட கதைப்பம் என்டுதான் இருந்தேன்….."

"அப்படி என்ன நடந்தது…..?

"உங்களுக்குத் தெரியாமல் இல்லை அக்கா! எங்கள் நாட்டில் நாம் இருக்கும்போது எதைக் கதைப்பதென்றாலும் பயந்து ஒடுங்கியே கதைப்போம். மாற்றாக எதையாவது கதைத்து விட்டால், எமது பிணம் தான் மிஞ்சும். இப்படியான நிலையிலிருந்து விடுபட்டே இங்கு வந்தோம். ஆனால், இங்காவது நிம்மதியாக இருக்க முடிகின்றதா…. இவர்களை எதிர்த்து வாழ முடியாது. அதனால், ஒதுங்கிவிட்டோம். எல்லோருக்கும் பயந்து பயந்தே தமிழன் வாழ்வு கழிகிறது. உங்களுக்குத் தெரியாமல் இல்லை அக்கா…

எல்லோருக்கும் உங்களைப் பிடிக்கும். உங்கள் முகத்திற்கு முன்னே எப்படி இது பற்றிக் கதைப்பது என்று தான் எல்லோரும் மெல்ல ஒதுங்கி விட்டோம். ஆனால் அக்கா! என்ர பிள்ளைகள் உங்கள் வீட்டிற்கு வந்தாவது உங்களிடம் தான் தமிழ் படிப்பார்கள். எல்லாவற்றையும் உங்களிடம் கதைப்போம் என்று தான் இருந்தனான்"

"புரிகிறது புரிகிறது. நல்லவனுக்குக் காலம் இல்லை. எல்லாத்துக்கும் ஒரு காலம் வரும். நல்லதே நினைத்தேன், செய்தேன். அது இந்த உலகத்துக்குப் பிடிக்கல்ல. எல்லாப் பெருமையும் தமக்கே சேரவேண்டும் என்று நினைப்பவர்கள் ஒரு நாள் இடந்தெரியாமல் போவார்கள். இது தான் நிச்சயம். சரித்திரம். என் ஆத்மா இந்தப் பள்ளிக்கூடம். இதைத் தட்டிப்பறித்து விட்டார்கள். இந்த ஆத்மா இல்லாத உடம்போடு எப்படி வாழப்போகிறேன். என்று எனக்குப் புரியல்ல....சரி கீதா நான் வைக்கிறன்"

"சரி அக்கா பொறுமையா இருங்கள். பார்ப்போம்.... கரன் அண்ணா வரட்டும். நான் பிள்ளையை வீட்ட கூட்டிக் கொண்டு வருகிறேன்"

கரன் வருவது தான் கேள்விக் குறியாகி விட்டதே. மனதைச் சாந்திப்படுத்தினாள். உடலுக்கு

உற்சாகமூட்ட கோப்பி ஒன்றைப் போடுவதற்கு ஆயத்தமானாள். நீர் கொதிக்கும் ஓசையுடன் தொலைபேசியும் சேர்ந்தே அலறியது. கையிலெடுத்த தொலைபேசியைக் காதுக்கும் தோளுக்கும் இடையில்புதைத்தாள்.

“ஹலோ….”

“நான் எசன் ஸ்ரட்டிலிருந்து ரகு கதைக்கிறன். உங்களுடைய ஹஸ்பன்டிட நண்பன் தான் கதைக்கிறன். கரன் வந்திட்டாரே?

“அவர் ஊருக்குப் போற விசயத்தை உங்களிட்ட சொல்லிட்டா போனவர்? என்று வினவினாள் வரதேவி.

“ஓம் எனக்குத் தெரியும். என்ர விசயம் ஒன்றும் பார்க்கத்தான் போனவர். என்ர தங்கச்சிய இங்க கூட்டிவரப் போனவர்”

ஆஹா…. அப்படியா விசயம். எல்லாருக்கும் ஏன் போனார் என்ற விசயம் தெரிஞ்சிருக்கு. எனக்குத் தான் தெரியல்ல என்று மனதுள் அசை போட்டாள்.

“உங்களிட்ட என்ர விசயம் பற்றி ஏதாவது கதைத்தாரா? எந்தத் தகவலும் இல்லை. அதுதான் கேட்பதற்காக எடுத்தேன்“ என்று ரகு விபரம் கேட்டான்.

## என்னையே நானறியேன்

"இஞ்சப் பாருங்கோ. அவரோடு நீங்கள் வைத்துக் கொண்ட விசயங்களை அவரோடயே பாருங்கள். எனக்கு எதுவும் சொல்வதில்லை. எனக்கு இவை பற்றி எதுவுமே தெரியாது. தயவுசெய்து என்னை எதுவும் கேட்க வேண்டாம். பிளீஸ்....." மறுபக்க மறுமொழி கேட்க மனமின்றி ரிசீவரை அடித்து வைத்தாள். தொலைபேசி அலறினால், பாம்பைத் தூக்குவது போலல்லவா தூக்க வேண்டியுள்ளது.

ரகுவும் "என்ன இந்த மனிசிக்கு விசரே... கதைக்க முதல் ரெலிபோனைக் கட் பண்ணுது. யாராவது தன்ர மனிசிக்கு ஒரு கதையும் சொல்லாமலே இருப்பார்கள். இது ஒரு பொல்லாத கேஸ் போல இருக்கு" என்று மனதுக்குள் முணுமுணுத்தான்.

வரதவியும் தெரியாது என்று நான் சொன்னால், யார் நம்பப் போகின்றார்கள். மனைவியிடம் மறைத்துக் கணவன்மார்கள் செய்கின்ற விடயங்கள் இப்படித் தான் ஒருநாள் புகைந்து புகைந்து நெருப்பாகும். கடைசியில் முழிபிதுங்கி வெட்கப்படுவது நாம் தான். சீச்சீ இது என்ன வாழ்க்கை. எல்லாவற்றையும் மூடி மறைத்து. நாடகம் தான் என்னிடம் போட்டாரா! பனிமூடிய அழுக்காக வாழ்வை மூடி வெள்ளை மனம் கொண்டவராக

வாழ்ந்தாரா? என்ன நாடகம் நடக்கிறது. சுமையான வாழ்வு என்று இதைத்தான் சொல்வார்களா? என் வாழ்வில் சுமைகள் அல்லவா சொல்லிக் கொள்ளாமல் வந்து அமர்ந்துவிட்டன. இவர் எல்லாம் செய்து தருவேனென்று கூறி எதையுமே செய்து முடிக்காத மனிதனா? அல்லது கெட்ட நேரம் எதையும் செய்ய விடாது தடுக்கின்றதோ. இல்லை..... இல்லை.... என்ன கெட்ட நேரம்? இவருடைய மூளை எங்கே போகிறது? முடியாது என்னும் விடயத்தில் கை வைக்க முடிவெடுக்கக் கூடாது அல்லவா... என்னால் எதையும் செய்து முடிக்க முடியும் என்று காட்டிக் கொள்வதற்காகவோ இப்படி படுகுழியில் விழுகின்றார். இல்லை ஆசை கூடிவிட்டதோ! அடுத்தடுத்துச் சிந்தனைகள் வரதேவி மூளையில் அலைமோதின.

# Part 10

அவள் தேடலறிவின் பார்வை, ஆணிவேராய் நம்பியிருந்த தன் குடும்பத்தலைவன் குணங்களின் குழறுபடியில் நோட்டம் கண்டது.கரன் நல்லவனா? கெட்டவனா? மீண்டும் மீண்டும் இதே கேள்வி மனதுள் கேட்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதிகூடிய திறமையும், தன்னம்பிக்கையும், ஆசையும் சரியான முறையில் கையாளப்படவில்லையானால், ஒரு மனிதனை எந்தளவிற்குக் கொண்டு செல்லும் என்பதற்கு எடுத்துக்காட்டே கரன். போலி கடவைச்சீட்டுக்கள் தயாரித்தல், வெளிநாடுகளுக்கு மக்களைச் சட்டரீதியற்ற முறையில் தாயகத்திலிருந்து கொண்டுவருதல், பணமாற்றீடு செய்தல், இவ்வாறு இன்னோரன்ன காரியங்களில் அவன் கவனம் கலந்து கொண்டது.

தூண்டியவரை எரிக்கும் மனத்தீ
துயருறவைக்கும் வாழ்வைத் தீக்கிரையாக்கும்
சொல்லும் செயலும் தடுமாறிய வாழ்வை
நல்லவர்கள் கொள்வதில்லை.

இதனால், சிறிய அறையினுள் சிறைக் கம்பிகளுக்கூடாக உலகைப் பார்க்கும் கட்டளை கரனுக்குத் தாயகத்து நீதித்துறையினரால்

வழங்கப்பட்டது. என்னும் உண்மை உறவினர்கள் மூலம் அறிந்துகொண்டாள். மனம்வெந்து தனியளாய்ப் புலம்பினாள். தன் உயிரும் உணர்வும் விரும்பாத உழைப்பு நோக்கிச் சென்ற கணவன் தொழிற்பாடுகள் கேட்டு இரத்தம் அவளுக்கு உள்ளிருந்து கொதித்தது.

அவசர அவசரமாகத் தன் கடவைச்சீட்டை வீடு முழுவதும் ஆராய்ந்து தேடி சோர்ந்து போனாள் வரதேவி. அப்போது தான்அவள் மூளைக்குள் அகப்பட்டது கரன், தாயகம் நோக்கிச் சென்ற திடீர்ப் பயணம். வரதேவி கடவைச் சீட்டில் யாரோ ஒரு பெண்ணை வாழுகின்ற நாட்டிற்குள் சட்டரீதியற்ற முறையில் அரசுக்குக் கண்ணைக் கட்டி வரவழைத்து வருவதற்காகத் தாயகம் நோக்கிப் பறந்த மாயம் புலப்பட்டது. வாழ்வதற்கு வாழும் நாடுஅங்கீகாரம் வழங்கிவிட்டால் அந்நாட்டின் புலனாய்வுத்துறைக்கு வேலை கொடுத்து ஏமாற்றத் தொடங்கி விடுவார்கள் நன்றி மறந்தவர்கள். சட்டதிட்டங்களுக்குள் அடங்கி வாழ மாட்டாத மனிதன் சமூகத் துரோகி அல்லவா! தவறுகள் தண்டிக்கப்படல் தர்மம் அல்லவா! நரம்பில்லாத நாவாலும், மனமறியவொண்ணா பிறப்பாலும், பொய்யையும் மெய்யாக்கி வாழும் நாட்டில் பிடுங்க வேண்டியவற்றைப் பிடுங்கி

எடுப்பவர்கள் ஆயிரம். இல்லறத்தில் இருந்தபடியே, இல்லை இப்போ இல்லறம்.இல்லறத்தான் இப்போ இல்லில் இல்லை. என் இதயத்திலும் இல்லை, என்று சொல்லால் சொந்தக்கதை மறைத்துச் சுரண்டி வாழ்பவர்களும் உண்டு. ஜேர்மனியர் எம்நாட்டைச் சுரண்டி வாழ்ந்ததாகச் சரித்திரம் சொல்லவில்லையே, இப்படியிருக்கும் போது நாம் மட்டும் ஏன் தஞ்சம் தந்தவரை வஞ்சிப்பது.

ஆனால் வரதேவியோ உண்மையை மறைக்காது வாழ வழியின்றி ஆதரவு தேடி அரசாங்கத்திடம் தஞ்சம் அடைந்தாள். அவர்கள் உதவியே எதிர்காலம் என்று முடிவெடுத்தாள். கைப்பணம் தீர வங்கிக்கணக்கைப் பார்வையிட வங்கிக்கு வழி எடுத்தாள். அங்கு சென்று தன் கையிலிருந்த வங்கி அட்டையைப் போட்டாள். சமூகப்பாதுகாப்பு அலுவலகத்திடமிருந்து தனக்கும் மகனுக்கும் சேர்த்து மொத்தமாக மாதச் செலவுக்காக 687 ஒயிரோக்கள் வங்கிக் கணக்கிற்கு போடப்பட்டிருக்கின்றது. வாடகை உட்பட மற்றைய செலவுகளை அவர்கள் பொறுப்பெடுத்து உணவு, உடை மற்றைய செலவுகளுக்கு மாத்திரம் அவர்கள் வழங்கியிருக்கும் தொகை அவளுக்குப் போதுமானதாகவே பட்டது.

நெஞ்சுகுளிர்ந்தது. நிலைகெட்ட மாந்தர் வாழ்ந்தால், அதற்கெதிராக உதவிடும் மாமனிதர்களும் வாழ்வார்கள். தன் துயர் அவள் எடுத்துச் சொல்ல அது தம் துயராய்க் கருதி வாழ்வாதாரப் பணத்தை வழங்கிய நாட்டைத் துதித்தாள். பணத்தைப் பெற்றாள். இங்கு என்னாலும் வாழமுடியும் என்று துணிவை ஏற்படுத்திக்கொண்டாள். என்ன பிரச்சினையென்றாலும் ஓடிச் சென்று தாயிடம் உரைப்பது போல் இவ்அலுவலகம் சென்று கூறினால், பொங்கிப் பெருகும் பிரச்சினையையும் அடங்கிக்கொள்ளும் நீர்க்குமிழ் போல் ஆக்கிவிடுவார்கள் என்னும் தைரியம் அவளுக்கு ஏற்பட்டது

---

வரதேவி மனம் ஆற சற்று வெளியே நடந்து வந்தாள். மீண்டும் நிம்மதியுடன் வீடு திரும்பினாள். வீடு திரும்பும் வழியில் உணவுப் பண்டங்களை வாங்கிச் சுமந்து வந்தாள். உடலயர்ச்சி போக்கமெத்தையிலே பொத்தென்று விழுந்தான். மனம் முழுவதும் சொல்லவொண்ணாத் துயரம். உடலெல்லாம் அயர்ச்சி. சோர்ந்திருந்த மூளை ஓய்வுகாணத் துடித்தது. கண்

இமைகள் அவளை அறியாமலே கீழ்நோக்கிச் சாய்ந்தன.

கண்விழித்துப்பார்த்தால் நேரமோ 6.30 ஐக் காட்டியது. துடித்து எழுந்தாள். மகனை அழைத்து வரவேண்டுமே. அவசர அவசரமாக பாதணிக்குள் கால்களைப் புகுத்தினாள். நடை ஓட்டம் கண்டது. ஆறு மணிக்கு வருவதாகச் சொல்லியிருந்தேனே. வரனுடன் படிக்கும் மத்தியாஸ் வீட்டில் விளையாடுவதற்காக வரனை விட்டிருந்தாள். சொன்ன நேரம் போகவில்லையானால், மரியாதை குறைந்துவிடுமே. ஓடிச் சென்று அழைப்பு மணியை அழுத்தினாள்.

மத்தியாஸ் தாய் கதவைத் திறந்தாள். இவள் ஜேர்மனியப் பெண். அன்பே உருவானவள். பிள்ளைகள் சுதந்திரத்திற்கு எந்தவித தடையும் கூறாள். மகனின் மனம் மகிழ்ச்சிப்படக் கேட்பதெல்லாம் செய்து கொடுப்பாள். பொதுவாக ஜேர்மனியப் பெற்றோர்கள் தங்களுடைய அபிலாசைகளைப் பிள்ளைகள் மேல் திணிப்பதில்லை. அவர்கள் மனமகிழ்ச்சியில் அக்கறை கொள்வார்கள். அதனாலேயே பிள்ளைகள் எதிர்கால வாழ்க்கை நோய் நொடியின்றி பிரகாசமாய்த் தோன்றும் என்று கருதுவார்கள். இதனால்த் தானோ என்னவோ நீண்ட

காலங்கள் ஆயுள் அவர்களிடம் நிலைத்திருக்கின்றது. அதிகூடிய சுதந்திரம் கொடுக்கும் பிள்ளைகள் கெட்டுப் போவதும் உண்டு. ஆனால், எதற்கும்ஒரு வரன்முறை வைத்திருப்பார்கள். பிள்ளைகள் சுயமாகத் தொழிற்படுவதற்கு சிறுவயதிலிருந்தே பழக்கி விடுவார்கள். இதனால் பெற்றோருக்கும் சுமையில்லை. பிள்ளைகளும் பெற்றோர் துணையின்றி தனித்து வாழும் தைரியத்தைப் பெற்றுவிடுவார்கள். குறிப்பிட்ட வயதில் காதலில் பிள்ளகைள் விழவில்லையானால், முதலில் கலங்குவது பெற்றோரே. அவ்வயதில் ஏற்படும் உடல் உள்தொழிற்பாட்டிற்கு ஏற்பத் தன் பிள்ளை இல்லையே! எனக் கணிப்பிடுவார்கள். அவ்வக் காலமகிழ்ச்சியைப் பெற்றுவிடாமல்ப் போனதேயென மனதால் வேதனைப்படுவார்கள். பிள்ளைக்கு அறிவுரை கூறி, அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பார்கள். பிள்ளை காதலில் விழுந்துவிட்டால், நண்பர்கள் உறவினர்களிடம் அதைக் கூறி சந்தோஷத்தை அனுபவிப்பார்கள். தமிழர்களோ பிள்ளைகளின் கல்வி தொடக்கம் திருமணம் வரை தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று கருதுவார்கள். அதுவே பிள்ளைகள் எதிர்காலம்

**சிறப்பாய் அமைய வழிவகுக்கும்என்று நம்புகின்றார்கள். சிறுவயதிலிருந்து சுயமாய் வாழ வழிவகை செய்யாது. எதற்கும் தம்மையே பிள்ளை நாடி வரவேண்டும் என்று கருதி உடைகள் வாங்குவதிலிருந்து பிள்ளைகளின் சிறுசிறு வேலைகளைக் கூட பெற்றோர்கள் செய்வதனால், பிள்ளைகள் தனக்கென ஒரு துணையைக் கூட சரிவரத் தெரிவு செய்யாது எனக் கருதுகின்றார்கள். எனவே தமிழ்ப் பெற்றோர்கள் தாமே பிள்ளைகளின் எதிர்காலத் துணையையும் தெரிவுசெய்து கொடுக்கின்றார்கள். அளவுக்கு மீறிய பாசம் எனக் காட்டி அவசியமில்லாத வாழ்க்கை நுழைப்புகளைச் செய்வதனால், பிள்ளைகளின் பாசத்தை இழந்த பெற்றோர்களாக ஆகிவிடுகின்றனர்.**

**மத்தியாஸ் தாய் வரனுடன் அன்பாய் இருப்பாள். சில வேளைகளில் வரதேவிக்கு முடியாது போனால், வரனை கின்டகார்டினிலிருந்து அழைத்து வருபவளும் அவளே. வரதேவியைக் கண்டவுடன் தன்னுடைய வலது கையை வரதேவியினுடைய வலது கையினுள் சேர்த்தணைத்துக் குலுக்கினாள். தன்னுடைய உள்ளத்தைக் கைகள் மூலம் வரதேவி கைகளுக்குள் புதைத்தாள்.**

# என்னையே நானறியேன்

“இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் நேரத்தில் நானே வீட்டிற்குக் கொண்டுவந்து விடுகிறேன்” என்று கூறி செவ்வாய்க்கிழமை புதிய பாடசாலைக்கு வரன் செல்லவிருக்கும் செய்தி பற்றியும் கேட்டாள். தனக்குத் தெரிந்த ஜேர்மனியச் சொற்களுடன் மத்தியாஸ் தாய்க்குப் புரியும் வகையில் முதல் வகுப்பை வரன் தொடங்க இருக்கும் செய்தியையும் அவனுக்குக் கிடைத்திருக்கும் பாடசாலையையும் கூறினாள். அவளிடம் இருந்து விடைபெற்றவரதேவி வீட்டிற்கு வந்தாள்.



வந்ததும் முதல் வேலையாக முதல் நாள் பாடசாலைப் பைக்குள் (Schultüte) அவனுக்காக வாங்கி வைத்திருந்த பொருள்களைப் போட்டாள். மூடிக்கட்டினாள். முதல்நாள் பாடசாலைக்கு அடி எடுத்து வைக்கும் பிள்ளைகளுக்கு இதை வாங்கி அவர்களுக்குத்

தெரியாமலே சில பரிசுப் பொருள்களைஅதனுள் போட்டு வைப்பது வழக்கம். பாடசாலை சென்று வீடு வந்ததும் பிள்ளைகள் முதல் வேலையாக இதைத்தான் திறந்து பார்ப்பார்கள். அதனுள் நிச்சயம் இனிப்பு இருக்கும். அவ்வாறே வரதேவியும் வரனுக்காக வாங்கிய இனிப்புக்களையும் பென்சில், சிறிய பாரம் குறைந்த விளையாட்டுப் பொருள்களும் போட்டு அவன் தூக்கக்கூடிய பாரத்திற்கேற்ப மூடிக் கட்டினாள்.

வீட்டிற்கு வந்த வரன் அதைத் தூக்கிக் கொண்டு மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்து மேலே உயர்த்தி ஆடினான். பாடசாலை செல்வதை விட அதற்குள் என்ன இருக்கின்றது என்று அறியும் ஆவலே அவனுக்கு அதிகமிருந்தது.

பாடசாலை முதல் நாள் ஒவ்வொரு மனிதனும் அரிச்சுவடு தொடங்கும் கோயில். கல்வி என்னும் கடவுள் அருள் தரும்ஆலயம். வாழ்வின் வெளிச்சத்திற்கு அடிகோலும் வசந்தவாசல். இதனுள் நுழைந்து சரியான முறையில் வாழ்வைப் பிரகாசமாக்குவோரும் உண்டு. விளையாட்டாக விரும்பியபடி நடந்து வாழ்வைத் தொலைப்பவர்களும் உண்டு. வாழ்க்கை வாழ்வது அவரவர் கைகளிலும்

இருக்கிறது. சந்தர்ப்பம் சூழ்நிலைகளிலும் அதற்குத் துணைப்போகின்றன.

இன்றையநாள் வரனின் பாடசாலை முதல்நாள். தாயும் தனயனும் பாடசாலை வாசல் வந்தடைந்தனர். சின்னச் சின்ன சிட்டுக்களாய் கைகளில் தாங்கிய பாடசாலை ரியூற்றவுடன் (Schultüte) பெற்றோர் சகிதம் நிறைந்திருந்த மென்னெஞ்சங்களிடையே வரதேவியும் வரனும் நின்றிருந்தனர். பாடசாலை, வகுப்பாசிரியர், வகுப்பறை, பாடசாலைச் சூழல் அனைத்தும் முன்னமே ஒருநாள் பெற்றோர்கள் பிள்ளைகளை வரவழைத்து அறிமுகப்படுத்தப்பட்டாயிற்று. அதனால், பாடசாலை முன் மைதானத்திலேயே பெற்றோர்கள் தங்கிவிட வேண்டியது அவசியமாயிற்று. அவ்வவ் வகுப்பாசிரியர் பாடசாலை மணி அடிக்க முன் மைதானம் நோக்கி வருவார்கள். தமது வகுப்பறைச் சிட்டுக்களை அழைத்துக் கெண்டு செல்வார்கள். அவர்களைக் கண்டவுடன் பெற்றோர் தம் பிள்ளைகளை அனுப்பி வைப்பார்கள். அவ்வாறே வரனும் தனது பாடசாலைத் தாயிடம் சரணடைந்தான். பிள்ளைகள் இடமிருந்து மறைய, பெற்றோர்களும் தலைமறவாகிவிடுவார்கள். வழமையாக நடப்பது இதுவே.

## என்னையே நானறியேன்

இன்று முதல் நாள் என்பதனால், பிள்ளைகளிடம் அச்சம் இருந்தது. ஆனால், அடுத்தநாள் ஆசிரியரைக் கண்டால் போதும் மாணவர்கள் துள்ளிக்குதித்து ஓடுவார்கள். அவரின் கைகளைப்பிடிப்பதற்குத் துடிப்பார்கள். அவரை நகரவெண்ணா வண்ணம் பசுவைச் சூழ்ந்தகன்றுகளாய் சுற்றிக் கொள்வார்கள். அனைவரையும் அணைத்தபடி ஆசிரியர் செல்லும்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகவே காணப்படும். உண்மையில் அடிப்படைப் பாடசாலை (Grundschule) ஆசிரியர்கள் மாணவர்களை அனைக்கும் பாங்கும் அவர்களிடையே ஏற்படும் பந்தமும் அற்புதமென்றே கூறவேண்டும். அடிப்படை மட்டுமன்றி மற்றைய பாடசாலை ஆசிரியர்கள் கூட மாணவர்களை அணைக்கும் பாங்கு தனித்துவமானது. இங்கு மாணவர்கள் ஆசிரியர்களுக்கு பட்டப்பெயர்கள் வைப்பதேயில்லை. ஏன் வைக்கவேண்டும்? அவர்கள்தான் பிள்ளைகள் எதிர்ப்பைச் சம்பாதிப்பதேயில்லையே.

வரன் அடிப்படைப் பாடசாலை வரதேவி மனதுக்குத் திருப்தியைத் தந்தது. மகனை பாடசாலையில் விட்டுவீடு வந்து, வீட்டுவேலை செய்து, திரும்பவும் அழைத்து வந்து, உணவளித்து,

விளையாட அழைத்துச் சென்று என்று அவள் வாழ்வு தொடர்ந்தது. கரன்நினைவலைகளும், அவர் பற்றி மற்றையோர் கூறும் குற்றப்பத்திரிகைகளும், தன் ஆத்மார்த்தமான தொழில் பறிபோன கசப்பான உணர்வுகளும் அடிக்கடி வரதேவி மனவலைகளை கலக்கிக் கொண்டே இருந்தன. சில வேளைகளில் உடல் களைத்து, உளம் நொந்து தன்னை மறந்து கண் அயர்ந்துவிடுவாள். கண் மூடிய மாயம் உணராது, பின் துடித்தெழுவாள்.

# part11

அன்றைய நாள் உச்சிச் சூரியன் ஜேர்மனி மண்ணுடன் மனமகிழ்ந்து உறவாடிய நாள். சிறுவர்கள் விருப்பம் போல் வீட்டை மறந்து நேரம் மறந்து விளையாடிய நாள். மகனுடன் மைதானக் கதிரையில் அமர்ந்திருந்தாள் வரதேவி. மனதினுள் இனம்புரியாத ஏக்கம் ஒன்று ஏற்பட்டது. திடீரென தோன்றிய உணர்வுக்கு அன்பாய் அணைத்து கைகளால் முதுகைத் தடவி கைகளை இறுகப்பற்றி ஆதரவான வார்த்தைகளை யாரோ பேசவேண்டும் என்று உள்ளம் ஏங்கியது. ஏன்? ஏன்? இப்படி ஒரு உணர்வு. அவளை அவளுக்கே புரியவில்லை. மனநோய் என்பது இதுதானா? உடல்நோய்க்கு மருந்துண்டு. மனநோய்க்கு மருந்தென்ன? பிள்ளைச் சிரிப்பில் உடல் உளநோய் மறந்திருந்தாலும் பிள்ளைச் சிணுங்கல் தொல்லையாய்த் தோன்றும். இச்சமயம் பிள்ளையையே வெறுக்கும் மனநிலையும் தோன்றும். “வீட்டிற்குப் போவோம்” என்பாள். வரன் “இன்னும் கொஞ்சம் நிற்போம்“ என்பான். தன்னால் முடியவில்லை என்றாள். அவன் “வரமாட்டேன்… நான்…“ என்று அடம்பிடித்தான். பிள்ளையை தனியே விட்டும் போகவும் முடியாது. விளையாடும் வரை

பொறுத்து இருக்கவும் முடியாது. ஆத்திரத்தில் அடிக்கவும் முடியாது. காண்பவர்கள் பிள்ளையைத் துன்புறுத்துகிறாள் என்று காவல்துறையினருக்கு அழைப்பு விடுத்து விடுவார்கள். அதன் காரணத்தால் பிள்ளையைப் பிள்ளைகள் பராமரிப்பு நிலையத்திற்கு அனுப்பி விடுவார்கள். இந்த பயங்கர விபரீதம் நடக்க விடவும் முடியாத நிலை. தன் மனதைத் திருப்திப்படுத்த முடியாது. மகனைத் திருப்திப்படுத்தி அமர்ந்திருந்தாள். விளையாடிக் களைத்த வரன். இப்போது தண்ணீர் தேடித் தாயை அணுகினான். "நாளைக்குப் பள்ளிக்கூடம் போக வேண்டும். குளித்துச் சாப்பிட்டுப் படுக்க நேரம் போயிடும். வா… வீட்ட போவம்" என்று அழைத்துக் கொண்டு வீட்டிற்குப் போனாள்.

சூரியனோ இன்று அளவுக்கதிகமாக பூமாதேவியுடன் கொஞ்சி விளையாடினான். வரன் கண் உறக்கம் காண்பதற்கு சூரியன் களைக்க வேண்டுமே! தன் வீடு திரும்ப வேண்டுமே! ஆனாலும் கடமைகளை விட்டுவிட முடியுமா. வீடு திரும்பியவுடன் வரனைச் சுத்தமாக்கி, வாயுணவூட்டி, திரைச்சீலை போட்டு அறையை இருட்டாக்கி, உறங்க வைத்தாள். அருகே அமர்ந்து பாடல் பாடும்படி வற்புறுத்தினான்.

## என்னையே நானறியேன்

அவனுக்காய் பிள்ளைப் பாடல் பாடி உறங்கவைத்தாள். வரன் உறங்க, உறக்கம் வராத தன் கண்களுக்கு தொலைக்காட்சியை மருந்தாக்கினாள். கண்களே பார்த்தன. மனமோ அலைந்தது. அவ்வேளை சூரியனும்களைத்து மறைந்தான்.

வரதேவி தூக்கம் விரும்பாக் கண்களுக்குச் சூழலைக் காட்டித் தூங்கவைக்க படுக்கையறையுள்ளே நுழைந்தாள். திரைச்சீலையை விலக்கினாள். படுக்கையில் இருந்தபடி வானத்தை விறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். இருண்டு கிடந்த வானத்தில் பூரணை நிலவு பரிபூரணமாகக் காணப்பட்டது. பார்த்துக் கொண்டிருக்கும் போது அவ்வானத்து நிலவானது சாளரம் நோக்கி மெல்ல மெல்ல அண்மித்தது. கண்ணை மேலும் விழித்துப் பார்த்தாள். அறையினுள் நுழைந்துவிடத் துடிக்கும் நிலாவைக் கண்கள் மொய்த்துக் கொண்டன. சிறிது நேரம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்திருப்பாள், மண்டைக்குள் மின்சாரம் வெடிப்பது போன்ற ஒரு சத்தம். உடலின் தலைமையகத்தை மேலே மேலே உயர்த்தி உயர்த்திப் பார்த்தாள். முடியவில்லை. ஓவென்று அலறினாள். என்ன ஆனதென அவளுக்கே அறியாதவளாய் அன்றைய இருள் அகன்றதே

தெரியாது உறங்கிவிட்டாள். எண்ண அலைகளைத் தன்னகத்தே கொண்ட நினைவுச் சமுத்திரமாகிய சிரசின் உள்ளே ஒரு சங்காரமே அன்று நடந்தேறியது. உண்ட உணவின் ஒவ்வாமையோ தெரியவில்லை. காலைப்பொழுது வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது. மனதைக் கட்டுப்படுத்தினாள். அவளையும் மீறிப் பீறிட்டு வந்த வாந்தியைக் குளியலறைத் தொட்டியினுள் கொட்டிவிட்டாள். அதிர்ச்சியில் திறந்த வாயை அடைக்கமுடியவில்லை. தொடர்ச்சியாக வந்த இரத்தவாந்தி தொட்டியை நிரப்பிக் கொண்டிருந்தது. இரத்தத்தைக் காண்டாள். அதிர்ந்துவிட்டாள். “எனக்கு என்ன நடந்தது. கடவுளே! எனக்குப் பயமா இருக்கு. இப்போது நான் என்ன செய்வது. எனக்குக் கசம் வந்து விட்டதா? இது வரை இருமலே எனக்கு இருக்க வில்லையே! காய்ச்சல் கூட இல்லையே. ஆண்டவனே....” என்று பலமாகக் கத்தினாள். அந்தச் சின்னவனோ தாயுடன் இணைந்து அழுவதைத் தவிர எதைத்தான் செய்வான். தாயின் அருகே ஓடிவந்து பார்த்தான். வரனைப் பாடசாலை அழைத்துக் கொண்டு போக முடியாதவளாய் முழித்தாள். வரனோ ஓரிடத்தில் ஒதுங்கினான்.

## என்னையே நானறியேன்

ஐரோப்பிய நாடு சுகமானதே. அதுவே துணையின்றி வாழ்வார்க்கு மிகப் பயமானது. திடீரென துணைக்கு யாரையும் அழைக்க முடியாது. அவரவர் தத்தமது வேலைப் பழுவில் விடிந்ததும் விடியாததுமாக பற்பல நியமனங்களைக் கொண்டிருப்பார்கள். அவர்களைக் கேட்பது முறையல்ல. எதற்கும் முதல் நாள் கேட்கும்போது முடியுமானவர்களைக் கண்டு கொள்ளலாம். ஆனால், நோய் சொல்லிக் கொண்டு வருவதில்லையே. இன்று உசாராக துள்ளிக்குதிப்பார், நாளை முனகிக் கொண்டு படுத்திப்பார். எதற்கும் மத்தியாஸின் தாயாருக்கு தொலைபேசி எடுத்தாள். மகனைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்லும்படிக் கேட்கலாம் என்று இருந்தாள். ஆனால், அழைப்பிற்குப் பதில் இல்லை. ஆமாம் அவர்கள் போயிருப்பார்கள். தாயின் கூச்சல் காரணமாக வரனுக்கு உடலோட்டம் கொடுக்கவில்லை. ஓரிடத்தில் மௌனமாக அமர்ந்திருந்தான். மகனின் நிலையைக் கண்டு மனம் இரங்கிய வரதேவி

“என்ன வரன் பயந்திட்டியா? அம்மாக்கு ஒன்றுமில்ல”

"அப்பிடியென்றா.... ஏன் நீங்கள் கத்தினீங்கள்? ஏக்கமான கண்களுடன் குளமாகிய கண்ணீருடன் வினவினான் வரன்.

வரன் இருந்ததை எள்ளளவும் நினைத்துப் பார்க்காது தான் அழுது புலம்பியது பிழை என்று மனதுக்குள் நினைத்த வரதேவி

"அது மகன்.... அம்மா நான் கொஞ்சம் பயந்திட்டன்"

"என்ன பயந்தனீங்கள்? மீண்டும் வினா.

பிள்ளைகளிடம் ஒரு கதையைச் சொல்லிச் சமாளிக்க முடியுமா! தமக்குத் திருப்திதராத விடையானால் துளைத்தெடுத்து விடுவார்கள். அவ்வாறே வரனும் துளைக்கத் தொடங்கினான்.

"இலேசா வயிற்றை வலித்தது. அதுதான் திடீரென்று வலிக்குதே என்று கத்தினேன்" ஏற்றுக்கொள்ள முடியாத விடையானாலும், சொன்னாள்.

"வரன்.....இன்றைக்கு நேரமும் போயிட்டு நாளைக்கு ஸ்கூலுக்குப் போவோம். இப்போது அம்மாவுடன் டொக்டரிட்டப் போவோமா...." என்று கேட்டாள். தாயின் கேள்விக்குதவ வரனும் தலையசைத்தான்.

வாழிடமொழி சரளமாகப் பேசத் தெரியாத நாட்டில் நோயென்றால், அதை விபரிப்பதற்குத் துணைதேட

வேண்டியது அவசியம் அல்லவா. தனக்குத் தெரிந்த ஒரு பிள்ளைக்கு தொலைபேசி அழைப்பை விட்டாள். “சுபா! நான் வரதேவி கதைக்கிறன். எனக்கு உடம்புக்கு முடியல்ல. டொக்டரிட்டப் போக வேண்டும். ஒருக்கா வருவீங்களா?

சாதகமான பதிலால் சந்தோசமடைந்த வரதேவி மகனுடன் எழுந்து பொது வைத்தியரை நாடிச் சென்றாள். இருவரும் பஸ்தரிப்பிடம் வந்தனர். ஜேர்மனியில் போக்குவரத்து சபையினர் எப்படித் தான் நேரத்தைக் கணிப்பிடுகின்றார்களோ! புரியவில்லை. குறிப்பிட்ட நேரம் டாண்...... என்று பஸ் தரிப்பிடம் வந்தடையும். குறிப்பிட்ட இடத்தை குறிப்பிட்ட நேரத்தில் சென்றடையும். காலடியில் வந்து கதவைத் திறந்துவிடும். உள்ளே நுழைந்தவுடன் வயதானவர்கள் அமர்வதற்கென ஆசுவாசமான இருக்கை. யாருமில்லையெனஅமர்ந்தால், வயதானவர்கள் வரும் பட்சத்தில் எழுந்து இடம் கொடுத்துவிட வேண்டும். நேருக்கு நேர் பார்த்துப் பேசிப் பயணம் செய்ய நேருக்கு நேர் போடப்பட்ட ஆசனங்கள். அதில் இருக்கத் தவிர்ப்போருக்குப் பார்வையாளர்கள் அமர்வது போன்ற ஆசனங்கள். ஆசனங்களின் கீழ் குளிர்வேளைக் குளிரைத் தவிர்க்க வெப்பமூட்டிகள்.

## என்னையே நானறியேன்

கோடை வெப்பத்தைத் தவிர்ப்பதற்கு பஸ் வண்டியின் கூரையில்திறந்து விடப்படும் சாளரங்கள். இருந்த இடத்திலிருந்து இறங்குவதற்காய் சைகைகாட்டும் அழுத்திகள். இறங்க வேண்டிய இடத்தைக்காட்டிக் கொண்டே இருக்கும்இடப்பெயர் அறிவிப்புக் காட்சிப்படம் (இது இடத்துக்கிடம் மாறிக்கொண்டே இருக்கும்) இறங்கவேண்டிய இடத்தை அறிவிப்பதற்கு அருகிலேயே அழுத்தி. கண் தெரியாதவர்களுக்கும் உலகத்தை மறந்து கற்பனையுலகில் சஞ்சரிப்பவர்களுக்கு ஊர் பெயரை அறிவிக்கும் அறிவிப்பொலி. குப்பைத்தொட்டி, குழந்தைகள் வண்டிதரித்து வைக்கும் இடம். இத்தனை சுகங்களுடன் பிரயாணம் செய்வோர் குறிப்பிட்டநேரம்; குறிப்பிட்ட இடத்தை அடைவர் என்பது நிச்சயம்.

இருவரும் காலடி வந்த பஸ்ஸில் ஏறினர். தரிப்பிடம் இறங்கினர். வைத்தியரை நாடினர். அப்பொயின்ட்மென்ட் வைக்கவில்லை. ஜேர்மனியிலே வைத்தியரிடம் நோயாளி செல்வதாக இருந்தால், முன்னதாகவே அதற்கான அநுமதி பெற்று குறிக்கப்பட்ட திகதியிலும் குறிக்கப்பட்ட நேரத்திலுமே செல்ல வேண்டும். வருடம் தவறாது குடும்ப வைத்தியர் உடற் பரிசோதனைகள் முழுவதுமாகச்

செய்வார். அங்கு வாழும் மக்கள்விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வைத்தியர் கடிதம் அனுப்பி வருடப் பரிசோதனைக்கு நாள் குறிப்பிடும்படிச் சொல்வார். இங்கு வரதேவி எவ்வித முன்னறிவித்தலும் இன்றி வைத்தியரை நாடி வந்த காரணத்தினால், வரவேற்பறையில் காத்திருந்தாள். அங்குள்ள தொலைக்காட்சியில் விபரணப்படம் ஒன்று ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தது. கவனத்தை அதில் செலவு செய்து கொண்டிருந்ததனால், நேரம் கழிவது உணரப்படவில்லை. இச்சமயம் சுபா வந்தடைந்தாள். சுபாவிடம் தனக்குக் காலையில் நடந்த சம்பவத்தை விளக்கினாள்.

காலதாமதமாகியே வைத்தியர் அவளை அழைத்தார். வைத்தியரிடம் சுபாவின் உதவியுடன் நடந்ததை வரதேவி விபரமாய்க் கூறினாள். இரத்தம் சிறுநீர் இரண்டும் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டது. முடிவு வந்தவுடன் அறிவிப்பதாகவும் கூறி அனுப்பினார். அவள் மனஅமைதிக்கான ஒரு குளிசையை வைத்தியர் கொடுத்திருந்தார். வீடு வந்தவுடன் வரன் தனது நண்பன் மயூரனுக்கு தொலைபேசி எடுத்தான். வரதேவி வெளியே போகமுடியாது என்று கூறிய காரணத்தாலேயே

வீட்டிலிருந்து விளையாடலாம் என்று தனது நண்பனை அழைத்தான்.

"வாறியா? சேர்ந்து விளையாடுவோம்"

"அப்பாட்டக்கேட்டிற்றுச் சொல்றன்"

திரும்பவும் மயூரன் அழைப்பு.

"சரி 4 மணிக்கு வாறன்"

மயூரன் வரப்போகின்றானென்று மகிழ்ச்சியில் காத்திருந்த வரனுக்கு 4 மணி வரை காத்திருப்பு நேரமானது. வரதேவிக்கு களைப்பாறும் நேரமானது. 4 மணியானது அழைப்பு மணியும் அழைத்தது. வரதேவியே கதவைத் திறந்தாள். அழகான ஒரு சிறு பையன் கையில் விளையாட்டுப் பொருளுடன் படி ஏறினான். உள்ளே வந்தவுடன் இருவரும் வரனுடைய அறைக்குச் சென்றார்கள்.

"யாருடன் வந்தனீங்கள் மயூரன்…? வரதேவி வினவினாள்.

"அப்பாவோட…………….."

"அப்பாட பெயர் என்ன?

"புனிதன் அன்ரி…"

"அப்படியா……?

"அம்மா வரல்லையா?

"அம்மா சாமிட்டப் போயிட்டா"

அதிர்ச்சியுடன் மீண்டும் நிதானமாக
“கோயிலுக்குப் போயிட்டாவா? என்று கேட்டாள்
“இல்லை அன்ரி. சாமிட்டப் போயிற்றா. திரும்ப வரமாட்டா என்று அப்பா சொன்னவர். ஆனா…. படத்துடன் அப்பாவும் நானும் கதைக்கிற நாங்கள். நான் குழப்படி செய்தால் அம்மாட படத்திற்கு முன்னுக்கு நின்று அப்பா அழுவார். அதால நான் குழப்படி செய்றதில்ல அன்ரி” என்று மயூரன் கள்ளங்கபடமில்லாது கூறிய வார்த்தைகளைக் கேட்ட வரதேவி திடீரென்று பிள்ளையை அணைத்தாள். மனம்வெந்தது. இந்தச் சின்ன வயதில் இப்படி ஒரு பிரிவா? கவலையை வெளிக்காட்டாது. அவனுடைய தலையைத் தடவியபடி
“இரவுக்கு என்ன சாப்பிட விருப்பம். அன்ரி செய்து தர்றன். சாப்பிட்டிற்று ஆறுதலாக வீட்ட போகலாம்”
“இல்லை அன்ரி….வீட்ட போய்ச் சாப்பிடுறன்”
“வீட்டதானே எப்போதும் அப்பா செய்து தரும்சாப்பாடு சாப்பிடுவீர்கள். இன்றைக்கு வரனோட சேர்ந்து சாப்பிடுங்கள். நான் சமைக்கிறேன். அப்பாக்கு ரெலிபோன் எடுத்து 7.30 போல் வந்து கூட்டிற்றுப் போகச் சொல்லுங்கள்” என்றாள்.

அவன் பதிலுக்குக் காத்திராமல் இடியப்பமும் இறால் சொதியும் இறைச்சிப் பிரட்டலும் செய்து அன்பாகப் பரிமாறினாள். தாயில்லாமல் தகப்பன் துணையுடன் மாத்திரம் வளருகின்ற மயூரனைப் பார்க்கும்போது அவள் மனம் வேதனைப்பட்டது. எப்படி இந்தச் சின்ன வயதில் இறந்திருப்பாள்…? என்ன வருத்தம் வந்து தொலைத்ததோ! என்று கேள்விமேல் கேள்வி தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள். அடிக்கடி "எத்தனை மணி? எத்தனை மணி…" என்று நேரத்தில் அவதானமாக இருந்த மயூரனைப் பார்க்கும் போது சொன்ன நேரத்திற்கு வீட்டிற்குப் போக வேண்டும் என்ற அவனின் துடிப்புப் புரிந்தது. தந்தையின் பாசமா? இல்லை பயமா? என்று வரதேவிக்குப் புரியவில்லை.

வாசல் அழைப்புமணி அலற ""அப்பா வந்திட்டார்…" என்று கத்தியபடி போவதற்கு ஆயத்தமான மயூரனிடம்

"பொறுங்கள்….அப்பா மேலே வரட்டும்" என்று கூறினாள்.

மேலேறி வந்த மயூரனின் தந்தை வாசற்படியில் நின்றவண்ணம்

"வணக்கம்" என்று வரதேவியிடம் சொல்லியபடி

"போவமா? மயூரன்" என்றான்.

## என்னையே நானறியேன்

"நீங்கள் இந்த ஸ்ரட்ற்குப் (city ) புதிதா? என்று கேட்டாள்.

"ஆம் இரண்டு கிழமைதான் வீடு மாறி வந்தோம். உங்கள் மகனுடன் தான் மயூரன் படிக்கிறார்"

"உள்ளுக்கு வந்து ஒரு ரீ குடிச்சிட்டுப் போங்களேன். மயூரனின் அம்மா பற்றிக் கேட்க வேணும் போல் இருந்தது...."என்றாள்

"சரி....." என்றவர் உள்ளே வந்து அமர்ந்தார். தேநீரை நீட்டிய படி

"பிள்ளை சொன்னது அம்மா சாமிட்டப்போயிட்டா என்று. கேட்கக் கஷ்டமா இருந்தது. என்ன நடந்தது. இறந்து நீண்ட நாள்கள்ஆயிட்டே.... ஏதாவது வருத்தமா இருந்தவவா?

"வருத்தமா! அப்படியென்றால்த் தான் மனம் ஆறியிருக்குமே. தற்கொலை அல்லவா செய்திட்டா. இறந்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. அதுதான் அந்த ஸ்ரட்டில(town) இருந்து இடம்மாறி வந்தோம். அங்க இருந்தா எனக்குப் பயித்தியமே பிடித்திடும். எனக்கு அவ மனைவியாக் கிடைச்சது நான் செய்த புண்ணியமே. அவவை நான் இழந்தது நான் செய்த பாவமே...."

"ஏன்? அப்படியென்ன நடந்தது....?

“ஒரு நாள் மயூரனுடன் வூல்வேர்த் என்ற கடைக்குப் போனவ. சாமான்களெல்லாம் வாங்கிட்டு காசு கட்டியபின் வீட்டிற்குத் திரும்ப வாசலுக்கு வந்தபோது வாசலில் இருந்த அலாரம் அடித்திருக்கிறது. அதனால், இவவைக் கொண்டுபோய் ரெஸ்ட் பண்ணியிருக்கிறார்கள். இவட அடுத்த பேர்க்கிற்குள்ள ஒரு விளையாட்டுச் சாமான் காசு கட்டாமல் இருந்திருக்கிறது. அதனால், அவவைப் பிடித்து வைத்துக்கொண்டு எனக்கு ரெலிபோன் அடித்தார்கள். நான் போய்த் தான் தண்டனைப் பணம் கட்டிக் கூட்டி வந்தேன். அது மயூரன் தான் இவக்குத் தெரியாமல் பைக்குள்ளே போட்டிருக்கிறான். பிள்ளைக்கு அம்மா காசு கட்டவேணும் என்ற விசயம் எல்லாம் தெரியாது. தான் களவெடுத்ததாக நினைத்து விட்டார்கள் என்று மனவருத்தத்துடன் ஒன்றுமே பேசாமல் வந்தவ, திடீரென்று வீட்டிற்கு வந்த உடனே பல்கணியில் இருந்து கீழே பாய்ந்திட்டா.அவட மன இறுக்கம் எனக்குத் தெரியல்ல. அநியாயமா ஒரு சின்ன விசயத்திற்கு வெட்கப்பட்டு எங்களையெல்லாம் விட்டிற்றுப் போயிற்றா.... இந்தச் சின்னப்பெடியன் செய்ததை அவர்களும் ஏற்றுக் கொள்ளல்ல. கடவுளும் ஏற்றுக் கொள்ளல்ல. அதுதான்

தண்டனையா அம்மாவை எடுத்துட்டார். எனக்கு உலகமே வெறுத்திட்டு. என்னசெய்வது ஒரு பிள்ளையைப் பெத்திட்டன். அவன் புத்திபிடிபட்டு வாழும் வரை நான் வாழ வேண்டும்“ என்று தன் மனைவியின் இறப்பின் வேதனையை விளக்கினார்.

“ஒரு நிமிட குற்றவுணர்வைக் கட்டுப்படுத்தியிருந்தால், அருமையான இந்த வாழ்வை இழந்திருக்க மாட்டா. இதெல்லாம் சொல்லி வருவதில்லை. சிலர் அப்படித்தான். ஒரு சிறிய அவமானத்தையும் தாங்க மாட்டார்கள். என்ன செய்வது ஒருவர் இழப்புடன் வாழ்க்கை முடிந்து போய்விடுவதில்லை. மனிதன் தொடர்ந்து வாழவேண்டியது அவசியமாகின்றது. இப்படிப்பல விடயங்கள் இங்கு நடந்திருக்கிறன. வாழவேண்டிய வயதிலே வாழ்க்கையை இழந்து உறவுகளைத் தவிக்க விட்டவர்கள் சம்பவம் இங்கு அநேகமாக நடைபெற்றிருக்கிறன. இப்படித்தான் இன்னும் ஒரு பெண் வேலைக்குப் போய்வரும் போது ஸ்னோவில் சறுக்கி விழுந்து கிடந்திருக்கின்றா. இரவு நேரம் வரும் வழியில் யாருமே காணவில்லை. உயிர் போய்விட்டது. பின்தான் அவ்வழியிலே போன மைத்துனர் கண்டு கணவனுக்கு அறிவித்து மற்ற விடயங்கள்

நடந்திருக்கின்றன. அவக்கும் ஒரேயொரு மகளேதான்.இப்படி ஏதோவெல்லாம் நடக்கிறது. நடப்பதற்குக் காரணம் சொல்லமுடியாது. கவலைப்படாதீங்கள். இனிமேல் நடப்பவை உங்களுக்கு நல்லவைகளாகவே அமையும் என்று நம்பிக்கை வையுங்கள். அடிக்கடி மயூரனை வரனுடன் விளையாடவிடுங்கள். அவருக்கும் பொழுதுபோகும். என்னால் இயன்ற உதவிகளை உங்கள் இருவருக்கும் செய்கிறேன்" என்று புனிதனை ஆறுதல்படுத்தினாள்.

வரதேவி கூறிய வார்த்தைகள் புனிதனுக்குத் தைரியத்தைக் கொடுத்தது. பின் தந்தையும் மைந்தனும் விடைபெற வரதேவி வரனைப் படுக்கைக்கு அழைத்துச் சென்றாள். இன்றைய பொழுது நடந்தவைகளை மீட்டிப் பார்த்தாள். எனக்கு ஏதாவது நடந்துவிட்டால், வரனின் நிலை என்ன? தந்தையும் இல்லாத நிலையில் பிள்ளை என்ன செய்வான். இதை நினைக்கும் போது வரதேவிக்குத் தூக்கமே வரவில்லை. இன்று எனக்கு என்ன நடந்தது. இரத்தவாந்தி எடுக்கும் அளவிற்கு என்ன நோயாக இருக்கும். நிச்சயமாக ஏதோ பிரச்சினை இருக்கிறது. அதற்கிடையில் வரனை யாருடைய கையிலாவது ஒப்படைக்க வேண்டுமே. எதற்கும் எடுத்த ரெஸ்ட்

முடிவுகள் வரட்டும் பார்ப்போம் என்று சிந்தித்தவண்ணம் தூங்கிவிட்டாள்.

கண் விழித்த போது தாங்க முடியாதபடி வயிற்றை வலித்தது. வரன் பிறந்த போது கூட இப்படி நோவை அநுபவிக்கவில்லை. எழுந்து குளியலறைக்கு ஓடிச் சென்றாள். உணவு செரித்து மலமாவது இயற்கை. அது மயிராவதன் மாயம்தான் என்ன? கத்தைகத்தையாய் உடல் வெளியேற்றிய மயிர்க்குவியல் கண்டு மலைத்துப் போனாள். மலத்துடன் இணைந்தே மயிர்க்குவியல் சிக்கிக்கிடந்தது. இவ்வளவும் எங்கேயிருந்து வருகின்றது. புரியவில்லை. திகைத்துப் போனாள். எனக்கு என்ன நடக்கிறது. அலறினாள். துடித்தாள். நேரத்துக்கு நேரம் புத்தியில் தடுமாற்றம் புரியாதவளாய் உடலுள் ஏற்படுகின்ற உள்ளுணர்வுகளைப் புரியாது தவித்தாள். ஆயிரக்கணக்கான ஊசிகளால் ஆயிரம் பேர் சேர்ந்து உடலிலே குத்தி எடுப்பது போன்ற வலி உடலிலே தோன்றித் தோன்றி மறைந்தது. மனதுக்குள் ஏதோ அரித்தெடுப்பது போல் வேதனை போட்டு ஆட்டியது. நேற்று நடந்தது என்னவென்று இன்று புரியவில்லை. இன்றைய நிகழ்வுகளை எண்ணிப்பார்க்க மனம் இடந்தரவில்லை.

## என்னையே நானறியேன்

குளியலறை விட்டு வெளியே வந்தாள். வீடு, வீட்டிலுள்ள பொருள்கள் அனைத்தும் தன்னைத் துரத்துவது போல் அவள் கண்களுக்குத் தெரிந்தன. கைகளால் விரட்டினாள். மனதுக்குள் குரூரமொன்று தாண்டவமாடியது. பறிபோன பாடசாலை மூளைக்குள் மாறாட்டத்தை ஏற்படுத்தியது. விட்டுப்போன கணவன் சில்லறையாய் செய்து போன செயல்கள் ஒவ்வொன்றும் ஆடை களைந்து நிற்பது போல் அவமானத்தைத் தந்தது. தனிமை அரக்கன் பக்கத்திலே நின்றுபயமுறுத்துவது போல் இருந்தது. அமைதியான சூழல் மயானஅமைதியைத் தந்தது. சுற்றும் முற்றுமும் தலையை அசைத்து அசைத்துப் பார்த்தாள். அவள் கண்கள்இரண்டும் அளவுக் கதிகமாக விரிந்தன. சுவரின் ஒரு புள்ளியை வெறித்துப் பார்த்தாள். அவள் உள்ளே இருந்து ஒரு பெண் எழுந்து வந்தாள். இரண்டுகைகளையும் மேலே உயர்த்தினாள். உடல் இறுக்கமானது. அவள் அவளாய் இல்லை. வாயைத் திறந்தாள். வழமைக்கு மாறான இடிமுழக்கம் போன்ற குரலில் கர்ச்சித்தாள். அவளுள்ளே இருந்து எழுந்த வந்த பெண் இப்போது தன் நடவடிக்கைகளை ஆற்றத்தொடங்கினாள்.

## என்னையே நானறியேன்

நோய் வந்தால் கட்டிலை அணைப்பார் நோயாளிகள். கட்டிலை உடைப்பாரோ! வீட்டுத் தளபாடங்கள் அவள்கைபட்டு சுக்குநூறாயின. அனைத்தையும் தன் இரு கரங்களால் அடித்து நொறுக்கி ஆண்வலுவுடன் வீட்டின் வெளிப்பகுதியில் அடுக்கி விட்டாள். ஒரு பெண்ணால் இப்படி முடியுமா? பெண்ணின் மறுபக்கம் அசுரவேகத்திலும் தொழிற்படும்என்பதற்கு இதுவும் எடுத்துக் காட்டல்லவா? மனிதர்கள் எல்லோருக்குள்ளேயும்ஒரு மனிதன் ஒழிந்து கொண்டிருப்பான். உறங்கிக்கொண்டிருக்கும் அவன் தட்டி எழுப்பப்பட்டால், தன் வேலையை தாராளமாகக் காட்டத் தொடங்கிவிடுவான். அவ்வாறே தட்டி எழுப்பப்பட்ட பெண் தன் வேலை முடித்து மீண்டும் உறக்கம் கொண்டாள். இப்போது வரதேவி தரையிலே சுவரில் சாய்ந்த வண்ணம் அமைதியாக அமர்ந்தாள். மீண்டும் அவளுள் இருந்து எழுந்து வந்தவள் அடங்கிவிட்டாள். சிறிதுநேரம்அமைதியை அணைத்துக் கொண்டாள். அடங்கி ஒடுங்கி கைகள் இரண்டினாலும் கால்கள் இரண்டையும் அணைத்தபடித் தரையிலே சரிந்துவிட்டாள்.

சங்காரம் நடக்குது வீட்டிற்குள்ளே

சஞ்சலம் தெரியுது மனதுக்குள்ளே
வஞ்சனை புரிந்தது வேதவனோ
மிஞ்சிய வாழ்வது வேதனையோ

வீட்டிற்குள்ளே நடந்த பிரளயம் அடங்கி ஓய்ந்தது. எந்தவித சத்தமும் இல்லை. அமைதி கண்ட வீட்டின் நிலைமையை உணர்ந்த வரன் கட்டிலைவிட்டு மெல்ல அடி எடுத்து வைத்தான். சுற்றும் முற்றும் பார்த்த வண்ணம் பூனைபோல் பதுங்கிப் பதுங்கி வரவேற்பறைக் கதவை நாடினான். கதவினூடாக மெல்லப் பார்த்தான். அமைதியாகப் படுத்துக்கொண்டிருந்த தாயாரைக் கண்டான். இரண்டு கைகளாலும் தன்னுடைய வாயைப்பொத்தியபடி மீண்டும் கட்டிலில் வந்து அமர்ந்து கொண்டான். பச்சைப் பாலகன் நிலைமையானது பாசமுள்ளவர் அனைவர் நெஞ்சையும் நெகிழவைக்கும். சிறிது நேரம் அப்படியே இருந்திருப்பான்.

சில மணிப் பொழுதுகள் கழிந்தன. மெல்லத் தன் கண்களை வரதேவி திறந்தாள். புதிய ஒரு உலகத்தினுள் புகுந்த ஒரு பிள்ளை போல் மனம் தெளிவானது. உடலோ அடித்துப் போட்டது போல வலி எடுத்தது. சுற்றும் முற்றும் பார்த்தாள். அதிர்ச்சியடைந்தாள். நிலத்திலே கிடக்கும் தன்

உடலை எழுப்பி நிறுத்தினாள். அலங்கோலமாகக் கிடந்த அறையை ஒரு முறை நோட்டமிட்டாள். இவையெல்லாம் நானாகவே செய்தேனா!...... எனக்கு என்ன நடந்தது? மூளையை மந்தமாக்கி அசுரத்தனமாக விளையாடிய தன் உடலை நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருந்தது. இப்போது தான் தன் பிள்ளையை நினைத்தாள்.

"வரன்...வரன்.....வரன்" என்று அழைத்தபடி மகனின் அறைக்குள் நுழைந்தாள்.

மெல்லத் தன் அறை திறக்கப்படும் சத்தம் கேட்டது. தாயைக் கண்ட சேய் ஒருபுறம் ஒதுங்கியது. அச்சத்தில் உடலை ஒடுக்கினான். கிட்டே வரும் தாயை விலத்தினான். புரிந்து விட்டது. நன்றாகப் புரிந்துவிட்டது. தன்னைக் கண்டு மகன் பயங்கொள்வது அவளுக்கு ஒன்றும் ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. அவள் கண்கள் குளமாகின.

விதிதேவன் விளையாட்டில்
விளைந்து விட்ட சோதனைகள்
விளக்கிட முடியாது
கலங்குகிறாள் காரிகையாள்
அணைக்கும் கையை
விலக்கும் மகனை

## என்னையே நானறியேன்

நினைக்க நினைக்கப் புலம்புகிறாள்
"பயப்பிடாதே மகன். அம்மா உன்னை ஒன்றும் செய்ய மாட்டன். என்ர செல்ல மெல்லா. நீயும் என்ன ஒதுக்கிடாத கண்ணே. உன்னவிட்டா எனக்கு யாரிருக்கிறார் செல்லம். என்ர ஒரே ஆதரவு நீதானே. வாடா.... செல்லம்...." அவன் வரவில்லை. அணைக்கப் போகும் அவள் கைகளை விட்டு ஓடினான்.

வரதேவி தலையிலே கை வைத்து அமர்ந்துவிட்டாள்.

"ஐயோ......" கண்ணீர் வற்றும் வரை அழுது தீர்த்தாள். புத்தி தடுமாறிய நிலையிலும் அதிவிசேடபுத்தி அவளுக்குத் தொழிற்பட்டது. தொலைபேசியை எடுத்தாள். எண்கள் தட்டப்பட்டன.

"உடனே ஒருக்கா வரமுடியுமா? தயவு செய்து மறுப்புச் சொல்லாமல் வருவீர்களா? கெஞ்சலில் வேண்டுதல் பலித்தது. தன் எண்ணங்கள் செயல்கள் அனைத்தையும் தன் மனதுக்கிணைந்த இரு மாணவர்களை அழைத்து விளக்கினாள். நாளும் நடக்கும் தன் திருவிளையாடல்களைத் திரைவிமர்சனமாய் விளக்கினாள்.

"எனக்குப் புரியவில்லை. எதிர்காலம் எப்படியாகும் என்று விளங்கவில்லை. ஏதோ ஏதொவெல்லாம்

செய்றன். என்னவென்று செய்து முடிச்சாப் பிறகு தான் விளங்குது. என்னையே நானறியாது இருப்பதனால், என்ர பிள்ளைக்கு ஏதாவது நடந்திடுமோ என்று பயமா இருக்கு. இப்பவே ஏதாவது செய்ய வேணும். இல்லாட்டால் பிறகு கவலைப்படுறதில பிரயோசனமில்ல. உடலிலஉள்ளத்தில இருக்கிற தென்பெல்லாம் கரைஞ்சு போன மாதிரித் தெரியுது. ஆனால், நினைக்க முடியாத வேலையெல்லாம் செய்து முடிக்கிறன். உங்களிட்ட வேண்டிக் கேட்கிறன். என்ர பிள்ளைய இந்த வீட்டுக்காரரிட்ட ஒப்படைச்சு விடுங்கள். அவர் அவனை வளர்க்கிறதுக்கு ஏதாவது செய்வார். பிளீஸ்….. இந்த உதவியைச் செய்வீங்களா?

அவள் வேண்டுதலின் பெயரில் வீட்டுக்குச் சொந்தக்காரன் அழைக்கப்பட்டார். அவரிடம் விபரமாக அனைத்தையும் அவள் மாணவர்கள் ஜேர்மனி மொழியில் விளங்கப்படுத்தினர். அவரும் அவதானமாக அனைத்தையும் செவிமடுத்தார். பின் பிள்ளைகள் பராமரிக்கும் அலுவலகத்துடன் (Jugendamt) தொடர்பு கொண்டார். அங்கு வரனைக் கொண்டு சேர்ப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். அவர்களும் பிள்ளையை அழைத்துச் செல்வதற்காக வந்தனர்.

## என்னையே நானறியேன்

“எனது மகனை அங்கு விட்டுவளர்ப்பதை நான் விரும்பவில்லை. தயவுசெய்து யாராவது நல்ல குடும்பத்தினரிடம் ஒப்படைக்கும்படிச் சொல்லுங்கள். நான் திரும்பி வந்தவுடன் வரன் என்னிடம் வந்துவிட வேண்டும். அவர்கள் பிறகு பிள்ளையை எனக்குத் தரமாட்டார்கள்” என்று தனது மாணவர்களிடம் முறையிட்டாள்.

வீட்டிலே பிள்ளைகளைப் பெற்றோர் அடித்தால், அல்லது பிள்ளைகள் சத்துக்குறைந்தவர்களாகக் காணப்பட்டால், பாடசாலைக்கு ஒழுங்காகப் பிள்ளைகளை அனுப்பாது விட்டால், பிள்ளைகளின் சுதந்திரத்தைப் பெற்றோர் வலுக்கட்டாயமாகத் தடுத்தால், பாராமரிப்பு அலுவலகமாகிய யூகன்ட் ஆம்ற் பிள்ளையைப் பறிமுதல் செய்து கொள்ளும். இவ்வாறே வரதேவி அறிந்த ஒரு பெண் நோயாளியாகக் காணப்பட்டாள். அவளால் தனியே பிள்ளையை வளர்க்க முடியாது என அறிந்த அலுவலகம் அப்பிள்ளையை பொறுப்பெடுத்துக் கொண்டது. ஓரளவு சுகமாகிய பெண், தன்பிள்ளையைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி வாதாடியிருக்கின்றாள். ஆனால், அவர்கள் அப்பிள்ளையைத் தாயிடம்கொடுக்கவில்லை.

"நீ பூரணமாகக் குணமாகிய பின்னேயே பிள்ளையை உன்னிடம் ஒப்படைப்போம்" என்று மறுத்துவிட்டார்கள்.

"தனிமை என் நோயை மீதப்படுத்துகின்றது. என் பிள்ளை என்னுடன் இருந்தால், என் நோய் பாதி குணமாகிவிடும்" என்று அவள் கூறியபோது

"உன் நோய் தீர்ப்பதற்கு பிள்ளையைப் பயன்படுத்துகின்றாய். அப்படிச் செய்யமுடியாது.... நன்றாகக் குணமாகிய பின் உன்னிடம் ஒப்படைக்கின்றோம்..."

என்று மறுத்துவிட்டார்கள். இவ்வுண்மையை அறிந்த வரதேவி, வரனை தனியாக யாரிடமாவது விட்டு வளர்க்கும்படிக் கேட்டுக்கொண்டாள். அவள் விருப்பத்தை வரதேவி மாணவர்கள் விளக்கிச் சொன்னார்கள். உடன்பட்ட அவர்கள் சரியான குடும்பம் கிடைக்கும்வரைத் தாம் பொறுப்பேற்பதாகச் சொல்லி வரனை அழைத்துச் சென்றனர்.

தாயைப் பிரிகிறது சேய். குஞ்சொன்று அஞ்சிப் பிரிகிறது தாயை. தாயைப் பார்த்து பிள்ளை பயப்படும்சம்பவம் எங்கேயாவது நடக்குமா? இங்கு நடந்துவிட்டது. மாற்றான் கைக்கு மாறப்போகும் பிள்ளையைப் பிரிய முடியாத சோகம் அவளை

வாட்ட, அவனைக் கட்டி அணைத்து முத்தமிடத் துடித்தாள். அவனோ தள்ளித் தள்ளி விலகிச் சென்றான். பின் ஒருவாறாக முயற்சி பலிக்க மனதில் ஏதோ மாற்றம் கண்ட வரன்.

"எப்போ அம்மா என்னை உங்களிட்டக் கொண்டு விடுவார்கள்? உங்களுக்கு எப்போ சுகம் வரும்? நான் போகத் தான் வேண்டுமா?

அநாதரவாகப் பிள்ளை அடுத்தவர் கைகளுக்குப் பரிமாறப்படுகிறது. வேதனை ஆனாலும், பொருத்தமான இடத்திற்கே பிள்ளை செல்கிறது என நினைக்கும் போது ஓரளவு மனதில் மகிழ்ச்சி கீறலாய் தென்பட

"அம்மாவை அடிக்கடி வந்து பார் மகன்… இவங்கள் உன்னை நல்லாக் கவனிப்பார்கள். அம்மா சுயநினைவு இல்லாத நேரம் உன்னைக் கவனிக்க முடியாமல் போய்விடும். அதனாலே தான் உன்னை இவர்களிட்ட விடுறன். உன்ன நல்லாக் கவனிப்பார்கள். கொஞ்ச நாளில எல்லாம் சரியாயிடும். பிறகு அம்மாட்ட வரலாம். அம்மா விரைவிலே சுகமாகி வீட்டிற்கு வரவேண்டும் என்று சாமியைக் கும்பிடு… அவர் எல்லாத்தையும் பார்ப்பார். போயிட்டு வா….மகன்

போயிட்டு வா......" என்று மகனை வழியனுப்பி வைத்துவிட்டுத் தேம்பித் தேம்பிஅழுதாள்.

ஜேர்மன் மண்ணைத் தொட்டபோது அவள் பெற்ற மகிழ்ச்சியையும் இன்று தன் நிலையையும் நினைக்கும் போது அறியாத வாழ்வின் இரகசியங்கள் ஆச்சரியமாக இருந்தது. இப்பிரபஞ்சம் முழுவதிலும் ஏதோ ஒரு சக்திபரவியிருக்கிறது. உலகில் நடக்கும் அனைத்துக் காரியங்களுக்கும் அதுவே ஆதாரம். இது உயிரினங்கள் அனைத்திலும் காணப்பட்டாலும் மனிதனிடத்தில் அதிகமாகக் காணப்படுகின்றது. இதுவே உலக அதிசயம். உலகில் என்ன காரியம்நடந்தாலும் அக்காரியம் ஏதோ ஒரு காரணத்தாலேயே நடைபெறுகின்றது.விதையிலிருந்து செடி பிறத்தல் போல் எண்ணத்திலிருந்தேதான், செயல்பிறக்கிறது.

வரதேவி சிந்தனையானது அவள்அறிவிற்கும் அநுபவத்திற்கும் பொருத்தமில்லாததாக இருந்தது. நினைவாற்றல்குறைவானதாக இருந்தது. அர்த்தமற்ற பயம் ஏற்பட்டது. இவையெல்லாம் வரதேவிமனநிலையில் ஏற்பட்ட குறைபாடாகவே பட்டது

## என்னையே நானறியேன்

மௌனமாய் எந்தவித வார்த்தைகளுமின்றி சோபாவின் மேல் சாய்ந்தாள். அனைத்தும் ஒரு திரைப்படம் போல் நடந்தேறியது. நொறுக்கப்பட்ட தளபாடங்கள் உயிரிழந்து அழகிழந்து கிடந்தன. தன்செய்கை அவளுக்கு அனைத்தும் விநோதமாகப்பட்டது. உடைத்தது, உடைந்தவற்றை அடுக்கி வைத்தது, சோபாவை விட்டு வைத்தது. இது எல்லாம் ஏனென்று புரியாதவளாய் அமர்ந்திருந்தவளை அவள் மாணவர்கள் இருவரும் அணுகினர்.

"இப்படியே எவ்வளவு நேரத்துக்கு இருக்கப் போறீங்கள் ரீச்சர். ஹொஸ்பிட்டலுக்குப் போவமா? இப்போது அவள் உடலும் உள்ளமும் சோர்ந்திருந்தது.

"எனக்கு யாரிருக்கிறார்? எங்கே போகவேண்டும்? என்ன செய்யவேண்டும்? எதுவுமே எனக்குத் தெரியவில்லை. நான் ஏன் வாழவேண்டும் என்றும் எனக்குத் தெரியவில்ல" என்று விரக்தியுடன் கூறினாள்.

"என்ன ரீச்சர்!.... எவ்வளவு தைரியமான நீங்களே இப்படி மனம் வெறுத்துப் பேசுறீங்கள். இதெல்லாம் இங்கு ஒரு வருத்தமே இல்லை. உங்கள் மகனுக்காகவாவது நீங்கள் ஹொஸ்பிட்டலுக்குப்

போகவேண்டும். நீங்கள் சுகமாக இருந்தால்த் தானே வரனும் சந்தோசமாக இருக்கமுடியும்”

இவ்வேளை தொலைபேசி அழைப்பு ஒன்று சிணுங்கியது. கையிலே எடுத்த மாணவி,

“யாரோ ரகுவாம் ரீச்சர். என்ன சொல்ல ரீச்சர்? என்றாள்.

“இவர் இன்னும் ஜேர்மனிக்கு வரவில்லை என்று சொல்லி ரெலிபோனை வையுங்கள்” என்றாள்.

அவ்வாறே கூறப்பட்டு ரெலிபோன் வைக்கப்பட்டது. வரதேவியோ மனதிற்குள் சிரிக்காமல் சிரித்தவளாய்,

“ஆவீன மழைபொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளவொண்ணா விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தட்சணை கொடுவென்றாரே”

என்னும் இராமச்சந்திரக்கவிராயர் பாடிய பாடலைப் பாடினாள்.

“ஏன் ரீச்சர் இந்த நேரத்தில் இந்தப் பாடல்“ என்றாள் ஒரு மாணவி.

"ஒருவர் வீட்டிலே பசு கன்றுபோட்டிருக்கிறது. ஆனால், வெளியிலோ மழை பெய்து கொண்டிருக்கிறது. கடுமழை காரணமாக வீடு விழுந்து விடுகிறது. ஆனால், வீட்டில் மனைவிக்கோ சுகவீனம். வேலைக்காரனோ இறந்து விட்டான். மழை பெய்த ஈரத்திலே விதை நெல்லை நட்டுவிடலாம் என்று விதை நெல்லை எடுத்துக் கொண்டு ஓடுகிறார் அவர். அப்போது வழியிலே கடன்கொடுத்தவன் நெல்லைப் பறித்துவிடுகின்றான். இந்தவேளை சாவுச்செய்தி கொண்டு ஒருவர் இவரைப் பார்க்க வருகிறார். அவர் வரவும் அச்சமயம் தவிர்க்கமுடியாதஒரு விருந்தினர் எதிரே வருகிறார். அவரைப் பார்த்த போது பாம்பு ஒன்று அவரைக் கடித்துவிடுகிறது. இதேநேரம் உழுதுண்பாரிடம் வரிகேட்பார் அரச சபையிலிருந்து வருகின்றார். அதேவேளை குருக்களும் இவர் செய்த காரியத்திற்காக தட்சணை கேட்டுவந்தார். இவ்வாறு ஒரே நேரத்திலே அத்தனை துன்பமும் ஒரு மனிதனுக்கு ஏற்பட்டதாக இராமச்சந்திரக்கவிராயர் பாடியிருக்கிறார். இப்போது என்நிலைமையும் அப்படித்தான். எல்லாம் ஒன்றாக என்னைப் போட்டு வாட்டுகிறது"

"பார்த்தீர்களா ரீச்சர்! எவ்வளவு கஷ்டங்கள் எல்லாம் மனிதர்களுக்கு ஏற்படுகிறது. அது போல்த்தான் உங்களுக்கும். இதுபற்றி அதிகம் யோசிக்காதீர்கள். வாங்க ஹொஸ்பிட்டலுக்குப் போவோம்" என்று மாணவர்கள் கூறினார்கள்.

"இங்கே பாருங்கள்… இந்தக் கொப்பியில் கீதாவின் நம்பர் இருக்கிறது. ஒரு தரம் நடந்தவற்றைக் கீதாவிடம் சொல்லிவிட்டு ஒரு ரெக்ஸி பிடித்து என்னை ஹொஸ்பிட்டலில கொண்டுபோய் விட்டுவிடுங்கள். பிறகு நடப்பவற்றைப் பார்ப்போம்" என்று கூறிய வரதேவி கொப்பியைத் தன் மாணவர்களிடம் நீட்டினாள்.

அவர்களும் கீதாவிடம் விபரம்கூறி வரதேவியை மனநிலை வைத்தியரிடம் அழைத்துச் சென்றனர்.

# Part 12



மருத்துவமனையில் உடலுக்கு உரமூட்டும் திரவகம் செலுத்தப்பட்டது. தனியாய் இருக்க ஒரு அறை தரப்பட்டது. தாயொருபக்கம் தந்தையொரு பக்கம் மகனொரு பக்கம் தவிக்கின்ற நிலைதான் இங்கே.....

மருத்துவமனை வரதேவிக்கு ஒரு ஹொட்டல் அறையாய் காட்சியளித்தது. தனியே ஒரு அறை. அங்கு தேவையான தளபாடங்கள், பார்ப்பதற்கு ரி.வி பேசுவதற்கு தொலைபேசி அங்குள்ளோர் சேர்ந்து உரையாட வரவேற்பறை. உணவுண்ண ஓர் அறை. விருந்தினர் வருகை தந்தால் அவர்களைஉபசரிக்க ஓர் அறை. தாதியரை அழைக்க படுக்கையருகேயே அழைப்புமணி, வேளாவேளைக்கு உணவு தினமும்

படுக்கை புதுப்பித்தல் போன்று அத்தனை சுகங்களும் உள்ளடக்கிய வைத்தியசாலை அறை வரதேவி உடல்நலத்திற்கு ஏற்றதாகவே பட்டது.

அனைத்துக் கடமைகளும் முடித்த வரதேவியின் மாணவிகள் இருவரும் விடைபெற்றனர். மொழி புரியாத நாட்டில் இவ்வாறான இடங்களில் மொழிபெயர்ப்புக்கு ஆள் தேவை. இத்தேவையை நிறைவேற்றியஇருவரும் விடைபெற அறையினுள் அமர்ந்தாள் வரதேவி. அவள் அங்கங்கள் தாங்கியவேதனை அமைதி கண்டது. சுவரினுள் மாட்டப்பட்டிருந்த ஒர் சிலுவை மட்டும் அங்கேகர்த்தர் பட்ட வேதனையை அவளுக்கு உணர்த்திக் கொண்டிருந்தது. ஆனால் சிறிதுநேரத்தைக் கடத்தியிருப்பாள் அதன்பின் அந்தச் சிலுவை அவளுக்கு அகங்கோரமாய்க் காட்சியளித்தது. அதிலிருந்து தன்னை நோக்கி வரும் ஒளியைத் தன் வாய் மூலம்வெளியகற்றும் காற்றினால் இலவம் பஞ்சை ஊதித் தள்ளி விளையாடும் பிள்ளை போல் ஊதி ஊதி துரத்தித் துரத்தி விட்டாள். நரக வேதனையே அங்கு கிடைத்தது. அவள் நாடி வந்த மன அமைதி மீண்டும் அவளை விட்டு வெளியேறியது.

## என்னையே நானறியேன்

அறையினுள் அவள் நடிக்கும் நாடகத்தை தாதியர் தெரிந்து கொண்டது தான் எப்படி என்பதை வரதேவி புரிந்துகொள்ள முடியாதபடி மூளை மங்கியது. தன்னிலையைத் தான் உணர இடுப்பிலே ஊசி பாய்ச்சப்பட்டது. இவ் ஊசியினால்த் துடித்துப் போனாள். பொருத்தமானது இவ்வூசியே என்று தெரிந்த தாதியர் தொடர்ந்து இதனையே பயன்படுத்தினர். நிறுத்தும்படி வேண்டிக் கேட்டாள். தாயாய்த் தாங்கும் தாதியர் அதன் முக்கியத்துவத்தை அவளுக்கு எடுத்துரைத்தனர். ஒரு குழந்தைபோல் அவளைப் பராமரித்தனர். இடுப்பு ஊசி அவளுக்கு நிரந்தரமானது. அதுவே நோய்க்கும் மருந்தும் ஆனது.

அன்று தாயைப் பார்க்க வரன் ஆவலுடன் மருத்துவமனை வந்தடைந்தான். கூடவே வந்த ஜேர்மனியப் பெண் வரனை அணைத்துக் கோண்டே அழைத்து வந்திருந்தாள். இந்தப் பெண் தான் தற்போது வரனை பராமரிப்பவர். கின்டர்கார்டனில் கற்பிக்கும் ஆசிரியையாகிய இவர், அன்பும் ஆதரவுமான பெண். தாய் குணமாகும் வரை வரனைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தாள். வரதேவி ஆசைப்பட்டபடி பொருத்தமான இடத்தில் வரன் வளரத்

தொடங்கினான். ஓடி வந்து தாயை அணைத்துக் கொண்டான் வரன்.

ஊருக்குள் உலாவும் தந்தை பற்றிய சர்ச்சைகளும் தெரியாது, சிறைக்குள்ளே சிதைந்து போகும் தந்தையின் நிலைமையும்அறியாது, தாயின் தலைக்குள்ளே நடக்கும் பிரளயமும் விளங்காத இந்தப் பிஞ்சுமனம் கொண்ட வரன்

"அப்பா எப்போ அம்மா வருவார்...." என்று வாஞ்சையுடன் கேட்டான்.

ஊருக்குள் பலருக்கு என்ன ஊறு விளைவித்தாலும். தன் மகனுக்குக் கரன் அன்பான தந்தையே. தந்தை பாசம் இல்லாக் கல் நெஞ்சக்காரன் இல்லையே கரன். அன்பும் பாசமும் நிறைந்த உள்ளம் கொண்டவன் தானே. சந்தர்ப்பமும் சூழ்நிலைகளும் பலர் குணத்தையே மாற்றிவிடும் என்பது உண்மையே. பொல்லாத காலமும் பொருந்தாத ஆசையும் இன்று சிறையிலே கரன் வாழ்வைச் சிதைக்கிறது.

வரதேவியும் தனக்குள்ளே இருக்கும் வெறுப்பை வெளிக்காட்டாது.

"வந்திடுவார்... இன்னும் கொஞ்ச நாளில் வந்திடுவார்...." என்றாள். என்ன தான் மாற்றான் தாயிடம் பாசம் பெற்றாலும், பெற்றோரிடம் பெறும் பாசத்திற்கு

ஈடாகுமா! சிலமணிப் பொழுதுகள் பசுவிடம் சேர்ந்த கன்று பிரிந்து சென்றது. தாய்ப் பசு பாசத்திற்காய்த் தவித்தது.

---

நாள்கள் கடந்தன. ஓரளவு சுகமான நிலையில் மருத்துவமனை வரதேவி வீடு செல்ல அநுமதி தந்தது. மருந்துகளைத் திருநீற்றுப் பொட்டலமாய் எடுத்துக் கொண்டு காலைமாலை தரிக்கும்விபூதியாய் உட்கொள்ள வேண்டிய கட்டாயம் அவளுக்கு ஏற்பட்டது. அவளைப் பராமரிப்பதற்காக துருக்கி இனப் பெண் எமல் என்பவரும் நியமிக்கப்பட்டார். காலை வீடு வந்து வரதேவியுடன் பகலெல்லாம் வாழ்ந்து வீட்டுக் கடமைகள் அனைத்தும் முடித்து இரவில் வீடு திரும்புதல் அவள் வழக்கம். வரதேவியை வெளியே அழைத்துச் செல்வாள். அவள் கவனத்தைத் திசை திருப்புவாள். அவளோடு கூடவே இருப்பதற்கு சமூகநல பாதுகாப்பு அலுவலகம் எமலுக்கு வேதனம் வழங்கியது.

அன்று சுகவீனம் காரணமாக எமல் கடமைக்கு வரவில்லை. வரதேவியோ வீட்டினுள் இருப்பதற்கு விரும்பவில்லை. உடல் புழுக்கமும் உளப் புழுக்கமும் இணைந்தே புழுங்கியது. அப்புழுக்கம் தீர்க்க காலாற

வெளியே நடந்துவரத் தீர்மானித்தாள். மாலைப் பொழுது சுத்தக் காற்றை சுவாசிப்பது மனதுக்குச் சுகமாக இருந்தது. கால் போன போக்கில்மனம் போக களைத்து வீடு திரும்பினாள். மெல்ல மெல்ல நடை தளர வீட்டுப் படிகளில் பாதங்களைப் பதித்தாள். பின்னே யாரோ பின் தொடர்வது போன்ற ஒரு பிரேமை. இருப்பினும் அகக்கண் நோக்க புறக்கண் நோக்காது படிகள் ஒவ்வொன்றாகத் தாண்டின கால்கள். வீட்டுவாசலை வந்தடைந்தாள். கதவைத் திறந்தாள் தலையைத் திருப்பினாள். அதிர்ந்து விட்டாள். கூடவே வந்த உருவமானது இளமை ததும்பும் உடல் அமைப்பு, அங்கங்களைத் தழுவும் கழுகுப் பார்வை, சிறியவன் ஆனாலும் சிந்தையில் மந்தப் புத்தியுள்ளவன். புன்னகைத் தான். பழகிய ஒருவனே ஆனாலும் தன்னைத் தொடர்ந்து வந்த மாயமென்னவென்று புரியவில்லை. பார்வையால் கேள்விக் கணை தொடுத்தாள். அவன் புரிந்தது போல் பாசாங்கு பண்ணவில்லை. அடியெடுத்து உள்ளே வைக்க அவசரப்பட்டான். தடுத்தாள் வரதேவி.

“நில். என்ன வேணும்”

சில சமயங்கள் கைகளைவிட வார்த்தைகள் சக்தி வாய்ந்தவை. அவள் பலவீனமானவள் தான். ஆனால்,

உள்ளத்தால் அல்ல. அவள் கேள்விக்கு எதுவித பதிலுமில்லாது மீண்டும் உட்செல்ல எத்தனித்தான். உட்சென்று கதவை அடைப்பதற்கு அவள் எடுத்த எத்தனத்தை மீறி உள்ளே பாய்ந்தான். தனது மேலாடையைக் கழட்டினான். அவன் கழுத்திலே கிடந்த சிலுவை பாவிகளுக்கும் பாதுகாப்பளிக்குமோ!

"கழுத்திலே சிலுவை மாட்டிவந்திருக்கிறாய். நான் நானாக இல்லை. என்னைச் சீண்டிப் பார்க்காதே. உன்னைக்கடித்துக் குதறவும் நான் தயங்க மாட்டேன். இந்த இடத்தை விட்டுப்போய்விடு…… சொல்லிவிட்டேன்…… போய்விடு…" சொற்களால் அம்பு பாய்ச்சினானாள். மரத்த உடம்புக்கு அம்புமோர் பூப்பந்தே.

அவன் எக்கதையையும் காதில் நுழைப்பதாக இல்லை. காம மயக்கம் அவன் கண்ணை மறைத்திருந்ததனால் அவன் காதும் செவிடாகியது. தன் இச்சையைத் தீர்ப்பதற்காக வலுக்கட்டாயமாக வரதேவியைக் கட்டியணைத்தான். அப்போது வரதேவிக்குள் அடங்கிக் கிடந்த மிருகம் மீண்டும் விழித்துக்கொண்டது. தன் பலமனைத்தும் சேர்த்தே பத்திரகாளியானாள். அவனை இறுக்கித் தள்ளினாள். தன் பாதங்களைத் தூக்கினாள். அவனை உதைத்து

மிதித்தாள். விழுந்தவன் எழுந்தானா? இறந்தானா? இச் சந்தேகங்கள் அவளுக்கு எதற்கு? கதவைஇழுத்து மூடினாள். கையில் கிடைத்ததை எல்லாம் பலம் கொண்ட மட்டும் எடுத்தெறிந்தாள்.

"ஐயோ….. எனக்கு என்ன கொடுமை…. பாவி மனுஷா! என்னை இந்த நிலமைக்கு ஆளாக்கி விட்டாயே….. நீ நல்லா இருப்பியா….. நீ நல்லா இருப்பியா……" வீடு அதிர்ந்தது. தனித்த வீட்டினுள் தனிமையில் புலம்பினாள் கத்தினாள். வார்த்தைகள் எதிரொலித்தன. திரும்ப வரும் வார்த்தைகள் தன்னைக் கேட்கும் வார்த்தைகள் என நினைத்தவளாய் அதற்கும் எதிரொலி தந்தாள். மெல்ல மெல்ல சக்தியனைத்தும் சோர்ந்து விடத் தரையிலே சரிந்தாள்.

வல்ல அரக்கர்கள் வாழும் பூமியடா - இங்கு
வஞ்சனைப் பேய்கள் ஆயிரமடா!
சொல்வொண்ணாத் துயரடா! - இவள்
சோகத்திற்கு அளவேதடா!
பாவிமகள் வாழுகிறாள்
தனியே தவித்துப் புலம்புகிறாள்
ஐயகோ! இதுவும் ஓர் வாழ்வா!
இந்த வேதனைக்கு விடிவுதான் இல்லையா!

## என்னையே நானறியேன்

ஒரு பெண்ணுக்குத் தான்செய்யும் தவறுகள் அவளுக்கு கறை படியச் செய்வதுண்டு. தன்னை சுற்றியுள்ள சுகங்களும் கறையினுள் அமிழ்த்தி விடுவதும் உண்டு. இங்கு சுற்றியுள்ள கண்கள் வரதேவியின் சுகத்தைக் கெடுத்து விட்டன.

அடுத்த நாள் கடமைக்காய் கதவு திறந்தாள் எமல். வாசலில் அலங்கோலமாய்க் கிடந்த வரதேவியைக் கண்டாள். திடுக்கிட்டுவிட்டாள்.

"ஐயய்யோ ….. ஐயய்யோ….. என்ன நடந்ததிங்க…. எழுந்திருங்க…. வரதேவி… எழுந்திருங்க…"

அவளால் எழுந்திருக்க முடியவில்லை. ஓரக் கண்ணால் எமலைப் பார்த்தாள். தலையோ சரிந்து சரிந்து விழுந்தது.

தைரியத்தைத் துணையாய்க் கூட்டிக் கொண்டு எமல் தொலைபேசியை எடுத்து அம்புலன்ஸை வரவழைத்தாள். பழந்துணியாய்க் கசங்கித்துவண்டு கிடக்கும் வரதேவியைத் தூக்கி எடுத்து முகம் அலம்பினாள். முதல் நாள் உணவில்லாத களைப்பில் முள்ளந்தண்டு நிமிர்ந்து நிற்கத் தயங்கியது. சோர்ந்து துவளும் உடலுக்கு உற்சாகபானமாய் கோப்பியைப் பருக்கினாள். எமலின் முகத்தைப் பார்த்து ஏன் நேற்று வரவில்லை? வந்திருந்தால், எனக்கு இந்த நிலை

ஏற்பட்டிருக்குமா? என்று கேட்பது போல் பார்வையால் பரிந்து பேசினாள். தன்நிலை உணர்த்திய எமல், வரதேவியிடம் என்ன நடந்தது என்னும் விபரம் கேட்கவிரும்பாது. கேட்கும்போது அவள் பழைய நினைவுகள் மீட்டப்படலாம் என்பதை உணர்ந்தவளாய் பேசாமல் இருந்தாள். ஜேர்மனியில் அம்புலன்ஸ்க்கு அழைப்புவிடுத்த மறுகணமே அம்புலன்ஸ் வண்டி வாசலுக்கு வந்துவிடும். அவ்வாறேஅன்றும் நான் இருக்கிறேன் உன்னைத் தாங்கிக் கொள்ள என்று கூறுமாப்போல் அம்புலன்ஸ் வண்டி வாசல் வந்தடைந்தது. அதிலிருந்து படபடவென்று படியேறிவைத்தியர் கையில் மருந்துகள் அடங்கிய பெட்டியுடன் உள்ளே வந்தார்.

இது இம்மண் மனித உடல்நலத்திற்குக் கொடுக்கின்ற மரியாதை. என்னைப் போல் மற்றவனும் வாழவேண்டும் என்று நினைப்பதே மனிதநேயம். நோயாளி பணம் கொடுக்கின்றரா? இல்லையா? இது பற்றிய கேள்வி எல்லாம் நோயாளியைக் கொண்டு செல்பவர்களுக்குக் கிடையாது. மருத்துவக் காப்புறுதி நிச்சயம் எல்லோரும் செய்திருப்பார்கள். உழைப்பவர்களிடம் அறவிடும் பணத்தில் அவர்கள் பயன்படுத்தாத

மருத்துவச் செலவுகளை அரசாங்கப்பணத்தில் வாழ்பவர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள். எனவே இந்நாட்டில் மருத்துவவசதி இல்லாதவர் யாருமேயில்லை.

அவள் உடல்நிலையைப் பார்வையிட்ட வைத்தியர் உடனடியாக வைத்தியசாலையில் அவளை அநுமதிக்க வேண்டிய அவசியத்தை எமலிடம் உணர்த்தினார். அம்புலன்ஸ் வண்டி வரதேவியை மருத்துவமனைக்குக் கொண்டு சேர்த்தது. அங்கு நரம்புகளுக்கு அமைதியூட்டும் மருந்து தரப்பட்டது. அதன்பின் நிம்மதியாக உறங்கினாள். எமல் விடைபெற்றாள். மருத்துவமனையில் வரதேவி இருக்கும் சந்தர்ப்பத்தில் எமல் நாளும் மருத்துவமனை வருவதும், வரதேவி வீட்டைத் துப்பரவு செய்வதும் போன்ற காரியங்களில் ஈடுபட்டாள்.

அடிக்கடி வரதேவி நண்பர்களும் கரனுடைய நல்ல நண்பர்களும் மருத்துவமனையிலே வரதேவியை அடிக்கடி வந்து பார்த்துச் செல்வார்கள். உருக்குலைந்த அவள் உடல்நிலை கண்ட கீதா, “கவலைப்படாதீர்கள் அக்கா! ஆண்டவன் உங்களைக் கைவிட்டுவிட மாட்டார். ஆண்டவன் நல்லவர்களைத்தான் சோதிப்பார்.... நீங்கள் விரைவில்

குணமாகித் திரும்பவும் பாடசாலை நடத்துவீர்கள் பாருங்கள்……” என்றுஆறுதல் வார்த்தைகள் கூறினாள். “போதும் கீதா! நல்லவர்களை ஆண்டவன்சோதிக்கும் கதை…. என்று மனதில் நினைத்தவளாய். அசட்டுச் சிரிப்பைஉதிர்த்தாள். நல்லவர்களைச் சோதிப்பார். தீயவர்களைக் கண்டுகொள்ள மாட்டார்.அவர்கள் நல்லபடியாக வாழ்வார்கள். இவர்களைச் சோதித்து வேதனைப்படுத்திக்கொண்டேயிருப்பார்…. பிறகு கைகொடுப்பார். இது என்ன நன்றிகெட்ட செயல். இதைஎல்லாம் நான் நம்பி நீண்டநாள்களாகிவிட்டது. பூமி சுழலும் திசைக்குச்சுழலவேண்டியதுதான். ஒருநாள் காணமல் போய்விடுவோம். இதுதான் உண்மை” என்றுவிரக்தியில் வேதாந்த உணர்வுடன் நினைத்ததை உதிர்க்கும் சொற்கள் இன்றி சும்மாஇருந்தாள்.

வருவோர் போவோரெல்லாம்அறிவுரை கூற வந்துவந்து தொல்லை தரும் நோயும் கூடவே சேர நாள்கள் நகர்ந்தன.தன்னையே அடையாளம் காணமுடியாத நிலைக்கு வரதேவி தள்ளப்பட்டாள். உண்பாள், உறங்குவாள், பேசுவோர் யாரென்று புரியாது பேசுவாள். மிகுதியான நேரங்களில்தலையின் பாரம்

## என்னையே நானறியேன்

**அதிகரித்து கழுத்துத் தாங்கமுடியாத வண்ணம் மடிந்துகிடக்கும்.**

# Part13



**கால ஓட்டத்தில் விடுதலையாகிய கரன் நாடுதிரும்பினான். உருமாறிய தன் வீட்டின் அலங்கோலங் கண்டான். நிற்காதகதிரைகளும் நிலத்தில் படுத்திருந்த படுக்கைகளும் வெட்டப்பட்ட மெத்தைகளும்கண்டு அதிர்ச்சியுற்றான். அயலவரின் அலசலின் பின் மனைவி மகன் வாழும் இடம்கண்டறிந்தான்.**

**அவசர அவசரமாக மருத்துவமனை வந்தடைந்தான். வைத்தியரிடம் விபரம் அறிந்தான். "கரன்! உங்கள் மனைவிக்கு மனநிலை நன்றாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அவர் என்ன செய்கின்றார்**

என்றே அவருக்குத் தெரியாது. சில சமயங்களில் திருத்தமான வேலை இருக்கும். ஆனால், அது எப்படிச் செய்யப்பட்டது என்பது புரியாதவளாய்க் காணப்படுவாள். இப்போது அவள் குழந்தை. உங்கள் ஆசாபாசங்களை ஒதுக்கி வைத்துவிட்டு அவளைக் கவனிக்கமுடியும் என்றால் மாத்திரமே அவளை மருத்துவமனையிலிருந்து அழைத்துச் செல்லஅநுமதி தருவேன். இல்லையென்றால் இங்கேயே இருக்கட்டும். என்னசொல்லுகின்றீர்கள்? டொக்டர் பேச்சில் அக்கறை தெரிந்தது.

"நான் அழைத்துச் செல்லுகிறேன் டொக்டர்.நான் கவனமாகப் பார்த்துக் கொள்ளுகிறேன். இப்போது நான் திரும்பவந்திருப்பது. அவக்கு ஒரு துணையாக இருக்கும். பழைய நிலைக்கு அவ திரும்புவாஎன்னும் நம்பிக்கை எனக்கு இருக்கிறது டொக்டர்!

என்று ஆணித்தரமாகத் தன் நம்பிக்கையைவைத்தான் கரன். விதி செய்த கோலமோ? தன் விபரீத ஆசையின் விளையாட்டோ? பாடாய்ப்படுத்தும் காலத்தின் கோலத்தைக் கலைத்துவிடத்தான் முடியுமா? சில்லுப்பூட்டி காலம் ஓடுகிற ஓட்டத்திற்குச் சேர்ந்துதான் ஓடவேண்டும்.

## என்னையே நானறியேன்

வரதேவி தங்கியிருந்த அறைக்குள்சென்றான். வரதேவியின் பொலிவிழந்த வதனம் கண்டு நெஞ்சம் உடைந்து போனான்.ஆயிரம் அம்புகள் பாய்ச்சப்பட்டு பிய்ந்து போன அங்கங்கள் கொண்டு அவள் அருகேசென்றான். அவள் கரங்களை இறுகப்பற்றிக் கொண்டான். காந்தல் விரல்கள்களையிழந்து நரம்பு தள்ளிக் காட்சியளித்தன. கண்கள் இரண்டும் குவளையினுள்வைக்கப்பட்டது போலிருந்தன. உடல் காய்ந்து அழுக்கேறிய பாத்திரமாய்தோற்றமளித்தது. நெற்றிக் குங்குமம் அவள் நெற்றியிலிருந்துஓய்வுபெற்றிருந்தது. ஒட்டிய உடலிலே அணிந்த ஆடை அவளைத் தொட்டுக் கொள்ளாமல்கிடந்தது. புழுதிபட்ட கிற்றார் போல் தன் மனைவியின் இத்தனை தோற்றங்களும்கண்ட அவன் கண்களிலிருந்து நெஞ்சம் உருகி கண்ணீராய்க் கன்னங்களில்வரிபோட்டது. அவளை அன்புருக அணைத்தான். அருகே அமர்ந்து தலைகோதினான். “வரா! என்னைத் தெரியுதே? உன்னை இந்தநிலைக்கு ஆளாக்கிவிட்டு தனிமைப்படுத்தி தவிக்க விட்டிருக்கிறேனே.... இஞ்சபாரம்மா.... வா... வீட்டிற்குப் போவோம்” என்றுஅன்புருகக்கூறினான்.

வரதேவியோ எதுவித சலனமுமின்றி கரன் கரங்கள்பட்ட ஸ்பரிசத்தில் உள்ளம் நெகிழ்ந்து போனாள். ஒரு ஆதரவுக்கரம் தன்னை அணைப்பதில் இன்பம் கொண்டாள். ஆண்டவனே தன்னை அணைத்தெடுப்பதாய் மனதிற்குள் மகிழ்ச்சி கொண்டாள். இதுவே பந்தபாசம் என்பார்களோ! கட்டிப்பிடி வைத்தியம் என்பார்களோ! கரங்களினூடு பாய்ச்சப்படும் அன்பு அலைகள் என்பார்களோ! எதுவாகஇருந்தாலும் இவ்வைத்தியம் வரதேவிக்குச் சுகமானதே.

"இன்றைக்கும் இடுப்பிலேயே ஊசி…… ஊசி குத்திக்குத்தி இடுப்பெல்லாம் புண்ணாப் போச்சு. என்னால முடியல…"என்று சிணுங்கினாள்.

"உன் நன்மைக்குத் தானே செய்தார்கள். சரி…..சரி…… நான் வந்திட்டன் அல்லவா. உனக்கு இனி எதுவுமே தேவையில்லை. வீட்டிற்குப் போவோம்"

என்றபடி அவள் உடைமைகளை எடுத்து ஒழுங்குபடுத்தினான். மருத்துவமனைத் தாதியிடம் வரதேவிக்கான மருந்துகளைப் பெற்றுக் கொண்டான். அடுத்த நோய்க்கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்கான நாளையும்குறித்துக் கொண்டான். அந்நாளுக்கு வரதேவி மருத்துவமனைக்கு வர வேண்டியது

கட்டாயமாகிறது. அந்தநாள் வசதியில்லை என்றால், வேறு ஒருநாள் முன்னறிவித்தல் செய்துவிட்டுப் வரதேவி மருத்துவமனைக்குப் போகவேண்டியது மருத்துவமனைக் கட்டளையாகிறது. சில கடினமான நோயாளிகள் இந்நாளுக்குச் செல்லாதுவிட்டால், மருத்துவமனையே வாகனம் அனுப்பி வரவழைத்துவிடும். அதற்கும் தவறினால், தற்கொலை முயற்சி என்று முடிவு எடுத்துவிடும். பின் அதற்கான நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை நோயாளிக்கு ஏற்படும். எனவே அக்கறையுடன் பெறவேண்டிய பத்திரங்களை பெற்றுக்கொண்டு வரதேவியை அழைத்துக் கொண்டு நிம்மதிப் பெருமூச்சுடன் வரன் வீட்டிற்கு வந்தான்.

மாற்றுத்தாயிடம் வளர்ந்த மகனைத் தன் சொந்தத் தாயுடன் கரன் இணைத்தான். ஆனால் தன்கணவனையே அடையாளம் காணமுடியாத நிலையில் வரதேவி. வரதேவி வைத்தியசாலையில் அநுமதிக்கப்பட்டிருந்த வேளை அரசாங்க உதவியுடன் வரதேவி வீட்டைத் துப்பரவுசெய்வதற்காகவும் வரதேவியைப் பராமரிப்பதற்காகவும் வந்து போன எமல் அழகாக வரதேவியால் அடித்து நொறுக்கப்படாது புதிதாய் இருந்த சோபாவைத் தன்

மனைக்குச் சொந்தமாக்கி விட்டு அந்த இடத்தில் பழைய ஒரு சோபாவைப் போட்டிருந்த விடயம் வீட்டிற்கு வந்த பின்தான் உணரக்கூடியதாக இருந்தது. யாரைத்தான் நம்புவதோ இவ்வுலகில்? மகன் போல் இருப்பான். மானத்தைக் கவர நினைப்பான். உயிராய்பழகுவார். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார். நல்லவராய் நடிப்பார். உண்மைக் கதை தெரிந்தும் நாலு பேருக்கு நயவஞ்சகமாய் உரைப்பார். தற்போது புத்தியில் அவள் மத்திமம் என்று அறிந்திருந்தும் அவள் நிலை புரிந்துரைக்காது இகழ்ந்துரைப்பார். இப்படி எத்தனையோ கதாபாத்திரங்கள் அவளோடு வந்து உறவாடின.

தன் மனைவி நிலைக்குக் காரணகர்த்தா தானே என்று முழுவதுமாக உணர்ந்த கரன் சமையல் முதல் அனைத்துக் கடமைகளையும் பொறுப்பேற்றான். அடிக்கடி வந்து போகும் வரதேவி அத்துமீறிய அடக்கவொண்ணா காரியங்கள் கண்டு பொறுமை இழப்பான். பாடலும் பரிவும் மகிழ்வும் குதித்து விளையாடிய வீட்டில் சாத்தான் குடிகொண்டுவிட்ட நிலை கண்டு அவன் நெஞ்சில் வேதனை குடிகொண்டது. விரக்தியின் விளிம்பில் வீட்டை விட்டு

அடிக்கடி வெளியேறுவான். வீட்டில் இருந்து மனைவியின் அட்டகாசங்களைக் காண்பதற்கும் பொறுப்பதற்கும் அவன் ஒன்றும் மகாத்மா இல்லையே. சாதாரண ஒரு மனிதன் பொறுமையும் எல்லையைத் தாண்டும் அல்லவா… தன் சோகத்தை மறக்கத் தோழர்கள் துணை நாடினான். மதுவைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டான்.

சில வேளை சிறப்பான பெண்ணாகவும் சில வேளை கொதித்தெழும் பெண்ணாகவும் நேரம் ஒரு நிறம் காட்டும் வரதேவி பழைய வரதேவியாய் உருமாறும் போது அன்பான கரன் மனைவியாய் அனைத்துக் கடமைகளையும் செய்வாள். திடீரென ஆக்ரோஷம் கொண்டு செய்வது என்னவென்றே தெரியாது பேயாட்டம் ஆடுவாள்.

வந்தது வியாதி.
வாட்டுது அவள் உடலை
சொந்தக் கணவன் புரியணும்
அவளால் சொல்லமுடியாத
உளஉழைச்சலை.
வல்ல இந்நோய் வந்ததற்கு
வளமான காரணம் நானுமேயெனெ
நல்ல கணவனாகில் புரியணும் - அவன்

வலிந்து பொறுமையை மேற்கொள்ளணும்.

குடும்ப வாழ்க்கை என்பது கண்ணாடிப் பாத்திரம் போல் பேணிப்பாதுகாக்க வேண்டியது. அத்தனை உறுப்பினரும் அவதானமாக அதனைப் பயன்படுத்தாவிட்டால் கண்ணாடி வாழ்க்கை உடைந்து சுக்குநூறாகிவிடும். அதனாலேயே இல்லறத்தை நீள்கடலுக்குள் பயணம் செய்யும் படகுக்கு ஒப்பிடுவார்கள். துடுப்புக்கள் இரண்டின் துடிப்பும் சீராய் இராது போனால், படகில் பயணம் செய்வது எப்படிச் சாத்தியமாகும்.வாழப்படுதலே வாழ்க்கை. அவ்வாழ்க்கை எப்படியோ வாழ்ந்து விடுவதற்கானதல்ல. அதைநரகமாக்குவதும் சொர்க்கமாக்குவதும் வாழுகின்ற முறையிற்தான்தங்கியிருக்கிறது. சட்டரீதியாய் அத்தாட்சிப்பத்திரம் பெற்று உறவு சொல்ல ஒருபிள்ளையைப் பெறுதல் மாத்திரம் குடும்ப வாழ்க்கையல்ல. அன்புத் தொடர்புஆக்கிரமித்து இருத்தல் வேண்டும். இது உடல், உள்ளம், ஆன்மீக வேதனைகளைப்பகிர்ந்து கொண்டு ஏற்படுத்தும் ஆழமான உறவாகும். போதைக்கு அடிமையாகிய மனிதனால் குடும்ப வாழ்க்கை வேதனைப்படுகிறது சமுதாய வாழ்க்கை சஞ்சலப்படுகிறது. பணம், சொத்து,

அந்தஸ்து போன்றவையே குடும்ப சக்தி எனநினைத்து அன்புள்ள உறவுகளை மனிதன் மறந்து விடுகின்றான்.

நண்பர்கள் வருகையின் போதுமாத்திரம் ஏதாவது சிற்றுணவாய்க் கடிக்கவும் குடிக்கவும் பயன்பட்ட பழக்கம்நாளுக்குநாள் உற்ற தோழனாய், உற்சாக பானமாய் உடலுள் சென்று தீவிர உணர்வுடன் தீவிரமாய்த் தொழிற்பட்டு அன்புக்கு விரோதியானது. நீரோடும் உடல் வேண்டும். நீரோடு வாழ வேண்டும். அந்நீரோடு மது சேர்ந்தோடினால், நரகவோட்டம் நெருங்கிவிடும். உளநெருக்கடிகண்டுவிடும்.

அன்று அளவுக்கு மீறியகுடிபோதையில் கரன் கத்தி எடுத்தான். கத்தி என்றால், வெட்டும் என்று அறிந்திருந்தும் தீட்டிய கத்தியில் கூர்பரிசோதனை செய்யத் துணிந்தான்.

“விடுங்கோ! உங்களுக்கென்ன விசரேபிடிச்சிருக்கு. விடுங்கோ கத்தியை விடுங்கோ” வரதேவி போராட்டமானது புனிதம் இழந்த அவன் போக்கால் தோல்வி கண்டது.

“கிட்டே வந்தீயென்றால் வெட்டிப் போடுவன்….. தள்ளிப் போ….. ”உத்தரவிட்டான்.

தனது கையைக் கத்தியால் சீவி எடுத்தான். கையிலிருந்த வடிந்த இரத்தத்தைப் பார்த்து

“ஹா….ஹா…..ஹா…..” என்று ஒரு கோரச் சிரிப்புச் சிரித்தான். பாதங்களால் பரதம் ஆடினான். 5 விரல்களால் குருதியை அள்ளி எடுத்தான். வீட்டுச் சுவரிலே அச்சடித்தான். விரல் ஓவியங்கள் குருதிக்கலவையில் விசித்திரமாய்த் தோன்றின.

“உன்னால் மட்டுமே உத்தரதாண்டவம் ஆடமுடியுமா? இப்போது பார் நானும் ஆடிக்காட்டிறன்…. பார். நீ பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு. மயிலின் சாயல் குயிலின் குரல், புறாவின் மென்மை, தேனின் இனிமை கூட்டிக் குழைத்து அதோடு கொஞ்சம் நல்ல பாம்பின் விஷத்தையும் கலந்தால், அதுதான் நீ….”

என்று பாரசீக மொழியிலுள்ள ஒரு வாசகத்தை வரதேவிக்கு ஒப்பிட்டான். என் மகாராணி, என் இராச்சியத்து இராணி என்றெல்லாம் கரனால் வர்ணிக்கப்பட்ட வரதேவி இன்று கரனால் வசைமொழியால் வையப்பட்டாள்.இதுதான் மனிதமனமா? நரம்பில்லா நாவால் வளைத்து வளைத்துப் பேசும். வெந்தபுண்ணிலே வேல் பாய்ச்சும். சொர்க்கம் காட்டுவதாய் சொல்லி நரகத்தை சொந்தமாய் வாங்கிக் கொடுக்கும்.

அவள் அசையவில்லை கண்கள் இமைக்கவில்லை, விறைத்த பார்வையில்

விடுபடவில்லை. முதலுதவி செய்யமுன்வரவில்லை. அவள் இரக்கமுள்ளவள். ஆனால் இரக்கமற்ற விலங்குகளிடம் அவ்இரக்கம் துடிப்படைய மாட்டாது. அவள் பாசமுள்ளவள். ஆனால், பண்பில்லாதவர்களிடம் அது அடிபணிய மாட்டாது. வெட்டியவனே கட்டுப் போட்டான். பின் மருத்துவரிடம் சென்றான். எப்படிப்பட்டவனானாலும் காயம் மாற்றமருத்துவர்கள் தயங்காது தொழிற்படல் மருத்துவ தர்மம் அல்லவா. அதனால், பிழைத்துப் போனான்.

நாளுக்கு நாள் வீட்டில் பேயாட்டம். அடித்து நொறுக்கும் கண்ணாடிப் பாத்திரங்களே நாளும் அவ்வீட்டில் ஒலிக்கும் இசைக்கச்சேரி. குருதிவாடையே அவ்வீட்டின் சாம்பிராணி வாசனை. அவன் எறியும் பாத்திரங்களுக்கு எதிர் பாத்திரம் வரதேவி விட்டெறியும் கண்ணாடிப்பாத்திரங்கள். அவனுக்கு அவள் பயந்தவளல்ல. அவளை அவன் வெருட்டுகின்ற ஒவ்வொரு நடவடிக்கைகளாலும் வரதேவிக்கு அவன் மேல் இருந்த வெறுப்பு பன்மடங்காகியது. ஒரு வீட்டிற்குள் சிங்கமும் புலியும் கணவன் மனைவியாய் சேர்ந்து குடித்தனம் நடத்தின.

## என்னையே நானறியேன்

“எப்படியெல்லாம் வாழவேண்டும் என்றிருந்தேனே என்னைக் கொண்டு புதைகுழியில் தள்ளி விட்டாயே.... என்ர வாழ்க்கையைக் கெடுத்து விட்டாயே..... நல்லவனாய் நடித்து நயவஞ்சகனாய் வாழ்கிறாயே. இன்று சொல்கிறேன் கேட்டுக்கொள். இன்றிலிருந்து என் கணவன் என்னும் இடத்திலிருந்து உன்னை எரித்துவிடுகிறேன். நீயும் நானும் இந்தவீட்டில் பாம்பும் கீரியுமே. நீ அன்பு என்று சொல்லிக் கொண்டு நான் வாழும் வரை என்னிடம் நெருங்கக் கூடாது. உனக்கும் எனக்கும் உள்ள உறவு அத்துப்போய்விட்டது. நோய் என்று படுத்தாலும் என் உயிர் தான் போனாலும் உரிமை என்று சொல்லி என் அருகிலே வந்துவிடாதே. ஆனால், உன்னோடு தான் வாழ்வேன். உனக்கு உரிமை இல்லாது வாழ்வேன். என் சுகங்களைக் கண்டு இன்பம் அடையவோ என் துக்கத்தைக் கண்டு கவலை கொள்ளவோ நீ தேவையில்லை. இன்றிலிருந்து நான் வரதேவி கரன் இல்லை. நன்றாக மனதில் வைத்துக்கொள் நான் வரதேவி வரதராஜன். என் தந்தையின் பெயரையே மீண்டும் இணைத்துக் கொள்ளுகிறேன். இதைவிட கேவலம் உனக்குத் தேவையா? நீ உயிரோடு இருக்கும் போதே உன்னைக் கைகழுவி விட்டேன்”

இத்தனையும் பேசிவிட்டாள். ஆனால் எப்படிப் பேசினாள் என்று தான் அவள் உணரவில்லை. இப்போதெல்லாம் அவள் வார்த்தைக்குள்ள வலிமை உடலுக்கு இல்லை. களைந்த கேசமும் கண்ணீர் வடிந்த வதனமும் அவளுக்கு நிரந்தரமாகியது. தலையில் கைவைத்து அமர்ந்துவிட்டாள்.

கரனோ அரைப் பார்வையில் அரைப்பேச்சு ஏறி மிகுதிப் பேச்சு வெளியேறிக் கால்கள் இரண்டும் விரிந்துகிடக்க சோபாவில் மல்லாந்து கிடந்தான்.

இத்தனை சமர் வீட்டிலேநடக்கிறது. நான்கு சுவருக்குள்ளே சின்னப் பையன் இதயம் உடைந்த போனது. பயங்கர மிருகங்களிடையே அகப்பட்ட சின்னப் பூனை போல் வரன் உடல் நெளிந்து நெளிந்து ஒளிந்து அமர்ந்திருந்தான். சுற்றவர போராட்டம். சுவர்களிலே இரத்தச் சித்திரங்கள். இவ்வாறான பெற்றோரின் போராட்டத்தில் பிள்ளை வாழ்வு சின்னாபின்னமாவது ஒன்றும் புதுமையில்லையே. அவன் கண்களோ நடக்கும் சம்பவங்களை வீடியோ எடுத்து மூளையில் பதிவு செய்து கொண்டிருந்தது. தாயிடம் வரத் தயங்கினான்ளூ தந்தையிடம் பேசத் தயங்கினான்ளூ உறக்கத்தில் விழித்தெழுந்தான் நண்பர்களுடன் உறவாட மறந்தான் கற்பதொன்றும்

மனதில் பதியவில்லை. எங்கும் மௌனம் எதிலும் மௌனம்.

தம் இரத்தம் தம்மால் உயிர்கொடுக்கப்பட்ட ஒரு ஜீவன் தாம் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒரு அத்தாட்சி. இன்று பயந்து ஒதுங்கி ஓரிடத்தில் இருப்பதை இந்த இரண்டு மனங்களும் உணர்ந்து பார்க்கவில்லை. வரனின் எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் அவர்கள் மனங்களுக்கு எட்டவில்லை. “கல்லினுள் தேரைக்கும் கருப்பைக்குள் முட்டைக்கும்விருப்புற்று அமுதளிக்கும் ஈசன் உருப்பெற்றால் ஊட்டி வளர்க்க மாட்டானோ” என்பதுபோல் உயிரொன்று உருவானால் அது உலகினிலே நடமாட வழிதான் இல்லையா? எத்தனையோ வழிகள் இருக்கின்றன. ஜேர்மனியிலே பிள்ளைகள் வளர்வது ஒன்றும் பெரியவிடயமல்ல. அதை நினைத்துத் தானே வரதேவி வரனை பிள்ளைகள் பராமரிப்பு நிலையத்தில் (Jugendamt) விட்டு வளர்த்தாள். ஆனால் நான் பார்த்துக் கொள்வேன் என்று கரன் அழைத்து வந்து இப்போது சொல் மறந்து நிற்கும் நிலை வரனின் எதிகாலத்தைப் பாழடிப்பதாக இருந்தது.

கணவன் மிருகமானால் ஒதுங்கிப் பதுங்கி வாழும் அப்பாவியான ஒரு பெண் எப்படி வாழ வேண்டும்.

தீமையைத் தட்டிக் கேட்கும் தீவிரவாதியாகவோ அதட்டலுக்கோ மிரட்டலுக்கோஅடிபணியாத மனத் தைரியம் மிக்கவளாகவோ வாழ்ந்தால் அவள் வாழ்வு 'குரங்கின் கைப் பூமாலையே திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்பார்களே. சொர்க்கம் கண்மூடிக் கொண்டுதான் மானுக்கு மதயானையை நிச்சயிக்குமோ.

அம்மி மிதித்து அருந்ததி பார்த்து அக்கினி வலம் வந்து மாங்கல்யம் அணிவிக்கின்றார்களே அது ஏன்? அம்மிபோல் கல் மனம் கொண்ட ஆண்மகனும் உண்டு என்பதற்காகவோ! அருந்ததி காட்டுகின்றார்களே கற்புக்கரசியாய் கணவன் தவறுகளைக் கண்டு கொள்ளாதேஎன்பதற்காகவோ. அக்கினி வலம் வருகின்றார்களே அது ஏன்? வாழ்க்கை என்னும்தீக்கு அருகே வந்துவிட்டாய். எட்டி அவதானமாய் நில். உன் வாழ்வைஎரித்துவிடும் வல் அரக்கர்களும் இருக்கின்றார்கள் என்று அச்சுறுத்துவதற்காகவோ! இத்தனை சடங்குகளும் செய்து பத்துப் பொருத்தம் பார்த்து குடும்பமாய் இனமாய் நண்பர்களாய் சேர்ந்து குதூகலமாய் ஒருகொடுமைக்குள் அல்லவா வரதேவி வாழ்க்கையைத் தள்ளிவிட்டார்கள். இந்த சாத்திர

சம்பிரதாயங்கள் சொன்ன நற்பலன்கள் இங்கு எப்படித் தீப்பலன்கள் ஆயிற்று. கண்ணதாசன் திருமண நடைமுறைகளுக்குச் சொன்ன விளக்கம் இங்கு எப்படி மாறி நிற்கின்றது.

---

போதையில் மிருகமாயும் போதைமாறிய நிலையில் ஏதுமறியாதவனாயும் கரன் வாழ்வு தொடர்ந்தது. காலஓட்டத்தில்நிகழ்வுகள் பனி மூடிய மணலாய் தெரிவதுண்டு. நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கநடப்பவைகள் நல்லவைகளாக நடக்க முயற்சிகளை மெல்ல மெல்ல கரன் எடுத்தான். ஆயினும் நட்டமடைந்தோர் வாய் மூடி ஊமைகளாய் இருப்பாரோ! தம்மை ஏமாளிகளாக மாற்றித் தன் திறமையைக் காட்டி கரன் செய்த காரியங்கள் அவர்களால் பொறுக்கமுடியவில்லை. கரனுக்கு அவர்கள் தந்த நெருக்கடிகள் அவர்களுக்குப் பலனளிக்கவில்லை. சட்டரீதியற்ற செயல்களைச் செய்வதற்குத் தூண்டுதலாக இருந்தமை அவர்களின் குற்றமுமல்லவா! நேரடி வழிமுறைகள் இருக்க பிறரின் உதவியைத்தேடிப் போனதும் அவர்கள் தவறல்லவா! “வெறுங்கை முழம் போடுமா” கடனைத் தான் திரும்பக் கொடுக்குமா? ஒன்றுமில்லாதவன் திரும்பத் திரும்பக் கடன்பட வேண்டியநிலையே

ஏற்படும். தொழில் இல்லை. செய்த காரியங்களும் செய்த தவறுகளால்தொடரவில்லை. கரன் நிலையோ இப்போது திண்டாட்டம். வீட்டிலும் நிம்மதியில்லை. வெளியிலும் கெட்டபெயர். ஆயினும், வாழ்வில் நடந்த பல தவறுகள் தொடர இப்போதெல்லாம் அவன் விரும்புவதில்லை.

கரன் சமைக்கப்பட்டஉணவைத் தானாய் உண்பான் வீட்டில் மகனுடன் சிறிது நேரம் விளையாடுவான். மனையாளோ அவன் எதிரே வருவது கிடையாது. வரதேவி மனதில் ஆழமாக அவன் பற்றி அச்சடிக்கப்பட்ட பதிவுகளைக் காலம் அழிக்குமோ காலன் அழிப்பானோ தெரியவில்லை. அந்த அளவு கரனில் வெறுப்பு அவளிடம் இருந்தது. ஒரே வீட்டில் இருவரும் ஒருவரை ஒருவர் காண்பதே கிடையாது. இவ்வாறு வாழும் வாழ்வு இருவருக்கும் இயல்பாகிவிட்டது.

# Part 14

இந்நிலையில் வீட்டில் தொலைக்காட்சி வரன் வாழ்வின் சகோதரனாய் ஆனது. வீட்டில் அது ஆரவார சாதனமே. வானொலி வாய் ஓயாமல் கதைத்துக் கொண்டே இருக்கும்ஞ பாடிக்கொண்டே இருக்கும். அதைக் கேட்பதற்கு யாருமில்லை என்றாலும் யாரோ கேட்கின்றார்கள் என்பதுபோல்அவ்வீட்டில் தன் வேலையைச் செய்து கொண்டேயிருக்கும்.

தொலைத்தொடர்பு சாதனங்கள் அந்நியமொழி பேசும் நாடுகளில் வாழுகின்ற மக்களுக்கு உற்ற உறவுகள் போலவே தென்படுகின்றன. வீட்டை விட்டு வெளியேறினால் வித்தியாசமான மனிதர்கள் புரியாதபல மொழிகள், ஆரவாரமான பொழுதுகள் அந்நிய உணர்வு. இத்தனையையும் காணும் தமிழர்கள் வீட்டிற்குள் வந்தால் தாயுடன் உறவாடுவதுபோல் தாய்மொழியுடன் உறவாடப் பல தமிழ்மொழி வானொலிகள் தொலைக்காட்சிகள் ஐரோப்பிய நாடுகளில் தொழிற்படுகின்றன.

வானொலிகள் ஒவ்வொன்றும் தத்தம் கடமைகளை தத்தம் விருப்புக்களுக்கு ஏற்றாற் போல் நடத்திக் கொண்டிருக்கின்றன. பாடல்களே

நோக்கமாகக் கொண்டவைகளும் செய்திகளை நோக்கமாகக் கொண்டவைகளும் தமிழ்உணர்வுகளை வெளிப்படுத்தும் நோக்கத்தையுடையவையும் என பற்பல நோக்கத்துடன் தமது இலக்குகளை நோக்கித் தமது நிகழ்ச்சிகளை நகர்த்திக் கொண்டிருக்கின்றன. சில வீடுகளில் வானொலிகள் கேட்பதேயில்லை. தொலைக்காட்சிகளுக்கு மாத்திரம் தம்செவிப்புலன் கட்புலன் இரண்டையும் இணைத்து மகிழ்வடைகின்றனர். சில வீடுகளில் தொலைக்காட்சி முக்கியத்துவம் பெறுவதில்லை. வானொலிகளே வீட்டிலுள்ள அறைகள் எல்லாவற்றிலும் ஒலிக்கும் படியான வசதிகளைச் செய்து காற்றலைகளின் மூலம் தமிழர்கள் இன்பம் அநுபவிக்கின்றனர்.

இவ்வாறே தினமும் காதுநுழை இன்பம் பெறவும், கற்ற இன்பம் பகிரவும் பயன்படும் இலண்டன் தமிழ் வானொலி என்னும் பெயருடன் இயங்கும் ஒரு வானொலி வரதேவி வீட்டில் வலம் வருவது இயல்பு. அதைஅவள் கேட்கின்றாளோ இல்லையோ அவ்வீட்டின் ஒவ்வொரு பொருள்களும் கேட்கும். சுவர்களில் அதன் ஒலி பட்டுத்தெறிக்கும். அது வளருகின்ற எதிர்கால வாரிசுகளுக்காகவும் அவர் தம் திறமைகளை வளர்த்து எடுப்பதற்காகவும்

இலண்டனிலிருந்து ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் இதில் தமிழ்ச்சுவை பருகவும் தம் தமிழறிவை மேம்படுத்தவும் என வயதானோரும் வந்துகுவிவது வழக்கமாகப்பட்டது. இதனால் உயர்ந்தோர் பலர். தம் உயர்வுக்காய் இவ்வானொலிக்கு உதவுவோரும் பலர். இதனாலே உலகெங்கும் பல இதயங்களில் நீங்கா இடம்பிடித்த பெருமையுடையது இவ்வானொலி.

அன்று வரதேவி சூடுபறக்கும் கோப்பிக் கோப்பையை கையில் எடுத்து தனது சோபாவில் அமர்ந்தாள். உதடுகளால் ஊதிய கோப்பியிலிருந்து பறக்கும் ஆவியானது நடனம் போட்டு bye சொல்லிப் பிரிந்தது. கோப்பியோ அவளுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. உதடுகள் முத்தமிட கோப்பியை உள் அனுப்பிய கோப்பிப் கோப்பை அவள் கரங்களின் பிடியில் அமர்ந்திருந்தது. ஆனாலும் மூளைக்குள்ளே ஒரு வெறுமை. அவள் பதிந்து வைத்த எதையுமே மூளை பக்குவப்படுத்தவில்லை. ஒரு நொடியில் வெறுமையை வீழ்த்திஅதன்மேல் அமர்ந்து கொண்டது வானலை. இலண்டன் தமிழ் வானொலி காதினை வருடித் தானாகவே உள்நுழைய இடம்தேடி இதயம் நுழைந்தது.

## என்னையே நானறியேன்

அந்த ஒரு குரல் இதயத்து நரம்புகளை மீட்டியது. இளையவன் மீட்டிய இதயராகம். கவிதை என்னும் வரிகளால் காந்தமாய் வரதேவி இதயத்தை இழுத்தெடுத்தது. ஆன்மாவின் உன்னத ராகங்களைத் தட்டி எழுப்பியது. அக்கணமே அடங்கிக் கிடந்த அவள் அறிவு விழித்துக் கொண்டது. சிந்தனை தூண்டப்பட்டது. சோர்வுகள் அகற்றப்பட்டன. சுதந்திர உணர்வு பெருக்கெடுத்தது. வானொலியில் ஒலித்த அந்தக் குரலுக்கும் வரதேவிக்கும் என்ன தொடர்பு. எங்கிருந்தோ தன் குரலால் வரதேவி நோய்க்கு மருந்தான மாபெரும் சக்தி அந்த இளையவன் குரலுக்கு எப்படி வந்தது. ஒலியலையின் சக்தியை வாய் மூலம் வர்ணிக்க முடியுமா? இந்தப் பிரபஞ்ச சக்திக்கு ஆற்றல் மிக அதிகம் என்று சொல்லி விளங்க வைக்கத் தேவையில்லை.

காற்றலை வாழ்வியல் கூறும். வாழ்வைக் குதூகலமாக்கச் சிரிக்க வைக்கும். அறிவுக்குப் புதிர் போடும். ஆனால் ஒரு மனம் பேதலித்த பெண்ணை மகிழ வைக்குமா? அழிந்து கொண்டிருக்கின்ற வாழ்வுக்கு ஆறுதல் அளிக்குமா? ஆம் வானொலி கூட சிலருக்கு வைத்தியக் கருவியாகின்றது. மின்னலென

மூளையில் பட்டுத் தெறித்த அந்தக் குரலுடன் அவள்பூரண நிறையறிவு நிரம்பப் பெற்றாள்.

யார் யாரோ இதயத்துள் வருகின்றார்கள் போகின்றார்கள். வந்தவர்கள் யாவரும் மனதுள் நிலைத்து நிற்பதுவுமில்லை. நிலைத்து நிற்பவர்கள் தொடர்வதுவுமில்லை. கால ஓட்டத்தில் கடந்து வந்த பாதையில் நண்பர்கள் ஆயிரம் நல்லவர்கள் ஆயிரம். ஆனால் நின்றுநிலைப்போர் எத்தனை? இங்கு வரதேவி நோய்க்கு மருந்தான அந்தக் இளையவன் குரலானது வரதேவி என்றும் சந்தித்திராத குரல். இதுதான் அலைகளின் தாக்கம் என்று விஞ்ஞானிகள் உரைக்கின்றார்களோ! குரல்கூட மருந்தான மாயம் இங்கு தான் கேள்விப் படுகின்றோம்.

எழுந்திடு பெண்ணே! எழுந்திடு!
உன் இமைக் கதவுகளை இழுத்து மூடாதே
உன் இதயமது இருண்டுவிடும்
உன் பஞ்சுமெத்தையிலே முட்கள் பரந்து கிடக்கட்டும்
உன் இருக்கையிலே இரும்பு ஆணிகள் நிமிர்ந்து நிற்கட்டும்
தூங்கிவிடாதே தூரிகை கொண்டு உன் வாழ்வோவியம் தீட்டு

பாதையிலே ரோஜாக்கள் மட்டும் விரிந்து கிடப்பதில்லை
கல்லும் மண்ணும் விதந்து கிடக்கும் பூமியிலே
வீரத்துடன் எழுந்து நடந்து செல்
உன் இரத்தச்சுவடுகள் இரத்த சரித்திரம் பேசட்டும்
பூமியைச் சுருட்டி எடுத்து உருட்டி விளையாடு
நச்சுப்பாம்புகள் அதில் நசுக்கப்படட்டும்
மறைந்த உண்மைகள் விஸ்வரூபம் எடுக்கட்டும்
பெண்ணே! உன் மனிடப்பிறப்பு மாய்ந்துவிடுவதற்காகவல்ல
காலத்தை வென்று காவியம் படைக்க
காலத்தை வென்று காவியம் படைக்க

வானொலியின் குரல் காதுக்குள் சென்று இரத்த நரம்புகளைச் சுண்டிவிட்டது. துடித்து எழுந்தாள். வானொலியின் ஒலியைவீட்டின் ஆட்சி ஒலியாக்கினாள். அவ்வானெலியில் அடிக்கடி உச்சரிக்கப்படும் அந்த வானொலிக்குச் சொந்தமான தொலைபேசி இலக்கத்தை மனம் எண்ணும் முன் விரல்கள் வரைந்தன. எண்களை மனதிலும் தொலைபேசியிலும் தட்டினாள்.

"வணக்கம்....." என்ற குரல் காதினுள் சென்று மனதுக்குள் குளிர்ச்சியை ஏற்படுத்தியது. வானொலி

நிகழ்ச்சித் தொகுப்பாளர். வானொலிக்குச் சொந்தக்காரர். பலரின் மூளையைத் தட்டி எழுப்பி வரிகள் மூலம் வாழ்வியலை ஆராய்ந்தெடுப்பவர். தூண்டித் தூண்டி அறிவு விளங்கச் செய்பவர். எதிர்முனையிலிருந்து பதிலில்லாத காரணத்தால் மீண்டும்

"இருக்கிறீர்களா....?

இதுவரை வானொலிக்கு குரல் கொடுத்துப் பழக்கம் இல்லாத காரணத்தால், பதட்டமடைந்தாள் வரதேவி. வார்த்தைகள் உண்டுவாக்கியம் தொடரவில்லை. சொற்களைப் புணர்ந்து ஒருங்கமைத்து வாக்கியங்களை உருவாக்க மூளை தயங்கியது. பேச்சுக்கலையை முதன்முதல் பழகும் குழந்தைபோல் "வண...க்...க....ம்...." என்றாள்.

"சொல்லுங்கள். காற்றலையில் இணைந்திருக்கின்றீர்கள். புதிய குரலாக இருக்கிறதே? நீங்கள் யாரென்று உங்களை அறிமுகம் செய்யுங்கள். நீங்கள் வானொலியை எப்போதும் கேட்பீர்களா?

"நான்... நான்.... வரதேவி.... வரதேவி வரதராஜா. எங்கள் வீட்டில் வானொலி கேட்கலாம்"

"கவிதை கேட்டீர்களா...? கவிதை பிடித்திருந்ததா....?

"யாரது......? கவிதை சொன்னவர் யார்......? அதைநான் கேட்கவேண்டும். அந்தக் குரலைக் கேட்கவேண்டும்" வார்த்தையில் தெரிந்ததுடிப்பு ஆவலை விளம்பரமில்லாமல் வெளிப்படுத்தியது.

மூளை தெளிவடைந்தது. வார்த்தைகள் உயிர் பெற்றன.

"எனக்குள் அச்சடித்த மொழியை என்னிடமிருந்து இலகுவில் அழித்துவிட முடியாது. உங்கள் உணர்வுகளுக்குச் சேவை செய்யும் ஊடகமாகிய மொழியை பாதகமில்லாமல் பதிந்து வைத்திருக்கும் ஞாபகப்பலகை நானே. தேவைப்பட்டால் அட்சயபாத்திரம்போல் அள்ளிவழங்குவேன். அழித்துவிடமாட்டேன்" என்று அழுத்திச் சொல்லிய மூளை அவளுக்காகத் தொழிற்படத்தொடங்கியது.

மீண்டும் உரிமையாளர் நிகழ்ச்சித்தொகுப்பில் தன் கடமையை ஆற்றத் தொடங்கினார். புரிந்தது அவருக்கு. அவள்மனநிலையின் மயக்கத்தை நன்றாகப் புரிந்து கொண்டார். எத்தனை ஆண்டுகள் இத்தகுமனித மனங்களுடன் வானொலிக்கருவி கொண்டு அளந்தெடுத்திருக்கின்றார்.

"கோபி என்னும் சிறுவன் தந்த கவிதையைத்தான் நீங்கள் கேட்டீர்கள். அதில் நீங்கள் உள்வாங்கிய

வரிகளை உங்கள் உள்ளத்தைத் தொட்ட வரிகளைச் சொல்லுங்கள். கேட்போம். ஆயிரக்கணக்கான மக்கள் செவிவழி நுழைகிறது இவ்வானொலி. உங்கள் கருத்துப் பலரைச் சென்றடையட்டும்"என்று மீண்டும் அவள் வார்த்தைகளுக்கு அறிவிப்பாளர் தூபம் போட்டார்.

ஆனால் வரதேவியால் தொடர்ந்து பேச முடியவில்லை. ஆனாலும்

"எனக்கு சரியாகச் சொல்ல முடியவில்லை. அந்தக்குரலைக் கேட்டேன். அந்தக்குரல் என்னை மீட்டுத் தந்துள்ளது. இத்தனை நாள்களும் நானாக நான் இல்லை. என்னையே நான் அறியேன். உங்கள் கேள்விக்கு எப்படிப் பதில் என்னால் தரமுடியும். ஆனால், இந்த வசியக்குரல் என்னுள் இணைந்ததனால், தொடந்து பேசுவேன். இந்த வானொலி எனக்கு உயிர் கொடுத்துள்ளது. அந்தக்குரல் என்னுள் இணைய வேண்டும். தயவுசெய்து மீண்டும் ஒருமுறை அந்தக் கவிதையை ஒலிபரப்புவீர்களா?

மூளைக்குள் பிரகாசித்த சுடர். வெளிச்சத்தை வீசவேண்டுமானால் இதமான அந்தக் குரலுடைய

சக்தி செலுத்தப்பட வேண்டும் என்றுநிச்சயமாக வரதேவி எண்ணினாள்.

மீண்டும் கோபியின் கவிதை வானலையில் வரதேவி விருப்பத்திற்கேற்ப வலம்வந்தது. இப்போதெல்லாம் வரதேவிக்கு மருந்துமாத்திரைகளை விட வானொலிச் சத்தம் சுகமாய் இருந்தது. காற்றலையில் அவள் குரல்வீசப்படுகிறது. கவிதைகளாய் அவள் எண்ணம் வெளிப்படுகிறது. பாடல்களாய் அவள்குரல் தெளிவடைகிறது. வானலை உறவுகளின் சொந்தம் பெருகுகிறது. ஆயினும், அடிக்கடி வந்து போகும் ஆதாரபுத்தியின் தடுமாற்றத்தில் அவள் சில சமயங்களில் தடுமாறிப் போவாள். எதிர்காலம் என்ன சோதனைகளை வேதனைகளைத் தரப்போகின்றதோ எனத்துடித்துப் போவாள். சரியான முறையில் முழுவதுமாகத் தன்னால் வளர்க்க முடியாது போன தன் மகனை எண்ணி வேதனைப்படுவாள். நேர்மையற்ற வாழ்க்கைத் துணைவன் நிலை கண்டு ஆக்கிரோஷப்படுவாள். அடிக்கடி வந்து தொல்லை கொடுக்கும் நோயின் தாக்கத்தில் அக்கினியாவாள்.

என்னையே நான் அறியேன் - என்
இதயத்து வேதனை புரியேன் - பழைய
நிலையது நினைவில் வருவதனால்

## என்னையே நானறியேன்

மனதில் நிம்மதி மலர்வதெப்போ?
இப்போது வரதேவி வரம் இழந்த தேவியானாள்.சோகங்கள் என்றும் தொடர்வதில்லை. அடிக்கடி இன்பங்களும் வந்து போகும். இதுஇயற்கை கற்பிக்கும் பாடம். வாழ்வின் அர்த்தமும், மகிழ்ச்சியும் ஆழமானஅன்பிலேயே வரும். காற்று மனதுக்கு அவசியம் போல் இன்பமான வாழ்வுக்கு நல்லதொடர்பும் உறவும் தேவை. அன்பு செய்து உரிமை பாராட்டி வரவேற்புணர்வு தரஒருவர் இருக்கும் போது மகிழ்ச்சி பெருகும் அந்த இன்பமான வாழ்க்கையை நோக்கி நம்பிக்கையோடு நடக்கிறாள் வரதேவி.

# Part 15

வரம் கொண்ட வாழ்வது
திறம் கெட்டுப் போனாலும்
உரம் கொண்ட வரமது
உருக்குலைக்கும் உருக்கினார் வாழ்வை

வாழ்நாட்களில் வந்து போகும் சோகநினைவுகள் வரதேவி மூளைப் புதையலில் அழியாத அறிவுப்பலகையாய் அச்சடிக்கப்பட்டிருந்தன. அவ்வப்போது தலைகாட்டும் நினைவுகளை விரட்டியடிக்க வரதேவி விரும்பிய பணிமீண்டும் வீடு தேடி வந்தது. திறமையும் அறிவும் மறைக்கப்பட்டாலும் மறுக்கப்பட்டாலும் மடைதிறந்த வெள்ளம் போல் ஒரு நாள் பெருக்கெடுத்தே தீரும். இதனாலேயே அறிவுச்செல்வம் அழிக்க முடியாத செல்வமாய்க் கருதப்படுகிறது. அறியாத மொழி, புரியாத மனிதர்கள் தெரிந்திராத வாழ்வு எதுவாய் இருந்தாலும் அறிவுச் செல்வம் கிடைக்கப்பெற்றார் அந்தஸ்து வாழ்வை அகிலம் எங்குசென்றாலும் அடையப் பெறுவார். வரதேவி இவ்வாறே எதிர்காலத் தலைமுறைகள் தமிழால் தலை நிமிர்ந்து நிற்கத் தேடித் தன் மனைபுகுந்தார் தம் வேண்டுகோளுக்குத்

தலைசாய்த்தாள். வீட்டிலிருந்தபடி வீடுதேடி கல்வி அணைத்தெடுக்க விரும்பும் சிறார்களை அவள் அணைத்தெடுத்தாள். வீடு கல்விக்கூடமானது.

மீண்டும் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் மனதில் பிரகாசித்தது. மீண்டும் ஆர்வ வெள்ளம் மனமெங்கும் பாயத்தொடங்கியது. தொழிலாய்க் கொள்ளாது, பணியாய்க் கொண்டு பயின்ற பல கல்விக் களஞ்சியங்களைப் பாலர் தொட்டுப் பருவ வயதினர் வரைத் தாரைவார்க்கத் தீர்மானித்தாள். மனநிறைவு பெற்றாள். ஆசிரியத்தொழில் நாளுங் கற்று நாளுங் கற்பிக்கும் தொழிலல்லவா! அவள்; கவனம் இதில் ஈடுபடும்போது வேற்றுத் தாக்கங்கள் மனதைத் தொட்டுத் தொடராது. மாணவர்கள் கற்க ஆசிரியர்கள் கற்கவேண்டியதும் கற்பிக்க வேண்டியதும் கடமை அல்லவா. இனியொரு தடவை இவ்வரதேவி கற்பித்தலில் தடை காணமாட்டாள். தடைசெய்வார் துணிவு தளர்ந்து நிற்கும்நேரமிதுவென முற்றாக நம்பியதனால் முடிவாய் இப்பணிக்கு முகங்கொடுக்கத் துணிந்தாள். வாரம் இருதடவைகள் காணும் தமிழ்ச்சிறுவர்கள் முகங்கள் அவள்மனதிற்கு மருந்தாகியது. நோயை விரட்டியடிக்கும் பயிற்சியாகியது.

## என்னையே நானறியேன்

வானொலி வரதேவிக்குச் சேர்த்துத்தந்த சொந்தங்கள் உலகத்தையே ஆள்காட்டி விரலால் சுற்றி விடுவேன் என்னும்நம்பிக்கையைத் தந்தது. தொலைபேசி இலக்கங்கள் தாங்கிய புத்தகம் அவள் தினமும்படிக்கும் பகவத்கீதையானது. பலரின் அறிவுரைகள் வரதேவிக்கு உற்சாக பானமானது.மௌமாய்க் கேட்பாள். மனதிலே பதிப்பாள். பழைய வார்த்தைகளின் தீவிரம் அணைந்த நெருப்பாகியது. அமைதியான பொழுதுகளில் நடந்துவர வீதிக்கு இறங்குவாள்.

சமயம் பார்த்துக் கரன் அன்று தொலைபேசிப் புத்தகத்தைப் புரட்டினான். அதிலிருந்து ஒரு இலக்கத்தைத் தட்டினான்.

"ஹலோ....."

"வணக்கம். நான் கரன். வரதேவியினுடைய கணவன் பேசுகிறேன்"

முன்னமே வரதேவியால் கரன் பற்றி தெளிவாகத் தெரிந்திருந்த அந்த இலக்கத்திற்குச் சொந்தக்காரி நிலா.

"சொல்லுங்கள். எப்படிச் சுகமாக இருக்கின்றீர்களா?

"ஆம். நல்ல சுகம்.."

## என்னையே நானறியேன்

"நான் உங்களிடம் ஒரு விசயம் கேட்கவேண்டும். என்னென்றால் ஒரு சஞ்சிகை வெளியிடுவதற்கு இருக்கிறேன். முதலிலே செய்து வந்தேன். பிறகு நிற்பாட்டி விட்டேன். ஆனால், உங்களுக்குத் தெரியாமல் இல்லைதானே. இடையில் வந்த பிரச்சினைகளால் நிற்பாட்டி இருந்தேன். மாதம் ஒரு புத்தகமாக வர வேண்டும் என்று நினைக்கிறேன். உங்களால் முடிந்த ஆக்கங்களை எனக்குத் தரமுடியமா?"

வீட்டினுள் நுழையத் துடிக்கும் பாம்பை வரவேற்று வீட்டிற்குள் வைக்கமுடியுமா? வரதேவியால் விபரிக்கப்பட்ட திரைப்படம் மூளைக்குள் ஓடுகின்ற போது திரைக்கதைக்குள் நாமும் நுழையமுடியுமா? என்று சிந்தித்த நிலா

"எனக்கு இப்போது நேரம் இல்லை. நேரம் கிடைத்தால் மட்டுமே எழுத்துத் துறை பற்றிச் சிந்திப்பேன். முடியுமானால் எழுதி அனுப்புகிறேன். நிச்சயம் இல்லை" நினைத்ததை மனதினுள் மறைத்து தொலைபேசியைத் துண்டிக்க முடிவெடுத்தவளிடம்.

"பறவாயில்லை. ஒரு பாப்பாப் பாட்டாவது எழுதிக் கொடுக்கின்றீர்களா? மீண்டும் அவன் கெஞ்சல்.

யாராவது எது கேட்டாலும் இல்லை என்று தலையசைக்க முடியாத பண்பு கொண்ட நிலா "முயற்சிக்கின்றேன்" என்று கூறினாள்.

"என்னைப் பற்றி வரதேவி உங்களிடம் சொல்லியிருப்பா என்று நினைக்கிறேன். அவ அப்படித்தான் சொல்வா.... என்னிடமும் பிழை இருந்தது தானே. அவவுடைய நிலையில் எல்லோரும் அப்படித்தான் இருப்பார்கள். அதனால் விட்டுவிட்டேன். அவ நினைப்பது போல் நடக்கட்டும். இனி என்னால் அவக்கு எந்தத் தொந்தரவும் வராது. எந்த மனிதனும் அப்படியே இருப்பதில்லை. காலம் அவன் போக்கை மாற்றும். அப்படித்தான் வரதேவிக்கும் எனக்கும் இடையே அடைபட்ட வாசல் திறக்கும் என்று நம்புகிறேன். பொறுத்திருந்து பார்ப்போம். நீங்கள் நான் கேட்ட பாடல் அனுப்புவீர்கள் என்று நம்புகிறேன். சரியா.... இப்போது வைக்கிறேன்"

காற்றலையிலிருந்து பிரித்தெடுத்து நிலாவின் காதினுள் தொலைபேசி தந்த கரனின் பேச்சலையானது என்ன காரணத்திற்காக தன் காதுக்குள் ஒலித்தது என்னும் உண்மை புரிந்து கொண்டாள்.

"இவர் பேசியது எல்லாவற்றையும் வரதேவியிடம் நான் ஒப்புவிப்பேன் என்று இவர் நினைக்கிறாரோ! அவரவர் குடும்பப் பிரச்சினைக்குள் உள்நுழைந்து குழப்புவது யாருக்குத் தேவை. பாப்பாப் பாட்டுக் கேட்டு தொலைபேசி எடுத்துத் தான் பட்டபாடும் வரதேவியை படுத்தியபாடும் பற்றிக் கதைக்கத்தான் முயற்சித்தாரோ! இது நிலா மனதில் ஓடிய எண்ணப்பதிவு.

ஆனால் நிலா எதுபற்றியும்வரதேவியிடம் ஒப்புவிக்கவில்லை. ஏனென்றால் நிலாவோ வரதேவி மனஓட்டத்தில் கல்விழுந்து குழப்பினால், அக்கல்லைப் பாறாங்கல் இல்லாமல் பனிக்கல்லாய் மாற்றும் கலையைக் கொண்டிருக்கின்றாள் அல்லவா! வரதேவியின் மனம் என்னும் அபாய ஊஞ்சல் அறுந்து விடாமல் ஆறுதல் நூல் கட்டிவிட்டிருக்கின்றாள் அல்லவா!சுகமான நட்பு பல சுகந்தங்களை வாழ்வுக்கு காட்டிவிடும். தீநட்பு படுகுழியில்வீழ்த்திவிடும். இது அறிந்தும் சில மனிதர்கள் மாண்டுவிடுகின்றார்கள். வரதேவி மனதில் கடல்விழு பொதியாக கிடக்கும் நினைவுகள் மீளும்போது நிலாவுடன்நினைவுகளைத் திசைதிருப்ப வார்த்தைச் சங்கிலியைக் கட்டுவாள். நிலாவிடம் இருந்து அச்சங்கிலி பற்றித் தொடரும்

வார்த்தைகள் மீண்டும் கடல்விழு பொதியாக நினைவுகளை அமிழ்த்திவிடும். அவளைப் பழைய நிலைக்குத் திருப்பி அனுப்பாமல்தொலைபேசி என்னும் மருந்து ஊடகம் கொண்டு மருத்துவம் பார்க்கும் நிலா கரன்தன் இலக்கத்தை களவாய் எடுத்துக் கதை அளந்த செய்தியைக் கூறுவாளா? நிலாமறைத்தாள். ஆனால் நிலா போல் யாவரும் இருப்பார்கள் என்பது நிச்சயம் இல்லையே.எப்படியோ தன் பேச்சுத் துணைகளுடன் கரன் தொடர்பு கொண்ட விடயத்தை வரதேவிஅறிந்து கொண்டாள்.

“வேண்டாம் என்று நான் ஒதுக்கினாலும் என் வழியில் ஏன் நுழைகின்றீர்கள். என் நண்பர்களுடன் நீங்கள் கதைக்க வேண்டியதன் அவசியம் என்ன….? நல்லவரென்று நாமம் போடப் போகின்றீர்களா…..? எல்லோருக்கும் உங்கள் நாடகம் தெரியும். தெரியாது என்று மட்டும் நினைத்துவிடாதீர்கள். என் புத்தகத்தை எடுத்து எனது நண்பர்களுடன் கதைக்க உங்களுக்கு என்ன துணிவு இருக்கும். இது உங்களுக்கு நாகரீகமாகப் படுகின்றதா…… உங்களுடைய தொடர்பு தான் வேண்டாமென்று என்ர மனஆறுதலுக்குச் சிலரோட கதைக்கிறன் அதுகூட உங்களுக்குப் பிடிக்கவில்லையா..?

இரகசியமாகக் கரன் செய்த காரியத்தில் ஆத்திரமடைந்த வரதேவி வார்த்தைகளினால் சுடுநீர் ஊற்றினாள். மனம் வெந்த கரனும்

“வரா! உன்னோட நல்லா எல்லோரும் பார்த்துப் பெருமைப்படும் படியாக வாழவேண்டும் என்று தானே உன்னை இலங்கையிலே இருந்து கௌரவமாக கூப்பிட்டேன். இப்போது ஏதேதோ எல்லாம் நடந்துவிட்டது. அதற்காக நான் முழுதாகக் கெட்டவன் என்றே கணக்கெடுத்து விட்டாயா?

“போதும் போதும் நிறுத்துங்கள். உங்களுடைய கதைகள் எல்லாம் கேட்டுத்தான் இன்று பொல்லாதவள் என்று பட்டம் சுமந்து வாழ்கின்றேன். மற்றவர்கள் பார்த்துப் பெருமைப் படும்படியாக வாழவேண்டிய அவசியம் என்ன வந்திட்டு. நாம் நமக்காக வாழவேண்டும். மற்றவர்களுக்காக வாழப் போய்த்தான் உங்கள் வாழ்வு இப்படிப் போனது. என்னை ஏன் இங்கே வரச் சொன்னீர்கள்? வந்ததாலே தான் எனக்கு இந்தநிலை. இப்போது என் நிம்மதிக்குப் பேசுகின்றவர்களையும் குழப்பத் தொடங்கிவிட்டீர்கள்” தன்பக்கப் பார்வையை கரன் பக்கம் விரித்துரைத்தாள்.

# என்னையே நானறியேன்

எதைத்தான் தான் செய்தாலும் அதில் எந்தத் திருப்தியும் கிடைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்த கரன்,

"சரிவிடு..... நீ உன்ர எண்ணப்படி நட. நான் உன் குறுக்கே வரல்ல. நான் எப்போ உனக்கு நல்லவனாத் தெரியிறனோ அப்ப என்னோட மனத்தை அறிந்து சந்தோசமா என்னோட வாழ். இல்லையென்றால், நான் உன்னவிட்டிற்றுப் போனாப் பிறகு என்னைப் பற்றி யோசித்துப்பார். அப்ப என்ன நினச்சி நிச்சயமா கண்ணீர் விடுவாய் பார். இதுக்கு மேல நான் எதுவும் சொல்லவில்லை" வரதேவி அன்புக்காய் ஏங்கிய கரன் சொற்கணையால் அரித்துப் பிய்ந்த மனதுடன் புறப்பட்டான். வரதேவி அதில் எந்தவித தாக்கமும் இன்றி விலகினாள்.

சில வேளை வீட்டில் சில வேளை எங்கேயோ..... எங்கே அவன் என்று அவள் என்றுமே எதிர்பார்த்துக் காத்திருப்பதில்லை. வாழ்க்கை அழைத்துக் கொண்டு செல்லும் வழியில் வரதேவியும் கரனும் போகத் துணிந்தார்கள்.

இவ்விரண்டு முரண்பட்ட மனங்களுக்கிடையே மகனாய் வரனின் வயது நிற்காது வளர்ந்தது. வாழ்வும் தொடர்ந்தது. பாடசாலைக் காலங்களும்

நகர்ந்தன. தாயும் தந்தையும் போட்டி போட்டுத் தன் மகனுக்குப் பாசத்தை வழங்கினார்கள். தம்முடைய பூசல் தம்மகனுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதில் இருவரும் கவனம் எடுத்தனர்.ஆயினும் அவர்களை மீறி நடக்கும் போராட்டத்திற்கு அவர்களால் தடை விதிக்க முடியவில்லை. தோளுக்கு மேல் வளர்ந்துவிட்டான். தேவை அவதானம் என்றிருந்தாலும், தேவை தேவைப்படும்போது அவர்கள் விட்ட பிழை சரியான முறையான கல்வியை வரனுக்குக் கொடுக்கத் தவறியது. ஆனாலும், வரனோ சோர்ந்து விடவில்லை. தொடர்ந்து கற்றான்.

வீட்டின் வாசல் அழைப்புமணி அடித்த ஓசை கேட்டு “யாரது.... யாராக இருக்கும்....” என்னும் கேள்வியுடன் கதவைத் திறந்தாள் வரதேவி. பொதுவாகவே ஜேர்மனியில் முன்னறிவித்தல் இன்றி விருந்தினர்கள் வருவது கிடையாது. வேலை பிள்ளைகளின் கலை வகுப்புக்கள் மருத்துவரிடம் அலுவல் அல்லது ஏதாவது விழா இப்படி வீட்டை வெறுமையாக்கிவிட்டுக் கிளம்பிவிடுவார்கள். இக்காரணத்தினால் வீட்டிற்கு வரும் விருந்தாளிகள் முன்னமே செல்கின்ற வீட்டிற்கு முன்னறிவித்தல்

கொடுப்பது வழக்கமாக இருந்தது. ஆனால் இன்று முன்னறிவித்தல் இன்றி வருவது யாராக இருக்கும் என்ற எண்ண ஓட்டத்துடன் வாசல் கதவின் சங்கிலியை மாட்டிவிட்டுக் கதவைத் திறந்தாள் வரதேவி. இப்போதெல்லாம் அவள் மனித உருவில் நடமாடிய மிருகம் ஒன்று தன்னைச் சூறையாடத் துடித்த சம்பவத்தின் பின் வாசல் கதவு திறப்பதில் கொஞ்சம் கவனம் எடுப்பது வழக்கம். கதவில் பூட்டியிருக்கும் இரகசியக் கண்ணாடியினூடாக வருவது யாரென ரொம் அன்ட் ஜெரியில் (Tom and Jerry) வரும் எலிபோல் நோக்கினாள். வேறுயாருமல்ல கீதாவே தான். கீதாவின் இரு பிள்ளைகளும் கூடவே வர சந்தோசம் மிகுதியுடன் கதவைத் திறந்தாள்.

“என்ன கீதா ஒன்றுமே சொல்லிக் கொள்ளாமல் திடீரென்று..... வாருங்கள் வாருங்கள்.....” என்று அன்பொழுக அழைத்தாள்.

“சும்மா தான் அக்கா. கடைக்கு வந்தனாங்கள். ஒருதடவை உங்களையும் பார்த்திட்டுப் போவோம் என்று பிள்ளைகள் சொன்னார்கள். அதுதான்..... இந்தத் திடீர் பிரவேசம்.....” என்று கூறியபடி உள்ளே வந்தாள்.

“எப்பிடி அன்ரி இருக்கின்றீர்கள்”

## என்னையே நானறியேன்

“நான் நல்லாத்தான் இருக்கிறன். நீங்கள்எப்படி? அன்ரியைப் பார்க்க எண்ணம் வந்திட்டுதா? நீங்கள் வந்தது நல்லசந்தோசமா இருக்கு. வரன் அறைக்குள்ள இருக்கிறார். போய்ப் பாருங்கள்” என்று வரதேவியைத் தனியே இருக்கும் தன் மகனிடம் பேச அனுப்பிவிட்டாள்.

பிள்ளைகள் இருவரும் வரன் அறையினுள் சென்றுவிட பெரியவர்கள் இருவரும் வரவேற்பறையினுள் அமர்ந்தனர். தேநீர் தயாரித்து எல்லோருக்கும் பரிமாறிய வரதேவியிடம் அவள் உடல்நிலை பற்றி கீதா வினவினாள்.

“எப்படி இருக்கின்றீர்கள் அக்கா?

“ஆ....ஏதோ இருக்கிறேன்”

“ஏனக்கா இப்படிச் சொல்றீங்கள்”

“உண்மையைத்தானே சொல்லவேண்டும் கீதா”

“அண்ணா எங்கே போயிட்டார் அக்கா?

“எனக்கென்ன தெரியும் கீதா.... அவர் எங்கேபோறார்? என்ன செய்கிறார்? இதெல்லாம் யார் கேட்கப் போறார்கள். என்னுடையதலைவிதி இதுதான் என்று இப்படி வாழ்கிறேன். மாரிகால மரங்களைப்போலத் தான்என்ர வாழ்வும் அடங்கியிருக்குது. அவைகளுக்கும் உயிர் இருக்கு. உடலிருக்கு.

உணர்வுகளெல்லாம் உதறித்தள்ளிவிட்டு பட்டமரமாய் நிற்குதுகள். நல்ல காலம் எப்போ வரும்? நாம் எப்போது இலைகள் விட்டுத் துளிர்த்து மீண்டும் குதூகலமாகஇருப்போம் என்று எதிர்பாத்து நிற்குதுகள். நானும் அப்படித்தான்.சொல்லப்போனால் நானும் பட்டமரம் தான். நானும் எனக்கு எப்போ நல்ல காலம் வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறேன்"

"இப்படிச் சொல்லாதீங்கள் அக்கா. எந்தக் குடும்பத்தில் தான் பிரச்சினை இல்லை. எவர்தான் 100 வீதம் நிம்மதியாக வாழுகின்றார்கள். எல்லோரும் தங்கள் பிரச்சினையை மூடி மறைத்துத் தம்பதிகளாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பார்க்கிறவர்கள் கண்களுக்கு அவரவர் பிரச்சினைகள் தெரிவதில்லை. பனிமூடிய நிலமாய் வாழுகின்றார்கள்.புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழர்கள் அதிகமானவர்கள் நிலமைகள் இதுதான். என்ன உங்கள் நிலமை வெளியுலகத்திற்குத் தெரியுது. அது தான்…"

"என்னால் எதையும் மூடிமறைத்து வாழ முடியாது கீதா. ஏன் அவரவர் உண்மை முகம் வெளியில் நிச்சயமாகத் தெரியவேண்டும். பிறருக்கு எனது வாழ்க்கை பாடமாக அமைய வேண்டும். வெளிநாடு என்றவுடன் சொர்க்கம் என்று பறந்தடித்து

பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் பெற்றோர்களுக்கு இந்த வாழ்க்கை புரியவேண்டும்"

"ஏனக்கா இலங்கையில் இப்படிப் பிரச்சினைகள்குடும்பங்களில் இல்லையா? அங்கேயும் இப்படியான பிரச்சினைகளுடன் எத்தனைபெண்கள் கண்ணீர் உப்புக் கரைத்த கன்னங்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்"

"நிச்சயமாக கீதா…ஆனால் அங்கு உற்றார்உறவினர்கள் சூழல் என்று தம் துயரை மாற்றவும் மறைக்கவும் சந்தர்ப்பங்கள்உண்டு. ஆனால் இங்கு என் நிலை….. தனிமை…… தனிமை…… தனிமை….."

"இங்கும் உண்டு அக்கா…. ஆனால், அதற்குநாம்தான் மனம் வைக்க வேண்டும். தனிமையை விரட்ட வழிமுறைகளைத் தேடவேண்டும்.இந்த நாட்டவர்கள் எத்தனையோ பேர் இப்படி வாழுகின்றார்கள். ஆனால், அவர்கள்தம்முடைய வாழ்க்கையைச் சுகமாகவும் சந்தோசமாகவும் ஏற்றுக்கொள்ளுகின்றார்கள்"

"தெரியும்….ஆனால் எங்களுக்குமொழிப்பிரச்சினை இருக்கின்றது அல்லவா கீதா… அதனால் இப்படியான இடங்களுக்குப்போவதற்குக் கஸ்டமாக இருக்கிறது"

"கரன் அண்ணா வீட்டிற்கு வந்திருந்தார்…"

"ம்....."

"பாவம் அக்கா. ஆண்கள் அழுது நான் பார்த்ததே இல்லை. நேற்று எங்கட வீட்ட வந்தார். தன்ர கவலையச் சொல்லித் தேம்பித் தேம்பி அழுதார்"

"எல்லாம் நடிப்பு. என்னை எப்படியெல்லாம் படுத்தினார். நினைத்து நினைத்து இரத்தமெல்லாம் கூட தண்ணீராய் கொட்டட்டும். என் கவலை எல்லாம் எப்படி இரத்தவாந்தியாய் வந்ததோ அப்படியே வரட்டும். நான்பட்ட வேதனையில் ஒரு சிறிதளவாவது அவர் படக்கூடாதா?

"அப்படிச் சொல்லக்கூடாது அக்கா. அவரின் போதாத காலம் பொல்லாத பாடுபடுத்திவிட்டது. இப்போது திருந்தி வாழநினைக்கிறார். மனித இயல்பே அதுதானே அக்கா. ஒன்றைச் செய்து பார்த்து பிழையைத் திருத்தும் (Trial and Error) இதைத்தான் பிழைவிட்டுத் திருந்தும் இயல்புடையது என்று Karl Popper என்பவர் The Growth of Scientific Knowledge என்ர நூலில் எழுதியிருக்கிறார். வாழ்க்கையில் வெற்றிபெற அவர் எடுத்த எத்தனம் பிழையானது என்பதைப் புரிந்து கொண்டார். இப்போது திருந்தி வாழ நினைக்கிறார். அவர் எவ்வளவோ பேருக்கு நன்மைகள் செய்திருக்கிறார். ஆனால், அவர் செய்த சில

காரியங்கள் அவரைப் பெரிய குடிகாரனாக்கி இந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. இது அவருக்குப் போதும். நீங்கள் ஏன் இப்படி நினைக்கக் கூடாது. சட்டரீதியற்ற முறையில் ஒரு காரியம் செய்வது பிழை என்று தெரிந்தவர்கள் ஏன் இவரிடம் இந்த உதவியைக் கேட்க வேண்டும்"

"அவர்களைப் பழி சொல்லாதீர்கள் கீதா! இவருக்கெங்கே மதி போனது"

"உதவி என்று ஒருவர் கேட்கும் போது எப்படி மறுப்பது என்று நினைத்திருப்பார். தனக்கு வரும் கெடுதியைக் கூட நினைக்காது விட்டிருப்பார்"

"ஒரு பிழையா? எத்தனை பிழைசெய்திருக்கிறார். எல்லாரையும் ஏமாத்தலாம். கடவுளை ஏமாத்த முடியாது? பிழைசெய்தவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும். அது யாராக இருந்தாலும் தண்டனை அனுபவித்தே தீரவேண்டும்||

"நீங்கள் தாலிகட்டிய மனைவி. நீங்களே அவரைத் தண்டிக்கலாமா?

"கீதா… என்ன தான் அறிவாளியாக இருந்தாலும் வாழ்க்கையைப் படிக்கவேணும். மற்றவர்களின் மனதை நோகடிச்சு வாழ்ந்தால் அது எந்த வகையிலும் அவர்களைப் பாதிக்கும். கடவுள்

இருக்கிறாரோ இல்லையோ மனிதர்கள் சாபம் யாரையுமே விட்டுவைக்காது தொடர்ந்து வந்து நச்சுப் பாம்பு போல் தீண்டிவிடும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது”

“சரி நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் எதுவும் நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு அவரின் கண்ணீருக்கும் நீங்கள் பதில் சொல்லவேண்டிவரும் அல்லவா! அவரை நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆறுதலுக்கு யாரிடம் அவர் போவார்? அவர் சரியாக மனம் உடைந்து போய்விட்டார் அக்கா...... அவருக்கு எந்த மருந்தும் பலன் அளிக்காது. உங்கள்அன்பு ஒன்றுதான் அவருக்கு மாமருந்து”

“ஓகே கீதா... முயற்சிக்கிறேன். எனது நிலமையையும் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். என்னால் பழைய மாதிரி அவருடன் பழக முடியவில்லை. அவர் நெருங்குகின்ற போது நடந்த கசப்பான நிகழ்வுகள் வந்துஎன்னைக் குழப்புகின்றன. நான் இலங்கையில் இருக்கும் போது அவர் வெகுதூரத்தில்இங்கு இருந்தார். ஆனால், அவர் என் பக்கத்தில் இருப்பது போலவேதான் நான் உணர்வேன். அவர் மூச்சுக்காற்று என் மேல் படுவது போன்ற உணர்வு எனக்கு ஏற்படும். ஆனால் இப்போது பக்கத்தில் இருக்கிறார். எங்கேயோ

தூரத்தில் இருப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்படுகின்றது. நெருங்கி வருகின்ற போது எனக்கு ஏதோ ஒரு ஆபத்து வருவது போல் என் மனம் சொல்கிறது. என்னென்று தெரியல்லை. என் மனம் அவரை ஏற்றுக்கொள்ளுதில்லை. சில வேளை பிழை என்று உணர்கிறேன். என்னால் முடியவில்லை கீதா….. என்னால் முடியவில்லை….. இந்த வேதனையே என்னைக் கொன்றுவிடும் போல் இருக்கிறது. நான் உண்மையில் அவரை மனதார நேசித்தேன். என் உயிராகக் கருதினேன். இப்போது நடந்தவைகள் எல்லாம் பூதாகரமாக எனக்குள் அடிக்கடி விரிகின்றன. ஆண்டவனே என் உயிரை எடுத்துவிடு என்று எத்தனை முறை வேண்டிக்கேட்டேன் தெரியுமா? மனச்சாட்சியைக் கொன்று என்னால் வாழ முடியவில்லை. ஆனால், அவரை நான் ஏற்றுக்கொள்வேன்….. நிச்சயமாக ஏற்றுக்கொள்வேன்… அதற்குக் காலம் இருக்கிறது. காலம் தான் பதில் சொல்ல வேண்டும்”

மடைதிறந்து வந்த கண்ணீர் வெள்ளம் கன்னம் நனைத்து வடிந்து நெஞ்சுப்பகுதி சென்றடைந்து மனதை ஈரமாக்கியது. அடிக்கடி சிந்திய மூக்குநீர் நாசியைப் புண்ணாக்கியது. சிரித்தாலும் அழுதாலும்

உடலானது கண்ணீர் தானமே செய்கிறது. விக்கித்து நின்ற வரதேவிக்கு கீதா வார்த்தை ஒத்தடம் போட்டாள்.

“அழாதீங்க அக்கா… நான்தான் உங்களைக் குழப்பிப்போட்டன்”

“பறவாயில்லை கீதா…. உங்களுடன் கதைத்தது மனதுக்கு ஆறுதலாக இருக்கிறது. மனதுக்குள்ளே வெம்பிவெம்பி வெடிப்பதை விடமற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதால் கவலை கொஞ்சம் குறையும் இல்லையா?

“அக்கா! காலம் எல்லாத்திற்கும் பதில் வைத்திருக்கிறது. அப்போது சூறாவளி அடித்த உங்களுடைய வாழ்வில் இனிவரும் காலங்களில் தென்றல் காற்று வீசும். பொறுத்துக் கொள்ளுங்கள். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். உங்களுக்கு மட்டும் இந்தச் சோதனை இல்லை. இங்குள்ள அனைவருக்கும் இருக்கிறது. அதை மனதில் நினைத்து நிம்மதி அடையுங்கள். நான் வீட்ட போய் தொலைபேசி எடுக்கிறேன். திரும்பவும் இது பற்றிப் பேசி உங்கள் மனதை நோகடிக்க மாட்டேன். நல்லதே நடக்கும் என்று நம்பிக்கை கொள்ளுங்கள். உங்கள்

இருவரையும் சந்தோசமாகப் பார்க்கும் காலம் விரைவில் வரும். இப்போது நான் போயிட்டு வாறன்”

பிள்ளைகளுடன் விடைபெற்ற கீதா வரதேவியின் சிந்தனைக்கு தைலம் போட்டு விட்டாள். நல்ல சில எண்ணங்களை ஏற்றிவிட்டாள். தொடரவிருக்கும் பாதைக்கு வெளிச்சமிட்டாள்.

# Part16

பிரயாணம் செய்யும் வாகனத்தில் சாரதியை மீறிப் பயணம் செய்யமுடியுமா? பலரை ஏமாற்றலாம். ஆண்டவன் கண்களைக் கட்டமுடியுமா? கரன் வாழ்வில் காலம் கிறுக்கும் மாற்றங்கள் மெல்ல மெல்லக் கனமானதாகவே அமைந்திருந்தன. காத்திருக்கும் வாழ்வில் காலம் தந்த பரிசை யாராக இருந்தாலும், எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டியது கட்டாயமாகிறது. கரன் கால் விரலில் கறுப்பாய் ஒரு புள்ளி அதிசயமாய்த் தோன்றியது. மெல்ல மெல்லக் கால் விரல் நிறம் மாறத் தொடங்கியது. உருக்குலையும் நிலை கண்ட வைத்தியர்கள் இவ்விரலைப் பாதத்திலிருந்து அகற்றிவிட்டனர். உடலில்சர்க்கரையின் அளவு அதிகரிக்க அது பெரிய வியாதியாகி விடுகிறது. எதுவாக இருந்தாலும் அளவுக்கு மீறினால் விஷமே. கொழுத்த பிள்ளை அழகு என்பதற்காகப் பிள்ளைக்குக் கொழுப்பை உண்ணக் கொடுக்க முடியுமா? சர்க்கரை வியாதி கரனுக்கு முன்னமே சொல்லிக் கொள்ளாமல் உடலுள் சப்பாணி கட்டிக்கொண்டு அமர்ந்ததனால், அவனுடைய கால் விரல்கள் ஓர் விரல், ஈர்விரல் எனத் தொடந்து அனைத்து விரல்களும் பாதிக்கப்பட்டன.

இதனால் கால் விரல்கள் அனைத்தும் பாதத்திலிருந்து விடைபெறவேண்டியது அவசியமானது. இதன் தாக்கத்தால் முழங்காலின் கீழ்ப்பகுதியும் பழுதடையும் நிலை கண்ட வைத்தியர்கள் முழங்காலின் கீழுள்ள பகுதியை அகற்றிவிட்டார்கள். ஒற்றைக்காலில் வாழ்வைக் கழிக்க வேண்டிய தண்டனை கிடைக்கப் பெற்றுத் தடுமாறிவிட்டான் கரன்.

இதை விதி என்பதா? இல்லை வினை விதைத்தான் வினை அறுப்பான் என்பதா? ஒரு மனிதன் செய்யும் தவறுகள் தண்டிக்கப்படும் வேளையில் அவன் ஆற்றிய புண்ணியங்கள் புதுப் பொலிவு பெற்றுத்துணை தரத் துடித்துக் கொண்டு ஓடிவரும். இந்த வகையில் ஒற்றைக் கால் இழந்த கரனுக்கு ஒரு தடியாய் யார் இருப்பார்? தாலியின் மகத்துவம் கரன் வாழ்வில் தலைநிமிர்ந்து நின்றது. தமிழர் கலாசாரம் என்றும் அழிந்துவிட மாட்டாது என வரதேவியின் பணிவிடை ஆணித்தரமாகக் காட்டியது. நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும் நடக்கப் போவது நல்ல தாகட்டும் எனத் தன் அணைப்பில் மட்டுமே எதிர்காலத்தைக் கழிக்கவிருக்கும் கணவனைப் பராமரிக்கும் பாரிய பொறுப்பைத் தலைமேல் கொண்டாள். ஆயினும் அன்பு வார்த்தைப் பரிமாற்றம்

இருவரிடமும் இருக்கவில்லை. ஒரு தாதிபோல் தாங்கினாள். உலகம் உருண்டையானது. எங்கு சுற்றியும் திரும்பவும் அந்த இடத்திற்கே வந்தேயாக வேண்டும். மருத்துவமனை கரனுக்கு நல்ல பல பாடங்களைக் கற்றுத் தந்தது. சிந்தித்துச் சிந்தித்துத் தனக்குத் தானே பட்டை தீட்டித் தன் வாழ்வைப் பொலிவாக்கினான். தன் எதிர்கால வாழ்வைத் தன் மனையாள் கையிலே தங்கியிருக்கும் பேருண்மை புரிந்து கொண்டான். பெட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடக்கும் கணவனின் தேவைகளைத் தெரிந்து புரிந்து தீர்த்து வைத்த வரதேவி, வாழ்வை மாற்றியமைக்கும் காலத்தை எண்ணிப்பார்த்தாள். தனக்குள்ளே ஒரு சிரிப்பு. இது அலட்சியச் சிரிப்பா! இல்லைவாழ்ந்து பார்த்த வாழ்வுஞானச் சிரிப்பா! தனக்கு முன் ஒரு எல்லை போட்டாள். அவசியம் கருதி உதவினாள். ஆழமாக அவன் விடயங்களில் தலையிடாது இருந்தாள்.

கரன் தனக்குள்ளே தான் செய்வது அனைத்தும் சரியென்று நினைக்கும் புத்தியுள்ளவன். அதனால் வரதேவி அவன் செய்கைகளை மாற்ற முடியாது என்பதை மனதுள் நினைத்துவிட்டாள். நடப்பதை ஏற்று நடந்தாள். அருகே கரன்

அமர்ந்திருக்க அவன் ஒரு காலாய் நடிக்கும் கைதடி தடுமாறி கீழே விழுகிறது. கைத்தடியை எடுப்பதற்காக குனிந்தவன் கீழே சரிந்தான். ஓடி வந்து அவனை வரதேவி கைத்தாங்கலாகப் பிடித்தாள்.

"என்னை விடு வரா.... என்னை விடு.... விழுந்து எழுந்த நிலை எனக்குப் போதும். என்னை நானே கவனித்துக் கொள்ளும் தைரியத்தை வளர்த்துக் கொள்கிறேன். உனக்கு நான் செய்த பாவங்கள் எல்லாமே ஒன்று திரண்டு ஒரு காலில் என்னை நடக்கச் செய்திருக்கிறது. வெட்டப்பட்ட கால் என் செருக்குகளை வெட்டிவிட்டது. துணையான கைதடி நான் செய்த புண்ணியங்களை நினைவுறுத்துகின்றது. என்னோடு கிடந்து உன் வாழ்வு வீணாகத் தேவையில்லை"

என்று அருள் பெற்ற மகான் போல் மனம் நெகிழ்ந்து வார்த்தைகளை விதைத்தான். இவை வரதேவி மனதில் நல் எண்ணத்தை வளர்க்க வேண்டும் என்பதே அவன் எண்ணமாகியது.

"முடியுமென்றால் எழும்புங்கள். நான் ஒன்றும் கல் நெஞ்சக்காரி இல்லை. யாராக இருந்தாலும் என் கரம் இவ்வாறான சந்தர்ப்பத்தில் உதவிக்கு ஓடிவரும். உங்கள் வலி உங்களுக்குத் தான் தெரியும். உங்கள்

வலியை நான் தாங்க வேண்டிய அவசியமில்லை”
எதிலுமே பிடிப்பில்லாதவள் போல் பேசிவிட்டு
அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.
தொலைக்காடசியில் ஜேசுதாஸ் பாடிய
“ஒரு தெய்வ வீணையே நீ பேசினால் என்ன
ஒரு தேவகானமே நீ பாடினால் என்ன
நான் அழைத்த குரல் கேட்குமா
உன் அமுதவிழி பார்க்குமா
திருக்கோயில் தீபம் இரு கண்களாகும்
ஒரு பார்வை நீ பார்த்தால் உயிரொன்று வாழும்
எனக்கென்று யாருண்டு என் காதல்தேவி
இமைக்காது நீ போனால் எனக்கேது ஆவி”
பாடல் கேட்டுத் தட்டித்தடுமாறி தன்கைத்தடி பற்றி
மெல்ல எழுந்து நின்ற கரன் விடியலுக்காய் விரையும்
மேகம்போல்எண்ணத்தை விரைவாக்கி வெளியே
புறப்படத் தயாரானான். தன் உயிரின் பாதியாய்க்
கருதிய மனைவி தன்னோடு ஓடும் புளியம்பழமும்
போல் வாழுகின்ற வாழ்வை நினைத்து
வேதனைப்பட்டான்.

---

முடியாது என்று வாழ்வில் எதுவுமில்லை.
முடித்துக்காட்ட முனையும் போதே மூளையும்

எம்முடன் இணைந்து வேகத்தைக் கூட்டும். வேதனை நோய் என்று விழுந்து விட்டால் எழுந்து நிற்கவே மனம் துணையாகாது. கரன் “நான் இழந்தது என் ஒரு கால் மட்டுமே. அத்துடன் முடிந்து விட்டதா வாழ்க்கை. என் மறுகால் இருகாலின் வலிமையையும் பெறும். பெட்டிப் பாம்பாய்ப் பதுங்கிக் கிடக்க நான் ஒன்றும் சோம்பேறியும் இல்லை. கோழையும் இல்லை. மருத்துவக்காப்புறுதி நிறுவனத்திற்குச் சென்றான். தன்நிலைஉணர்த்தி தனியாய் நடக்க வசதியான வண்டி ஏற்பாடு செய்தான்.

அவர்கள் உதவியுடன் பிடித்துக்கொண்டு நடப்பதற்காகத் நான்கு கால்கள் பூட்டிய வண்டி ஒன்றைப்பெற்றுக்கொண்டான். ஒற்றைக்கால் நடந்து களைத்தால் வண்டியில் இருக்கக்கூடியவசதி அதில் வாய்த்திருந்தது. இங்கு கண்ணில்லாதவர்கள் கூட வீதியில் தனியே நடப்பதற்கு ஏற்ற கைதடி உண்டு. வீதி தாண்டி நடப்பதற்கும் வீதி விளக்குகளில் ஒலிஅலை உண்டு. அந்த ஒலியைக் கேட்கும்போது சிவப்பு விளக்கு எரிகிறது என்று ஊகித்துக் கொள்வார்கள். அப்போது பாதையைக் கடப்பார்கள். இந்த மனிதக் கண்டுபிடிப்புகள் இருக்கின்றனவே! அவை எது எது மனிதனுக்குத் தேவையோ அவற்றைப்

பற்றி ஆழமாக நோக்கி அவை பற்றிச் சிந்தித்து தேவையை நிவர்த்தி செய்வதற்குரிய கருவிகளைக் கண்டுபிடித்துவிடும். இதனாலேயே மனித வாழ்க்கை இலகுவாக்கப்பட்டிருக்கின்றது. இது இருந்தால் நல்லது என்று இன்று நாம் நினைத்தால் சில வருடங்களில் அது பாவனைக்கு வந்து விடும். இவ்வாறு இத்தனை வசதிகளும் இருக்கும் போது எனக்கொரு துணை தேட நான் ஏன் முனையவேண்டும். என்று நினைத்த கரன், வீட்டில் இருப்பதற்கு விரும்புவதில்லை. முடியுமான பொழுதுகளில் வெளியே சென்று வருவான். தன் சிந்தனையின் மூலம் இறுதியாக ஒரு முடிவு கண்டான். இயற்கைக் கால்கள் இழந்தவர்கள் தமது சொந்தக் காலில் நடப்பது போல் நடப்பதற்கு ஜெய்ப்பூரில் தயாராகும் கால்களைத் தெரிந்து வைத்திருந்த கரன், அக் கால் ஒன்றைத் தான் பெற்று நடமாடத் துணிந்தான். காலத்தை வென்றுவாழ மனிதன் முயற்சிப்பது தானே இவ்வுலகத்தின் வளர்ச்சி. இல்லை என்று உலகில் எதுவுமில்லை. உள்ளதனைத்தும் கொண்டே உயர்வது மனிதன் கொள்கை. கால்கள் ஒன்றும் காட்டில் மரமாய் நிற்கவில்லை தறித்துக் கொண்டு வருவதற்கு.

## என்னையே நானறியேன்

திடீரெனக் கரன் மூளைக்குள் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. சிறகடிக்கும் கடதாசிகள் ஒரு அட்டைக்குள் அடங்கிக்கிடந்தன. அவன் பார்வை பட்டு அதிலொன்று விடுதலையானது. அதன்மேல் தலைகுனிந்த பேனா விரல்கள் இடுக்கில் அடங்கிக் கொண்டு வரிகளை வரைந்தன.

அன்புடையீர்.

என் கால்களில் ஒன்று சர்க்கரை வியாதிகாரணமாக அகற்றப்பட்டுவிட்டது. இரண்டு கால்களும் இல்லாத நிலையில் என்னால் நடப்பது மிகவும் கடினமாக இருக்கின்றது. கால்கள் இல்லாவிட்டால் எப்படி இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஜெய்ப்பூர் என்னும் இடத்தில் செயற்கைக்கால்கள் பொருத்துவது பற்றி அறிந்தேன். அங்கு சென்று எனக்குச் செயற்கைக்கால் பொருத்துவதற்கு பணம் தேவையாக உள்ளது. அதற்குத் தேவையான அளவுபணம் என்னிடம் இல்லாத காரணத்தினால் தயவுகூர்ந்து உங்களால் முடிந்த உதவியைஎனக்குச் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

இந்த உதவியை என் உயிருள்ளவரை மறக்கமாட்டேன்

நன்றி

அன்புடன்
த. கரன்

காலிழந்த தனக்குக் கரம்கொடுப்பார்கள் என்று நம்பிய சிலரிடம் கரன் வீடு தேடிச் சென்று இக்கடிதத்தைக் காட்டினான். பரிதாபப்படும் சில நல்ல உள்ளங்கள் தம்மால் முடிந்த தொகையைக் குறிப்பிட்டுக் கரன் மீண்டும் மகிழ்வுடன் நடமாடப் பணவுதவியைச் செய்தார்கள். ஆண்டவன் நேரில் வருவதில்லை. மனிதர்கள் வடிவில் உலகில் கண்முன்னே நடமாடுகின்றார். இவ்வாறான உள்ளங்கள் பல சந்தர்ப்பங்களில் இலகுவில் ஏமாந்துவிடுவதும் உண்டு. ஆயினும் வாழ்க்கையில் ஆயிரம் முகங்கள் எண்ணற்ற குணங்களுடன் எம்மிடையே வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்களை நாளும் சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

பணத்தைச் சேகரித்த கரன் ஜெய்ப்பூர் செல்லவில்லை. திரும்பவும் மருத்துவக்கப்புறுதி நிறுவனத்திடமே தஞ்சமடைந்தான். தான் செயற்கைக்கால் பொருத்த விரும்புவதாகவும் அதற்கான உதவிகளைச் செய்யும் படியும் கேட்டான். அவர்களும் அதற்கு உடன்பட்டு செயற்கைக்கால்

பொருத்துவதற்கான முழு ஏற்பாடுகளையும் செய்தனர். ஆனால் முழுத்தொகையையும் அவர்களால் வழங்க முடியாது எனவும் ஒரு சிறிய தொகை கரன் செலவு செய்ய வேண்டும் எனவும் கூறினர். உடன்பட்ட கரன் இழந்த காலுக்குப் பதிலாக மீண்டும் அதே வடிவில் செயற்கையாய் ஒரு கால் வந்து அமர்ந்து கொண்டது.

இயற்கையை வெல்ல மனிதன் போட்டா போட்டி போடுகின்றான். இதயத்தை மாற்றுகிறான். இரத்தத்தை மாற்றுகிறான். முகத்தின் தோற்றத்தை மாற்றுகிறான். உடல் உறுப்புக்களை மாற்றித் தேவை கருதிதானம் செய்த உறுப்புக்களுடன் வாழ்கின்றான். இளமையை மீட்க ஆராய்வுகள்மேற்கொண்டு பலனும் கண்டான். ஒரு மனிதனைப் போல் இன்னும் ஒரு மனிதனைக் குளோனிங் முறையில் உருவாக்குகின்றான். ஆயினும் மரணத்தை வெல்ல மனிதனால் இன்னும் முடியவில்லை. ஆனால், அவ் அதிசயமும் நடந்து விடுமோவென நம்பிக்கைகொள்ள வைக்க விஞ்ஞானம் முயற்சி மேற்கொள்கிறது.

முதன் முதல் நடைபயிலும் குழந்தை போல் செயற்கைக் கால் பூட்டிய கரனுக்கு அக்காலுடன் நடப்பதற்கான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பலனும் கிடைத்தது. ஆனால் உடலினுள் ஓடும் இரத்தம் சுத்தமாய் இருந்தால் சுகம் செய்யும். அசுத்தமானால் உடலை அழித்து விடுவது அசைக்க முடியாத உண்மையல்லவா. கரன் இரத்தத்துடன் இணைந்தே ஓடிய மதுபானம் இரத்தத்தின் சுத்தத்தைச் சூறையாடிவிட்டது. அல்ககோல் மருந்துகளிலும் சேர்க்கின்றார்கள் என்பது உண்மையே. ஆனால் மருந்தை விருந்தாய் அருந்தலாமா? உடலுக்குள்ளே தன் அத்துமீறிய தொழிலை மதுபானம் காட்டத் தொடங்கியது. கரன் உடலும் தோலால் போர்த்தப்பட்ட நோய்க்கிருமிகளின் தொழிற்சாலையானது. பழுதுபட்ட இயந்திரங்களைத் தாங்கும் பேழையானது. இப்போது கரன் வாழ்வு தர்மசேத்திர காலகட்டத்தை அடைந்தது. இது அதர்மத்தில் இருந்துதர்மம் நோக்கித் திரும்பும் காலம். தீராத நோய் கண்ட காலங்களில் மனிதர்களால் தவறான பழக்கவழக்கங்கள் அனைத்தும் மாற்றியமைக்கப்படுகின்றன. கரன் மனதில் தவறுகள் மின்னல்கள் போல் தெறித்தன. அதனால் வாழும் காலம் அனைத்தும் நல்லதே நினைக்கவும் செய்யவும் துணிந்தான். ஆயினும் உள்ளத்துக்குள்ளே தவிப்பு அவ்வப்போது செட்டைகட்டிப் பறக்கத் தொடங்கியது.

# என்னையே நானறியேன்

பிட்ஸாப் பெட்டிகளைக் கையிலே தாங்கி வந்த மகனை கரன் அழைத்தான்.

“எங்கே வரன் போய் வருகிறாய்? கொஞ்சம் அப்பாக்குப் பக்கத்தில் வருகிறாயா?

“அம்மாக்குச் சுகமில்லையப்பா. அவ சமைக்கல்ல. அதுதான் பிட்ஸா வாங்கிவந்தேன். இதை வச்சிட்டு வாறன் அப்பா”

“ஒரே வீட்டில் இருக்கும் மனைவி உடல்நிலை சரியில்லாது இருக்கின்றாள். அதுகூடத் தெரியாது நான் இங்கு குத்துக்கல் மாதிரி இருக்கிறேன். இப்படி ஒரு வாழ்க்கை தேவையா....” என்று மனதுள் நினைத்த கரன் பக்கத்தில் வந்து அமர்ந்த மகனின் மேற்கால்களில் தட்டியபடி.

“வரன். அப்பாக்கு உடம்பு முடியல்ல. மதியையார் வேண்டுமானாலும் வெல்லலாம். விதியை வெல்ல யாராலும் முடியாது. எப்போது என் வாழ்க்கையின் இறுதிக்கட்டம் நெருங்கப் போகிறதோ தெரியல மகன். நான் பிறந்த மண்ணைப் பார்த்து வரவேண்டும் போல எனக்கு மன ஏக்கமாய் இருக்கு. என்னதான் இந்தநாடு சுகங்களை எல்லாம் எங்களுக்குச் செய்தாலும் நான் கால் பதித்து நடந்த பூமி. எனக்குள் ஆதார சக்தியைத் தந்த மண். என் தாய் என்னைத் தொட்டிலில் போட்டுத்

தாலாட்டுப் பாடிய தேசம் என் மனதுள் மாங்காய்வடிவில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. வாழுகின்ற நாடு ஒரு மனிதனுக்கு வசதியைத் தரலாம். அந்தஸ்தை உயர்த்தலாம். ஆனால் தாய்நாடு தாய்க்கு நிகரானது.அந்த மண்ணை ஒரு தடவை என் கால் தொட்டு என் வரவை அதற்கு உணர்த்த வேண்டும். எனது மனிதப்பிறப்பு இத்துடன் முடிவுற்றால் என் நாட்டை என் ஒரு கால் தொடமாட்டாது போன ஏமாற்றம் என் ஆத்மாவிற்கு தீராத ஏக்கமாய்ப் போய்விடும்" சிறைப்பட்டு நின்ற கண்ணீர் கரனுக்கு வெளிப்பட்டது.

"ஏனப்பா இப்படிக் கதைக்கிறீங்கள்…. எனக்குஉங்களின் பாசம் போல் ஒரு பாசம் கிடைக்குமா அப்பா… நீங்கள் இரண்டு பேரும் என்னதான் பிரச்சினைப்பட்டாலும் என்னில் எந்தவித பாதிப்பையும் காட்டவில்லையே. உங்களுக்குக் காலில்லாத வேதனையை விட நீங்கள் என்னை விட்டிற்று இலங்கைக்குப் போற பிரிவுதான் என்னால தாங்கமுடியல்ல. ஒருமுறை போய் நடந்தவைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும் தானே. வேண்டாம் அப்பா…." தன் மறுப்பை ஆறுதலாகவும் ஆழமாகவும் தெரிவித்தான் வரன்.

## என்னையே நானறியேன்

பொதுவாகவே இவ்வாறான குடும்பங்களில் வளருகின்ற குழந்தைகள் தறுதலையாகப் போவார்கள் என்பதே மனநிலை வைத்தியர்கள் முடிவு. ஆனால் வரனோ மிதிக்கும் புல்லுக்கு நோ வந்துவிடுமே என்று கலங்குகின்ற மனம் உள்ளவன். கட்டுப்பாட்டைத் தனக்குத்தானே விதித்துக் கொண்டு அடக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அன்பான இதயம் படைத்த ஆண்மகன். ஐரோப்பிய நாடுகளில் சுதந்திரம் சொர்க்கம் என்று கருதி தம் வாழ்க்கையைத் தவறான பொழுதுபோக்குகளுக்கு அடிமையாக்கி வாழ்வைச் சீரழிக்கும் இளந்தலைமுறையினர் அதிகம். பெற்றோரைக் குருடர்களாக்கி தம் அகக்கண்களைக் குருடாக்கி வாழ்க்கையைத் தவறான முறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எதிர்காலத் தலைமுறையினர் அதிகம். இந்தநாடு சுதந்திரத்தை அளவுக்கு அதிகமாகத் தந்திருக்கிறது. ஆனாலும் 18 வயதுவரை கல்வியைக் கற்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டையும் வைத்திருக்கின்றது. இதனால் கொதிநீரில் கால் வைத்தபின்எப்படியும் வெளியே வந்துவிட வேண்டும் என்று துடிப்போர் போல் 18 வயது கடந்த பின் பாடசாலைப் படிப்பை விட்டு வெளியே

வந்து தொழிற்கல்வியை மேற்கொள்வோர் அதிகம். பெற்றோரின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்து மேற்கல்வி மேற்கொண்டு நல்ல நிலையில் வளருகின்ற எமது இளந்தலை முறையினரும் ஜேர்மனியில் இருக்கின்றார்கள்.

வரனோ பிள்ளைப் பருவத்தில் கூடவே இருந்து குறிப்பான காலப் பகுதியில் பராமரிக்க பெற்றோர்கள் இன்றி வளர்ந்த காரணத்தினால் பாடசாலைக் கல்வியை ஓகோ என்று சொல்லும் அளவிற்கு வளர்க்க முடியவில்லை. தான் இழந்த குழந்தைப்பருவ சுகங்களைப் பிறர் குழந்தைகளில் காணும் உள் மனத் தூண்டல் காரணமாக பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சியை மேற்கொண்டான். குழந்தைக் குறும்புகளைக் கண்டு கழித்தான். தானும் ஒரு குழந்தையாய் மாறி பாலர்பாடசாலையில் தன்மேற்கல்வியை மேற்கொண்டான். அவன் இதயம் பெற்றோர் அன்புக்காக ஏங்கும் இதயம்அல்லவா. தந்தை இலங்கை சென்றால் மீண்டும் பிரிவுத் துயர் தன்னை வாட்டும் என்று புரிந்த இளைஞன் அல்லவா. தந்தையின் இலங்கைப் பயணத்தை மறுத்தான். தன்உணர்வுகளை வெளிப்படுத்தினான். ஆனால் கரனோ

## என்னையே நானறியேன்

“வரன்! நான் அங்க போய் தங்கிவிடவா போறன். என்னோட சொந்தக்காரர்களை எல்லாம் ஒரு தடவை பார்த்து விட்டுத் திரும்ப வரத்தானே போறன். கொஞ்ச நாளைக்கு அந்தக் காற்றைச் சுவாசிப்பேன். அந்தமணலில் புரண்டு எழுவேன். அந்தச் சூரியனின் கதிர்களை என் வெற்று உடம்பினால் உடைப்பேன். ஒரு காலால் இலங்கை மண்ணைத் தட்டித்தட்டி ஒத்தடம் கொடுப்பேன். உறவினர் மனதுக்குள் நுழைந்து திரும்புவேன், தியேட்டருக்குள் சென்று படம் பார்த்து மூட்டைப்பூச்சிகளுக்கு இரத்ததானம் வழங்குவேன். பள்ளிவாசலிலே நாசிசோறு உண்பேன். பொடிமெனிக்கா வீட்டில் பாற்சோறும் கட்டச் சம்பலும் உண்பேன். விகாரையிலே தாமரைப்பூ வைத்து வணங்குவேன். கோயில் குளத்திலே மூழ்கி எழுவேன். சின்னத்தம்பிப் படத்துப் பிரபுபோல் ஏரியிலே குளிப்பேன். அநாதைப் பிள்ளைகளைப் பார்த்து நம்பிக்கை விதைத்து வருவேன். மாமர நிழலிலே ஆறுதலாய் அமர்ந்திருந்து கறுத்தக் கொழும்பான் மாம்பழம் கடித்துத் தின்பேன். நீண்டிருக்கும் பனைக்கு என்னை நிறுத்திய காலை எடுத்துக்காட்டுவேன். பழஞ்சோற்றுக் கஞ்சியிலே ஊறுகாய் சேர்த்தெடுத்து வாசற்கட்டிலே அமர்ந்து காற்று வாங்கி கஞ்சி

குடிப்பேன். இப்படி எத்தனையோ ஆசைகள் எனக்குள் இருக்கு. இறுதியில் அந்தமண் என்னை ஏற்றுக் கொண்டால், அம்மண்ணுக்கு உரமாவேன். இல்லையென்றால், உங்களைத் திரும்பவும் வந்துகாண்பேன்" மூச்சுவிடாமல் மனம் முழுவதும் நிறைந்திருக்கும் ஆசைகளை முழுவதுமாகச் சொல்லிமுடித்தான்.

தந்தையின் ஆசைகளை ரசித்துக்கேட்டான் வரன். "ம்ஹ்ற....." என்றபடி அறைக்குள் இருந்து சிரித்துக் கொண்டாள் வரதேவி.

"அப்பா! நீங்கள் இலங்கை போவது எனக்கென்றால் விருப்பமில்லை. இந்தக் காலோட தனியே போய்க் கஷ்டப்படப் போறீங்கள்.."

"கஷ்டமா....ஹா.....ஹா...." என்று பலத்துச் சிரித்தான். "இதையெல்லாம் தாண்டிவிட்டேன் மகன்"

அக்கதை அப்படியே இருக்க மூவரும் பிட்ஸாவைஉண்டனர். மகனும் தன் அறை சென்று விட இருளும் சேர்ந்து கொள்ள இரவு கழிந்தது. நாளொன்று அன்றைய நாள் நிகழ்வுகளை மூட்டை கட்டிக் கொண்டு சென்றுவிட்டது. அடுத்தநளும் அன்றைய நாள் நிகழ்வுகளை மூட்டை கட்டிக் கொண்டு வந்துவிட்டது. காலை பாடசாலைக்கு

வரதேவி அறியுமுன்னே பஸ் ஏறிவிட்டான் வரன். சூரியன் விளக்கெரிக்க கண் திறந்தள் வரதேவி. எழுந்தவுடன் வானொலி காதில் நுழைதல் நாள் தொடக்க நிகழ்வு. தொடர் காரியங்கள் தொடர்ந்தது. கரன் வீட்டிலா வெளியிலா இது பற்றி அவளுக்கென்ன கவலை. அவன் சொல்லிக் கொண்டு போவதும் இல்லை. அவள் சொல்லச் சொல்லிக் கேட்பதும் இல்லை. ஆனால் கரன் வீட்டில் இல்லை. இது ஒன்றும் வரதேவிக்குப் புதுமையுமில்லை. சிலநாள்கள் வீட்டில் தங்குவான். சிலநாள்கள் வெளியில் நண்பர்கள் வீட்டில் தங்குவான். சொந்தவீட்டிலும் அவன் ஒரு விருந்தாளி போல்த் தானே.

# Part 17

நாள்களின் நகர்வில் கரனின் தொடர்பு ஏதுமில்லை. ஆனால், கரனையோ எயர்லங்கா விமானம் ஏற்றிக்கொண்டு போய் இலங்கையில் தளம் இறக்கிவிட்டது. “என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் அயல்நாட்டில்” என்ற பாடல்வரிகள் மனதுள் ரீங்காரமிட வெப்பக் காற்றின் சுவாசத்துடன் உறைந்திந்த இரத்த ஓட்டத்தின் சுறுசுறுப்புடன் சுருக்கம் கண்ட தோல்களின் விரிசலுடன் பளிச்சென்ற பார்வைத் தெறிப்புடன் இலங்கை மண்ணைத் தொட்டான். மனதுக்குள்ளே ஒரு ஆர்வம் எங்கேயோ இருந்து ஓடிவந்து இடம் பிடித்துக் கொண்டது.

“இது என்நாடு. எனக்குத் தேவையில்லை பிறர் துணை. கவலையின் வாசம் விமானம் ஏறி வரவேண்டும். கையிருப்புக் கரையும் வரை நான் ராஜா. ராஜாதிராஜா. மனதுக்குள் கம்பீரம். கையிலே கைத்தடித்துணை. நேர் கொண்ட பார்வை. பழையது எதையுமே நினைப்பதில்லை என்ற போக்கு. அனைத்து இடங்களுக்கும் போக வேண்டும். அனைவரையும் சந்திக்க வேண்டும்ளூ நினைத்தது எல்லாம் முடிக்க வேண்டும். நிலையில்லா வாழ்வை சுவைக்க

வேண்டும். நான் வாழ்ந்த நாள்களும் குறைவு வாழப் போகும் நாள்களும் குறைவதனால் இனிவரும் நாள்களில் நெஞ்சில் வஞ்சம் இன்றி வாழ வேண்டும். இன்பம் இணைத்தே மாளவேண்டும்" மனதில் உறுதி கொண்டான் கரன்.

கொழும்பு சென்று யாழ்நகர் நோக்கிப் பயணமானான். உடலைக் குலுக்கி எடுக்கும் பிரயாணத்தின் அசதியில் உறங்கி தன் ஊரில் விழித்தான். இறங்கிய தரையில் ஒரு தடைவ ஒற்றைக் காலால் உதைத்துப் பார்த்தான். ஆனந்தம் அளவுக்கு மீறிய ஆனந்தம்..... உறவினர் வீட்டில்வாசம் செய்வது முடிவானதால், கடுகதியாய் நுழைந்தான். அவன் முதல் ஆசையது ஆசைதீரக் கிணற்று நீரை அள்ளி உடலில் வார்க்க வேண்டும். தீர்ந்து விட்டது இவ்ஆசை. காலைக் குளியலில் கழுவி எறியப்பட்டது ஜேர்மனிய எண்ணங்கள். கரன் ஜேர்மனியில் இருந்து வந்திருக்கிறார். செய்தி ஈமெயில் போட்டது போல் நண்பர்கள் உறவினர்கள் எல்லோருக்கும் பறந்துவிட்டது. அவர்களும் வந்தார்கள் கரனும் அவர்களைப் பார்க்கச் சென்றான். அனைவரையும் சந்தித்தான்.

## என்னையே நானறியேன்

“எப்படிப் போகிறது காலங்கள்? இங்கேயே தங்கிவிடலாமே. திரும்பவும் ஜேர்மனி போகவேண்டுமா? கால் பூட்டியபின் எப்படி இருக்கிறது? ஜேர்மனி பிடித்திருக்கிறதா? இலங்கை பிடித்திருக்கிறதா? அடுக்கப்படும் நண்பர்கள் உறவினர் கேள்விப் பட்டியல்களுக்கு கரன் கூறும் ஒரேமாதிரியான பதில்கள்

“ஜேர்மனி என்னை வாழவைத்த நாடு. இலங்கை என்னை ஈன்றநாடு. பெற்றதாயைப் பிடித்ததா? வளர்த்த தாயைப் பிடித்ததா? என்று கேட்பது போல் இருக்கிறது உங்கள் கேள்விகள். உண்ண உணவு வாங்கப் பணம் இல்லை என்று நான் இருக்கவிடாது வாழ வைத்த நாடு. வேலைக்குப் போகாமலே பணம் சம்பாதித்த நாடு. பணம் வாங்காமலே எனக்கு வைத்தியம் பார்த்தநாடு. எந்தச் செலவுமின்றி என் பிள்ளையைப் படிப்பித்தநாடு. அந்த நாட்டை நான் இந்த நாட்டுடன் ஒப்பிட முடியுமா! நான் பாசத்தை தேடி இங்கு வருவேன். வசதிகளைத் தேடி அங்கு போவேன். ஆனால் இப்போது என்னுடைய இறுதிப் பயணம் இதுவே என்று என்உள் உணர்வு உணர்த்திக் கொண்டு இருப்பதனால் உங்கள் எல்லோரையும் என் கண்ணுக்குள்ளும் நெஞ்சுக்குள்ளும் நிறுத்தி வைக்க

வந்தேன். பனங் கூழ்குடித்தேன் பழைய சாதம் சாப்பிட்டேன். வெட்ட வெளியிலே பாய் விரித்துப் படுத்தேன். என் மாதா கோயிலிலே மனம் விட்டுப் பேசினேன். என் ஆசை எல்லாம் தீர்த்து வைத்தேன். இரண்டு ஆசைகளைத் தவிர. ஒன்று எனக்குள் மட்டுமே ஒழிந்து போகும் ஆசை. அடுத்த ஆசை வாழவேண்டும். நீண்ட காலம் உலகத்துடன் இணைந்தே ஓடவேண்டும். இது எனக்கு மேலுள்ள ஒருவன் எடுக்கும் முடிவில் அடங்கிஇருக்கிறது. எதுவாக இருந்தாலும் எல்லோரையும் இறுதியாகச் சந்தித்து விட்டேன். உள்ளம் இளமையை நினைத்துக் கொண்டாலும் உடல் நோயின் வலிமையை உணர்த்துகிறது. இப்போதெல்லாம் என் மனதுக்குள் ஒரு இனம்புரியாத கவலை வருகிறது. அது என்னவென்று விபரிக்க முடியாது. ஆனால் திடீரென்று தோன்றுகிறது" இதுவே கரன் வாயிலிருந்து உதிர்க்கின்ற வார்த்தைச் சிதறல்கள்.

கரன் மனதுக்குள் அரித்துக் கொண்டிருக்கும் ஒரு ஏக்கம். அதனை ஆசையென்றும் விளக்கம் தரலாம். வரதேவி மீண்டும் தன் மனைவியாக முழுமனதுடன் தன்னிடம் வரவேண்டும். தன் பிழைகளையெல்லாம் மன்னித்துத் தன்னை ஏற்றுக்

கொள்ளவேண்டும் என்பதே. மனதுக்குள் ஏற்படும் சில தவிப்புக்களை விபரிக்க முடியாது. வெளிப்படுத்தினாலும் பிறருக்கு விளங்கமாட்டாது. இவற்றுக்கு வார்த்தை இல்லை என்று நம்புகிறேன். அவ்வாறான ஒரு தவிப்பு. ஒருமுறை வரதேவி அருகே அன்புடன் அமரவேண்டும். அவள் கரங்கள் என் கரங்களைத் தீண்டவேண்டும். ஒரே வார்த்தையில் உங்களுக்கு நான் இருக்கிறேன் என்ற ஒரு நம்பிக்கை வார்த்தையைப் பேச வேண்டும் என்ற பேராசை கரன் மனதில் இருந்தது. இதைப் பேசிப் பார்த்திருக்கிறான். நடத்திக் காட்டியிருக்கிறான். ஆனால் அவளுக்கு முழுவதுமாக அவனால் உணர்த்த முடியவில்லை. பழுத்துச் சீழ்பிடித்த காயத்தைக் குணப்படுத்த முடியாது.கட்டுப் போடலாம்.

உள்ளத்தை மீறிக்கரனுக்கு உள்உறுப்புக்கள் தொல்லை கொடுக்கத் தொடங்கின. பழுதுபட்ட நுரையீரல் மதுவாடையில் நனைந்திருந்ததனால் தன் சக்தியெல்லாம் சேர்த்துத் தன்தொழிற்பாட்டைக் கொடுத்தது. அடிக்கடி இரத்தவாந்தி பித்தவாந்தி போல் வெளிவந்தது. நடை மெல்லமெல்லத் தளர்ந்தது. சிகரெட் புகையிலே கறுத்துஇறுகிப்போன நுரையீரல் விரிவடைய சங்கடப்பட்டு சுவாசத்தைச் சுதந்திரமாகத்

தரத் தயங்கியது. இதனால் காற்றை உள்வாங்கவும் வெளிவிடவும் சுவாசப்பை சுதந்திரம் இழந்தது. மூச்சுவாங்கிய பேச்சு கரனுக்குச் சொந்தமானது. இனியும் இலங்கை தன் இறுதி வாழ்வுக்கு இடைஞ்சல் என்று கரன் உணர்ந்தான். உடனடியாக ஜேர்மனி செல்ல முடிவெடுத்தான். என்ன தான் சிறந்த ஞானியானாலும் உயிருக்கு ஆபத்து என்று வரும் போது அதைக் காப்பாற்றவே முனைந்து நிற்பார்கள். இதனாலேயே ஆபத்து நேரத்தில் எங்கள் மிதமிஞ்சிய வலிமை மேலெழுகின்றது. நாய் கடிக்கவரும் போது ஓட்டப் பந்தயத்தில் வெற்றிபெறும் வகையில் ஓடுவது போன்ற வேகம் தோன்றும். தீப்பிடிக்கும் வீட்டினுள் இருக்கும் போது சாளரத்தினூடாக பாய்வதற்குத் துணிச்சல் வரும். இவ்வாறு உடலினுள் சுரந்து கொண்டிருக்கும் ஓமோன் இவ்வாறான சந்தர்ப்பங்களில் எமக்குக் கைகொடுக்கும். அவ்வாறே கரனுக்கு ஜேர்மனி செல்லும் எண்ணம் வலிமையடைந்தது. அங்கு தான் மருத்துவச்சேவை உலகத்து மருத்துவச்சேவையிலும் மாண்புமிக்கது என்பது யாவரும் அறிந்த உண்மை. இதைஉணர்ந்த கரன் மீண்டும் ஜேர்மனி வந்தடைந்தான்.

# Part 18

வானொலி வரதேவிக்குப் பெற்றுத் தந்த சொந்தங்கள் அவள் மனநிலையில் மிகச்சிறந்த மாற்றத்தைக் காட்டியிருந்தது. அன்று தலையை உயர்த்த முடியாது முயற்சித்து எழுந்தாள். எழுந்தவள் ஏதோ மூளை வெற்றுக் கடதாசி போல் வெறுமையாய் இருப்பதை உணர்ந்தாள். கிறுக்கி வைத்த நினைவுகள் அழிந்து போனது போல் ஒரு தவிப்பு மனதுள் ஏற்பட்டது. தொதைபேசி புத்தகத்தில் N என்னும் எழுத்தின் பக்கம் திருப்பினாள் நிலாவின் இலக்கத்தைப் பெற்றாள். வழமையாகப் பேசும் அழைப்பெண். அதுகூட மனதில் நிற்பதாக இல்லை. என்ன வாழ்க்கை இது என்று நினைத்தவண்ணம் இலக்கத்தை அழுத்தினாள்.

"ஹலோ!....நான் நிலா பேசுகிறேன்"

"நிலா! எப்படி இருக்கிறீங்கள். எனக்கு மூளைக்குள் எதுவுமே தெரியவில்லை. மந்தமாக இருக்கிறது. அதுதான் உங்களுடன் கொஞ்சம் கதைக்க வேணும் போல் இருக்குது....."

"ஏன்? வானொலி கேட்கவில்லையா?

"இல்லை நிலா… எனக்கு ஏஹ்…. எதிலுமே பிடிப்பில்லாமல் இருக்கு. விசரா இருக்கு….அவர்கள் கதைப்பது எதுவுமே விளங்குதில்லை"

"ஏன் அப்படிச் சொல்றீங்கள். நேற்று நல்ல பாட்டொன்று பாடினீங்களே. நல்ல குரல் வளம் உங்களுக்கு. அதை உள்வாங்க முடியாமல் இருந்தது. எனக்கு முழுவதுமாக கேட்க வேண்டும் போல் இருக்கிறது. பாடிக் காட்டுவீர்களா?

"இப்பவேயா….?

"ஓம்… "

"இல்லை நிலா. எனக்கு எதுவுமே இப்போது வருகுதில்ல"

ஆனால் நிலா விட்டுவிடுவதாக இல்லை. வரதேவி மனநிலையை மாற்ற வேண்டிதன் அவசியம் அவள் புரிந்து வைத்திருக்கின்றாள்.

"எங்கே எழுதிய பாட்டை வைத்திருக்கின்றீர்கள். எடுத்து வாருங்கள் முடிந்தவரை பார்த்துப் பாடுங்கள். பிளீஸ்…."

அவள் வேண்டுதலைத் தவிர்க்க முடியாமல் எழுதி வைத்திருந்த பேப்பரை எடுத்து வந்து

மனமுருகி நின்றேன் மயில் முருகா உந்தன்
வடிவழகு கண்ணில் தெரிகிறதே

தந்தைக்கு உபதேசம் செய்த முருகா
பழத்தாலே பழனி மலை வந்த முருகா
மனமுருகி நிற்கும் மாந்தர்க் கருள்பவனே
அன்பே வடிவான ஆறுமுக வேலனே
மனதின் வாய்மை வழி நடப்பேன்
மகிழ்ச்சியில் உலகை உயர வைப்பேன்
புதுமைகள் காணத் தினம் உழைப்பேன் - உந்தன்
அருளின் பெருமையை அறிய வைப்பேன்
மனமுருகி நின்றேன் மயில் முருகா உந்தன்
வடிவழகு கண்ணில் தெரிகிறதே

வரதேவி அழகாகப் பாடினாள். அத்தெளிவுடன் பழையநிலை பெற்றாள். நிலா வெற்றி பெற்றாள். “வரதேவி எவ்வளவு அழகாகப் பாடுறீங்கள்.சங்கீதம் படித்தீங்களா? அற்புதமான வரிகள். இவ்வளவு அழகாகப் பாடல்கள் எழுதுறீங்களே…… இந்த வானொலித் தளம் உங்கள் வாழ்க்கைக்கு முக்கிய தளம்.உங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் திறமைகளைவெளிக்காட்டுங்கள். முடியாது என்ற வேளை எனக்குத் தொலைபேசி எடுங்கள். உங்களுக்கும் ஆறுதலாக இருக்கும். ஷஷ உங்களுக்குப் பிரயோசனம் இல்லாத எந்த வேலையையும் நீங்கள் செய்யாதீர்கள்” என்று

மகாத்மா காந்தி கூறியிருக்கின்றார். அதனால் இவர் இப்படிச் சொன்னார் அவர் அப்படிச் சொன்னார். என்பதை எல்லாம் விட்டு விட்டு இந்த வானொலி உங்களுக்குத் தேவை. உங்களுக்கு மருந்து. உங்களுக்குப் பொழுதுபோக்குச் சாதனம். உங்கள் நேரத்துக்குத் துணை. அதனால் அதனோடு வாழுங்கள்.

ஆழமான அறிவு படைத்த நீங்கள் முடியாது என்று படுத்துவிடாதீர்கள். யார்தான் நோய் இல்லாது வாழுகின்றார்கள். எலும்பும், சதையும் நரம்பும் இரத்தமும் நீரும் இணைந்தேபடைக்கப்பட்டது இந்த உடம்பு. இரசாயணம் கலந்த உலகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அழகான பூக்களே மலருகின்ற போது அலர்ஜி என்னும் நோயைத் தருகின்றது என்றால் சுவாசிக்கும் காற்றைத்தான் நாம் நம்ப முடியுமா! வாழும் வரை உலக வாழ்க்கையை எதிர்த்துப் போராடத்தான் வேண்டும். வானத்துக்குக் கீழே வீடு கட்டி விட்டு வானம் இடிந்து விழும் என்று பயப்படத்தான் முடியுமா!

நம்பிக்கையூட்டும் வார்த்தைகளை நிலா வாயிலிருந்து கொட்டியதும் மனப் பேழயில் அப்படியே

அள்ளி எடுத்தாள் வரதேவி. எங்கிருந்தோ உற்சாகம் ஓடிவந்து ஒட்டிக்கொண்டது.

"கரன் வந்துவிட்டாரா வரதேவி?

"இல்லை நிலா. அவர் எப்போது வருவார்? எங்கே நிற்கிறார்? இதெல்லாம் சொல்லிக் கொண்டா இருக்கிறார். இதைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை. ஆனால் அவருடன் தேவை கருதிப் பேசுவேன் "

"நீங்கள் சொல்வது தவறு வரதேவி. அது மட்டும் போதுமா. அதற்கும் மேல் அவர் ஏதோ உங்களிடம் எதிர்பார்ப்பார் அவர் உங்கள் கணவன்"

"அந்தச் சொந்தம் எப்போதோ முறிவடைந்துவிட்டது"

"இல்லை. நீங்கள் உங்கள் பெயரை மாற்றலாம். ஆனால் கணவன் என்ற உறவை மாற்ற முடியாது. இனி உங்களுக்குப் பிடிவாதம் போதும். இப்போது அவர் ஒரு கால் இழந்து நோய் வாய்ப்பட்டு வேதனையில் இருக்கின்ற நேரம். நடந்ததை எல்லாம் மறந்து அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர் வந்த பின் அவருடன் மனம் திறந்து பேசுங்கள். நீங்கள் ஒன்றும் சின்ன வயசுக் காதலர்கள் இல்லை. ஊடல் கொள்வதற்கும், வஞ்சம் தீர்ப்பதற்கும். நினைவுகள் அப்படியே இருந்து விடுவதில்லை. அது அழிக்கப்படும்

அறிவுப்புப்ப லகையாகும். அதை அறிவிப்புப் பலகையாக்குவதும், அழியாத கல்வெட்டுக்களாக்குவதும் அவரவர் மனதைப் பொறுத்தது. இனிமேல் இப்படி இருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். இப்போது வைக்கிறேன். நாளை உங்கள் புதிய பாட்டைக் கேட்கிறேன்" என்று கூறிய நிலா குரல் வரதேவி காதிலிருந்து வெளியேறியது.

வரதேவி தொலைபேசியை நிறுத்தக் கதவு கிறீச்சிட்டு கரன் வரவுக்கு வழிவிட்டது. எந்தவித முன்னறிவித்தலும் இன்றி உள்நுழையும் கரனை நோக்கினாள் வரதேவி.

"எங்கே வரன்? பள்ளிக்கூடத்திற்குப் போயிற்றானா?"

" ம்…" எந்தவித மறுபேச்சும் வாயிலிருந்து வெளிவரவில்லை. இத்தனை நாள் எவ்வித தொடர்புமின்றி துண்டிக்கப்பட்ட தொலைபேசிபோல் வாழ்ந்த கரனிடம் "எங்கே இவ்வளவு நாளும் போயிருந்தீர்கள்" என்று கேட்க மனம் விரும்பியது. வாய் கேட்க மறுத்தது. வாடி மெலிந்திருந்த அவன் தோற்றம் கண்டு மெல்லிய ஒரு அநுதாபக் கீற்று வரதேவி மனதில் விழுந்தது. ஆனால் மனம் கொண்ட வைராக்கியம் பேச மறுத்தது. தானாகவே உள்

நுழைந்து குளித்து உடை மாற்றி வெளியே போகக் கிளம்பிய கரனிடம், முதன் முறையாக அக்கறையுடன் "எங்கே போகப் போறீங்கள். சமைக்கப் போகிறேன். சாப்பிட்டு விட்டுப் போங்கள்"

கல்லுக்குள் ஈரமா? இந்த வரதேவிக்குள் பாசமா? விடுவானா கரன் இந்த சந்தர்ப்பத்தை. பயன்படுத்திக் கொண்டான்.

"டொக்டரிட்ட போகப் பேறேன் வரா… இலங்கையில் நிற்கும் போது உடம்புக்கு முடியாமல் போனது. இலங்கை இப்போது முன்னம் மாதிரி இல்ல. நன்றாக திருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனக்கு அங்கே நிற்கத்தான் விருப்பமாய் இருந்தது. பிறகு வருத்தம் மேலும் கூடிற்றால், வர முடியாமல் போய் விடும்…." வார்த்தைகளை அடுக்கினான். ஆனால், கேட்பதற்கு வரதேவி நிற்கவேண்டுமே.

"அவருக்கென்ன எத்தனை வருஷமென்றாலும் போய் நிற்பார். அவருக்கென்ன இங்கத்தையக் கவலை. மனிசர்கள் கேட்கிற கேள்விகளுக்கெல்லம் நான் தானே பதில் சொல்ல வேண்டும்" மனதுக்குள் நினைத்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நகர்ந்தாள். பின் தொடர்ந்து வந்த கரன்

"வரா! சமைத்து வை. நான் வந்து சாப்பிடுறன். உன்ர கையால சமைத்துச் சாப்பிட்டு எவ்வளவு காலமாயிற்று. இதைத் தானே எதிர்பார்த்து நான் வந்தேன்" என்று கூறியபடி கரன் வெளியேறினான்.

"வருத்தமென்று ஜேர்மனிக்குத் திரும்பி வந்திட்டு என்ற கையால சாப்பிட வந்ததாம். எப்படியெல்லாம் நடிக்கிறார். இதெல்லாம் ஒரு கதை. இதை நான் நம்பவேணும்" என்று முணுமுணுத்தபடி சமையலறைக் கதவைத் தாளிட்டாள்.

குடியிருக்கும் வீடானது அடிக்கடிப் பழைய நினைவுகளை நினைவுபடுத்திக் கொண்டிருந்தது. அதனால், வீடு மாற வேண்டும். வேறு மனைபுகுந்தால் வேற்று எண்ணங்கள் மனதில் பதியத் தொடங்கும். புதியவீடு, புதிய சூழ்நிலை புதிய வீட்டின் மாற்று அலங்காரம், அனைத்திலும் ஏற்படும் மாற்றமானது மனதில் மாறுதலை ஏற்படுத்தலாம் என்ற தீர்மானம் கரன் மனதில் வலுப்பெற்றது. இதை வரதேவியும் வரனும் ஆதரித்தனர். இப்போது ஒரு புதிய முயற்சி முனைப்புப் பெற்றது.

பத்திரிகைப் பக்கங்கள் திருப்பப்படுகின்றன. வீடு வாடகைக்கு விடப்படும்...... என்னும் விளம்பரங்களைத் தேடித் தேடி மூவரும் பார்த்தனர்.

இது எமது தராதரத்திற்கு ஒத்துவருமா? வீடு இருக்கும் சூழ்நிலை பொருத்தமாக இருக்குமா? தேடத் தொடங்கினர். அடுத்துவரப் போகின்ற காலத்தை எதிர்நோக்க வரதேவி தயாராகிவிட்டாள். கீதா அறிமுகப்படுத்திய வீடு எடுப்பதற்கு தயாராயினர். விலைகூட ஒத்துவந்தது. சமூகநல நிறுவனம் ஏற்றுக்கொள்ளும் தொகையாக இருந்தது. வீட்டு அங்கத்தவர் தொகைக்கு ஏற்ற வீட்டு வாடகைத் தொகையின் கணக்கை சமூகநல நிறுவனம் தீர்மானித்து வைத்திருக்கும். அத்தொகையையே அக்குடும்ப வீட்டு வாடகையாக வழங்கும். அதனால், இவ்வுதவி பெறுவோர் அதற்கேற்ப வாடகையுள்ள வீடே எடுக்கவேண்டியது அவசியமாகிறது. அதிலுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை வரன் விடுத்தான். வீட்டைப் பார்வையிடுவதற்கான நாளும் வீட்டுச் சொந்தக்காரருடன் பேசி முடிவானது.

குறித்த திகதியில் குறிக்கப்பட்ட நேரத்தில் வீடு எப்படி என்று பார்ப்பதற்காக மூவரும் ஆயத்தமானார்கள். ஆனால், கரனால் விரைவாக படியிறங்க முடியவில்லை. படிகளில் இறங்கும் போது ஒற்றைப் பாதம் நோக் கண்டது.

“அது கீழ் வீடு தானே அப்பா. நீங்களும் ஒரு தடவை வந்து பார்த்தாலேயே எனக்குத் திருப்தியாக இருக்கும். கொஞ்சம் நோவைப் பொறுத்துக் கொள்ளுங்கள் அப்பா”

“சரி மகன். நான் வருகிறேன்”

இப்போது வரதேவி மனதில் இருந்த தைரியம் கரனின் உடலிலோ மனதிலோ இருக்கவில்லை. பெருத்த முயற்சியில் பஸ் ஏறிகுறிப்பிட்ட இடம் சென்றார்கள். மூவருக்கும் வீடு பிடித்துக் கொண்டது. இருந்த வீட்டின் ஒரு சுவடு கூட அடுத்த வீட்டில் இருக்க்கூடாது என்ற முடிவில் மூவரும் உறுதியாக இருந்தனர். மனதிலே மிக்க மகிழ்ச்சி. காலமே பதில் சொல்லும் என்பது போல் எதிர்காலத்தின் தென்றல் காற்று கரன் குடும்பத்தினரின் வாசல் தேடி வரும் நாளும் நெருங்கியது என்று மூவரும் எண்ணினர்.

வீட்டை வாடகைக்கு எடுப்பதற்கான பத்திரம் கையெழுத்திட வேண்டியது அவசியமானது. கையெழுத்திட்டு விட்டால் அவ்வீடு இவர்கள் வாடகைக்கு இருப்பதற்குச் சொந்தமாகிவிடும். அதன்படி கரன் பத்திரத்தில் தன் உரிமைக் கையெழுத்தைப் பதித்தான். வீட்டின் தலைவனாய் முத்திரை பதித்தான். ஆனாலும், கரன் உடல்நிலை

நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வந்தது. தன் குழப்பம் தன் மனைவி பிள்ளைக்குத் தெரியக்கூடாது என்பதில் மிகக் கவனமாகக் கரன் இருந்தான். புதிதாகப் புகுந்து வாழப் போகின்ற மனையில் அனைத்துப் பொருள்களும் புதிதாக இருக்க வேண்டும் என்பதில் மூவரும் உறுதியாக இருந்தனர். தடயங்கள் காட்டும் மன உளைச்சல் வாழ்க்கையில் என்றுமே வரல் கூடாது என்பதுவே முக்கிய நோக்கமாகும்.

எறியும் பொருள்களைக் கண்டபடி எறிய முடியுமா? அதற்குரிய நகரசபைக்கு அறிவித்தல் வேண்டும். எறியப்படும் பொருள்கள் எவை என்பதைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அவ்வறிவித்தலைப் பார்த்த நகரசபையினர் அப்பொருள்களை எடுத்துக் கொண்டு செல்லும் நாளைக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும். அந்தநாளே பொருள்கள் எல்லாம் வெளியேற்ற வேண்டும். பெற்றோர் செய்வார்கள் என்று பார்த்துக் கொண்டிருப்பதற்கு வரன் என்ன சின்னக் குழந்தையா? தானாகவே அனைத்துக் காரியங்களையும் செய்தான். பிள்ளைகளைத் தனித்துவமாக இயங்க விடும்போது சிறந்த ஆளுமையுள்ள பிள்ளைகளாக வளர்வார்கள் என்பது ஆணித்தரமான உண்மை. அவ்வாறே தனித்துவமாகத்

தன் கடமைகளைச் செய்து பழகிய வரன் முழுக் காரியங்களையும் பெற்றோர் உதவியின்றி செய்து முடித்தான். பழைய வீட்டை துடைத்துத் துப்பரவு செய்து எப்படி வரும்போதுஇருந்ததோ அப்படியே உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். புதிய வீட்டில் பொருள்கள் கொள்வனவு செய்து போடவேண்டும். தமக்கு ஏற்றது போல் புதிய வீட்டை ஒழுங்குபடுத்த வேண்டும். வீடு மாறுவது என்பது பெரிய காரியமே. ஆனால், தடயங்கள் ஞாபகங்களை மூளைக்கு மீட்டிக் கொடுக்கும் அரிய மருந்துகள். அதனாலேயே பழைய ஞாபகங்களை இழந்த சில நோயாளிகளுக்கு அவர்கள் வாழ்ந்தஇடங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று, அடையாளம் காட்டி சில சம்பவங்களை நினைவுறுத்தி பயிற்சிகளைச் செய்கின்றார்கள். இதனை மனம் வைத்தே மூவரும் வீடுமாறும் முடிவை எடுத்தனர்.

அந்தநாள் வந்தது. வீட்டின்பொருள்கள் எல்லாம் வரன் நண்பர்கள் துணையுடன் வீட்டை விட்டுக் கிளம்பின. என்றோ ஒரு நாள் எல்லாம் துடைந்தெறிந்து தனி உடலாய் நாம் செல்லத்தான் போகின்றோம். இதனாலேயே பட்டினத்தார் ஷஷகாதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே||

என்று கூறினார். எதுவுமே எமக்குச் சொந்தமாவதில்லை. இருக்கும் வரை அனுபவிப்போம். இல்லாது போனால் சொந்தமில்லை என்று நினைத்திருப்போம். அநுபவித்த அனைத்தும் வெளியேறுகிறதே என்ற ஏக்கம் மூவருக்கும் இருந்தாலும் இப்பொருள்களை எப்படித்தான் திரும்பவும் வாங்கப் போகின்றோமோ என்ற எண்ணம் மனதில் நிறைந்திருந்தாலும், நடப்பவையெல்லாம் நன்மைக்கே என்னும் எண்ணப்போக்குடன் வெளியேறும் பொருள்களைத் துலைந்த பொருள்களாகக் கருதி வெளியேற்றினர். பொருள்கள் அனைத்தும் வெறுமையானது வீடு.

மடித்து வைக்கும் 3 கதிரைகள் மாத்திரம் அவையும் புதியவை வீட்டில் ராஜ்ஜியம் செய்தன. படுப்பதற்கான 3 புதிய மெத்தைகள் தரையிலே மல்லாந்து கிடந்தன. நடக்கும் அனைத்தையும் பார்த்துக் கொண்டு தன் மகனின் ஆளுமையை நினைத்துப் பெருமையடைந்த வண்ணம் கரன் மெத்தையிலே படுத்திருந்தான். பொருள்கள் மறைந்தன. அவன் நெஞ்சுக்குள்ளே ஒரு பாறாங்கல் வந்து அழுத்தியது. தொண்டைக்குள்ளே இனம்புரியாத

ஒரு அரிப்பு துளைத்தெடுத்தது. இரும இரும
நெஞ்சுப்புண் இரணகளமாகியது.
"வரன்...... வரன்......" மகனை அழைத்தான்.
களைப்பில் தேநீர்க் கோப்பையுடன் அமர்ந்திருந்த
வரன்
"என்னப்பா...."
"இங்கே எனக்குப் பக்கத்தில வா....."
பக்கத்தில் வந்த மர்ந்த மகனை கட்டிப்பிடித்தான்.
மனதுக்குள் பெருமை. நான் செய்த புண்ணியங்களின்
வடிவமே என் மகன் என்று அவன் உள் மனம்
உரக்கச்சொன்னது.
"என்னப்பா..."
"எனக்குச் சந்தோசமா இருக்குடா. இனிசந்தோசமா
என்ர கண்ணை மூடலாம். நீ எல்லாத்தையும்
பார்த்துக் கொள்வாய் என்ர நம்பிக்கை எனக்கு
வந்திட்டு"
"இப்ப ஏனப்பா இந்தக் கதையெல்லாம்..."
"இல்ல இல்ல இன்றைக்குக் கதைக்காட்டி
என்றைக்குமே கதைக்கமுடியாது போயிடும்.
இஞ்சபார்... வரன் உன்ர அம்மா பிடிவாதக்காரி.
அவவை நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும்.
அவளும் வருத்தக்காரி. மற்றவர்களுக்காக நீதியற்ற

எந்தக் காரியத்தையும் செய்துவிடாதே. மற்றவர்கள் பாவம் கேட்கிறார்களே. இந்த உதவியைச் செய்துகொடுப்பம் என்று நினைத்து எந்தக் கரியத்தையும் செய்யாதே”

“இப்ப எதுக்கப்பா ? இதெல்லாம். ஆறுதலாப் பிறகு அடுத்த வீட்டுக்குப் போய்க் கதைப்பம்”

“இல்ல…இல்ல…. என்ற மறுகணமே “ஐயோ …. என்ர நெஞ்சுக்குள்ள தாங்க முடியல்லயே…. மாதாவே…. ” துடித்தான். சுருண்டான் கரன்.

“என்ன செய்யுது…. என்ன செய்யுது…..”அவதிப்பட்டாள் வரதேவி.

வரனும் ஓடிப்போய் தொலைபேசியில் அவசரசிகிச்சைப் பகுதிக்கு அழைப்பை விடுத்த மறுகணமே அம்புலன்ஸ் வாகனம் வாசல் வந்தடைந்தது. அதிலிருந்து காற்றாய் உள்நுழைந்த வைத்தியர் கரனைப் பார்வையிட்டார். உடனடியாக மருத்துவசாலைக்கு கரனை அழைத்துச் செல்லவேண்டும் என்று கூறிக் நோயாளியைத் தூக்கிச் செல்லும் படுக்கையைக் கொண்டுவந்து கைத்தாங்கலாகக் கரனைத் தூக்கி அப்படுக்கையில் போட்டார்கள்;. வாகனத்துள் ஏற்றினார்கள். வரனும்

அந்த வாகனத்திலேயே ஏறிவிட்டான். வாகனம் மருத்துவமனை நோக்கி விரைந்தது.

என்ன கொடுமை. வீட்டிலுள்ள பொருள்கள் எல்லாம் வெளியகற்றப்பட்டு வீடு வெறுமையான மறுகணமே கரனும் வெளியகற்றப்பட்டான். மனதுக்குள் சொல்லமுடியாத ஏக்கம் வரதேவியை வாட்டி எடுத்தது. கையிரண்டும் படபடவென்று நடுங்கின. காலிரண்டும் வலுவிழந்து சோர்ந்தன. ஏன் இப்படி நடக்கிறது. பயமாக இருக்கிறது. வெறிச்சோடிய வீட்டில் இவள் கண்கள் இரண்டும் ஆந்தை போல் விழித்திருந்தன. இருண்டு கிடந்த வீட்டினிலே அமைதி குடிகொண்டது. வரன் எப்போது வருவான். என்ன சொல்வான் என்ற எதிர்பார்ப்பு மட்டுமே இப்போது வரதேவி விழிப்பின் காரணமாக இருந்தது.

மருத்துவமனையில் கரனை தங்கவைத்து விட்டார்கள். அதற்கான காரியங்கள் அனைத்தும் முடித்த பின் வரன் வீட்டை அடைந்தான். அடைத்த தொண்டையிலிருந்து ஆறுதலாக வரதேவி வார்த்தைகள் வெளிவந்தன.

“என்னப்பா என்ன நடந்தது?

கண்களோ அவளை அறியாமலே குளமாகின. இந்த வாழ்க்கை என்பது ஒரு ஆச்சரியமே. தாலி பந்தம் என்பது எப்படி மனிதர்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று விபரிக்க முடியாத சக்தி வாய்ந்தது. என்ன தான் வெறுப்பு மனதில் இருந்தாலும் அத்தனையும் ஒரு நொடியில் சூறாவளிக் காற்றுப் போல் தூக்கி வீசப்படும்.

“இப்போ பறவாயில்லை. படுத்திருக்கிறார். நாளைக்குப் போய்ப் பார்ப்போம்”

பிள்ளை பாவம் நன்றாகப் பயந்து போய்விட்டான். வேலைக் களைப்பு ஒரு புறம். தந்தையின் கவலை மறுபுறம். அப்படியே படுக்கையில் விழுந்து உறங்கிவிட்டான்.

இரவுமுழுவதும் வரதேவி உறங்கவில்லை. மணிக்கூட்டை அடிக்கடி பார்ப்பாள். அவள் பார்வையில் நேரமோ ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. ஆனாலும் பூமி தனக்குப் பூட்டி வைத்திருக்கும் சுழல் இயந்திரம் சுழன்று கொண்டே இருக்கும் அல்லவா. அதனால் ஜேர்மனி சூரியனைச் சந்தித்தது. வரனுக்கு முன் வரதேவி மருத்துவமனைக்குச் செல்ல ஆயத்தமானாள். மகனை எழுப்பினாள். வரனும் தாம் மூவரும் ஒன்றாக நின்று

எடுத்த புகைப்படத்தை ஒரு பையினுள் போட்டு எடுத்தான். இருவரும் ஆயத்தமாகிப் புறப்பட்டனர்.

இதயங்கள் இரண்டும் பேசவில்லை. அமைதியில் ஆழ்ந்திருந்தன. வார்த்தைகளுக்கு இடமில்லை. உணர்வுகளே மேலெழுந்துநின்றன. மருத்துவமனை வாசற்படியை அண்மித்தனர். கால்களோ வேகமாகின. கரன் தங்கியிருந்தன கதவடி வந்து சேர்ந்தன. வாசற் கதவைப் பார்த்தபடி அவர்கள் வரவுக்காய்க் கரன் காத்திருந்தான். கதவு திறந்தது. காத்திருப்புக் கலைந்தது. இருவரும் அருகே வந்தனர். தனது படுக்கையருகே இருவரையும் அழைத்தான் கரன். மெல்லக் கொஞ்சம் இடம் விட்டு அக்கட்டிலின்மேல் இருவரையும் இருக்கவைத்தான். ஒரு கையால் வரதேவி கையையும் மறுகையால் வரனின் கையையும்பிடித்தான். கலங்கிய வரதேவி கண்களைப் பார்த்தான்.

"கவலைப்படாத வரா.... உனக்கு என்ர மகன் இருக்கிறான். அவன் உன்னைக் கவனமாப் பார்த்துக் கொள்வான்" மகனிடம் திரும்பினான்.

"வரன்...அம்மாவை உன்னிடம் ஒப்படைக்கிறேன்... அவவ நீதான் பார்க்க வேண்டும். அவள் நல்லாக் கஷ்டப்பட்டிற்றாள். என்னைக் கல்யாணம் செய்ததால

நல்ல வேதனைகளைக் கண்டிற்றாள். இனி நீதான் அவளைக் கண்கலங்காமக் காக்க வேணும். மாதா கோயிலுக்குப் போ..... அங்கு போய் மெழுகுதிரி கொழுத்திவை. நீங்கள் யாரும் கவலைப்படத் தேவையில்லை. எது நடக்கவிருக்கிறதோ அது நல்லதாகவே நடக்கும். யாருக்கும் பாரமாக இனியும் நான் இருக்கப் போவதில்லை. என் ஆசைகள் எல்லாம் நான் தீர்த்திட்டன். என்ர மனிசியும் என்ன நல்லாப் புரிஞ்சிட்டாள். அது போதும் இந்த ஜென்மத்திற்கு" சொற்கள் வெளிவந்தன. கண்கள் கலங்கின. வேதனை விளிம்பில் நின்று தவித்தது.

"அப்பா... நான் மாதா கோயிலுக்குப் போறன். மெழுகுதிரி கொழுத்துகிறேன். உங்களுக்கு ஒன்றும் நடக்காது. டொக்டர் சொன்னவர். நீங்கள் இப்போ ஓகேயாம். நாங்கள் மூன்று பேரும் நிற்கிற போட்டோ கொண்டு வந்திருக்கிறேன். இங்கே வைக்கிறேன். நாங்கள் எப்பவும் உங்கள் பக்கத்தில் இருப்போம். கவலைப்படாதீங்க...." என்றான். வரதேவியும்

"சும்மா பயப்பிடாதீங்க. உங்களுக்கு ஒன்றும் நடக்காது. புதிய வீட்டிற்குப் போக வேண்டும். பழைய வாழ்க்கை நாங்கள் வாழ வேண்டும். மனதைப் போட்டுக் குழப்பாதீங்க. மத்தியானம் ஏதாவது

சாப்பாடுஎடுத்துக் கொண்டு வாறன்" என்று கூறிய வண்ணம் மனதில் ஒரு நம்பிக்கையை விதைத்துவிட்டுத் தானும் ஒரு நம்பிக்கையை மனதில் நிறுத்திய வண்ணம் வரனுடன் விடை பெற்றாள்.

கரனும் அவர்கள் கையை இறுகப்பிடித்து முத்தமிட்டு வழியனுப்பினான். அவர்கள் அறையை விட்டு மறையும் வரை அவர்கள் போக்கை உறுத்துப் பார்த்த வண்ணம் கண் விழித்து இருந்தான். இருவரும் மாதாவின் பார்வைக்கு மெழுகுதிரி வெளிச்சமிட்டனர். மாதா பார்வை தம் பக்கம் திரும்பவே வெளிச்சம் பிரகாசமானது. கரனின் வேண்டுகோளின் படி கரனின் வணக்கதேவதையைத் துதித்தனர். வீடு வந்தடைந்தனர். மதியம் உணவு கொண்டு செல்வதற்கான ஆயத்தங்களை வரதேவி மேற்கொண்டாள்.

வரதேவிக்கோ மனதுக்குள்ளே ஒரு மாய உணர்வு வந்து அழுத்திப் பிடித்துக் கொண்டு பாடாய்ப் படுத்தியது. அது என்னவென்று சொல்லி விளக்கமுடியாத உணர்வு. சில உணர்வுகள் தோன்றுகின்றன. அது ஏன் தோன்றுகிறது? எதற்காகத் தோன்றுகிறது? என்று விபரிக்கமுடியாது.

மனதுள்வந்து ஆட்டிப் படைக்கும். அண்டம் தரும் அபூர்வ உணர்வு. பிணைப்புக்களின் பாச உணர்வு. எங்கேயோ இருப்பார்கள். ஆனால், அவர்களுக்கு ஒன்று நடக்கும் போது எல்லை கடந்து இருக்கும் உண்மை பாசம் உள்ளோரை உறுத்தும். இதனால் தானோ என்னவோ விக்கல் வரும் போது யாரோ நினைக்கின்றார்கள் என்று முன்னையோர் கூறுவர். வரதேவியோ மனதுக்குள் சில கேள்விகளைத் தனக்குத் தானே கேட்டுப் பார்த்தாள்.

“என் பிடிவாதத்தை விட்டு அவருடன் சில காலங்கள் சந்தோசமாக வாழ்ந்திருக்கக் கூடாதா? நான் பெரிய பிழை செய்து விட்டேன் போல் இருக்கிறதே” இவ்வாறு அவள் மனம் அலை அலையாய் அடித்துக் கொண்டிருந்தது.

தொலைபேசி அழைப்புமணி ஒலித்தது. ஓடிச் சென்று வரன் தொலைபேசியை எடுத்தான். காதினுள் நுழைந்த செய்தி கேட்டு அப்படியே தரையில் அமர்ந்தான். தொண்டை அடைத்தது. தலையைப் பின்புறம் நோக்கிச் சரித்தான்.

“ஓ......” என்று கத்தினான். அவன் அழுகைச்சத்தம் கேட்டு ஓடி வந்தாள் வரதேவி

“என்ன... என்ன.... என்ன நடந்தது”

"அப்பா....அப்பா.....போயிட்டார் அம்மா.....போயிட்டார்...."
விக்கித்து நின்றாள் வரதேவி.
வெளியேறிய பொருள்களுடன் இணைந்தே கரன் உயிரும் வெளியேறிவிட்டது. புதிய வீட்டினுள் தன் வாசம் வீசாமலே காற்றாய் அவன் உயிர் பிரிந்தது. ஜேர்மனிய வானம் இடி இடித்து மழை அஞ்சலி செய்தது. கரனின் வாழ்க்கைப் புத்தகத்தின் அத்தியாயத்தின் இறுதி அங்கம் முடிந்து விட்டது. அலை அடித்து ஓய்ந்து விட்டது.

## நூலாசிரியரைப் பற்றி ......



கௌசி அவர்கள் இந்து சமுத்திரத்தின் முத்து இலங்கையென்னும் எழில் மிஞ்சிய நாட்டில் பிறந்தவர். இதில் கலைவளமும் கல்விவளமும் விஞ்சிய மட்டுநகரின் கண் மாண்புடன் திகழும் ஏர் ஊராம் ஏறாவூரில் சமுதாயப் பற்றாளர், சமூகசேவையாளர் திரு. சி. வேலுப்பிள்ளைக்கும் பரமேஸ்வரி அவர்களுக்கும் பிறந்த மகளே ஆவார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சந்திரகௌரி. இவர் எழுத்துலகில் வலம்வரும் பெயர் கௌசி. இவர் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் தனது தமிழ்சிறப்புக் கலைமாமணி பட்டப்படிப்பைமுடித்தார். நாவல நுகேகொட திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியல் டிப்ளோமா முடித்து 8 வருடங்கள் ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் மட்டக்களப்பிலும் கம்பகா மாவட்டத்திலும் பணியாற்றியுள்ளார். புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வசித்து வரும் இவர் தனது சொந்த இணையத்தளத்தின் மூலமும் (www.gowsy.com) இலங்கைப் பத்திரிகையிலும் இலண்டன் தமிழ் வானொலியிலும் சஞ்சிகைகளிலும் பிற இணையத்தளங்களிலும் தனது எண்ணங்களைப் பதிவிட்டிருக்கின்றார். இலண்டன் தமிழ் வானொலியில் ஓடிவிளையாடுபாப்பா என்னும்நிகழ்ச்சித்தொகுப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் ஆக்கங்கள் சமுதாயத்தின் கண்ணாடி. சமூகக் குப்பைகள் களைந்தெறியப்பட வேண்டும் என்பதைத் தன் கவிதைகள், கட்டுரைகள், கதைகள், தனது வாசகம் போன்ற படைப்புக்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். எதையும் எழுதலாம் என்பதை விடுத்து இதைத்தான் எழுதவேண்டும் என்ற கொள்கையுள்ளவர். எழுத்துக்களின் மூலம் வாசகர்களைச் சிந்திக்க வைக்கும் ஒரு படைப்பாளி. இவரது பகுத்தறிவுக் கொள்கை இவரது படைப்புக்கள் மூலம் புலப்படுகின்றது. சொல்லவருகின்ற விடயம் வித்தியாசமான பார்வையில் இருக்கவேண்டும் என்பதில் அலாதிப் பிரியமுள்ளவர். எதனையும் சிந்தித்து ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளும் பண்புள்ளவர். எழுத்தாளன் என்பவன் எழுத்தை ஆளுகின்ற வல்லமை படைத்தவன். இந்த ஆளுமை கௌசியிடம் நிறையவே இருக்கின்றது.

திருமதி. ப. இளங்கோ M.ED
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
கல்குடா வலயக் கல்வி அலுவலகம்
வாழைச்சேனை.